# அருளமுதம்



யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்

திருமதி.அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களது

**மணிவிழாச் சிறப்புமலர்**

**Name :**
Mrs.Aruleswary Vedanayagam
**Address:**
30/3 Athiyady, Jaffna.
**Qualification :**
M.A (Pub. Administration)

**Service Particulars:**
J/St.Theresa's Girls School
(1971 -1972)
J/Palaly Teachers College
(1972 -1973)
N/St.John's Bosco's Vid.Hatton
(1974 - 1978)
N/St.Galriels B.M.V. Hatton
(1974 -1978)
J/Avarangal N.R.V
(1978 - 1986)
J/Avarangal Mahayana
(1986 - 1990)
Kopay In service Adviser
(1985 - 1990)
ADE, Jaffna - (SLEAS - III)
(1990 -1993)
ADE Jaffna Zone - II
(1994 - 1996)
Thunukkai DEO Mullaithevu
(SLEAS Class - II)
(1996 - 1998)
Thunukkai ZDE
(1998 - 2000)
Ministry of Education NEP
(Development DDE)
(2000 - 2003)
Provincial Dept. of Edu.
(In-charge Development
of Education)
(2003 - 2005)
ZDE, Thenmaradchy
(2005 - 2008)
Jaffna, ZDE
(2008 - 2011)

ARCHIVES

University of Jaffna
181218
Library

# அருளமுதம்

370.92
ARU

AR



திருமதி அருளேஸ்வரி
வேதநாயகம்

ARCHIVES

181218

## மணிவிழா மலர்

181218

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
BAR

2011

| | | |
|---|---|---|
| Name of the Magazine | : | Arllamutham |
| Publishers | : | Souvenir Committee<br>Mrs.Arleswary Vethanayagam's<br>Diamond Jubilee Celebration |
| Address | : | No.528, Palaly Road,<br>Thirunelveli, Jaffna. |
| Editor | : | Mr.Balasubramaniam Thanabalan |
| Edition | : | June 2011 |
| Printers | : | Harikanan Printers,<br>K.K.S Road,<br>Jaffna. |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | அருளமுதம்<br>மணிவிழாச் சிறப்பு மலர் |
| மலராசிரியர் | : | பா.தனபாலன் |
| பதிப்புரிமை | : | மணிவிழா மலர் அமைப்பு |
| பதிப்பு | : | ஜூன் 2011 |
| வெளியீடு | : | திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின்<br>மணிவிழா மலர் அமைப்பு<br>இல.528, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விலை | : | 1000/= |

181218



# தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்த தந்தன...

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கித் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அளித்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# மணிவிழா மலர் அமைப்பு

**ஆலோசகர்** : கருமத்திருதி, டாக்டர் லயன் வை.தியாகராஜா,
சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

கலாநிதி த.கலாமணி
தலைவர், சட்டத்துறை,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

திரு.எஸ்.கே.யோகநாதன்,
பீடாதிபதி,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

**தலைவர்** : திரு.பா.தனபாலன்
பணிப்பாளர்,
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்.

**செயலாளர்கள்** : திரு.வே.க.சந்திரகுமார்,
ஆசிரியர்,
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.

திரு.கா.சிவஞானசுந்தரம்,
முகாமையாளர்,
திருக்கணிதப்பதிப்பகம், சாவகச்சேரி

**பொருளாளர்** : திரு.இ.க.கமலநாதன்,
விரிவுரையாளர்,
யா. தேசிய கல்வியியற் கல்லூரி.

**செயற்குழு உறுப்பினர்கள்** : திரு. காரை எம்.பி.அருளானந்தன்,
ஆசிரியர்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

திருமதி ஞா.கணேசநாதன்,
விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

திருமதி கௌரி சுரேசன்,
ஆசிரியர், யா/ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

திரு.த.சிவகுமார்,
விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.



**Madurai Kamaraj University**
Sri Lanka Centre

*Convercation 2010*
*20th June 2010, At the BMICH, Colombo.*

# நுழைவாயில்.....

பாரம்பரியமாக கல்விக்கு சரஸ்வதி என்ற தெய்வ உருவம் கொடுத்து, கல்வியைத் தெய்வமாகப் போற்றும் மரபுரிமையை எமது யாழ்ப்பாண மண் கொண்டது. எமது மண்ணில் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய கல்விப்பணிப்பாளர்கள் வரிசையில் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் முதன்மை நிலையில் உள்ளார். அவருடைய வாழ்வும், கல்விப்பணியும் எமது மண்ணின் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டின. கல்விப்பணிப்பாளர்களிடையே மிகவும் முன் மாதிரியானவராக அவர் செயலாற்றிக் காட்டியவர். ஒரு ஆசிரியர் ஒரு அதிபர், ஒரு கல்விப்பணிப்பாளர் எவ்வாறு செயலாற்றவேண்டும் என்பதற்கான சமூக முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர் என்ற வகையில் "அருளமுதம்' என்ற இம்மணிவிழா மலரை நாமனைவரும் இணைந்து உருவாக்கி அவரது சேவைக்கான மகுடமாக இம்மலரை திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

கடந்த முப்பது வருட கொடிய யுத்தத்தால் எமது மண்ணில் கல்வி வளர்ச்சி பெருமளவு பாதிக்கப்பட்டது. இக்காலத்தில் வசதி வாய்ப்புக்களைத் தேடி வெளிநாடுகள் போகாமல் எமது மண்ணிலேயே (யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை) பல்வேறு இன்னல்களையும், துன்பங்களையும், குழப்பங்களையும் அனுபவிக்கும் எம் மக்களுடன் மக்களாக வாழ்ந்து, தனது வாழ்நாள் முழுவதையும் இரவு - பகல் பாராமல் தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றிய யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்வு அர்த்தமுள்ளது, சாதனைகள் நிறைந்தது, அர்ப்பணிப்புக்கள் உள்ளது என்பவற்றை உறுதிப்படுத்தும் விடயங்கள் இம்மலரில் இணைக்கப்பட்டுள்ளன. காலம், பொருளாதாரம் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு எல்லோருடைய ஆக்கங்களையும் இம்மலரில் இணைக்க முடியாமற் போனமைக்கு மன்னிப்புக்களைக் கேட்டுக் கொண்டு, இம்மலர் சிறப்பாக வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். குறிப்பாக மிகச் சிறந்த முறையில் இம்மலரை அச்சிட்டுத்தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவத்தின ருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

03-06-2011

மணிவிழா அமைப்பினர்

# அமுதத்தின் உள்ளே.....


தமிழ் மொழி வாழ்த்து.....

மணிவிழா மலர் அமைப்பு...

நுழைவாயில்

பகுதி ஒன்று

அருளாசி, வாழ்த்துச் செய்திகள் 03-18

பகுதி இரண்டு

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் பற்றி... 21-66

பகுதி மூன்று

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் சாதனைகள் 68-116

பகுதி நான்கு

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் அர்ப்பணிப்புக்கள் 119-162

பகுதி ஐந்து

பத்திரிகை, கல்வியியல் ஆய்வுக்கட்டுரைகள். 165-259

# பகுதி – 1

## ஆசிகளும்...

## வாழ்த்துச் செய்திகளும்...





# அருளாசிச்செய்தி

கல்வி சார் பெருந்தகையீர் !

திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் இன்று மணிவிழா காண்பதனை இட்டு மகிழ்வடைகின்றோம். கல்விப் பாரம்பரியத்தில் கல்வியினைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி அனைவருடைய நன்மதிப்பையும் தன் வசமாக்கிய பெருமை திரு. வேதநாயகம் அம்மாவையே சாரும். அம்மையாருடைய காலத்தில் யாழ்ப்பாணம் கல்விவளர்ச்சியில் ஓங்கி நிற்பதை அனைவரும் கண்டு மகிழ்கின்றனர். எளிமையான தோற்றம், இனிமையான பேச்சு, எடுத்த செயலை செவ்வனே ஆற்றுகின்ற செயற்றிறன், எல்லோரையும் மகிழ்விக்கின்ற மனப்பாங்கு அனைத்தையும் தன்வசப்படுத்திய பெருமை அம்மையாரைச் சாரும். எல்லாப் பாடசாலை ஆசிரியர்களது பண்பையும் ஒழுங்கையும் பேணவேண்டும் எனச் செயற்பட்டவர். பல நெருக்கடியான காலங்களில் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தைச் சோர்வடையவிடாமல் மேலேடுத்து, சென்றதிறன் அனைவரையும் மகிழ்வடையச் செய்தது. குடும்பத்துக்கு நல்ல தலைவியாக, அயலவருக்கு நல்ல நண்பியாக எல்லோருடனும் இனிமையாக பழகும் திருமதி. வேதநாயகம் அம்மா அவர்கள் இன்று மணிவிழாக்கண்டு தமது தலைவருடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். அம்மையாரை பல சிறப்புச் செய்து மணிவிழாக் கொண்டாடும் அனைத்து அன்புள்ளங்களையும் வாழ்த்துகின்றோம்.

திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் தம்பதியினர்களை இறைவன்
ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்து மணிவிழா காணும் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

எமது பிரதேச அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தியுடனேயே விருத்தியாக முடியும். அதற்கு திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் முன்மாதிரியான கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் உந்துதல்களை வழங்கியுள்ளன. யாழ்ப்பாணத்திலும், வடகிழக்கு மாகாணத்திலும், வன்னியிலும், மீண்டும் யாழ்ப்பாணத்திலும் தனது கல்விச் சேவையை உன்னதமாக ஆற்றியவர் அவர். அவரது கல்விச் சேவையை பாராட்டுகின்றேன். இவர் போன்ற முன்மாதிரியான கல்விப்பணிப்பாளர்களின் சேவை தற்போது எம்மண்ணிற்குத் தேவையாகவுள்ளது.

தனது சேவையிலிருந்து ஒய்வு பெற்றாலும் தொடர்ந்து திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் கல்விப்பணியை ஆற்றவேண்டும். அதேவேளை மணிவிழா சிறப்பாக நடைபெறவும், அவரும் குடும்பத்தவர்களும் வளமாக வாழவும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வண.பிதா தோமஸ் சௌர்ந்தரநாயகம்,**
ஆயர், யாழ் மறை மாவட்டம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



# Message from the Honourable Governor Northern Province

I am pleased to convey this message to the souvenir of Diamond Jubilee which is celebrated for Mrs.Aruleswary Vethanayagam, Director of Zonal Education, Jaffna who is going to retire from the service.

Only education has ways and means to reach the top of the career ladder, so it is identified as a precious assert for the human being. This fact is always realized by everyone. Mrs.Aruleswary Vethanayagam has got a privilege by serving in education field for thirty years. I think that she was able to do a lot for the society by her dedicated service in the education field. I came to know that she is an efficient administrator with her own approaches and ways of solving problems. She got the opportunity as a Director to enhance education as well as administration.

While I wish her good health and happiness in her retirement, I am confident that our society will make use of her services further in some other capacity.

**G.A Chandrasiri,**
*Governor,*
*Northern Province.*

கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து

# வாழ்த்துரை



திருமதி. அருளேஸ்வரி. வேதநாயகம் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த நாற்பது வருடங்களாகக் கல்வித்துறையில் பல பதவிகள் வகித்து சிறந்த கல்விப் பணியாற்றியவர் திருமதி. அ.வேதநாயகம் அவர்கள். குறிப்பாக அச்சுவேலியில் ஆசிரியராக பணியாற்றியதிலிருந்து, கணிதபாட உதவிக்கல்விப்பணிப்பாளராக யாழ்.மாவட்டத்தில் கணித மூலவளநிலையத்தை உருவாக்கி மாணவர் கடினம் எனக் கருதும் கணிதபாடத்தை இலகுவாகக் கற்க பல செயன்முறைகளையும், விளையாட்டுக்களையும் நடைமுறைப்படுத்தி வெற்றிகண்டவர்.

தொடர்ந்து வன்னிப்பிரதேசத்திலும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலும், கல்வித்திணைக்களத்திலும் சிறந்த கல்விச்சேவை ஆற்றி தனக்கென ஒரு தனியிடம் பிடித்துக்கொண்டவர். பின்னர் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளராகவுமிருந்து கல்வித்துறை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் பெற்றார்கள் சமூகத்துடனும் உயிர்ப்பாக தொடர்புகளைப் பேணி எம் பிரதேச கல்வித்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.

2006 ஆம் ஆண்டில் தென்மராட்சியில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தவேளை மாணவர்களின் கல்வியை தொடரச்செய்வதற்காக "வீட்டுப்பள்ளிக்கூடம்" அமைத்து சாதனையை நிலை நாட்டியவர்.

வட மாகாண கல்வி அமைச்சு யாழ். மாவட்டத்திற்கு மாற்றப்பட்டபோது யாழ். வலயத்திலுள்ள வளங்களை மனவிருப்புடன் தந்து இயங்க உதவியமைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அபிவிருத்தி தொடர்பாக அதன் பிரதிபலிப்புக்களை பாடசாலைகளில் பார்த்து அதற்கேற்ப பரிகாரமுறைகளை விதந்துரைக்கும் ஆற்றல்மிக்கவர். மொத்தத்தில் கூறின் "அபிவிருத்தி நாட்டம் கொண்ட கல்விப்பணிப்பாளர்" எனும் அணி இவருக்கு உரியதாகின்றது.

அவர் ஓய்வு காலத்திலும் கல்விப்பணியாற்றவும் நல்வாழ்வு வாழவும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன்,<br>
செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்<br>
விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர்

செஞ்சொற் செல்வரின்



# வாழ்த்துரை

கல்விப்பணி கடவுட்பணி. காலம் முழுவதும் பயன் பெற்றோர் போற்றும் பணி. இப் புனிதபணியில் ஈடுபடும் வாய்ப்பு அரியபேறு எனலாம். அவ்வகையில் ஆசிரியராக உதவிக்கல்விப்பணிப்பாளராக, வலயக்கல்விப் பணிப்பாளராக அரிய சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி வேதநாயகம் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். எனது தாயாரின் அன்புக்குரிய மாணவன் உயர் திரு.வேதநாயகம் அவர்களுடன் நீண்ட காலமாக நற்பணியாற்றி ஓய்வு பெறும் அம்மையார் நிறை செல்வத்தோடு நிறைவாக வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன். இன்றைய யதார்த்த சூழலில், உயர் பதவிகள் வகிப்பது என்பது மிகவும் கடினமான பணியாக கருதப்படுகின்றது. எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில் தன் ஆளுமையால் அவற்றைச் சந்தித்து நிறைவாக ஓய்வு பெறும் இவர் பண்பு வாழ்த்துதற்குரியது.

ஆறு.திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின்



# வாழ்த்துரை

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்து மணிவிழாக்கண்டு ஓய்வுபெறும் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு நாட்டு அபிவிருத்தியின் அச்சாணி கல்வியே ஆகும். சிறந்த நற்பிரஜைகளையும், நாட்டுப்பற்றுக்கொண்ட மனிதவளத்தையும் உருவாக்கும் கல்வியின் நோக்கை அடைய வைப்பதில் பெரும்பங்காற்றக்கூடிய வலு உள்ளவர்களாக வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உள்ளார்கள். இவ்வகையில் இளவயதிலேயே ஆசிரியராகி, ஆசிரிய ஆலோசகர், கல்விப் பணிப்பாளராக உயர்வுபெற்று கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருமதி. அ. வேதநாயகம் அவர்கள் கல்விச் சேவையை ஆற்றிவருகின்றார்.

அவருடைய ஆளுமை, ஆற்றல், வலு, தலைமைத்துவம், அர்ப்பணிப்பு, ஆகிய பண்புகள் கல்வித்துறையில் அவர் பலவற்றைச் சாதிக்க வழிகோலியது. எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் சேவையாற்றி கல்வித்துறையை வளர்த்துள்ளார். திருமதி. அ. வேதநாயகம் அவர்கள் இவ்வாறு நற்பணியாற்றிய அவருக்கு மணிவிழா எடுத்து மணிவிழா மலர் ஒன்றை வெளியிடுதல் மிகச்சிறந்த கைங்கரியமாகும். அவரது கல்விப்பணி மேலும் தொடரவும் சிறந்த ஆரோக்கியமான நல்வாழ்வை குடும்பத்தினருடன் வாழவும் வாழ்த்துகின்றேன்.

திருமதி. இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# " She Whom I Saw....."



I consider it my immense good fortune that I have been offered the opportunity of offering my good wishes to her on the occasion she retires from service as a learned education officer of the northern extremity of our country.

She, who while bearing responsibilities in various fields of Education served finally as a Zonal Director of Education in the Jaffna Zone was immensely help full in maintaining relations with the National Institute of Education in the area of Teacher Trainig and Examinations.

It is with a deep sense of reverence that I recall your unflagging commitment and efficiency with which you functioned combining the North and the South, especially during a period of numerous difficulties.

You are a skilled manager, The smile, the cordiallty you bestowed upon officers coming form the south, amidst numerous hardship, was like a life giving shower upon the parched earth. what a relief it was to hear the smattering of singala she expressed, even the some difficulty. what a bouding they produced,. although I, born in the South, enjhoyed a special official relationship with National Colleges of Education and Teacher Training Colleges, what I learned from you, an exceptional officer in the field of education, cannot be described in words, you were indeed a massive support in helping the understand the pulse of the Tamil People.

You were a most dear and near sister to me, you were an extremely efficient manager of teachers, their friend and sister, My most sincere wish is that you be blessed with good health to make your life in retirement eminently effective and meaningful.

***Lilani Amaresingah***
*Retired Director*
*National Institute of Education maharagama.*

# வாழ்த்துரை



யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகத்தின் அறுபதாவது வயது பூர்த்தியை முன்னிட்டு அவரது கல்விச்சேவையைப் பாராட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. அ. வேதநாயகம் தனது கல்விப்பணியை ஆசிரியராகத் தொடங்கி பல வருடங்கள் நாட்டின் பல பகுதிகளில் சிறந்த ஆசிரியப் பணியாற்றி, பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர். வகுப்பறைக் கற்றலில் இருந்து கல்வி நிர்வாகப் பணியில் இணைந்து படிப்படியாக உயர்வு பெற்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராகவும், பின்னர் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராகவும் இருந்து சேவையைப் பூர்த்தி செய்யவுள்ளார்.

இவர் வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலம் மிகவும் சவால் மிகுந்த காலம். பாடசாலைக் கல்விச்செயற்பாடு யுத்தத்தால் நேரடியாகவும், மறைமுகமாவும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தது. பாடசாலைகள் பல மூடிக்கிடந்தன. சில அழிவுக்குட்பட்டு இருந்தன. மாணவர்களின் வரவு குறைவு, கற்கும் கற்பிக்கும் சூழ்நிலைகள் மிகவும் சாதகமற்று இருந்தன. ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டதால் அவர்களின் கற்பிக்கும் ஈடுபாடும், கற்பிக்கும் தரமும் குறைந்து இருந்தன. பாடசாலைகள் கல்விச்செயற்பாடுகளைச் சிறந்த முறையில் முன்னெடுப்பது மிகவும் சவால்மிக்கதாக இருந்தன.

சாதகமற்ற சூழ்நிலைகளின் பின்புலத்திலேயே திருமதி. வேதநாயகம் அவர்கள் தென்மராட்சியில் வலயக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். அங்கு குறுகிய காலத்தில் சிறந்த பணியாற்றியதால் இவர் யாழ்ப்பாணக் கல்விவலயத்துக்கு மக்களால் கொண்டு வரப்பட்டவராவார்.

பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட பொழுதும், திருமதி. க. வேதநாயகம் யாழ்ப்பாண மாவட்டக் கல்வியை மீண்டும் கட்டி எழும்புவதில் முன்நின்று உழைத்தார். இவரது கடின முயற்சிகளால் பல பாடசாலைகள் மீள

இயக்கப்பட்டன. மாணவர்களின் வரவு அதிகரித்தது, ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் பணிகளில் பெரு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பாடசாலைகளுக்குரிய பௌதிக வளங்களைப் பெற்று கொடுப்பதில் சிறந்த பணியாற்றினார்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் பெறுபேறுகளை உயர்த்தப் பெரும்பாடுபட்டார். மெல்லக் கற்போருக்கும், கற்றலில் பின்நிற்போருக்கும் சிறந்த பரிகாரக்கல்வி வழங்குவதில் தனித் திறமை பெற்றவர்.

இவர் சிறந்த மேடைப் பேச்சாளராவார். கல்வி சார்ந்த விடயங்களை மக்களுக்கு, மாணவர்களுக்கு, பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதில் தணியாத தாகம் கொண்டவர். இவர் பேசக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நன்கு பயன்படுத்தி கல்விப் பிரச்சினைகள், தீர்வுகளை மக்களுக்குப் பரப்புரை செய்வார். இவர் மக்களை, மாணவர்களை, ஆசிரியர்களை, கல்விப்பணிக்காக அணிதிரட்டுவதில் வல்லவர்.

இவர் சிறந்த கல்விநிர்வாகி மாத்திரமல்லாமல் மனிதநேயம் மிக்கவராகவும் திகழ்கின்றார். இதனால் ஆசிரியர்களின் குறிப்பாக பெண்ணாசிரியர்களின் பிரச்சினைகளிற் தீர்வு காண்பதில் சிறந்து விளங்கினார்.

திருமதி. வேதநாயகம் தனது தொழிற் பணியையும், வீட்டுப்பணியையும் ஒன்றுடன் ஒன்று முரண்படாத விதத்தில் இரண்டையும் சிறப்பாக முன்னெடுத்த ஒரு பெண் அதிகாரி என்ற பெருமைக்குரியவர்.

60 வயது பூர்த்தி செய்தாலும் 75 வருடங்கள் வரையாவது தொழிற்றுறைகளிலும், சமூகப் பணிகளிலும் துடிப்பாக ஈடுபட வேண்டுமென விரும்புகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர் முன்னாள். துணைவேந்தர்.

# வாழ்த்துரை



மணிவிழா காணும் யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தியை மிக்க மகிழ்ச்சியுடன் வழங்கு கின்றேன்.

சிறந்த கல்விச்சேவையாளராக இருந்து பாடசாலைகளின் கல்வித்தர உயர்வுக்கு வழிகாட்டியாக, முன்னுதாரண செயற்பாட்டாளராக திருமதி அ.வேதநாயகம் அவர்கள் செயலாற்றியுள்ளார். அவருடைய அர்ப்பணிப்பான கல்விச்சேவைக்கு இத்தருணத்தில் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்வித்துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கும், கல்விசார் பிரச்சினைகளை நேரடியாக அணுகி விரைவாகத் தீர்க்கின்ற நல்ல தீர்மானங்களை விரைவாக மேற்கொள்கின்ற ஆற்றல் உள்ள, துணிவுள்ள கல்விப்பணிப்பாளராகவும் திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் செயலாற்றி யுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும், வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதும், குறிப்பாக வன்னிப்பிரதேசத்திலும் தன் கல்விச் சேவையை முழுமையாக வழங்கிய உயர்ந்த மனிதத்துவம் பொருந்திய முன்மாதிரிக் கல்விப்பணிப் பாளராகவும் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் கல்விச் சேவையாற்றியுள்ளார்.

அவருக்கு மணிவிழா மலரை வெளியிட்டு, அவர் செய்த சேவைகளை ஆவணப்படுத்தி வெளியீடு செய்கின்ற மணிவிழா அமைப்பினரை பாராட்டுகின்றேன். திருமதி அ.வேதநாயகம் அவர்கள் பல்லாண்டு தொடர்ந்து கல்விச்சேவை செய்து நல் வாழ்வு வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**எஸ்.கே.யோகநாதன்,**
பீடாதிபதி,
தேசிய கல்வியியற் கல்லூரி.

"கருமத்திருதி"

# லயன் Dr. வை. தியாகராஜா MJF, J.P. அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அம்மையார் அவர்களைக்கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு நன்கு தெரியும். அவர் ஒரு சாதாரண ஆசிரியையாக தன் சேவையைத் தொடங்கியது முதல் உள்ளக சேவை ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக பின்னர் கல்விப் பணிப்பாளராக பல உயர் பதவிகளை அவரது அர்ப்பணிப்புடனான கல்விச் சேவையினால் பெற்று, வன்னி மாவட்டத்திலும், தென்மராட்சியிலும் அளப்பரிய சேவையாற்றி மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்று கடந்த நான்கு ஆண்டுகளாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றித் தற்போது ஓய்வுபெறும் தறுவாயில் இருக்கின்றார்.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய இக்காலப் பகுதியில் கல்விச் செயற்பாட்டிற்காக சர்வதேச லயன்ஸ் கழகத்துடனும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடனும் தொடர்புகொண்டு பல செயற்திட்டங்களை மாணவர்களின் நன்மைகருதி செயற்படுத்திய ஒரு சிறந்த சேவையாளர், நேரகாலம் பார்க்காது அதிகூடிய நேரம் கல்விச் சமூக மேம்பாட்டிற்காக உழைத்தவர்.

மேலும், முன்பள்ளி ஆசிரியர்களை இனங்கண்டு அவர்களது பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது மேம்பாட்டிற்காகவும், அவர்களுக்கான நிரந்தர வருமானமும், நிரந்தர நியமனமும் கிடைக்க உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்ததின் பலனாக வடமாகாண ஆளுநர் அவர்களினால் முன்பள்ளி ஆசிரியர்கள் ஓர் ஒருங்கமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. எத்தனையோ தசாப்த காலமாக பல பிரச்சினைகளுக்கு

மத்தியில் சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓர் விடியலை ஏற்படுத்தித் தந்த இவ் அம்மையாருக்கும் ஆளுநர் அவர்களுக்கும் யாழ். மாவட்ட மற்றும் வன்னி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"காய்க்கின்ற மரம்தான் கல்லடி படும்" என்பதற்கமைய பல எதிர்ப்புக்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு சளைக்காமல் எதிர்நீச்சலுடன் கல்வி உலகிற்கு அளப்பரிய சேவையாற்றிய ஒருவர் இளைப்பாறுவதென்பது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பெனவே நான் கருதுகின்றேன்.

அவரது மணிவிழா சிறக்கவும், எதிர்காலம் சிறப்புடன் ஆரோக்கியமாக அமையவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

- லயன் Dr. வை. தியாகராஜா MJF, J.P.

# வாழ்த்துரை

யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளராகக் கடமை புரிந்து ஓய்வு பெறவுள்ள திருமதி அ.வேதநாயகம் அம்மாவுக்கான பாராட்டுமலருக்கு சில வார்த்தைகளை எழுதுவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன்.

இவரது ஓய்வு கல்விப்புலம் இழக்கக்கூடாததொன்றாகும். ஏனெனில் இவர், அப்போதைய வடக்குக்கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்தபோது கல்வி அபிவிருத்திக்காக முகாமைத்துவ மேற்பார்வைக்காக அவர் ஆற்றியபணி மகத்தானது. வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களின் கணித விஞ்ஞான பாட அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்காக இவரால் முன்னெடுக்கப்பட்ட விஷேட செயற் திட்டம் மாணவர், ஆசிரியர் மத்தியில் பெரும் தாக்கத்தையும், மாற்றத்தையும், அதிகரிப்பையும் ஏற்படுத்தியது மாத்திரமன்றி, மக்கள் மத்தியில் விழிப்பையும், பாராட்டுதலையும் பெற்றது. அது மட்டுமன்றி, மாணவரிடையே இப்பாடங்கள் தொடர்பாக இருந்த அச்ச உணர்வைப் போக்கியது விஷேடமாகக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

இதேபோன்று, எமது பாடசாலைக்கு வருகைதந்தபோது அவர் முகாமைத்துவம் தொடர்பாக, நுணுக்கமான, ஆழ்ந்த, பரந்த மேற்பார்வையை மேற்கொண்டது மாத்திரமன்றி, எமது பாடசாலையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விஷேட அம்சங்களைப் பாராட்டி ஊக்கிவித்ததோடு, இது பற்றி ஏனைய பாடசாலைக்கும் எடுத்துக்கூறி இந்த மாகாணத்திலேயே சிறப்பான முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுக்க உறுதுணையாக இருந்தார். அது மட்டுமன்றி, இவ்வாறான சந்தர்ப்பங்களில், அதிபர், ஆசிரியர், மாணவருடன் சிநேகமாகப் பழகி, நல்ல பல ஆலோசனைகளையும் வழங்கி ஆரோக்கியமான உறவைப் பேணியது, தற்காலத்தில் மேற்பார்வைக்காகச் செல்லும் உத்தியோகத் தர்கள் பின்பற்ற வேண்டிய சிறப்பம்சமாகும். மேலும், புதிய கல்வித்திட்டத்திற் கமைய எமது பாடசாலையில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற சிறுவர் விளையாட்டு முற்றம், மாகாண மட்டத்திலே பாராட்டுதலையும், பரிசில்களை யும் பெற இவரது ஆலோசனைகளும் வழிகாட்டலும், மதிப்பீடும் காரணமாக அமைந்தன.

இது மட்டுமன்றி, எமது வலயக்கல்விப் பணிமனையினால், கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்களைக்கொண்ட குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டபோது, இன்முகத்துடன் வரவேற்று, பகற்போசன ஒழுங்குகளைச் செய்தது மாத்திரமன்றி, யாழ். குடாநாட்டிலுள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவதற்கான வழிகாட்டி, மற்றும் ஏற்பாடுகளைச் செய்தது, எமது கல்வி வலயத்தைப் பற்றிய நல்லெண்ணத்தையும், பொதுவாக மற்ற இன மக்களுடன் ஆரோக்கியமான நல்லுறவைப் பேணுவதில் அவருக்கிருந்த பாராட்டத்தக்க குணத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்தது. இந்நிகழ்வு எமது குழாத்தினரின் உள்ளங்களில் பசுமையான நினைவாக என்றும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான சகல குணாதிசயங்களையும், மனிதநேயப்பண்புகளையும் கொண்ட ஒருவர் கல்விச்சேவையிலிருந்து வயதின் நிமித்தம், இளைப்பாறுவது எமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாய் இருந்தாலும், அவர் தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழப்பிரார்த்திப்பதோடு, தொடர்ந்தும் கல்விக்காக இயலுமான சேவைகளை மேற்கொள்ள ஆசித்து முடிக்கின்றேன்.

அல்-ஹாஜ்.ஏ.எம்.முஹம்மட் சஹீட்
(முன்னாள் அதிபர்),
தா றுஸ்ஸலாம் மஹா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

# கல்விப்புலத்தை சீரமைத்த பெருந்தகை



கல்விப்புலத்திற்கு பெருமை சேர்த்த வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஒரு கல்விப் பணிப்பாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக கடமையாற்றிய அவர் மாணவர்களதும், ஆசிரியர்களதும் பொதுமக்களதும் மனதைக் கவர்ந்தவர் எனக் கூறினால் அது மிகையாகாது. அவர் கொண்டிருந்த ஆளுமை கல்விப்புலத்தின் அபிவிருத்திக்கு காத்திரமான தீர்மானங்களை எடுக்கவும், நடைமுறைப்படுத்தவும் உதவியது எனக் கூறினால் அதில் ஐயமில்லை.

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு பெருமை சேர்த்தவர் எனக் கூறினால் அதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை. எப்பொழுதும் நேர் கண்ணியச் சிந்தனை கொண்ட அவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வியை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பதில் அக்கறை கொண்டவராக விளங்கினார். அவர் ஒரு கருமத்தினை நிறைவேற்றுவதற்கு யாரை அணுக வேண்டும் என்ற தந்திரோபாயத்தை கையாள்வதில் வல்லவராக விளங்கினார். இதன் காரணமாகவே "இதனை இதனால் இவன் முடிப்பான் என ஆய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற திருவள்ளுவரின் தத்துவத்திற்கிணங்க அதிகாரத்தையும், பொறுப்புக்களையும் பொருத்தமானவர்களிடம் ஒப்படைத்து ஒரு கருமத்தை நிறைவேற்றுவதில் வல்லவராகக் காணப்பட்டார்.

திருமதி வேதநாயகம் அவர்கள் கல்விப்புலத்திற்கு ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவை எனக் கூறலாம். குறிப்பாக யாழ். மாவட்ட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்துவதில் அவரின் பங்களிப்பு மறக்க முடியாததாகும். இதன் காரணமாகவே மாணவர்களைக் கவர்ந்த கல்விப் பணிப்பாளர் என அவரைக் கொள்ள முடியும். இத்தகைய பெருமை மிக்க திருமதி வேதநாயகம் அவர்கள் பதவியிலிருந்து இளைப்பாறினாலும் யாழ். மாவட்டத்திற்கான கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபாடு காட்டவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இத்தகைய பெருந்தகை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் இந்த அவனியில் வாழ்ந்து எமது சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.


**பேராசிரியர் கே.தேவராஜா,**
*பீடாதிபதி, வர்த்தக முகாமைத்துவபீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



# வாழ்த்துரை

**அறிவுப் பயிர் தழைக்க அவனி தந்த**
**அன்னை அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்**

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அம்மா! நீங்கள் இப்பூவுலகிலே அறுபது அகவை கண்டு ஆறுதல் அடைந்திருக்கின்ற இவ்வேளை நீங்கள் பணியாற்றிய காலம் தன்னில் விட்டுச் சென்ற சிந்தனைகள், பதவியால் வந்த தடங்கள் எம்மால் மறக்கற்பாலன அல்ல. "மதிப்பு என்பது பதவிகளைப் பெற்றிருப்பது அல்ல அவற்றைப்பெற நாம் தகுதி உள்ளவர்களாக இருப்பதே" என அன்று தத்துவஞானி அரிஸ்டோட்டில் கூறி வைத்த வாக்கு இன்று உங்களால் உண்மை என நிருபிக்கப்பட்டதை நினைந்து வியக்கின்றோம்.

அம்மா நீங்கள் தென்மராட்சி கல்விப் பணிமனையின் கல்விப்பணிப் பாளராக இருந்து ஆற்றிய சேவை எத்தனை உள்ளங்களில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துள்ளது என்பதை நாம் நேரில் அறிந்துள்ளோம். மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான செயற்றிட்டம், பரிகாரக்கற்பித்தல், கற்றற் கையேடுகள் என மடித்தெண்ண விரல் போதாத பணிகள் எம்மண்ணில் பதிந்தன.

தென்மராட்சிப் பாடசாலைகளின் பதிவாகத் தாங்கள் நெறிப்படுத்திய "சிறகு" உண்மையில் எத்தனை மாணவப் பிஞ்சுகள் கல்விப் பரவெளியில் பறந்து பறந்து அறிவுத்துளிகளைத் தேடத்துணை செய்திருக்கும் என்பது எமக்கு மட்டுமல்ல தென்மராட்சி மண்ணிலும் தென்மராட்சிக்கு வெளியிலும் கூடத் துலங்கியதை நாம் அறிந்து மகிழ்ந்தோம்.

மாணவர்களைக் கற்கவேண்டும் என்ற விருப்பம் உந்தப்படுவதற்கும், ஆசிரியர்கள் தமது சுமையை மறந்து கல்வி கற்பித்தலில் ஈடுபடுவதற்கும் உங்கள் பணி மகத்தானதாக இருந்தது என்பதைப் பலரும் பேசிக்கொள்வதைக் கேட்டுப் பூரிப்படைந்தவன் நான். ஒரு மனிதன் எதற்குத் தகுதியுடையவனாகத் தன்னை ஆக்கிக் கொள்கின்றானோ அதனை இயற்கை வலியக் கொண்டுவந்து தக்க தருணத்தில் அவனுக்கும் கொடுத்து விடுகின்றது என்பது சுவாமி சிற்பவானந்தரின் வாக்கு அந்த வாக்கிற்கு இணங்கவே தாங்கள் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கின்றீர்கள்.

சாதாரண மனிதனாகிய என்னையும், என் குடும்பத்தினையும் தாங்கள் நேசித்த முறைமை உண்மை எம்மனங்களில் ஆழப்பதிந்துள்ள பசுமை நினைவுகள் என்பேன். அந்த வகையில் சமூக சேவகியாக அறிவொளி பரப்பும் தாயாக கல்விப்பணிப்பாளராக உயர்ந்து நின்று இன்று அறுபது கண்டீர். அத்தோடு நும்பணி நின்றிடாது ஆயிரம் பிறை கண்டு அகம் மகிழ்ந்திருக்க வாழ்த்துகின்றேன்.

கா.சிவஞானசுந்தரம்,
முகாமையாளர், திருக்கணித பதிப்பகம், சாவகச்சேரி.

# குடும்ப பந்தம்




APRIL
2005
LONDON SOUTH BANK UNIVERSITY

# பகுதி – 2

## திருமதி
## அருளேஸ்வரி வேதநாயகம்
## அவர்கள் பற்றி....



# கல்வி, சமூகம் வாழ்த்தும் அருளீஸ்வரி

திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் ஆக வருவதற்கு முன் செல்வி அருளீஸ்வரி அன்னராஜாவாக இருந்த அந்த மாணவப் பருவத்தில் அவர் மனதில் ஆழப்பதிந்திருந்த தமிழன், தமிழ்மொழி, தமிழர் தாயகம் என்ற அந்த உணர்வுகளைக் கணித, விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சேவை யாற்றிக் கொண்டிருந்த திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் அவர்களை 1992ஆம் ஆண்டில் நான் முதன்முதலிற் சந்தித்த பொழுதும் நேரடியாக உணரும் வாய்ப்புக் கிட்டியது.

1970ஆம் ஆண்டில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பு மாணவியாகக் கற்றுக்கொண்டிருந்த காலத்திற் க.பொ.த. உயர்தர மாணவர் மன்றத்தின் வெளியீடான "மாணவர் குரல்" என்ற சஞ்சிகையில் அவரால் எழுதப் பட்டிருந்த "இன்றைய தமிழனின் இழிநிலை" என்ற கட்டுரையில் தனது இனத்தின் அவல வாழ்வையும், மற்றவர்களை முதுகிற் குத்திச் சுகபோகம் அனுபவிக்க முயலும் சுயநலமி களையும் எண்ணி வருந்திய அந்த உணர்வும், கழிவிரக்கமும் சுமார் 22 ஆண்டுகளின் பின்னரும்கூட 1992இலும் அவரிடம் இருந்ததைக்கண்டபொழுது அவரது உள்ளத் திற்குள் மறைந்துகிடந்த அந்த மனிதத்து வத்தை என்னால் ஆழமாக அறிந்துகொள்ள முடிந்தது.

கோப்பாயில் அமைந்துள்ள யாழ். மாவட்ட, கணித, விஞ்ஞான மூலவள நிலையத்திற் பொறுப்பான அதிகாரியாக இருந்து கணித பாடத்தை இலகுவாகக் கற்பதற்கான பல முன்னோடிச் செயற் றிட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்திக் கொண்டிருந்த விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களுடைய பணியையும், அவரது ஆய்வு முயற்சிகளையும் அறிந்து அந்த மூலவள நிலையத்திற்குச் சென்றேன்.

அப்பொழுது நான் உடுப்பிட்டிக் கொத்தணி அதிபராகவும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த பொற்காலம். கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் முன்வாசலிற் போய்நின்ற என்னை வரவேற்றது செல்வி உதயா சிவஞானம் என்ற முன்னணிக் கணித ஆசிரியை. அவரைக் கண்டதும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு

"கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் அம்மாவைச் சந்திக்க வேண்டும்.... நீங்கள் இங்கேயா சேவையாற்று கிறீங்கள்...?"

என்று கூறி அவரையும் அறிய விரும்பினேன். ஏனென்றால் துரு துருவென்று சுறு சுறுப்பாகவும், சிரித்த முகத்துடனும் என்னை வரவேற்ற அந்தப் பண்பு நன்றாகக் கவர்ந்தது.

"சேர் ! நான் கணிதபாடச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக இருக்கிறன். மிஸ் உடன்தான் நான் வேலைபார்க்கிறன்.. அவர் பக்கத்திலை ஸ்கூலுக்குப் போயிருக்கிறார்.. கொஞ்ச நேரத்திலே வந்திடுவார் இருங்கோ சேர்...."

என்று மிகவும் பண்பாகக் கூறி ஒரு இருக்கையைக் காட்டிய உதயா இன்னும் தனது பணியைக் கணிதவள அபிவிருத்திக்காக

அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார் என்றால், அது திருமதி வேதநாயகம் அவர்களின் திட்டமிடப்பட்ட நெறிப்படுத்த லும், வழிகாட்டலும்தான் என்பதை எவருமே புரிந்துகொள்வர்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் வரும் வரைக்கும் கணித மூலவள நிலையத்தைச் சிறிதுநேரம் மேலோட்டமாக நோட்ட மிட்டுக் கொண்டிருந்தேன். மரங்கள், தடிகள், பலகைத்துண்டுகள், கம்பிகள், வளையங்கள், குண்டுகள் என்று எத்தனையோ பொருட்கள் அந்த அறையினுட் கதைகள் பேசிக் கொண்டிருந்தன.

ஆம் ! கழிவுகள் எல்லாம் கணிதக் கலையாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பிரமிப்படைந்து கொண்டிருந்த போது,

சேர்!... மன்னிக்க வேணும்... நான் இதிலை பாடசாலைக்குப் போய்வந்ததிலை சுணங்கிப்போயிற்றுது. நீங்கள் வந்து நிக்கிறதா உதயா வாசலில் வைத்துக் கூறினா....

மிக மிகப் பணிவாக ஒரு தலைமைத்துவத்திற்கு என்ன பண்புகள் தேவையோ, அதன் ஒட்டுமொத்தமாக எனக்கு முன்னே சிரித்துக் கொண்டுவந்த அந்தக் கல்வி அதிகாரியைக் கண்டதும் நான் சற்று அதிர்ந்துவிட்டேன்.

இறுக்கமான, மற்றவர்களின் கருத்துக் களைச் செவிமடுக்காது அவர்களை ஏறெடுத் துப்பார்க்காத, தானே எல்லாம் தெரிந்தவராக, தனக்குமுன் எல்லோரும் கை கட்டிக்கொண்டு "ஐயா" என்றும் "ஆமா" என்றும் போட வேண்டும் என்று "கதிரைப்பசி"யில் அலைந்து திரிகின்ற நிர்வாகிகளைப்போற்றான் இவரும் இருப்பாரோ என்று எதிர்பார்த்து வந்த எனக்கு, அவர் இவ்வளவு தூரத்திற்குத் தன்னைத் தாழ்த்திப் பண்பாக அணுகுவார் என்று துளி கூட எதிர்பார்க்கவில்லை.

"அம்மா!.... நான் ஆனந்தராஜ், அதிபர்..." நான் வார்த்தைகளைக் கூறி முடிப்ப தற்குள் "சேர் உங்களைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் கஷ்டப் பிரதேச மான வெற்றிலைக்கேணி பரமேஸ் வரா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து அங்கே ஆற்றிய சேவை, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும் இப்ப உடுப்பிட்டி AMC யிலும் அதிபராக இருந்து மிகவும் துணிகரமாகச் சில செயற்பாடுகளைச் செய்து, நீங்கள் கல்விக்காகச் செய்து கொண்டி ருக்கின்ற பணியையும், அர்ப்பணிப்பையும் பற்றி நான் நன்றாக அறிந்திருக்கின்றேன். நீங்கள் ஒரு எழுத்தாளரும்கூட என்பதும் தெரியும். ஆனால், இப்பத்தான் உங்களை நேரிற் பார்க்கின்றேன்.

என்னைப்பற்றி அக்குவேறு ஆணி வேறாக அறிந்துவைத்த அந்த உயர்ந்த மனம் படைத்த கல்வி அதிகாரியின் முன்னால் என்னால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை.

"சேர் !.... உங்களுக்கு என்னாலை என்னஉதவி வேணும்.." அந்தச் சிறிது நேர மௌனத்தைக் கலைத்துக்கொண்டு அவரே விடயத்திற்கு வந்தார். "அம்மா!... உங்களு டைய கணித, விஞ்ஞான மூலவள நிலையம் பற்றியும் கணிதத்தை இலகுவாகக் கற்பிக்க நீங்கள் தயாரித்து அறிமுகப்படுத்தி வருகின்ற கணித உபகரணங்களையும் பற்றி அறிந்து போக வந்திருக்கின்றேன்... இதைப் போல எங்களுடைய பாடசாலையிலும் ஒரு மூலவள நிலையத்தை அமைக்க விரும்புகிறோம்.

நான் இப்படிக் கூறியதும் அவரது முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியும், சந்தோஷமும் அவரது செயலில் தெரிந்தது.

"உதயா!... உதயா!..." தனது பணிகளில் எல்லாம் தோள் கொடுத்து உதவிக் கொண்டிருக்கின்ற உதயா சிவஞானத்தைக் கூப்பிட்டு அவரைப் பற்றி மேலும் விளக்க மாகக் கூறி வைத்தார்.

"எங்கட இனம் கல்வியாலதான் முன்னேறவேண்டும். இண்டைக்குக் கணித பாடம் சித்தியடையாத பல நூற்றாண்டுக் கணக்கான பிள்ளைகள் உயர்கல்வியைத் தொடரமுடியாத அந்தத் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து எங்களுடைய பிள்ளைகளை மீட்டெடுத்து எல்லாப்பிள்ளைகளையும் கணிதத்திலே சித்தியடையப் பண்ணவேணும்.. நீங்கள் அப்படி நினைத்ததே எனது இலட்சியத்திற் பாதி நிறைவேறியது போற் சந்தோஷமாக இருக்கிறது. உங்களுக்கு என்னென்ன உதவிகள் தேவையோ எல்லாம் நாங்கள் செய்து தருவோம்."

அவர் ஒரு அதிகாரியாக நின்று என்னுடன் பேசவில்லை. ஒரு ஆசிரியையாக, எனது ஒரு தோழியாக, ஒரு வழிகாட்டியாக நின்று பேசிக் கொண்டிருந்தார்.

அந்தச் சந்திப்பு எனது கல்லூரியில் மிகச் சிறந்த கணித மூலவள நிலையம் ஆரம்பிக்கப்படுவதற்கு வித்திட்டது என்ற வகையில் எனது கல்வித்துறை சார்ந்த நீண்ட அனுபவத்தில் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் ஒரு அத்தியாயம்தான்.

இது தொடர்பாக எனது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அப்போதைய தலைவராக இருந்த முன்னாட் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, எமது பிரதி அதிபரும், வே. தவேஸ்வரன் ஆசிரியருக்கு இதுபற்றி எடுத்துக்கூறிய அவர்கள் மிகவும் சந்தோஷமடைந்தவர்களாக,

"நல்ல விஷயம்... எவ்வளவு செலவு என்றாலும் பரவாயில்லை. தவேஸ்வரனையும் ஒரு தச்சு வேலை செய்யக்கூடியவர் ஒருவரையும் கூட்டிச்சென்று பார்த்து, அதே மாதிரி இல்லை அதைவிட இன்னும் சிறப்பாகச் செய்து, எங்களுடைய கல்லூரியிற் கணிதப் பெறுபேற்றை மேலும் உயர்த்த வேண்டியதைச் செய்யுங்கோ.." என்று பேராசிரியர் கூறிய ஆசி எனது கல்லூரியில் மிகச் சிறந்த மூலவள நிலையம் அமைக்க உதவியது. அவரது அந்த முயற்சியின் வளர்ச்சி பற்றி "சாளரம்" சஞ்சிகையில் நான் எழுதியது இன்னும் அவருக்கு ஊக்குவிப்பாக இருந்தது.

இதில் திருமதி வேதநாயகம் அவர்களினது வழிகாட்டலும், ஆசிரியர்கட்கான பயிற்சி வழிகாட்டலும் எனக்குப் பெரிதும் உதவியது.

பொதுவாக ஆசிரியர் செயலமர்வு ஒன்றை நடத்துவதாயின் "எவ்வளவு வருமானம்" கிடைக்கும் என்று எதிர்பார்த்துச் செயற்படுகின்ற எங்களுடைய கல்விச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் இருக்கும்பொழுது திருமதி வேதநாயகம் அவர்கள் எமது கல்லூரியின் ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும், எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காது பயிற்சிகளை வழங்கித் தான்கொண்ட இலட்சியத்தில் மட்டுமே உறுதியாக இருந்ததை என்னால் மறக்கமுடியாது. எனது கல்லூரியிற் செய்து முடித்தபின் வடமராட்சிக்கான ஒரு கணித மூலவள நிலையத்தையும் பொன்னம்பல வித்தியாலயத்தில் அமைத்தார்.

திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் அவர்கள் பின்னர் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியபோதும் அதன் பின்னர் பதவி உயர்வு பெற்றுத் துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளராகி அவர் ஒரு நிர்வாகி அல்லது முகாமையாளர் என்ற நிலையில் இருந்தபோதும் தலைமைத்துவத்திற்குரிய பண்புகளைக் கொண்டிருந்தார். அதேவேளை நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவாக நேர்மனப் பாங்குடன் செய்து

அதைவிட மேலாகக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கும் செயற்பாடு களுக்கும், முன்னுரிமை கொடுத்துத் தானும் களத்தில் இறங்கி ஆசிரியர்களுடன் ஆசிரியை யாக, பிள்ளைகளுடன் பிள்ளைகளாக, பெற்றோருடன் தானும் ஒரு தாயாகப் பழகிய அந்தப் பண்புகள் இன்னும் அவரைச் சமூகத்தில் முதலிலைப்படுத்திப் பேசும் மரபைக் காணமுடிகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பை யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்தபோதும், அரசினாற் பொருளாதாரத்தடை மற்றும் கற்றல், கற்பித்தலுக்கான சாதனங்களின் தடைகள் விதிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றை யெல்லாம் ஒரு அறைகூவலாக ஏற்றுத் துணிந்து நின்று கல்வியை வளர்த்தெடுத் தமையை இன்னும் வன்னிச் சமூகம் நினைவு கூர்ந்துகொண்டே இருக்கின்றன.

துணுக்காய் வலயத்தில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் அவரால் முன்னெடுக்கப்பட்ட துரித 'அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் குறித்த காலப்பகுதிக்குள் நிதி ஒதுக்கீடுகளை வலயங்களுக்கு வழங்கி அவை உரிய முறையிற் செலவிடப்படுகின்றனவா என்பதைக் கண் காணித்து அறிக்கைப்படுத்துவதனூடாக அதிபர்களையும், ஆசிரியர்களையும் உசார் நிலையில் வைத்திருந்ததை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்களக் கல்விப் பணிப்பாளர்களும், அதிபர்களும், ஆசிரியர் களும் பெருமையோடு கூறிக்கொள்கின் றார்கள் என்றால் அது அவரது சேவைக்குக் கிடைத்த ஒரு விருது!.

யாழ்ப்பாண வலயம் கல்வி, ஒழுக்கம் மற்றும் நிர்வாகம் சீர்குலைந்திருந்த வேளை யில்; நல்ல ஒரு ஆளுமையும், ஆற்றலும் உள்ள கல்விப் பணிப்பாளரைக் கல்விச் சமூகம் எதிர்பார்த்திருந்த வேளையில் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தென்மராட்சி வல யத்தில் இருந்து யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பொழுது, பல அதிபர்களும், ஆசிரியர்களும் மகிழ்ச்சி அடைந்ததைப் பலருடைய பாராட்டுரைகளி னூடாக என்னால் அறிய முடிந்தது.

திருமதி அ. வேதநாயகம் அவர்களின் கணித மூலவள நிலையத்தினூடாக ஆற்றிய சேவையைப் பற்றிக் கணித மூலவள நிலையத்தினால் வெளியிடப்பட்ட துல்லியம் சஞ்சிகையில் அப்போது கோப்பாய்க் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.கே.சி. வேலாயுதம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை அவரது உள்ளத்தையும் ஆற்றலையும் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

"மாணவச் செல்வங்களின் உத்வேக வளர்ச்சியும், கணிதப்புலத்தில் அவர்காணும் உயர்ச்சியுமே குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் ஆற்றல் உள்ள ஆசிரியப் பெரு மக்களை உருவாக்கும் நற்பணியின் நடுநிலை யமாக விளங்குவதே கணித மூலவள நிலைய மாகும். சேவையில் பூத்த கணிதப் பூங்கா மாணவர் தேவைக்குகந்த தீஞ்சுவைத் தேறலை நல்கும் தீரமும், திறனும் கொண்டதே. இதன் உயிர் நாடியாக, உண்மை உழைப்பின் பேரொளியாக விளங்கும் பெண்மை திருமதி அ. வேதநாயகமே. கண்டு, கேட்டு, உய்த் துணர்தல் என்ற கருத்தைக் கண்ணியப் படுத்திக் கணித உபகரணங்களை ஆக்கி, மாணவர்களை ஆர்வமுறச் செய்த கீர்த்தி, நம் மண்ணுக்குச் செய்த மகத்தான கல்வித் தியாகமே..."

கோப்பாயில் ஆரம்பித்த எனது சந்திப்பு துணுக்காய் வடக்கு, கிழக்கு

மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக்களம், தென்மராட்சி வலயம், யாழ்ப்பாண வலயம் என்று விரிந்து சென்று, அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. எனது முயற்சிகளுக் கெல்லாம் ஊக்குவிப்பாகவும் இருந்தது.

"என்ன சேர் !... எப்படித்தான் கஷ்டப்பட்டு என்னை அர்ப்பணித்து வேலை செய்தாலும் இங்கு (இருந்து வேளியேறிய) சிலர் எனது ஆக்கபூர்வமான செயற்பாடு களுக்கு முட்டுக்கட்டை போடுவதுடன் விமர்ச்சித்துக் கொண்டும் திரியிறதை நினைக்கக் கவலையாக இருக்கு..."

அண்மையில் 60 வயதை நெருங்கு வதற்குச் சில மாதங்களுக்கு முன் அவரை நான் அலுவலகப் பணி தொடர்பாகச் சந்தித்த பொழுது, வேதனையுடன் அவர் கூறியதும், எனது இதயத்தைத் தாக்கியதுபோல் இருந்தது.

"அம்மா மழைக்கு முளைக்கின்ற காளான்கள் மாதிரி, சந்திரனின் வரவைக் கண்டு குரைக்கின்ற நாய்கள் போன்று அவர்களைத் தூர எறிந்துவிட்டு உங்களுடைய பாதையைத் தொடருங்கள். அவர்கள் எல்லாம் கதிரையைப் பிடித்துவைத்து அறுபதற்குப் பின்னரும் நீடித்து இருப்பதற் காக எப்படி எப்படியெல்லாம் பேசுவார்கள்; வாழ்வார்கள் என்றெல்லாம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அர்ப் பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் ஆதரவும், ஆத்மபலமும் எப்பொழுதும் இருக்கும். உங்களுக்குப் பின்னால் ஆயிரக் கணக்கான அதிபர்களும், ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் அணி திரண்டு நிற்கத் தயாராக இருக்கும்பொழுது இந்தச் சிறிய சலசலப்புக்களுக்கு அஞ்சாதீர்கள்; ஓடா தீர்கள்.. நிச்சயமாக கல்வி உலகு உங்களை என் றென்றும் நினைத்துக்கொண்டே இருக்கும். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து கல்விக்கான உங்கள் சேவையைத் தொடர்ந்து முன்னெ டுத்துச் செல்லவேணும் என்று வாழ்த்து கிறேன்..."

நான் சிரித்துக் கொண்டே கூறியதும் தனது கலங்கிய கண்களைத்துடைத்துக் கொண்ட அருளீஸ்வரி வேதநாயகம் என்னை நன்றி ததும்பப் பார்த்துக்கொண்டு நின்றார்.

B. ஆனந்தராஜ்
B.A. (Hons), M.A., Dip-in-Edu., Dip.in Journ
SLPS - I, SLEAS - III
பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்,
மாகாணக்கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

# நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும், வஞ்சனையற்ற செயல் வீரமும்...

பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியர் சேவை; ஒன்பது ஆண்டுகள் உதவிக்கல்விப் பணிப்பாளர் பணி; நான்கு ஆண்டுகள் அதிபர் சேவை. இருபத்தியாறு ஆண்டுகள் கல்விச் சேவையில் ஒன்பது வலயக்கல்விப் பணிப் பாளர்களின்கீழ் சேவை. ஒன்பது வலயக் கல்விப் பணிப்பாளர்களில் திருமதி அ. வேத நாயகத்தின்கீழ் உதவிக்கல்விப் பணிப்பாள ராகப் பணிபுரிந்த பசுமையான, நினைவுகள் அழியாத கல்விக் கோலங்களாய் கண்ணிலும் கருத்திலும் வந்துமறையும்.

1998ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் 17ஆம் திகதி கனத்த நினைவுகளோடு சைக்கிள் உழக்கிக்கொண்டிருந்தேன். "கண்டிப்பான மனிஷி; பிடிக்கேல்லயெண்டால் தூக்கி யெறிஞ்சுபோடும்; மனிசியோட நிண்டு பிடிச்சு வேலை செய்யிறது சரியான கஸ்ரம்."

தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப் பாளர் வெற்றிடத்தை நிரப்பச் செல்லும் எனக்கு இவ்வார்த்தைகள் எச்சரிக்கை வேட்டு களாய் விடுக்கப்பட்டன. வித்தியானந்தக் கல்லூரியிலேயே வாத்தியாராய் இருந்திருக்க லாமோ? தேவையில்லாமல் வம்பில் மாட்டிக் கொள்ளப் போகின்றேனோ? முட்டிமோதி மனஸ்தாபப்பட வேண்டி வருமோ? அவமானப்பட நேரிட்டால் என்ன செய்வது?- என்ற வினாக்கள் மனதில் அலை மோத சைக்கிள் தன்பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது.

போர்க்காலம். முல்லைத்தீவு-மாங் குளம் வீதியால் துணுக்காய் செல்ல முடியாது. விஸ்வமடு, கிளிநொச்சி சுற்றி; புத்துவெட்டு வானூடாகப் போய்ச்சேர 119 கிலோமீற்றர் தூரம் ஓடவேண்டும். அதிகாலை 5மணிக்குத் தொடங்கிய பயணம் 11மணிக்கு நிறைவு கண்டது. சைக்கிளும் பாவம். நானும் பாவம். வியர்த்தொழுக வலயக்கல்வி அலுவலக வாசலில் இறங்குகின்றேன்.

"முல்லைத்தீவிலிருந்து ஏதும் பதவி உயர்வெண்டால் இஞ்ச வருவாங்கள்; பதவி உயர்வு கிடச்ச கொஞ்சநாளில முல்லைத் தீவுக்குப் போவிடுவாங்கள்." வாசலில் நின்ற சிலர் பேசுவது என்காதில் விழுந்தது. வரவேற்பு வசனம் நல்லாயில்ல. பொருட் படுத்தாமல் எனது கடமையைத் தொடர்ந் தேன்.

சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்ட சிறிய அலுவலகம். நுழைவாசலுக்கு நேரே இருந்த சிறிய அறை. அதற்குள்ளே திருநீற்றுப்பூச்சோடும் சந்தனப்பொட் டோடும் இருந்த பெண்மணி. சற்றுப்பருத்த சரீரம். சுருண்ட கேசம் பரந்த முகம். இவர்தான் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமாக இருக்கும். கடவுள் நம்பிக்கையுடையவராய் இருப்பார்போலும். என்னுள்ளே மதிப்பீட்டொன்றைப் போட்டுக் கொண்டு அறைவாசலிற் சென்று நின்றேன்.

மூக்குக்கண்ணாடி வழியாக நிமிர்ந்து பார்த்தவர். "வாருங்கோ; முல்லைத்தீவில் இருந்து வாறியள் போல; வாங்கோ. இருங்கோ. விஜயன் நீங்கள்தானா. நல்லாய் களைச்சுப் போனியள் என்று கூறிவிட்டு மறுகணம் சோடாவும் வடையும் எடுப்பித்துத் தந்தார். உபசரிப்பு நல்லாயிருந்தது. என்னத் துக்கோ? என்ற வினாவுக்கு விடைதேடும்

370.92
ARU AR

முன்னரே எனக்குரிய நியமனக் கடிதத்தை வழங்கினார். பயபக்தியோடு பெற்றுக் கொண்டேன். அறிவு உயர உயர, பணிவு அதிகரிக்கு மென்பதை அவரது செயற் பாட்டிற் கண்டபோது பணிவோடு கூடிய அறிவு இன்னும் செத்துவிடவில்லையென நினைத்துக் கொண்டேன்.

சிறிதுநேரம் எனது மனைவி, பிள்ளைகளது சுகநலங்களை விசாரித்துக் கொண்டார். என்னை முன்னரே அறிந்தவர் போல எனது குடும்ப நலனை விசாரித்ததுமே அவர்பற்றி எனக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை வேட்டுக்கள் தவிடுபொடியாகின. வேதநாயகம் அம்மா; நல்ல, வல்ல, வலயக் கல்விப்பணிப்பாளராக இருப்பார் என்ற முதற்பதிவு மனதில் உதயமாகியது. தனது நிறுவன ஊழியரைக் கவர்ந்திழுக்கும் சிறந்த முகாமையாளர் எப்படி இருக்கமுடியு மென்பது எனது முதற்பாடமாகியது.

"புதியதோர் உலகம் உருவாக்கும் பணி..." ஆடும் மாடும் படுத்திருந்த பாடசாலைகள் பிள்ளைகள் கற்கும் கலைக் கோயிலாக மாறுமா? மாறியது. உபகதை யல்ல, உண்மைக்கதை துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் கோட்டை கட்டியகுளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், அம்பலப் பெருமாள்குளம், தெண்ணியங்கங் குளம், கல்விளான்குளம், ஆலங்குளம், புத்து வெட்டுவான், ஐயங்கன் குளம், தேறாங் கண்டல் எனப் புதர்மூடிக்கிடந்த பாடசாலை கள் உயிர்ப்புப்பெற்றன. ஆடுகளும் மாடு களும்; மழைக்கும், வெயிலுக்கும் ஒதுங்கு மிடங்களாய் இருந்த பாடசாலைகளில் பிள்ளைகள் ஓடி விளையாடி மகிழ்ந்து கற்கும் நாள் உருவாகியகதை மறக்கமுடியாதது.

1972ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சிக் காலத்தில், படித்த இளைஞர் குடியேற்றத்திட்டத்தில் நன்கு திட்டமிடப் பட்டுக் கட்டப்பட்ட அதிபர் விடுதிகளுடன் கூடிய பாடசாலைகள். ஆனாலும், சிறிய கிராமங்கள், நீண்ட காட்டுவழிப்பாதைகள் செப்பனிடப்படாமலே குன்றும் குழியுமாக மாறிவிட்ட வீதிகள். தனிவழி போவது கடினம். வழிப்பறிக்கு மேலாக யானைகளின் சுதந்திர மான நடமாட்டம் அச்சமூட்டும்.

இப்பள்ளிகளை இயங்கவைக்கும் பணியில் வேதநாயகம் அம்மா தீவிரம் காட்டினார். இந்தப்பிள்ளைகளையும் சாதனை வீரராகிக் காட்ட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினார். எங்களுக்குச் சற்றுச் சந்தேகம். மொட்டந்தலைக்கு முடிச்சுப்போட முனையும் கதையோ என உள்ளுக்குட் பேசிக்கொண்டோம். சுவாரஸ் யமான சம்பவம் தெண்ணியங்கங்குளம் கிராமத்தில் நடந்தது.

தெண்ணியங்கங்குளம் கிராமத்து மக்களின் பிரதான தொழில் வேட்டை யாடுதல் நாளாந்த சீவியம் அதனை நம்பித்தான். அங்குள்ள பாடசாலைக்குச் சென்றோம். அலுவலக அறையுடன்கூடிய ஒரு நாற்பதடிக் கட்டிடம் நடுவே பெரிய புற்றொன்று எழும்பிக்கிடந்தது. அறைக் கதவுகள் திறக்கமுடியாமற் கதவுக்குப் பின்னாலும் புற்று. பிள்ளைகளின் காலடிபட்டுப் பலமாதங்களாயிருந்ததன் குறியீடு இப்புற்று. அக்கம்பக்கமுள்ள பெற்றோர் பொருட் காட்சிச்சாலையில் இருக்கும் பொருட்களைப் பார்ப்பதுபோல விநோதமாகப் பார்த்தார்கள். வேதநாயகம் அம்மா எல்லோரையும் கூப்பிட்டழைத்துப் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் புற்றுக்களை அகற்றும் பணியிலிறங்கினோம்.

வேதநாயகம் அம்மாவைச் சுற்றிநின்ற பெற்றோர்கள் முகத்திற் சிறிய நம்பிக்கை யொளி. மறுதினமே அருமைநாயகத்தை அதிபராக அங்கு நியமித்தார். ஆசிரிய

181218



ARCHIVES

ஆலோசகர் வேலும்மயிலிடம் அப்பாட சாலையின் வாரத்துக்கொரு தடவையான மேற்பார்வையை வழங்கினார். ஆச்சரியம். ஆனால் உண்மை. அந்த ஆண்டிலேயே வலயமட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் ஏழு பிள்ளைகள் முதலாம் இரண்டாமிடங்களைப் பெற்றுச் சாதனை நிகழ்த்தினர். அந்தக் கிராமமே மகிழ்ச்சியில் திளைத்தது. வலயக் கல்விப் பணிப்பாள ரென்பதற்கு மேலாக தங்களின் உறவாய்க் கருதி வேதநாயகம் அம்மாவுக்கு வரவேற்பு விழாவும் விருந்தும் வைத்து மகிழ்ந்தார்கள். தெண்ணியங்கங் குளத்தின் பொன்னான நாள் இந்த நாளாகத்தான் இருக்கமுடியும்.

**"சிறுதுளி பெருவெள்ளமாய்.."**

கோட்டை கட்டியகுளம் பாடசாலை பத்துப்பதினைந்து பிள்ளைகளோடு இயங்கி வந்தது. விரும்பிய நேரம் பிள்ளைகள் வருவார்கள் போவார்கள். அப்பாட சாலையின் சம்பவத்திரட்டுக் கொப்பியிற் பாலசிங்கம் என்ற விஞ்ஞானபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் மட்டும் ஒரு குறிப்பு எழுதியிருந்தார். வேறுயாரும் அங்கு சென்றமைக்கான தடயங்களில்லை. அவரும் ஒரு தடவை செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் அவ்வீதியாற் சென்றபோது இறங்கி எழுதி விட்டுச் சென்றதாக விசாரித்தபோது அறிய முடிந்தது. நூற்றக்கணக்கான பிள்ளைகள் கல்வி மறந்து இருந்தனர். ஐந்து ரூபா டிக்கற் விற்பனைமூலம் அப்பாடசாலைக்கு நிதி தேடும் முயற்சியிலிறங்கினார் வேதநாயகம் அம்மா. பெற்றார்மூலமாக இம்முயற்சியி லிறங்கியபோது மனதுக்குள் சிரித்தோம். ஆனால் ஓராண்டுக்குள் இருநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளோடு வளர்ந்து, க.பொ.த. (சா/த) பரீட்சையிலும் சிறந்த பெறபேற்றைப் பெற்று நின்றபோது வாயில் கைவைத்தோம். சிறுகச் சேர்த்த நிதியாற் கல்விச் செயற்பாடுகள் வியத்தகு வளர்ச்சிப் படிகளைத் தொட்டு நின்றது.

**மக்களுறவில் மகிழ்ச்சிகண்டநாள்....**

மாந்தைகிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில், பனங்காமம் மூன்றுமுறிப்புப் பாடசாலைக்குச் செல்லவேண்டும். சைக்கிள் பயணம். வலயத்திலிருந்து எல்லோரும் புறப்பட்டோம். 17 கிலோமீற்றர். நட்டாங் கண்டல் தாண்டினாற் காட்டுப் பாதை பகலிலும் யானைகள் உலாவும் காடு. வேத நாயகம் அம்மா தானும் வரவேண்டுமென குழந்தைப் பிள்ளைகள்போல் அடம்பிடித் தார். அவரையும் சைக்கிளில் ஏற்றிக்கொண் டோம். இக்கிராமத்து மக்களுக்கு இருதினங் களுக்கு முன்னரே அறிவிப்பை வழங்கியிருந் தோம். நாங்கள் கிராமத்துக்கள் நுழையும் போது மக்கள் மண்வெட்டி கைக்கத்திகளு டன் காத்திருந்தார்கள்.

சிறிய பாடசாலைக் கட்டிடம். உள்ளே செல்ல முடியாதவாறு மருக்காரம் பற்றைகள் வளர்ந்திருந்தன. எங்களைக் கண்ட மக்கள் பெரு மகிழ்ச்சி கொண்டார்கள். அவர்களோடு இணைந்து சிரமதானப் பணியினைத் தொடங்கினோம். பணி முடிந்ததும் சமைத்த உணவோடுவந்த மக்கள் தங்களோடு கூட இருந்து சாப்பிடவேண்டு மெனக் கேட்டுக்கொண்டனர். தட்டிக்கழிக்க முடியாது சாப்பிட்டோம். மக்கள் மனதில் நிறைவு. வேதநாயகம் அம்மா களைத்திருந்தா. அந்தக் கிராமத்திற் படித்த பெண்ணொரு வரைத் தொண்டராசிரியராக அன்றே நியமித்தார். இக்கிராமத்து மக்களின் உயர்ந்த பண்பை வரும் வழியெல்லாம் பேசிக் கொண்டே வந்தவர் பாலியாற்றுப் பாலத் தருகே இருந்த அம்மனை ஆற அமர வழிபட்டார். தனது வாழ்க்கையில் இந்த ஏழை மக்களுக்குச் செய்த உதவியைத் தன் தொண்டாகக் கருதினார். பாலியாத்து அம்மனுக்கு நன்றி சொல்லிக் கண்கலங்கி வழிபட்ட அந்தநாள் மக்களுறவில் மகிழ்சி கண்ட நாளாய் இன்னும் நெஞ்சிலிருக்கிறது.

**"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்..."**

துணுக்காய்க் கல்வி வலயத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பாடசாலைகள் தவிர்ந்த எல்லாப் பாடசாலைகளுமே பின்தங்கிய கிராமத்துப் பாடசாலைகள் எழுத்தறிவில்லாத பிள்ளைகள் மிகுதியாக இருந்தார்கள். இப்பிள்ளைகளைப் பாட சாலைக்குக் கொண்டுவருவதில் வெற்றிகண்ட வேதநாயகம் அம்மா, எல்லாப் பிள்ளைகளை யும் எழுதவாசிக்கத் தெரிந்தவர்களாக்கும் முயற்சியில் இறங்கினார். 1999ஆம் ஆண்டை வலயத்தின் எழுத்தறிவூட்டும் ஆண்டாகப் பிரகடனப்படுத்தினார். ஆசிரிய ஆலோச கர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் எல்லோருக்கும் பாடசாலைகளைப் பிரித்து வழங்கினார். அனைத்துப் பாட ஆசிரியர் களையும் பாடத்தின் முதல் ஐந்து நிமிடங்கள் எழுத வாசிக்கத் தூண்டும் பணியில் ஈடுபடுமாறு அறிவுறுத்தலும் வழங்கினார். நட்டாங்கண்டற் பாடசாலை எனது கண் காணிப்புக்கும், வழிகாட்டலுக்கும் தரப்பட் டது. தரம் 6இற்குக் கீழ் இருபத்தி யேழு மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியா திருந்தார்கள். ஓரிரு மாதங்களுக்குள் எல்லோரையும் எழுதவாசிக்க வல்லவராய் மாற்றினார்கள் ஆசிரியர்கள். அதிபரின் கடின முயற்சியும் ஒத்துழைப்பும் இப்பிள்ளைகளின் கல்வி வாழ்வுக்கு நீரூற்றுவதாய் அமைந்ததை மறக்கமுடியாது.

**"உதவும் கரமாய் நின்றவர்..."**

ஒட்டுசுட்டான் கோட்டத்தில் முத்தையன்கட்டு வலதுகரையில் தாய் தந்தையை இழந்த பிள்ளைகளின் பராமரிப்பு இல்லமாய்ப் புனிதபூமி இல்லம் இருந்தது. இந்தப் பிள்ளைகளிடம் மாதமொரு முறையோ, இருமுறையோ செல்லாமல் இருக்கமாட்டார். இப்பிள்ளைகளுக்குத் தேவையான கொப்பி, புத்தகங்கள், இசைக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், உடை, என்பவற்றோடு உணவுவகைகளும் கொண்டு செல்வார். அந்தக்குழந்தைகளின் சிரிப்பில் நிறைவுகண்டார். வலயத்துக்கு வாற சாமான்களெல்லாம் புனிதபூமிக்குக் கொண்டு போய்க் கொட்டிறா என்ற குற்றச்சாட்டு எழாமலில்லை. கால ஓட்டத்தில் அவருடன் சேர்ந்து எல்லோருமே உதவும் கரங்களாய் மாறினர். இப்பிள்ளைகளின் கல்வியில் முழுக் கவனம் செலுத்தினார். முத்தையன்கட்டு இடது கரைப்பாடசாலையில் இம்மாணவர் கள் உயர் கல்வியைப் பெற்று சாதனைகள் நிலை நாட்டியபோது பாரதியாரின் புண்ணி யங்கோடி பெற்ற பூரிப்பு எல்லோருக்கும். இந்தக் குழந்தைகளின் ஆனந்தச் சிரிப்பு வேதநாயகம் அம்மாவின் ஆத்மதிருப்தியாக என்றுமிருக்கும்.

**மாட்டு வண்டிலும் கல்விப் பயணமும்...**

ஒட்டுசுட்டான் கோட்டத்திற் கருப் பட்ட முறிப்புப் பாடசாலை, பிள்ளைநேயப் பாடசாலைகளிலொன்றான இதனைத் தெரிவுசெய்தார் அம்மா. இங்கே ஒரு விசித்திர நிகழ்வு கருப்பட்ட முறிப்பு ஒட்டு சுட்டான்வீதியில் ஏழாவது மைல் கல்லில் ஓர் ஏழைக்கிராமம். மேளிவனம் கிராமம் ஒன்றிருப்பதைப் பிரதான வீதியருகேயுள்ள வைக்கோலால் வேயப்பட்ட ரீக்கடை அண்டிநிற்கும். இங்குள்ள பிள்ளைகள் கல்வி கற்கக் கருப்பட்டமுறிப்புப் பாடசாலைக்கு வரவேண்டும். பஸ் பயணத்துக்கு பஸ் இல்லை. சைக்கிளிற் பயணிக்க சைக்கிள் வாங்கும் வசதியில்லை. இந்திரப் பழங்குடை போல் ஓட்டை ஒடிசலுள்ள குடிசைகள் நடைப்பயணத்துக்கு அதிகதூரம். அதிபர் யேசுதானந்தருக்கு மாட்டுவண்டில் வாங்கச் சிறிய பண உதவி வழங்கினார் வேதநாயகம் அம்மா. பெற்றோரின் ஒத்துழைப்புடன் வண்டில்மாடு வாங்கப்பட்டது. பத்துப் பதினைந்து பிள்ளைகள் தினமும் மாட்டு வண்டிலிற் கல்விப் பயணம் பத்திரிகை கள் அன்று பரபரப்பாகப் பேசிய செய்தி இது. பிள்ளைநேயப் பாடசாலைகளுக்கு உதாரண மாகக் கருப்பட்டமுறிப்பை மாற்றிய பெருமை அதிபர் யேசுதானந்தருக்கு உரியது. அதிபரின்

உந்துவிசையாக நின்று அதனை வளர்த்தெடுத்த நிமிர்வு அம்மாவுக்கு.

**கணக்காளர் பிள்ளையாக முடியுமா?...**

எங்களது வலயத்தில் நிதிக்கிளையிலிருந்த மகிழ்வையும், கூட்டுப்பொறுப்புணர்ச்சியையும் பின்னர் எங்கும் காணவில்லை. இன்று எங்களோடு இல்லை. முள்ளிவாய்க்காலிற் செல்வீச்சுக்கு இரையாகிப் போன நண்பர் ஜெகராசா இவர்தான். எமது வலயத்துக்குக் கணக்காளரும், நிதி உதவியாளரும். கடின உழைப்பாளி. கடமைக்கு முதலிடம் கொடுப்பவர். உண்மைக்கும், நீதிக்கும் மதிப்புக்கொடுப்பவன். அநியாயமாக எதற்கும் கொடுப்பனவு வழங்கமாட்டார். யாரெதிர்த்தாலும் அஞ்சமாட்டார். சாடிக்கேற்ற மூடி. வேதநாயகம் அம்மாவின் இயல்பும் இதுவே. அதனால் இருவருக்கும் நன்கு ஒத்துப்போகும். கணக்காளர் பதவிக்கு மேலாகத் தனது பிள்ளைபோல் அன்பு செலுத்துவார். வாரமொரு தடவை சோடா சிற்றுண்டிகள் நிதிக்கிளைக்கு வாங்கிக் கொடுத்து வேலையை உற்சாகப்படுத்துவார். ஆசிரியர்கள் எவருக்கும் சம்பள நிலுவை எதுவும் இருக்காது. சம்பள உயர்வுகள் உரிய காலத்திற் கிடைத்துவிடும். நிதி நடவடிக்கையில் மாகாணக் கல்வித்திணைக்களம் மாகாணக் கல்வியமைச்சு என்பவற்றின் பாராட்டைப்பெற்ற வலயமாக மாறிநிற்கின்றது. இன்றும் வேதநாயகம் அம்மாவின் வாய் "அவன் என்ர பிள்ளை" என்று சொல்வதிற் பெருமைப்பட்டுக் கொள்வார். வலயத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அம்மா வளர்த்த நல்லுறவு புதிதாக ஆரம்பித்த வலயத்தை உயர்வுக்குக் கொண்டு சென்றது.

**காலமறிந்து உதவி செய்வதில்...**

காட்டுப் பயணங்கள் நீண்ட பாதைகள் போரின் கொடுமையால் ஏறிய விலைவாசி. பெற்றோல் ஒருலீற்றர் ரூபா1800/= மண்ணெண்ணெய் ஒருலீற்றர் 280/= இவற்றையும் காதோடுகாது பேசித்தான் பெறமுடியும். மோட்டார் சைக்கிளிலிருந்து எல்லாவாகனங்களும் மண்ணெண்ணெய் குடித்துவிட்டுப் புகை கக்கிக்கொண்டு ஊர்ந்து செல்லும். இந்த நெருக்கடியான நேரத்திற் பாடசாலைத் தரிசிப்புக்கென ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் கதைத்துத் தலா 25 லீட்டர் மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுத்தருவார். தனது வலய ஊழியரின் நலன் பேணுவதிற் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டார்.

பாடசாலைத் தரிசிப்பு முடிந்ததும் எல்லோரும் வீடு செல்வதில்லை. நேரே வலயக்கல்வி அலுவலகத்துக்கு வந்து விடுவோம். மாலை 7.00 மணிவரை வலயத்தில் வேலை நடக்கும். நிலாக்காலத்தில் வலயத்தின் முற்றத்திற் பாட்டுக்கச்சேரி நடக்கும். ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பௌலீஸ், ஆசிரிய வளநிலைய முகாமையாளர் தியாகராசா, இலிகிதர் விசு எல்லோருமே இனிமையாகப் பாடுவார்கள். வாழைப்பழம், வடை, ரீ எனச் சிற்றுண்டிகள் வாங்கித்தருவார் வேதநாயகம் அம்மா. சின்னப் பிள்ளைபோல் தானும் பாட்டுச் சமாவில் பங்கெடுப்பார். வேலை நேரத்தில் எந்தளவு இறுக்கமும் கண்டிப்புமோ அந்தளவுக்கு உபசரிப்பும் அன்பும் வேலை முடிந்த நேரத்திற் கிடைக்கும். பெண்கள் இத்தகைய அதிகாரிகளாய் .... அதுவும் வயது முதிர்ந்த காலத்தில் இருப்பது மிகமிகக் கடினமானது.

**வளங்களின் உச்சப் பயன்பாட்டில்....**

ஆரம்பப் பாடசாலைகளை இயங்க வைத்துப் பெற்றாரின் மதிப்புக்கும், மரியாதைக்கும் ஆளானதுபோல் மல்லாவி மத்தியகல்லூரி, ஒட்டுசுட்டான் மகாவித்தி

யாலயம், பாண்டியன் குளம், யோகபுரம், பாலியாறு மகாவித்தியாலயங்களிற் கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்துவதிற் கவனம் செலுத்தத் தவறவில்லை. பாடசாலை ஆசிரியர்களோடு வலயத்திலிருந்த துறைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும், ஆசிரிய ஆலோசகர்களையும் இம்மாணவர்களுக்கான விசேட வகுப்புகளில் ஈடுபடுத்தினார். திரு. வேலாயுதநாதன், ரவீந்திரன் ஆகியோரின் கடின உழைப்பிற் கணித விஞ்ஞானப் பிரிவில் மாணவர்கள் உயர்ப் பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் சென்றது பலரின் பாராட்டுக்குள்ளாகியது. இவ்வகுப்புக்களைத் தானே நேரில் நின்று நடாத்துவதிற்றான் திருப்திகாண்பார். வளங்கள் மிகக் குறைந்த வலயமாக இருந்த போதும் இருந்த வளத்தின் உச்சப் பயனைப் பெறுவதில் வெற்றி கண்டார்.

**நெஞ்சில் உரமும்...**

வேதநாயகம் அம்மாவின் உள்ளம் மென்மையானது. இரக்கம் நிறைந்தது. ஆனால், செயலில் உறுதியும், துணிந்தபின் அஞ்சாமையும் எடுத்த காரியத்தை முடிந்த வரை ஓயாது அறைகூவல்களுக்கு முகங் கொடுக்கும் வைராக்கியமும் இவரது ஆளுமையின் அதிஉச்ச வெளிப்பாடுகளாயிருந்தன. மூப்புக்கும், கல்வித் தகுதிக்கும், பதவி உயர்வு கொடுப்பதைவிட செயலாற்றுகைத் திறனுடன் கூடிய தகுதிக்கு முதன்மை கொடுத்தார். எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் முன்வைத்த காலைப் பின்வாங்க மாட்டார். திரு. யேசுதானந்தரை அதிபராக நியமித்தபோது இவரது அஞ்சாமையை அளக்க முடிந்தது. அதிகாரிகள்முதல் ஆசிரியர்சங்கம்வரை எதிர்த்தபோது எடுத்த முடிவும், தெளிவும் சரியான தென வாதாடி நிலைநிறுத்தினார். இன்று மல்லாவி மத்திய கல்லூரியின் அதிபராக இருக்கும் யேசுதானந்தரின் சேவையும், அவரது சேவைக்குக் கிடைக்கும் பாராட்டுக்களும் வேதநாயகம் அம்மாவின் நெஞ்சுரத்தை அளவிடுவதற்கும் போதுமான சான்றாகும். "எண்ணித் துணிக கருமம். துணிந்தபின் எண்ணுவதென்பது இழுக்கு" என்பதற்கு இலக்கணமாய், பாரதி கண்ட நெஞ்சிலுரமும், நேர்மைத் திறனும்கொண்ட பெண்ணாய் கல்விப் பணியினை வளர்த்தார்.

**உண்டி கொடுத்துக் கல்வியின் உயிர் வளர்த்தோர்...**

மாந்தை கிழக்குக் கோட்டத்திலும், துணுக்காய்க் கோட்டத்திலும் ஒட்டுசுட்டான் கோட்டத்திலும் சில பாடசாலைகள் வலயத்திலிருந்து 30 கிலோமீற்றருக்கு அப்பாலிருந்தன. எமது குழு மேற்பார்வையாளர் போர்ப் பிரதேசங்களூடாகச் செல்லும் சந்தர்ப்பங்களேற்படும். செல்வீச்சு, விமானக் குண்டுவீச்சு என அச்சத்தினுடாகத் தொடரும் எங்களது அணி திரும்பி வலயத்துக்குவர, சிலவேளைகள் மாலை ஐந்து மணியாகும். மாந்தை கிழக்கிற் பூரணி சேர் வீடும், தியாகராஜா சேர் வீடும் பசியாற்றும் வீடுகளாயிருக்கும். விருந்தோம்பலால் எம்மை ஊக்குவித்து கல்வி பயில வந்தவர்கள் இவர்கள். ஒட்டுசுட்டான் கோட்டத்தில் தண்டுவான், பெரிய இத்திமடு சென்றுவரும் வழியில் ஜெயபாலன் தனது கோட்டக் கல்வி அலுவலகத்திற் சமையல் ஒழுங்கு செய்து வைப்பார். அங்கு பசியாறிக். குழு மேற்பார்வை பற்றிய கலந்துரையாடலையும் முடித்துக்கொண்டு வலயக் கல்வி அலுவலகம் வந்துசேரப் பொழுது சாய்ந்துவிடும். சிலவேளைளில் வேதநாயகம் அம்மாவை யும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி அற்புதராசா, திருமதி வசந்தி பசுபதி ஆசிரிய ஆலோசகர்களான இராஜேஸ்வரா, வளர்மதி, ஸ்ரீவாணி, தயாநிதி இவர்களெல் லோரையும் ஏற்றிய ஏ-40 கார் மண்ணெண்ணெய்ப்புகை

கக்கியவாறு புறப்படுவதைப் பார்த்தால் இது தென்னாலி இராமன் குதிரை தானோ என்ற கேள்வி எழும். எப்படியோ முக்கித்தக்கி இவர்களை வலயத்திற் கொண்டு வந்து சேர்த்துவிடும். இந்தக் காருக்கும் இப்பிரதேசக் கல்வி வளர்ச்சியிற் பெரும் பங்குண்டு. வலியோ வேதனையோ இல்லாத கலகலப்பான பயணமாய் எங்கள் குழு மேற்பார்வை தரிசிப்புக்கள் அமைந்தமைக்கு இக்கிராம மக்களுக்கேயுரித்தான விருந் தோம்பற் பண்பு மூச்சாகின்றது.

**மனிதவள விருத்தியில்...**

எங்கள் வலயத்திற் பணிபுரிந்த ஒவ்வொரு ஊழியரின் நலனிலும், தொழில் வாண்மை விருத்தியிலும் கண்ணாக இருந்தார் எமது நிர்வாக உத்தியோகத்தர் ஜெயநாயகம் சேர். ஓர் அற்புதப் பிறவி. தள்ளாத வயதிலும் வேதநாயகம் அம்மாவின் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கடமை செய்வதில் கண்ணிய வான். ஆசிரியர்கள் அனைவரினது தேவை களையும் முழுமையாக்குவதிற் கச்சிதமாகச் செயற்படுவார். எள் என்றால் எண்ணையாவது போல; ஆசிரியர்களதும் வலய ஊழியர்கள தும் சுய விபரக் கோவைகளைச் சீராக்கி அவர்களது கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்க வழிசெய்துவிடுவார். உதவிக் கல்விப் பணிப்பாளர்கள். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள். ஆசிரிய ஆலோசகர்கள் போக்குவரத்துப் படிகளை வழங்கும் நாட்களில் இரவு ஒன்பது பத்து மணிவரை வேதநாயகம் அம்மா வேலை செய்வார். அவரைப்பார்த்துப் பல ஊழியர்கள் தாமும் உதவி, ஒத்தாசைகள் புரியத் தொடங்கி விடுவார்கள். கூட்டுக் குடும்ப உணர்வை இவரது நிர்வாகக் கடமைகளிற் கண்டு கற்றுக் கொண்டோம். புதிய கலைத்திட்ட மாற்றங் களை வலய ஊழியர்களும், ஆசிரியர்களும் உடனே பெற்றுவிடும் வகையிற் செயலமர்வு களைத் திட்டமிட்டு நடாத்திவிடுவதில் "மனித வளவிருத்தியில் யாவரும் பங்கு கொள்ளல் என்ற கல்வியின் தேசிய குறிக் கோள் நிறைவாகுவதைக் கண்டு பெருமை கொண்டோம்.

**சாதாரண இலிகிதர்களும் சாதனை செய்தவர் களும்...**

எங்கள் வலயத்திற் சாதாரண இலிகிதர்களும், நிபுணத்துவம்மிக்க சேவை யாளர்களாக மாறியது அற்புதமானது. கலா, விசு, களஞ்சியப்பொறுப்பாளர் சிவா, தொண்டராய் உழைத்த ரூபன் எல்லோரும் வலயத்தின் தூண்கள் மட்டுமல்ல. சுமைதாங்கி களாயும் நின்றுழைத்தவர்கள்.

கோவைகள் பூர்த்தியாக்க நிர்வாகப் பகுதியில் இரவு பகல் வேலைசெய்துகொண் டிருப்பவர்கள் திடீரென நிதிக்கிளைக்குள் இருப்பார்கள். சம்பளநாள் நெருங்கிவிட்டதை அது உணர்த்தும். ஜெகராசா எல்லோருக்கும் வேலைகளைப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். பெரும் அமைதியோடு வேலைகள் நடக்கும். வேதநாயகம் அம்மா இடை யிடையே வந்து உற்சாகமூட்டிவிட்டுச் செல்வார். வருடம் முடியப்போகும் நாட் களில் நிறைவேற்று அறிக்கைகள் ஆண்டுத் திட்டமிடல்களில் கலா, ரூபன், சிவா என எல்லோருமே கருத்துடன் செயற்படுவார்கள்.

களஞ்சியத்துக்கு வருகின்ற பொருட்கள் வந்த மறுதினமே பாட சாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுவிடும். அம்மா வரமுதல் அறையை வெட்டை யாக்கிவிடவேணும். மனிசியோட காலந்தள் ளேலாது . மாட்டிக் கொண்டாற்போதும். "அம்மா ஒருநாள் பொறுங்கோ, முழுக்க தள்ளிப்போடுவன்" என்று கொடுப்புக்குள் சிரிப்போடு சொல்வது இன்னும் கண்களில் நிற்கின்றது. ஒவ்வொரு அதிபரும் சிவா வினைக் கண்டால் "என்ன சிவா ஏதும்

கிடக்குதா" என முதலில் கேட்பார்கள். இன்று களஞ்சியங்களிலும் , வலயத்தின் தாழ்வாரத்திலும் தேங்கிக் குவிந்து குப்பையாய்க் கிடக்கும் பொருட்களைக் காணும்போதெல்லாம் சிவா போல ஒருவன் கிடைக்க மாட்டானா என எண்ணத் தோன்றும். வேதநாயகம் அம்மாவின் சிறந்த வளர்ப்புக்கள் இவர்கள்.

குடிபோதையும், லஞ்சமும் இன்று மலிந்துவிட்ட கல்வித்துறையை நினைக்கும் போதெல்லாம் தூய்மையும், விசுவாசமும், கடின உழைப்பும் நிறைந்த துணுக்காய் வலயமே நினைவில் வரும். வலயத்துக்காகவே உழைத்து ஒட்டி உலர்ந்துபோன கலாவை வலயத்தில் வேலைசெய்த யாரும் மறக்க மாட்டார்கள். வேதநாயகம் அம்மாவின்கீழ் வேலைசெய்த ஒவ்வொரு ஊழியரிடமும் வலயத்தை ஒப்படைத்தால் ஊழலின்றி சிறந்த நிர்வாகத்தை நடத்துவார்கள். இன்றல்ல; இனிவரும் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாய் இவர்களின் சேவை உயர்ந்து நின்றது.

செல்வாக்கு, சுயநலம், பணத்தை வாரும் சிந்தனைகொண்ட இன்றைய கல்வி உலகம் இச்சாதாரண ஊழியர்களிடம் கற்கவேண்டிய பாடம் நிறையவே உண்டு. இது நடக்குமா?... மாறுவார்களா?... காலம்தான் பதில்சொல்லு.

**கல்விக்கப்பால்...**

கல்வியபிவிருத்திக்கும், நிர்வாகக் கடமைகளுக்கும் அப்பால் எனது சொந்த வாழ்விலும் வேதநாயகம் அம்மாவை மறக்க முடியாது. துணுக்காய் வலயக் காணிக்குள் சிறு குடிசையமைத்து நானும் எனது மனைவி பிள்ளைகளும் வாழ்ந்த காலம் பசுமையானது. எனது இரண்டாவது மகள் பெரியவளாகியிருந்தாள். போர்ச் சூழலும், போக்குவரத்துப் பிரச்சினைகளும் நிறைந்திருந்தது. எனது உடன் பிறப்புக்கள் வரமுடியாத சூழல். அந்தக் குறை எனக்கு வராமலிருக்க அம்மாவின் தலைமையில் வலய ஊழியர்களே இப்பூப் புனித நீராட்டும் கிரியைகளை நிறைவேற்றி முடித்தார்கள். இடுக்கண்களைந்த நட்பை என் சேவைக் காலத்தில் வேதநாயகம் அம்மாவின் வலய அணியில் பெற்று பெருமை கொண்டதை நெஞ்சு மறக்காது.

**அனுபவங்களே சிறந்த பாடம்...**

வேதநாயகம் அம்மாவின் வலயக் கல்விப் பணிப்பாளர் சேவையில் அனுபவங்களே எமக்குப் பாடங்களமாயின. அவரிடமிருந்த நிர்வாகத்திறன், முகாமைப் பண்பு, கல்வி அபிவிருத்திக்கான திட்டமிடல்கள், நம்பிக்கை, விசுவாசம், தியாகம், சமூக உறவு, நலன் பேணல் எல்லாவற்றையும் அவரின் சேவையிலிருந்து கற்றுக் கொண்டோம்.

கல்வி உலகில் இருபத்தியாறு ஆண்டுகள் கண்ட கசப்பான உண்மையொன்றுண்டு. வல்லவர்களையும் நல்லவர்களையும், தள்ளிவிழுத்தி மிதிக்கும் அறிவாளிகள் என்று சொல்லும் அதிகாரமமதை கொண்டோர். உயர் பதவிக்கு வந்துவிடுவார்கள் தானுயர்வதையே கருத்தாகக் கொண்ட இவர்கள், எத்தனை மாணவர்களை உருவாக்கிவிட்டார்களெனக் கேட்டால், அதன்விடை பூச்சியம். இவர்கள் வாய்ச்சொல்லில் வீரர். மாணவ உலகை உயர்த்தும் ஏணிப்படிகளாய் இருந்ததில்லை. விரல்விட்டெண்ணக்கூடிய நெஞ்சில் நிலைத்த, கல்விச் சேவையாளர் களில் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அம்மாவின் பெயரைத் துணுக்காய் வலயம் என்றும் உச்சரிக்கும்.

**விஜயன் மாஸ்ரர்**

# கணித ஆசிரியராக முதன்மை பெற்ற அம்மையார்

கணிதம் என்பது எண்களுடன் தொடர்புடைய அறிவியல் கலையாம். இதனாலேயே கண்ணிற்கு ஒப்பாக எண்ணைக் கொண்டனர்.

இலக்கங்களும், அதன் செய்முறைகளும் (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) அத்துடன் உருவ அமைப்புக்களும் கணிதம் என்ற எண்ணக்கருவுள் விரிந்துள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சிகளும் அதன் பிரயோகங்களும் கணிதத்தை ஆளுமை மிக்க துறையாக வளர்த்த வண்ணம் உள்ளன. கலிலியோ கலிலி "கணிதத்தின் உதவியால் நாம் இவ்வுலகத்தையே ஆளலாம்" எனக் கூறினார்.

இந்துக்களின் அறிவியலில் பிரபஞ்ச இயக்கத்தைக் கணித ரீதியாகக் கணிப்பிட்டுக் கூறியவர்களை காலக்கணிதர்" என்று இலக்கிய நூல்கள் கூறுகின்றன. எண்களை எழுதுவதில் இடமதிப்புத் திட்டத்தையும் பூச்சியம் என்ற எண்ணக்கருவையும் உருவாக்கி கணிதத்துறை வளர்ச்சிக்கு அடிகோலியவர்கள் இந்துக்களே ஆவர். ஆரியப் பட்டர், பிரம்மகுப்தர், பாஸ்கராச்சாரியர் போன்ற பலர் இந்துக்களின் கணித அறிவை உலக அரங்கில் பறைசாற்றினர்.

கணிதத்திற்கும் எம்மவர்க்கும் உள்ள தொடர்பின் மேன்மையை எண்ணும்போது, கணித அறிவு எம் இரத்தத்தில் ஊறிய விளைவு எனத்துணிய வைக்கின்றது. இன்று இத்துறை சார்ந்து உலக அரங்கில் சாதிக்கும் நம்மவர்களைக் காணும் போது இக்கருத்து மேலும் வலுக்கின்றது.

எங்குலத்தாருடன் இயைபுபட்ட கணித அறிவை ஏற்ற முறையில் நல்க வல்ல ஆசான்களென மிகச் சிலரே நம்மத்தியில் வாழ்கின்றனர். இத்தகு பெரியோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் அருளீஸ்வரி அம்மையார் ஆவார்.

எனது வேட்டகமான அச்சுவேலியே இவ்வம்மையாரின் பிறப்பகம். என் கல்விப் பாதையில் அதிபர் பணி ஆற்றிய நாட்களில் இவரே என் வலயக் கல்வியதிபதி. இதனால் அம்மையாரின் ஆசிரியத்துறை சார்ந்த பெருமைகளை அறிவது எனக்கு இலகுவாக அமைந்தது.

இன்றைய கல்வி முறைமை பரீட்சையை மையமாகக் கொண்டிருக்கின்றது என்றும் தேசிய மற்றும் தனியார் துறை சார்ந்த தேவைகளுக்குப் பொருத்தமற்றிருக்கிறது என்றும் ஏட்டுக் கல்வியைப் பெரிதும் சார்ந்திருக்கிறது என்றும் போட்டித் தன்மை அதிகரித்திருக்கிறது என்றும் கல்வியாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் கல்வி என்பது ஒரு வாழ்க்கைச் செயன்முறை என எண்ணத் தவறிவிடுகின்றனர். கல்வியை கணிதத்தை வாக்காகவும் வாழ்வாகவும் கொண்டவராகவே அம்மையாரைத் தரிசிக்க முடிகின்றது.

அம்மையாரின் முதல் நியமனம் *01.10.1971* இல் அச்சுவேலி சென். திரேசா பெண்கள் பாடசாலையில் அமைந்தது. கணித ஆசிரியர் என்ற வகுதியில் நியமனம் பெற்ற இவர் தனது கடமைகளைத் தெய்வப் பணியாகவே மேற்கொண்டார். *1972-73* காலப்பகுதியில் பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இருந்த போது தனது ஆளுமைகளைச் சிறந்த முறையில் வெளிக்காட்டினார். வளரும் பயிரை முளையில் தெரியும் அன்றோ? பேச்சுப் போட்டிகள் நாடகப் போட்டிகள் முதலான இணைப்பாட விதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் சிறப்பாகத் தன் இயல்பாளுமையை வெளிக்காட்டினார். அக்காலப் பகுதியில் இடம்பெற்ற கணிதபாட வெளிவாரித் தேர்வில் முதற்பிரிவில் சித்தியெய்தி தனது தனித்துவத்தை நிலைநிறுத்தினார்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற தராதரத்துடன் இவரது நியமனம் மலையகப் பாடசாலை ஒன்றில் அமைந்தது. ஹட்டன் சென். ஜோன் போஸ்கோ வித்தியாலயத்தில் ஒரு மாதமும் தொடர்ந்து சென். கேபிரியல் பாலிகா மகா வித்தியாலயத்திலும் சேவையை நல்கினார். அந்நாட்களில் மலையகப் பாடசாலைகளில்

கற்பிப்பது மிகுந்த சவாலுக்குரியது. மாணவருக்குத் தண்டனை வழங்கும் ஆசிரியர் தன்னைத் தான் பாதுகாக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். வெளிமாவட்டங்களில் இருந்து மலையகத்திற்குக் கற்பிக்கச் சென்ற சிலர் தமது பணியை மறந்து காலத்தைக் கடத்தினர். இதனால் இங்கிருந்து செல்லும் ஆசிரியர்கள் குறித்த நல்லபிமானம் தளர்வுற்றிருந்தது. அம்மையார் போன்றவர்கள் அன்று காட்டிய அர்ப்பணிப்பான சேவை இவ்வபிப்பிராயங்களை மாற்றியமைத்த தோடு யாழ்ப்பாண ஆசிரியர்கள் மீது மிகுந்த அபிமானத்தையும் ஏற்படுத்தியிருந்தது. பிரியா மனத்தோடு பிரியாவிடை பெற்ற அம்மையார் ***16.01.1977*** இல் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்தில் தம்பணியேற்றார்.

அதிபர் சிவகிரி சிவானந்தத்திற்கு புதிய கணித ஆசிரியரின் வரவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். கணித சித்தி வீதத்தை உயர்த்த முடியுமா எனச் சவாலாகவே கேட்டுவிட்டார். சவால்கள் சாதனைகள் ஆகும் போது நீள நினைக்கப்படுமல்லவா? எத்தனங்கள் கடுமையாயின. தினமும் காலை வேளையில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு மணி நேரம் விசேட வகுப்பு நடத்தப்பட்டது. தம்பிள்ளைகளுக்காக அர்ப்பணிக்கும் ஆசிரியரைப் பெற்றோர் கைகூப்பித்தொழுவர். தினமும் ஒரு சில்வர்ச் செம்பில் பால் வழங்கித் தம் அன்பைப் பெற்றோர் வெளிக் காட்டத் தொடங்கினர். பரீட்சைகளில் கணித சித்தி வீதம் அதிகரிக்கத் தொடங்கியது. பெற்றோர் மற்றும் அதிகாரிகளின் பாராட்டு மழையில் அம்மையார் நனைந்தார்.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயச் சம்பவப் பதிவேட்டில் உள்ள குறிப்புக்கள் அம்மையாரின் பெருமைக்கான சான்றுகளாகும். ஆசிரியராகப் பணியாற்றிய இவரது செயற்பாடுகள் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாகப் பின்வரும் ஓரிரண்டு சம்பவங்களைக் குறிப்பிடலாம்

06.03.1979 : Appriciated the progress of the results of the G.C.E. (O/L) Dec.1978. The teacher Mrs. A. Vethanayagam is highly praised.(Sgd.) K. NavaratnamE.O.

19.06.1980 : Observed notes of lessons, record of work and scheme of work. The teacher's performance of teaching is highly apprecia- ted.(Sgd.) K. NavaratnamE.O.

தனது நாற்பதாண்டு காலக் கல்விப் பணியில் ஆசிரியப் பணியாற்றிய நாட்களே உவப்பான நாட்கள் என அம்மையார் அடிக்கடி கூறக்கேட்டிருக்கின்றேன். ஆசிரியப் பணிமீதிருந்த இவரது தாகத்திற்கு ஒரு சிறு சம்பவத்தைப் பதிவு செய்வதும் பொருத்தமானது. ***1982*** ஏப்பிரல் ***29*** ஆம் திகதி இவரது புதல்வியைப் பெற்றெடுத்து ***41*** நாள்கள் முடிந்த கையுடனே பாடசாலையில் முழுமையாகத் தன்பணியேற்றுச் செயற்படத் தொடங்கினார். கைக்குழந்தையுடன் பாடசாலை வந்து, பாடசாலைக்கு அருகில் இருந்த வீட்டில் குழந்தையை ஏணையில் இட்டு, பாலூட்டும் தாயாகத் தன் பணியைப் பங்கமின்றி ஆற்றிய பெருமையை இன்றும் ஆவரங்கால் கிராமத்தவர் பெருமையுடன் நினைவு கூர்வர்.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தைத் தொடர்ந்து ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திலும் கணித ஆசிரியராகத் தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றினார். இக்கால கட்டத்தில் கோப்பாய் பிரதேசப் பாடசாலைகளுக்கிடையே கணித உபகரண ஆக்கப் போட்டியில் முதற்பரிசைப் பாடசாலை பெற்றுக் கொள்வதற்கு வழிசமைத்தார். இதனைக் கண்ணுற்ற கொத்தணி அதிபர் என்றும் இல்லாத வாறு எங்கும் இல்லாதவாறு கணிதத்துறை அழகு பெற்றிருப்பதாகப் பாராட்டினார். அம்மையாருக்கு அக்கால அதிபர் வழங்கிய நற்சான்றுப் பத்திரத்தில் இச்செய்திகள் பதிவாகியுள்ளன.

கணிதத்துறை மீதிருந்த காதல் அம்மையாரைச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக்கியது. கோப்பாய் பிரதேசக் கணிதக் கற்றல்சார் எழுச்சிக்கு தன்னால் ஆன பங்களிப்பை வழங்கினார். கற்பித்தலுக்குரிய துணைச்சாதனங்களுடன் என்றும் வகுப்பறைக்குச் செல்லும் இவரது

ஆளுமையைக் கண்ட முன்னாள் கொத்தணி அதிபர் திரு என். கணேசபிள்ளை அவர்கள் "முன்னுதாரணமான ஆசிரியை" என (Teacher Model) இவரைப் பாராட்டியதும் இனிப்பானது.

இன்று பணியுலகில் தரவட்டங்கள் முதன்மை பெற்றுள்ளன. இவை 1962 இல் ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டன என்பது இவை பற்றிய வரலாறு தரும் செய்தி. நிப்பொன் நிறுவனத்திலேயே இது முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. குறுகிய காலத்தில் இது உலகளாவிய ரீதியில் பிரபலம் பெற்றது. முழுத்தர முகாமைத்துவத்தில் தரவட்டங்கள் தவிர்க்க முடியாத சக்திகளாக விளங்குகின்றன. தரவட்டச் செயன்முறை பற்றிய சித்தாந்தங்கள் மேலைத் தேயத்தில் அறிமுகமான நிலையில் அம்மையாரின் கணித முதன்மை ஆசிரியச் செயற்பாடுகளில் மேலைத்தேயத் தரவட்டச் சித்தாந்தம் சார்ந்த செயற்பாடுகளும் முன்னெடுக் கப்பட்டன. அம்மையாரின் இல்லம் பல்வேறு கணிதம்சார் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் களமாக விளங்கியது. அம்மையாரின் கணவர் திரு. வேதநாயகம் இச்செயற்பாடுகளுக்காகத் தனது முழுமையான ஒத்துழைப்புகளைச் சிறப்புற வழங்கியிருந்தார். இன்றும் வழங்கி வருகின்றார்.

"கல்வி என்பது அனுபவங்கள் பற்றிய தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற புதுப் பித்தலாகும். கல்விச் செயலொழுங்கின் இலக்கு அதுவேயாகும் என்கிறார் மெயர் என்ற அறிஞர். "Education must be conceived as a continuing reconstruction of experience. This process and the goal of education are one and the same time experience and education." A.Meyor

இந்த வகையில் தொடர்ச்சியாக அனுப வங்களைப் பெற்றுக் கொள்ள வசதியளிப்பதே கல்விப் பணியாளர்களின் கடமையாகின்றது. இதனைத் தீர்க்கதரிசனத்துடன் நிறைவேற்றிய வெற்றிகர மான கல்விப் பணியாளராக அம்மை யாரைக் கொள்ளலாம். ஆசிரியத்துவக் கடமை களைச் செவ்வனே நிறைவேற்றுபவரே சிறந்த கல்வி முகாமையாளராகவும் பரிணமிப்பார் என்பதற்கு அம்மையாரின் வாழ்வும் சான்றாகும்.

**ச.லலீசன்,**
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
M.A (தமிழ்), M.Ed, S.L.T.E.S (Class-III)

# கல்விப் பணிப்பாளரின் கல்விப் பணிகளின் மீள் சிந்தனைகள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தமக்கும், பிறர்க்கும் தாளாத பயன் தந்து உயர்ந்தோர் சிலராவார். இன்று மணிவிழாக் காணும் யாழ்ப்பாணக் கல்வி வலயம் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் இத்தகைய பெரியோருள் ஒருவராகி உயர்ந்து நிற்கின்றார்.

தனது நற்பண்புகளாலும், விடா முயற்சியினாலும் கல்வித்துறையில் உயர்ந்த இவர், கணித ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, யாழ். வலயக் கல்வி அபிவிருத் தித்துறைப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக, துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளராக, கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் இணைத் தலைவராக, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகக் கல்வியுலகிற் பணி யாற்றியுள்ளார்.

எளிமையான தோற்றப் பொலிவும், இனிமையான மொழிப் பிரதேசமும் கொண்ட இவர், எல்லா மாணவரும், எல்லா விதமான நலன்களையும் சிறந்த கல்விப் கல்விப் பேறுகளையும் பெறவேண்டும் என்பதனையே குறிக்கோள்களாகக் கொண்டிருந்தார்.

குறிப்பாக, கணித, விஞ்ஞான பாடங்களின் பெறுபேறுகள் உயர்நிலை பெற வேண்டும் என்பது இவரது குறிக்கோளாக இருந்தது. இக் குறிக்கோள் நிறைவேற வளநிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பது உணரப் பட்டது.

இதற்கமைய 1992ஆம் ஆண்டு யா/ கோப்பாய் மகாவித்தியாலத்திற் கணித, விஞ்ஞான மூலவளநிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்நிலையத்திற் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுள் நானும் ஒருவன் என்ற வகையில் இந்நிலையமூடாகத் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் ஆற்றிய பணிகளுள் சிலவற்றையாவது குறிப்பிட வேண்டும் என்ற தூண்டலின் அடிப்படையிற் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

யாழ்ப்பாண மாவட்டக் கணித, விஞ்ஞான மூலவள நிலையம் அமைக்கப் பட்டதும் திருமதி அ. வேதநாயகம் அவர்களால் கணித பாடத்தில் யாழ். மாவட்டத்தில் ஆண்டு 11 மாணவ மட்டத்திற் "குறைகாண் ஆய்வு" ஒன்று நடத்தப் பட்டதுடன் அவ்வாய்வில் இடம்பெற்ற இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு, மாணவர் விரும்பும் வகையில் மாணவர் விளங்கும் வகையிற் பல பரிகாரக் கற்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் மதிப்பீடும் செய்யப்பட்டது. இச்செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் உபகரணங்கள் வளநிலையத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு விடுமுறைகளில் கணித பாட ஆசிரியர்களுக்கு அவைபற்றி விளக்கங்களும் அளிக்கப்பட்டன. கணிதபாடக் கற்பித்தல் உபகரண அமைப்பிற்காக திருமதி அ. வேதநாயகம் அவர்களுக்கு அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்று விருது வழங்கிக்

கௌரவித்தது என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

வகுப்பறைக் கற்பித்தலில் உபகரணப் பயன்பாட்டைத் தூண்டும் வகையில் 1992. 03. 03 இல் ஆசிரியர்களிடையே கணித பாட கற்பித்தல் உபகரணங்கள் தயாரிக்கும் போட்டி ஒன்றினை வளநிலையம் நடத்தியது. க.பொ.த. (சா.த) 1991 டிசெம்பர் மாத கணித, விஞ்ஞானப் பெறுபேறுகள் 1992.05.20 இல் மாவட்ட மூலவள நிலையத்தாற் கணக்கீடு செய்யப்பட்டது. யாழ். மாவட்டத்திற் பின்னிலையில் இருந்த கோட்டங்களான வேலணை, மருதனார்மடம், சாவகச்சேரி ஆகியவற்றில் "கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு "மெல்லக் கற்கும் மாணவர்க்குக் கணிதம் கற்பித்தல்" தொடர்பான செயலமர்வுகளை வார இறுதி நாட்களில் வளநிலையம் நடத்தியது. ஆண்டு 11 இல் மெல்லக் கற்கும் மாணவர்க்கு கணித, விஞ்ஞான விசேட வகுப்புக்களை நடத்த ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

மாணவர் மத்தியிற் கணித, விஞ்ஞான பாடங்களில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஆண்டு 6இல் இருந்து, ஆண்டு 11 வரை பாடசாலை மட்டத்திற் கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நடத்த ஊக்குவிக்கப்பட்டு, ஆண்டுக்கு ஐந்து மாணவர் வீதம் பாடசாலைகளிலிருந்து கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்ற வாய்ப்பும் வழங்கப்பட்டது. ஆறு கோட்டங்களிலும் போட்டிகள் நடப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட 360 மாணவரும் மாவட்டமட்டப் போட்டியிற் பங்குபற்றினர். இரு நாட்கள் நடைபெற்ற முதலாம் சுற்றுப்போட்டியிலிருந்து ஆண்டிற்கு 12 மாணவர் வீதம் 72பேர் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாம் சுற்றுப் போட்டி 22. 06. 1992 இல் சிறப்பாக நடத்தப்பட்டு ஆண்டிற்கு மூன்று வீதம் வெற்றிக்கிண்ணங்களும், 72 சான்றிதழ்களும் மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது மாணவ ஆசிரிய, பெற்றோர் மத்தியிற் கணித, விஞ்ஞான பாடங்கள் தொடர்பான பெரும் விழிப்பணர்வை ஏற்படுத்தியது.

பாடசாலைமட்டத்திலும், கொத்தணி மட்டங்களிலும், கோட்ட மட்டங்களிலும் கணித, விஞ்ஞான அறிவை - ஆசிரியர், மாணவர் அறிவை வளர்க்கும் வகையில் விசேட செயற்பாடுகளை நடத்த வளநிலையம் ஊக்குவித்து உதவியுள்ளது. கொத்தணி மட்டத்தில் மெல்லக் கற்கும் மாணவர்க்கு மாலைநேர வகுப்புக்கள் நடத்தி ஆர்வத்துடன் செயற்படுவதற்கும் வளநிலையம் ஊக்குவித்தது.

கொத்தணி மட்டங்களில் வானியற் பாசறைகள், இலத்திரனியற் செயல்முறை வகுப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டன. மாணவர் எளிதில் மனங்களிற் பதிய வைக்கும் வகையிற் கணித, விஞ்ஞான எண்ணக்கருக்களைப் பிரதிபலிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளினூடான "கணித, விஞ்ஞான தினம்" யாழ். மாவட்டத்தில் 13.11.1992 அன்று யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் கொண்டாடப் பட்டது.

10.03.1992 - 10.03.1993 வரையான காலப்பகுதியில் 600க்கும் மேற்பட்ட கணித பாட ஆசிரியர்களும் 4000 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் இவ்வள நிலையத்தைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"கணிதத்திற் கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள் அமைக்க முடியாது" என்ற எண்ணக்கருவை முற்றாக நீக்கியது இம்மூல வள நிலையமே ஆகும்.

*1993. 03. 03*இல் மாணவர், ஆசிரியர் ஊக்குவிப்பின் பொருட்டு ஆரம்ப, கனிஷ்ட நிலைப்பிரிவுகளிற் கற்றல்-கற்பித்தல் உப கரண உருவாக்கப் போட்டி நடத்தப்பட்டு அங்கு தெரிவுசெய்யப்பட்ட உபகரணங் களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஓராண்டு நினைவு தினத்தில் "துல்லியம்" என்ற சஞ்சிகையினையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிடப்பட்டன யாவும் ஓராண்டுக் காலத்துள் யாழ்ப்பாண மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஆற்றிய பெரும் பணியாகும்.

இந்நிலையம் இரண்டாவது ஆண்டி லும் எண்ணிய பணிகளைப் புரிந்துள்ளமை யும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டி யனவே.

மாணவர்க்குக் கணித பாடச் செயல் முறை செயலமர்வுகள் நடத்தப் பட்டதுடன், விஞ்ஞானச் செயல்முறைகளையும் மாணவர் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன.

அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்; அதிக தூரத்திலுள்ள பாடசாலைகள் பயன்பெறும் வகையில் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தலைமை யில் நடமாடும் சேவையை இந்நிலையம் வழங்கியதுடன் விளக்கொளியிற்கூடச் செயல மர்வுகளை நடத்திய பெருமை இந்நிலை யத்தையே சாரும்.

யாழ்ப்பாணத்திற் க.பொ.த. (சா/த) பரீட்சையிற் கணித பாடம் சித்தியடையாத மாணவர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று 1993.06.14 இல் இம் மூலவள நிலையத் தினால் ஆரம்பிக்கப்பட்டது. இதிற் பங்கு பற்றிய மாணவர் 38 பேரும் சித்தியடைந் தமை, எல்லோராலும் பாராட்டப்பட்ட நிகழ்வு என்பது இங்கு குறிப்பிடற்குரியது. இவ்வாறான பயிற்சி வகுப்புக்கள் வெற்றிபெற உழைத்தவர்களுள் செல்வி உதயா சிவஞானம் ஆசிரியையின் பணி மகத்தானது.

பாடசாலையிலும், கணித உப வள நிலையங்கள் அமைக்கும் ஆர்வம் பாடசாலைச் சமூகங்களுக்கு ஏற்பட்டபோது அதற்கு மூலவள நிலையம் பெரிதும் மகிழ்ச்சியுடன் பல்வேறு உதவிகளையும் வழங்கியது. இவ்வள நிலையத்தின் செயல மர்வுகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தலைமையில் மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்குமான செயலமர்வு நடைபெற்றபோது அங்கு தெரிவிக்கப்பட்ட,

"வேப்பங்காயெனக் கசந்த கணித பாடத்தை; கசப்பானதல்ல; இனிப்பானது என உணர வைத்துள்ளது. யாழ். மாவட்ட மூலவள நிலையத்தின் சேவை" என்ற கூற்று வளநிலையத்தின் பெரும் பணிக்குச் சான்றாகும்.

ஆசிரியர்களுக்குச் செயலமர்வுகள் நடத்தி, செயல்முறைப் போட்டிகளை நடத்தி, வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப் பட்டன.

செயலமர்வுகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வெளி மாவட்டங்களிலும் நடத்தப்பட்டதுடன் வெளிமாவட்ட ஆசிரியர்களை அழைத்து யாழ்ப்பாணத்தில் செயலமர்வுகள் நடத்தி; பிற மாவட்டங்

களிலும் கணித, விஞ்ஞான பாடங்களின் பெறுபேறுகளில் மாற்றத்தை ஏற்படுத்து வதற்கு கணித விஞ்ஞான மூலவள நிலையம் சேவையாற்றியமை போற்றுதற்கு உரிய ஒன்றெனப் பாராட்டப்பட்டமை நினைவு கூரத்தக்கது.

மூலவள நிலையங்கள் பிறமாவட் டங்களிலும் அமைக்கப்பட்டதுடன் குறிப்பாக 30 பாடசாலைகளில் இந்நிலையங் கள் இரண்டு ஆண்டுகளுள் அமைக்கப் பட்டமை பெரும் சாதனையாகக் கருதப் பட்டது.

மேலும், மாணவர்களிடையே விஞ்ஞான வினாவிடைப் போட்டிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. அத்துடன்; கணித, விஞ்ஞான, அறிவியற் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கணித விளையாட்டுக்கள் அமைத்தற் போட்டிகள் நடாத்தப்பட்டு அவற்றுக்கும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு மட்டு மன்றி ஆசிரியர்களுக்குமான கணித, விஞ்ஞான குறுக்கெழுத்துப்போட்டி நடாத் தப்பட்டு ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு மிகுதியான செயற்பாடு களுடன் மாணவர் ஆசிரியர்களுக்குப் பணியாற்றிய மூலவள நிலையங்கள் இன்று "ஆல்" போல வளர்ச்சியுற்று அருளும் பணிகள் புரிகின்றன. இதற்கு ஆரம்பகாலம் முதல் அரும்பணி புரிந்த உத்தியோகத்தர்களுள் மணிவிழாக் காணும் திருமதி அ. வேதநாயகம் அவர்களது பணி அளப்பரியது என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாததாகும்.

கணித ஆசிரியராக இருந்த நான்; கணித ஆசிரிய ஆலோசகராகப் பதவி வகிக்கும் அளவிற்கு மாறியதற்கு இவர் காட்டிய பாதைகளும், இவரது வழிநடத் தல்களும் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதே!

எல்லோரும் வாழ, ஏற்ற பணிபுரிந்து மணிவிழாக் காணும் கல்விப் பணிப்பாளர்; ஓய்வு காலத்தில் அமைதியாக, ஆனந்தமாக வாழ இறைவனை வேண்டிக்கொள்வதுடன் கணித, விஞ்ஞான பாட உலகு என்றும் அவர் பணிக்குத் தலை வணங்கும் என்பதனையும் உறுதியாகக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின் றேன்.

**பா. இராசசேகரன்**
*கணிதபாட ஆசிரிய ஆலோசகர்*
*(யாழ். கல்வி வலயம்)*

## திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் அவர்கள்

# ஆளுமைநிறை கலைப்பணியின் ஒளிக்கீற்றுக்கள்

கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் வெளிப்படும் முறையாகும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்ற திருக்குறள் ஞாபகத்திற்கு வருகின்றது. சமுதாய வைராக்கியம் கொண்டோர். சமூகத்தின் பல தரப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைச் சமச்சீருடன் நோக்குவர். இவர்கள் மொழி, கலை, கலாசாரப் பண்பாடுகளை முன்னேற்றுவதில் அரும்பெரும் தொண்டாற்றுபவர்கள். இந்த வகையிலேயே மணிவிழா நாயகி அருளீஸ்வரி அம்மையார் அவர்களைப் பார்க்கின்றேன். கலைப் பார்வையை நோக்குவதில் நானும் சமூகமும் மகிழ்வடைவதுடன், அதுபற்றிச் சொல்ல விளைகின்றேன்.

உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள் ஏதோ ஒரு கலையில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்து செயற்பட்டிருக்கின்றனர். இது அவர்களைச் சமநிலைப்படுத்தவும், தமது மனதை ஒருவழிப்படுத்திச் செயற்றிறன் மிக்கவர்களாகப் பணிகளைத் திறம்படச் செய்யவும் உதவியிருப்பதை அனுபவ வாயிலாகப் பார்த்திருக்கிறேன். மன ஒருமைப்பாடும், மன உறுதியும், செயல் உத்வேகமும் கொண்ட ஒருவராக விளங்கி, மணிவிழாக்காண வைத்தது. கலை ஆர்வமும் , கலைப்பணியும் என்று கூறுவது மிகையாகாது. கல்விப்புலத்தில் திறம்படப் பணிபுரிந்து ஓய்வு பெறுவதோடு நின்றுவிடாது, தனது ஆரம்ப கல்விக் காலத்தில் தொடங்கி இன்றுவரை கலையார்வம் மிக்கவராகச் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தரம் எட்டிற் கல்வி பயிலும்போது அகில இலங்கை ரீதியில் ஈழசேகரி பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றமை பேச்சுத்திறனை வளர்த்ததுடன் ஊக்குவித்து இருக்கின்றது. 1965ஆம் ஆண்டளவில் யா/ வஜாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற் கல்வி கற்ற காலத்தில் தவணை இறுதியில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்து அதில் நடித்துப் பலரின் பாராட்டுக்குரியவர் ஆனார். குறித்த நிகழ்வுகளை வீட்டிற்குச் சென்றதும் தாயாருக்கு நடித்துக் காட்டுவார். இவ்வேளையில் தாயார் தான் பார்வை யாளர் வரிசையில் இடம்பெறுவார். தந்தையாருடன் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் கலை நிகழ்வுகளைப் பார்வையிடச் செல்வது வழக்கம் ஆகிவிட்டது. இவை திறன் விருத்தியை மேம்படுத்தியதைச் சுட்டிக் காட்ட உதவியாக உள்ளது. பெற்றோரின் ஊக்கமே ஊக்கியாக தொழிற்பட்டிருக்கின்றது.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்ற காலத்தில் "சீதனம்" என்ற மகாவித்துவான் வீரமணிஐயரின் நெறியாள்கையில் யா/ வஜாவிளான் மத்திய மகாவித்தியாலய கட்டிட நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட நாடகத்தில் வயோதிபர் பாத்திரமேற்று நடித்துள்ளார். அன்றே சீதனக் கொடுமையை எதிர்த்து நாடகம் நடித்து, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

"வாலிபரே! உங்களை நான் வாயாரக் கேட்கிறேன்.

போலி நிறை சீதனமாய்ப் பொற்காசு கேட்காதீர்" என்ற வாசகம் புலப்படுத்தி நிற்கிறது.

இந்நாடகம் மூன்றுமுறை மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டைப் பெற்றதுடன் சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆளுமை விருத்தியின் ஏணிப்படியாக, ஆசிரியராகப் பதவி பெற்று, ஹற்றனிற் கற்பிக்கும் காலத்தில் அங்குள்ள ஆலயங்களிற் சமயப் பிரசங்கங்களில் ஈடுபட்டார். பண்படுத்தப்பட்ட உள்ளங்களை உருவாக்குதில் முனைப்பாகச் செயற்பட்டு அப்பிரதேச மக்களின் ஆன்மீகப் பணிக்கு உதவியுள்ளார்.

இதனால் அன்பு, பணிவு, பண்பு என்ற நற்குணங்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்க உழைத்தமை வரவேற்புக்குரிய விடயமாகும்.

இடமாற்றம் பெற்று ஆவரங்கால் யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திற் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர் பணியின் ஊடாகக் கலை வளர்ப்பதில் முனைப்பாகச் செயற்பட்டுள்ளார். நாடக எழுத்தாளர், நெறியாளர், நடிகர் எனப் பல்கோணங்களிற் செயற்பட்டு சிந்தனை, சொல், செயல் என்பவற்றை ஒருங்கே இணைக்கக் கூடியதாக அமைத்துக்கொண்டமையினால் அன்றைய வித்தியாலய அதிபரின் பாராட்டுச் சான்றிதழைத் தனதாக்கிக் கொண்டார். இது கலை உலகின் ஏணிப்படிக்கு உரமூட்டியது.

ஆசிரிய பணியின் உயர்வினால் விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆனார். கலையும் விஞ்ஞானமும் இணையும்போது புதிய ஆக்க வெளிப்பாடுகள் தோன்றுவதை அவதானித்திருக்கிறேன். இதற்கு அருளீஸ்வரி வேதநாயகம் அவர்கள் விதிவிலக்கானவர் அல்ல. 1993 ஆம் ஆண்டு கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தை ஆரம்பித்து வழிப்படுத்திய போது புதிய எண்ணக் கருவின் ஊடாக, கலையையும்; விஞ்ஞான கணிதத்துடன் இணைத்துப் போதிப்பதனால் மாணவரிடையே இலகுவில் விடயத்தை மகிழ்வுடன் புகுத்திச் சிறந்த அடைவுமட்டத்தைப் பெறுவதுடன் ஆளுமை விருத்தியையும் தோற்றுவிக்கலாம் எனக் கருதினார். இதனால் "எண்கோலங்கள்" என்ற விடயத்தை நாட்டிய நாடகத்தின் ஊடாக வெளிப்படுத்துங்கள் எனக்கூறி ஆலோசனையும் வழங்கினார். இச் செயற்பாட்டில் யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் வெற்றிகண்டது. நிகழ்விற் பரதநாட்டிய வரன்முறைக்கு உட்பட்ட நடன அமைப்புடன் இசையும் இணைந்து கொண்ட எண்கோலங்கள் என்ற அற்புதமான கணித கலை வடிவம் அறிமுகமானது. மாணவர்கள் இரசனையுடன் கடினமான விடயத்தை இலகுவில் உள்வாங்கும் திறனைப் பெற்றுக்கொண்டனர். இது கணித விஞ்ஞான நிலையப் பொறுப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களுக்கே உரியது. தொடர் நிகழ்வாக "கி.பி. 2010' என்ற நாடகமும் வளநிலையத்தினால் மேடையேற்றப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது யா/ கோப்பாய், கிறிஸ்தவக் கல்லூரி மேடையேற்றிய "அலசன் குடும்பம்" என்ற கருவை மையப்படுத்திய நாடகம் சபையில் இருந்த பார்வையாளர்களை வியக்க வைத்தது. கணித எண்ணக்கரு கலையின் ஊடாக வெளிப்படுவதை பலரும் பாராட்டினர். விசேடமாக நிகழ்வின் பிரதம அதிதியான யாழ்ப்பாணப்

பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞானபீட தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் வியந்து பாராட்டினார். தொடர் நிகழ்வாக "புள்ளிவிபரவியல்" கருவை மையப்படுத்திய வில்லுப்பாட்டு நிகழ்வும் அம்மையாரின் பணியின் ஊடாக சமூகக் கலைப் பணிக்குப் புடம் போட்டு நிற்கின்றன.

கால ஓட்டத்தில் இடப்பெயர் வின்போது (1995) துணுக்காயிற் பணியாற்றிய காலத்தில் மு/ மல்லாவி மைதானத்தில் மாணவர்களையும், ஆசிரியர்களையும் இணைத்துப் பன்னிரண்டு மணிநேர தொடர் நிகழ்வாக நடன நாடகம் இணைந்த மாபெரும் கலை நிகழ்வை வழிப்படுத்தி நடாத்தினார். இது உடைந்து, நொந்துபோய் இருந்த உள்ளங்களை இடப்பெயர்விற்குப் பின்னான காயங்களை ஆற்ற உதவியது. மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் கவிதை வரிக்கு ஏற்ப "மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்" ஆசிரியர்களும், மாணவர்களும் தம் பணியாற்ற உதவியதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இந்நிகழ்வின் மூலம் கிடைத்த நிதியின் ஊடாக கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்தமையினால் தொண்டர் ஆசிரியர்கட்கு பத்து நாட்கள் வதிவிடப் பயிற்சி ஒன்றை ஒழுங்குசெய்து சிறப்பாக நடாத்தி, ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தினார். இது வதிவிடப் பயிற்சியாக நடைபெற்றது. இடம் பெயர்ந்த மக்களின் உளச் சமநிலையை வலுவூட்டிய துடன் மகிழ்வையும் ஏற்படுத்தியது.

இக்காலத்திற் சிறுவர் நாடக விழாக் களை நடமாடும் சேவையாக கிராமங்களில் நடாத்தி எதிர்கால விளை பயிர்களின் ஆரோக்கிய வளர்ச்சியில் உதவியமையை மனித சமூகம் நன்றியுடன் பார்க்கவேண்டும். துணுக்காய் கோட்டத் தமிழ் மொழித்தினப் போட்டிகளின்போது நாடகப் போட்டிக்காக ஒவ்வொரு பாடசாலையையும் தரிசித்துப் பங்கு பற்றவைத்து ஆதரவு வழங்கினார். இதனால், வன்னிப் பெருநிலப் பரப்பில் துணுக்காய் கோட்டம் என்றும் இல்லாதவாறு முதலிடம்பெற்றது.

ஏணிப்படியாக உயர்ந்த அனுபவத் தின் ஊடாகத் தென்மராட்சி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆனார். போரினால் பாதிக்கப்பட்ட உள்ளங்களை ஆற்றுப்படுத்த எண்ணி அரங்க செயற்பாடு களில்" மாணவர்களை ஈடுபடுத்தி ஆக்கபூர்வ மான செயற்றிட்டத்தை வகுத்து உள மேம் பாட்டை மேம்படுத்துவதில் வெற்றி கண்டார். இந்த உள ஆரோக்கிய செயற் பாட்டினால் இன்று ஆசிரியர்களும், மாண வர்களும் ஆரோக்கிய நிலையில் உள்ளனர். இதன் விளைவாக 2007 ஆம் ஆண்டு யா/ சாவகச்சேரி மகளிர்கல்லூரியில் தரமான முத்தமிழ் விழா அரங்கேறியது. அரசபணி யின் காரணமாக யாழ்ப்பாண கல்வி வலயத் தின் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்றுக் கொண்டார். இங்கு சேவையாற்றிய காலத்தில் சித்திர ஆசிரியர்கட்கு தொடர் பயிற்சியை நடாத்தி அழகியல் பாடத்திற் சித்திரப்பாடத்தின் மேம்பாட்டை விருத்தி யுறச் செய்து சித்திரப்பாட மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன் பல மாணவர்கள் சித்திரப்பாடத்தின் ஊடாக உயர் கல்வி பெறும் வாய்ப்பும் கூட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, சிரேஷ்ட விரிவுரையாளர் திருவா ளர்கள் தனபாலன், க.இ.கமலநாதன் அவர் களுடன் இணைந்து குறும்படங்களைத் தயாரித்து, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்து வதிலும் ஈடுபட்டார். இதன் விளைவாக வாழும்போதே, வெற்றிக்கு வழி, ஒப்பிலா மணியே என்ற குறும்படங்கள் வெளியாகின. இவை யாழ்ப்பாண மாவட்ட வலயங்களிற்

காட்சிப்படுத்தப்பட்டபோது மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர், சமூகநலன் விரும்பிகளும் பார்த்து தம்முள் பல மாற்றங்களை ஏற்படுத்தி வாழ வழிவகுத்தமை கலைப்பணியின் ஊடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

வட இலங்கை சங்கீத சபையின் (2011) அமுத விழாக்காணும் இவ்வருடம் சபையின் கலைப்பணியின் பொற்காலம் எனக் கருதுகிறேன். பதவி வழித்தலைவரான திருமதி அ. வேதநாயகம் அவர்களினால் சபை பெருமைபெற்றது.



படம்1

ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் உற்சவம் வ.இ.ச. சபையின் பரீட்சைகள், ஆலோசனைக் கூட்டங்கள், அமுதவிழா மலர் வெளியீடு என பல கோணங்களில் கலைப்பயணம் வியாபித்தது. செயலுருபெற்று, நடைபெறு கிறது. சிறந்த நிர்வாகி, ஆலோசகர், வழிப்படுத்துநர், கலைஞர், இரசிகர், எழுத் தாளர், ஆய்வாளர் எனப் பல கோணங்களில் கலைப் பயணம் இடம்பெற்றதை நேரடியாக வும், ஊடகங்களின் ஊடாகவும் அறிந்து பெருமை கொள்கின்றோம். வட இலங்கைச் சங்கீதசபையின் "கலாவித்தகர்" அவைக் காற்றுகை நிகழ்வின்போது கலை நிகழ்வு



களின் உட்சென்று இரசிக்கும் தன்மையுடன் நின்றுவிடாது மேலும் சிறப்பாகச் செய்யக்கூடிய வழிமுறை களைக்கூறுவதுடன் தவறுகளைச் சுட்டிக் காட்டவும் பின்நிற்க மாட்டார். அதைப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தி வழிப்படுத்துவது சிறந்த விமர்சகரின் ஆளுமையாகும். கலைஞர் களையும், நடத்துநர்களையும் ஊக்குவித்துப் பாராட்டும் தனித்துவம் அருளீஸ்வரி அம்மையாரிடம் உண்டு. இந்நிகழ்வு கலைஞர் களின் வளர்ச்சிக்கு உரமிடுவதுபோல் இருந்தது. கலாவித்தகர் கட்கு விருது வழங்கும் திட்டத்தை வழிப்படுத்தினார். பல கல்விப் பணிப்பாளர்களைத் தலைவராகக்கொண்ட இச்சபையின் அமுதவிழாக் காணும் இக்காலத் தில் சபையின் நிரந்தரக் கட்டத்திற்கு 20/01/2011ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு சபையின் மருதனார்மட சொந்தக் காணியில் அத்திபாரம் இட்டது.



இறைவனின் கலைப் பணிக்கான கொடை மட்டுமல்ல அதி உச்சமான கலைப் பணிக்குக் கிடைத்த இறை ஆசியென்றே கருத வேண்டும்.

அருளீஸ்வரி வேதநாயகம் அம்மையார் அரச பணியிற்றான் ஒய்வு பெறுகிறார். கலைப்பணியில் ஓய்வுபெறவில்லை. தனது வாழ்க்கைக்காலம் முழுவதும் கலைப்பணிக்கு அர்ப்பணம் செய்யவும், அவரின் குடும்பத்தவர்களினதும் ஆரோக்கிய வாழ்விற்கும் எல்லாம் வல்ல ஆடற்கலையின் வல்லான் நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**நாடக கலாவித்தகர் சி. சிவராஜன்**
*அதிபர், உளவளத்துணையாளர்,*
*யா/ பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயம்,*
*தெல்லிப்பழை.*
*உபசெயலாளர், வ. இ. ச. சபை,*
*யாழ்ப்பாணம்.*

181218

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# திருமதி அ. வேதநாயகம்

அன்னைக்கு அமுதெடுத்து
விந்தையாய் விருந்தளிக்க
இன்னருள் செய்தான் எந்தன்
விநாயகன் பொற்பாதம் போற்றி.

**மைந்தனின் மனதிலிருந்து....**

அன்று நாம் கைவிடப்பட்ட மானிடராய் யாழ். தீபகற்பத்திலிருந்து இடம்பெயர்ந்து செல்லும் மக்களாய் நடை பயின்று சென்றோம் வன்னிக்கு. சொத்திழந்து, சுகமிழந்து, சொந்த வாழ்விழந்த எமக்குப் பெரு விருட்சமாய் நிழல் தரக் காத்திருந்தது ஒரு பெரிய ஆலமரம். மனவடுக்கள் நீங்கி, மானிட உத்வேகத்தைத் தட்டி எழுப்பி, அதற்கு உரம் ஊட்டும் கைங்கரியத்தில் மலர்ந்த முகத்துடன் கல்வித்தாய் எம்மைக் கரம்பிடித்தாள். அந்தத் தாய்க்கு மடல் எழுதும் பெரும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மட்டிலா மகிழ்வெய்துகின்றான் இந்த மானிடனாய்ப் பிறந்த ஜெயமதன்.

**கல்வித்தாயே அம்மா....**

"அம்மா!" என்று ஆழ்மனதுடன் அழைக்கும்போது இன்முகம் காட்டி வரவேற்கும் தாய்; எப்படிக் கல்விப்பேற்றை அடையும் பிள்ளைகளுக்கும் விந்தைசார் ஆசான்களுக்கும் தாயானாள் என்பதற்கு என்பால் இருக்கும் சான்று இது.

அன்று மல்லாவிப் பாடசாலையான மல்லாவி மத்திய கல்லூரி அரங்கிலே தமிழுக்குப் பெருவிழா. அப்போது துணுக்காய்வலயத்தின் கல்விப் பொறுப்பை அலங்கரித்துக் கொண்டிருந்தார் எனது அம்மா. மனதிலே காயத்துடன் அங்கு பயின்று கொண்டிருந்த மாணவமணிகள் பெற்றோரை இழந்தும் உற்றோரை மறந்துவிட்ட நிலையிலும், கல்வியைத் தொடரும் செய்தி, எங்கள் தாயின் மனதில் தாங்கொணா துயரத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது.

அன்றைய மேடையிலே அம்மா பேசுகிறார்: "எனதருமைப் பாலகரே, உங்கள் கல்வியைக் கட்டியெழுப்ப நான் ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால், நான் ஒரு கல்வி அதிகாரி என்பதை விட, மனதிலே கவலையோடு கற்கின்ற எனது பிள்ளைகளுக்கு ஒரு தாய் போன்று அன்பையும், ஆதரவையும் கொடுக்கின்ற தாயைப் போன்று, நான் இருக்க எனக்கு ஆண்டவன் தந்த பரிசாக இந்தப் பதவியை நான் பெற்றிருக்கின்றேன் என்பதே உண்மை"

இந்த வார்த்தை இன்னும் என் ஆழ்மனதிலிருந்து வெளிப்படும்போது, உண்மையில் என் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் பனிக்கின்றன. ஏனெனில், பெற்றவர், உற்றவர் இருந்தும் அன்று நான் தனிமையிலே அங்கே நின்றிருந்தேன். ஏனெனில், எனது பெற்றோர் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது இடையிலேயே திரும்பிப் போக வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது. அன்றி லிருந்து என்னைப்போன்ற பிள்ளைகளுக்

கெல்லாம் அவர் எங்களது அன்னையாகவே தெரிந்து கொண்டார். அன்றிலிருந்து இவரை நாம் "அம்மா!" என்றே அழைத்தோம் இதனைப் பார்த்த எமது ஆசிரியர்களும் "மிஸ்" என அழைப்பதை விடுத்து அந்த அன்பும் அரவணைப்பும் நிறைந்த "அம்மா" என்ற வார்த்தையையே உச்சரிக்கலாகினார்.

இது பதவிக்காக "அம்மா", "மேடம்" என்று அழைப்பது போலன்றி ஒவ்வொரு நொந்துபோன உள்ளங்களின் ஆழ்மனதோடு பிணைக்கப்பட்ட ஒன்றாகிநின்று பருத்த காயங்களுக்கு மருந்தூட்டுவதாக நின்றது என்பதே உண்மை. அந்நிலை அன்றுபோல் இன்றும் தொடர்ந்து அவர் யாவருக்குமே அன்னையாக இருந்து கல்வித்துறைக்குச் செயலாற்றுவது நாம் யாவரும் செய்து கொண்ட முன்னைப்பயனே என்பதே சாலப்பொருத்தமானதாகும்.

**விடா முயற்சியாளர்....**

உலகில் அவதரித்த மானிட குலத்திற்கு எது இருக்கவேண்டுமோ! அந்த மனப்பக்குவத்தை இயல்பாகவே கொண்டவர் எமது தாய். எது இயலாதோ அதில் வெற்றிகாண முடியும் என்ற கோட்பாட்டில் உறுதியான நிலைப்பாடு கொண்டவர். அதிலும் மன ஆளுமை என்பது நினைக்க நினைக்க ஒரு வெற்றிப்பாதையை நோக்கிக் கொண்டு செல்லும் கருவி என்பதை அவரின் உரையாடல்கள் மூலம் நான் கண்டிருக் கிறேன். "நீ தோல்வியைக் கண்டு துவண்டு போகாதே அது உன்னை மூடன் ஆக்கிவிடும். அத்தோடு அதுவே உனது முயற்சிகளுக் கெல்லாம் தடைபோடும் வேலியாக அமைந்துவிடும்" என்று அடிக்கடி பேசி விடா முயற்சிக்கு வித்திட்டவர். இதற்கு எடுத்துக் காட்டாகத் தனது கல்விப் பாதையைச் சுட்டிப் பாகப் படம் போட்டுக் காட்டுவர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த மனப்பான்மை ஊற்றெடுக்கும் இடமே தாயின் சிறந்த உள்ளம் என்றால் மிகையாகாது.

**யாவரையும் அன்பு செய்யும் நண்பியாக....**

துணுக்காய் வலயத்திலே தன் பணிதனைச் சிறப்புற ஆற்றிக்கொண்டிருந்த வேளை சகல பாடசாலைக்கும் சென்று பச்சிளம் சிறார்களுடன் கொஞ்சும் மொழிபேசி, சிறுபிள்ளை போலாகி, குசலம் விசாரிப்பது என்பது எமது அம்மாவுக்குத் தனிப்பிரியம்.

ஒரு முறை தனது கல்விசார் பணி நிமித்தம் திருகோணமலை சென்றுவரச் சில நாட்கள் எடுத்துவிட்டன. வந்ததும் உடனடியாகத் தனது அலுவலகத்தின் அருகே அமைந்துள்ள மல்லாவி மத்திய கல்லூரிக்கு வந்து அங்கே நின்ற ஆரம்பப்பிரிவு மாணவர் களுடன் ஊடாடத்தொடங்கினார். அதிலே ஒரு சிறுமி அம்மாவைப் பார்த்து "கோட் டம்மா கோட்டம்மா இவ்வளவு நாளும் எங்கே ஒளித்திருந்தனீர்கள்? என்று கேட்ட போது அம்மாவின் மலர்ந்த முகம் அந்தச் சிறுமியை கட்டியணைத்து முத்தமிட்டதை என் கண்களாற் காணும் பாக்கியத்தைப் பெற்றேன். இந்நிகழ்வானது அவரின் உண்மை அன்பிற்கும், எளிமைத் தன்மைக்கும் கிடைத்த பரிசு என்றே கூறவேண்டும். இது மட்டுமன்றி, அதே பாடசாலையைச் சேர்ந்த சிறுமி ஒருத்தி ஓர் அழகிய சித்திரதை வரைந்து அம்மாவுக்கு நினைவுப் பரிசாகக் கொடுத்தாள். அதனை இன்றுவரை பேணிப்பாதுகாத்து வைத்திருப்ப தென்பது அம்மா சிறியவர் முதல் பெரியவர் வரை யாவரையும் சமமாக அன்பு செய்கின்ற தூய்மையான மனப்பாங்குடையவர் என்பதைப் புடம்போட்டுக் காட்டுகின்றது.

### கல்விச் சேவைக்கோர் சிகரம்

"கல்வி"ப் பயிரை அனைவரினதும் உள்ளமெனும் நிலத்திலே விதைத்து வளர்க்க வேண்டுமென்ற தீராத தாகம் கொண்டவர் எமது அம்மா. அதாவது "எந்தக்குழந்தையும் மண்ணிற் பிறக்கையில் நல்ல குழந்தைகளே!" என்பது அம்மாவினது உண்மை நிலை. அவர்களை நல்ல ஒழுக்க சீலராக ஆளாக்கு வதும், மேன்மைப்படுத்துவதும் கல்வி எனும் கருவி என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். அதற்காக இரவும் பகலுமாகத் தனது சேவைப்பணியை ஆற்றி வருபவர். பணத்திற்காகத் தமது கடமையை நிறை வேற்றிச் சலிப்படைந்து போயுள்ள இச் சமுகத்திலே கடமையைச் செய்வதே எனது உழைப்பு என எண்ணி, திண்ணிய மனத்துடன் தனது கல்விப் பாதையிலே வீறு நடை போடுவார். எந்த ஒரு பிள்ளையும் தனது கல்வியைச் சரிவரப் பெறவேண்டும். அதற் காக ஆசிரியர்கள் முன்னுதாரண முடையவர் களாகவும், அந்த இலக்கை நோக்கி முயற்சி செய்து உழைப்பவர்களாகவும் இருக்க வேண் டும் என்பதை அடிக்கடி அறிவுரையாகப் புகட்டிக்கொள்வார். இதுவே அம்மாவின் ஆழ் மனதில் என்றும் நிலையாக இருக்கின்ற, அவர் அனைத்து ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்ற மானசீகமான விடயமாகும்.

### செய்து காட்டியவர்

அன்று தொடக்கம் இன்றுவரை தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் முழு வீச்சுடன் நின்று செயலாற்றிக் காட்டியவர் அம்மா. அன்றைய காலம் இடம்பெயர் ஓலங்களால் அனைத்துத் துறையும் ஏனோ தானோ என்றுஇருந்தபோது, அதிலிருந்து மீட்சி பெற வேண்டும் என அவாக்கொண்டு செயற் பட்டார். இதற்கு எடுத்துக்காட்டாக யோக புரம் மகாவித்தியாலயத்திற் பெரு மைதானத் தில் முதன்முதலாக அனைத்துப் பாடசாலை களையும் இணைத்து "உடற் பயிற்சி" நிகழ்வை மாபெரும் விழாவாக நடாத்தி, யாவரையும் இன்புறவைத்தார். இத்தோடு மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை மல்லாவி மத்திய கல்லூரியிலேயே பெரு விழாவாக நடாத்த அனுமதிபெற்று அதனை முன்னின்று நடாத்தி, விளையாட்டுத்துறைக்கு உரம் சேர்த்தவர்.

### கலைக்கோர் பொக்கிசம்

ஓர் ஆசான் சகலகலா வல்லவனாக இருக்கவேண்டுமென்ற கூற்றுக்கமைய அனைத்துத்துறைகளையும் மேன்நிலையில் வைத்து அதற்கு உயிர்ப்பு கொடுப்பதோடு, அவற்றினூடாகவும் ஒழுங்குநெறி சார்ந்த கல்வியை மேம்பட வைத்தல் வேண்டும் என்பதில் விடா முயற்சியுடன் செயற்பட்டு வருபவர். கலைப்படைப்பைப் படைத் தோனை உற்சாகப்படுத்துவதோடு நின்று விடாது அதன் இரசனையைப் பங்குபோட்டுச் சுவையுடன் பேசும் போது, அவர் கலை மீது கொண்ட உன்னத ஈடுபாடு வெளிப்பட்டு நிற்பதனைக் காணலாம். அதாவது, நாடகக் கலை, ஓவியக்கலை, சங்கீதம், நடனம் போன்றவற்றோடு; சினிமாக்கலையின் ஒரு பகுதியான குறும் பாடல்களை முன்நின்று தயாரித்து, அதனூடாகக் கல்விப்பாதைக்கு உரம் சேர்க்கும் தமிழ்ச் சமூகத்திற்கு நல் ஒழுக்கச்சிந்தனையை ஊட்டி நிற்கின்றார்.

### பாலர் கல்வி ஆசான்களை மன நிறைவோடு அரவணைத்தவர்.

பாலர் பாடசாலையிற் பாலர்களை எழுத்தறிவித்த ஆசான்களை யாவருமே ஏறெடுத்துப்பார்க்காத நிலையில், பாடசாலை ஆசான்களை மதித்து, அவர்களுக்கு மட்டுமே நடாத்தப்பட்டு வந்த "ஆசிரியர்தின நிகழ் வை" பாலர் பாடசாலை ஆசிரியர் களுக்கும் நடாத்த வேண்டுமென்ற எண்ணப்பாட்டுடன் அவர்களின் அளப்பரிய சேவையை மதித்து, 2009ஆம் ஆண்டில் அவர்களின் கழுத்துக்

களில் மாலைகளும், பதக்கங்களும் தவழ வைத்து, தன் தூய்மையான மனதில் முழுமை கண்டவர். இது அம்மாவின் உண்மையான கல்விப் புலத்திற்கான சேவை மனப்பான்மை யை உலகிற்குப் பறை சாற்றிய நிகழ்வு என்றே கூற வேண்டும்.

முடிவு :

என் தாயிற் காணாப் பொது நலம்
எம் தாயிற் கண்டேன் அம்மா
நும் போல் பணியில் ஓங்கல்
இப்பாரிடை யாரைக் காண்போம்.

நாம் இன்றுகாணும் "அம்மா" என்றே கல்வியுலகிற்கோர் தாயாகிய நினைவு இன்றும் என் ஆழ் மனதிற் பொதிந்திருக்கின்றது. இத்தகையதோர் சேவை மனப்பாங்குடைய வரை நாம் அனைவரும் நன்றி மறவா நினைவுடன் பாராட்டவேண்டும். அந்த வகையில், என் தாய் நீண்ட நாட்கள் வாழ்ந்து கல்விப்பாதைக்கு எம்மை வழிப்படுத்த வேண்டும். அதற்கு ஆண்டவன் எமக்கு என்றும் துணை புரிவான். பல அறை கூவல்களுக்கு மத்தியிலே "மானிடம் வெல்ல வேண்டும். நம் கல்விப்பாதையில்" என்ற தீராத்தாக்கத்துடன் செயற்படும் எம் அன்னைக்கு நாம் கரம் கொடுத்து, பலம் சேர்த்து, அவர்தம் சேவைக்கு ஒருங்கிணைந்து செயற்படுவோம். அதற்கான பொற்பாதையில் இந்த மகனின் பாதங்களும் பின்தொடர்ந்து நடைபயிலும்.

என் தாயே வாழ்க !
என்தாயின் பணி தொடர்க !

"நன்றி"

மு. ஜெயமதன்

# சாதனைப் பெண்

"ஓவியனுக்கு மயிலின் நிறம் பிடிக்கும். நடனக் கலைஞனுக்கு மயிலின் நடனம் பிடிக்கும். விவசாயிக்கு மயிலின் மகிழ்ச்சி பிடிக்கும். எனக்கோ உங்களின் புன்னகை பிடிக்கும்"

60வருடங்கள் இப் பூமியில் அவதரிப் பின் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, வலயக் கல்விப் பணிப்பாளராக, ஏன் இல்லறத் தலைவியாக, பாசமிகு அன்னையாக வாழ்ந்து காட்டிய பெருந்தகையே நீங்கள் முடிய வில்லையே?

யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி யில் நான் கணித ஆசிரியராகக் கடமை யாற்றியபோது தாங்கள் உதவிக் கல்விப் பணிப் பாளராக இருந்து எங்களை வழிநடத்தி யமையை மறக்க முடியுமா?

கோப்பாயிற் கணித மூலவள நிலையத்தை உருவாக்கிக் கணித பாடத்தை எவ்வளவு இலகுவாகக் கற்பிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டிய உங்கள் வினைத் திறன்மிக்க சேவையை மறக்கமுடியுமா?

மாணவர்கள் மட்டும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றதில்லை. ஆசிரியர்களும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். என்பதற்கு மாணவர்களுக்குக் கணித வினாவிடைப் போட்டி நடைபெறும் வேளையில் ஆசிரியர்களுக்கும் கேத்திர கணிதப் போட்டி, திரிகோண கணிதப் போட்டி எனப் போட்டிகள் வைத்து எங்களை இன்பப்படுத்தியதை மறக்க முடியுமா? அதிகாரிகள் என்றால் மடிப்புக் குலையாத உடையுடன் வாகனத்தில் வருபவர்கள்தான் என்ற எண்ணக் கருவைப் பற்றித் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் துவிச்சக்கர வண்டியிற் தூசி படர்ந்த தெருவிற் சென்று பாடசாலை மட்டக் குழு மேற்பார்வையைச் செய்த வன்னிப் பெருநிலப்பரப்பில் ஏழை மாணவர் களின் கல்விக்கு ஒளியூட்டி எங்களுக்கு முன்னு தாரணமாக வாழ்ந்துகாட்டிய உங்களின் அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையுமுள்ள சேவையை மறக்கமுடியுமா?

தற்போது நானும் உங்கள் சக பதவியிலிருக்கும்போது அடிக்கடி கூறும் "அம்பு முன்னால் வந்து நெஞ்சிற் குத்தும் போது அதை முதுகுப் பக்கமாகப் போகவிட வேணுமே தவிர, நெஞ்சிலே பொறுக்க வைத்திருந்தால் அடுத்த கட்டம் நகர முடியாது பிள்ளை" எனக்கூறி என் பணி வாழ்வில் தோளோடு தோள் கொடுத்து நிற்கும் தங்கள் பொறுமைமிக்க, விட்டுக்கொடுப்பு மிக்க சேவையை மறக்க முடியுமா?

பாரதியார் கூறியதைப்போல

"மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல<br>
மாதவம் செய்திட வேண்டும் அம்மா<br>
பங்கையக் கைந்நலம் பார்த்தல்லவோ -<br>
இந்தப் பாரினில் அறங்கள் வளரும் அம்மா.<br>
மங்கையராகப் பிறந்ததனால் - மனம்<br>
வாடித் தளர்ந்து வருந்துவதேன்<br>
தங்கு புவியில் வளர்ந்திடும் கற்பகத்<br>
தருவாய் நிற்பது நீர் அலவோ.

என மாதவம் செய்து, கற்பகதருவாய் நின்று மற்றவர்களுக்கு நிழல்கொடுத்த

அம்மையே தாங்கள் சேவையில் நின்று இளைப்பாறினாலும் தங்கள் சேவை சமூகத்திற்குத் தொடர வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

தாங்கள் இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று பறைசாற்றவில்லை. பட்டியலிட்டுக் காட்டிப் பதவி பெறவு மில்லை. நீதிக்காகப் போராடினால் தர்மத்தை நிலைநாட்ட உங்களையே தியாகம் செய் தீர்கள்.

இறுதியாக, எமது நாட்டைப் பொறுத்த வரை கொடும் யுத்தம் நடைபெற்ற நாடு. கூடுதலான குடும்பங்கள் போதிய வருமானம் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். யுத்தம் நிமித்தம் எத்தனையோ விதவைகள் காணப்படுகின்றார்கள். இவற்றுக்கெல்லாம் விடிவு காண்பதற்காகப் பல அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள் துடித்துக் கொண்டிருக் கின்றன. பெண்களின் சிரமங்கள் ஆண்களை விடப் பெண்களால்தான் உணர்ந்துகொள்ள முடியும். யுத்தத்தினாலும் சுனாமியினாலும் அனர்த்தத்தினாலும் பல்லாயிரக்கணக்கான பெண்களும் அவர்களின் பிள்ளைகளும் திக்குத்திசை தெரியாத காட்டில் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள். இவர்களை வாழ வைக்க வேண்டிய மகத்தான கடமையை உங்களிடம் ஒப்படைக்கிறேன். தாங்கள் கல்விப் பணியை முடித்து சமூகப் பணியைத் தொடர, தங்களையும், கணவன் பிள்ளை களையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதித்து உடல் - உள நலத்துடனும் வாழ வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**வாழ்க! வளர்க சமூகப்பணி**

**திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
மடு வலயக் கல்வி அலுவலகம்,
ஆண்டான்குளம்.

# துணுக்காய் வலய அதிபர்களால் நடாத்தப்பட்ட பிரியாவிடையின்போது உயிலங்குளம் அ.த.க. பாடசாலை அதிபர்

## செல்வி ப. விஜயகுமாரி அவர்களால் பாடப்பட்டது.

நான்காண்டு காலமாக நம்முடன் உறவாடி
நற்பணியாற்றி வன்னியிற் கல்வி வளம்பெற வகைசெய்து
நம்மைப் பிரிந்துசெல்லும் வேதநாயகம் அம்மா - அவர்
நற்சேவைகளை எண்ணிப் பாவொன்று தரவந்தேன்.

*15.04.1996* அன்றுமுதல் இன்றுவரை
முல்லை மாவட்டத்தில் அன்னை ஆற்றிய சேவைகளை
அர்ப்பணிப்பு நோக்குடனே புரிந்த நற்பணியதனை
துணுக்காய் வலயம் பெற்ற பேறெனவே கூறிடலாம்

யாழ். நகரிற் கணிதவள ஆளணியாய்ப் பணியாற்றி - அந்
நோக்குடனே தொடர் சேவையாற்ற வந்த வேளை - அவர்
கல்வித்தரமும் உயர்சிந்தனையும் செயல் வேட்கையதும்
கோட்டக் கல்வி அதிகாரியதாய் துணுக்காய் வலயம் பெற்ற பலன்

எளிய தோற்றம், சிரித்த முகம், ஆழ்ந்த பார்வையுடன்
துணுக்காய் கோட்டப் பாடசாலைகளைத் தரிசித்தார் அன்னை
சிறிய பாடசாலை, பெரிய பாடசாலை என்ற பேதமின்றி
அனைத்துப் பாடசாலைக்கும் சென்றார் மதிப்பிட்டார்

நாட்டிலேற்பட்ட பேரிடப்பெயர்வுகளால்
மாணவர் அதிகரிப்பிற்கேற்ப ஆசிரியர் வளமில்லை எனவறிந்து
தொண்டராசிரியரது சேவைகளை நாடி நிற்பார் - அவர்
தரமறிந்து நியமனமும் தந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை.

கல்விக் கழகத்துடனும் பொது நிறுவனங்களுடனும் கலந்து
தொண்டர் ஆசிரியர் நிதிவளம் பெற்றுத்தந்தார் அவர்
தரமுயரப் பல கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து
கல்வி மேம்பாட்டைச் செய்தார்
கட்டிடங்கள், தளபாடங்கள் போதா நிலையில்
மரநிழல்களிலும் வேறு காணிகளிலும் தொடரும்
கல்வி கண்டு அவர் பாடசாலை தோறும் பல

கட்டிடங்கள், தளபாடங்கள் பெற வழிவகுத்தார்.
அடிப்படைக் கல்விக்கு எழுத்தறிவு வேண்டுமெனப்
பாடசாலை அனைத்தும் எழுத்தறிவூட்டல் தனில்
தனிக்கவனம் எடுத்துச் செயற்பட வேண்டுமென இவர்
எடுத்த நடவடிக்கை தந்த பலனைப் பலரறிவார்

முறைசாராக் கல்வி மூலம் எம்பகுதி இளைஞர்கள்
பெற்ற பயன் கூறுகையில் அன்னை செய்த பணி
சகல பகுதியிலும் பரவலாக இக் கல்வி பெற
வாய்ப்பளித்தார் பாரபட்சம் இதில் பார்த்ததில்லை

கல்வி முடியக் கண்காட்சி கற்றவர்க்கு நல்ல ஊக்குவிப்பு
கண்டவர்க்கு அது பெருவிருந்து பின்னர் தம்
தேவைகளை நிறைவு செய்ய நாடுவதற்கு ஏற்றவாறு
விளம்பரமாய் அமைவது ஓர் சிறப்பு.

மாணவரை ஊக்குவிக்க கணித விஞ்ஞானப் போட்டி
அனைத்துப் பாடங்களிலும் வினாடி வினாப் போட்டி
ஆசிரியர் தினத்தை ஒட்டி ஆசிரியர்களுக்குப் போட்டி
அன்னை இங்கு வந்த பின் அறிமுகமானவைகள்

கல்வியுடன் விளையாட்டும் கட்டாயம் வேண்டுமென
உடற்பயிற்சி, மெய்வல்லுனர் போட்டிகளைக் காலம்
தோறுமிங்கு கலகலப்பாய் நடத்தி வைத்தார். உடன்
உள்ளக விளையாட்டுக்களையும் இன்று சேர்த்து விட்டார்.

ஆரம்பப் பிரிவினருக்கு உடற்பயிற்சிப் போட்டியினை - இங்கு
அறிமுகப்படுத்தினவர் அன்னையன்றோ - அவர்
ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சியினிற் கொண்ட
அக்கறையாற் கல்வி அத்திவாரம் பலன் பெற்றதென்போம்

அடிக்கடி பாடசாலைகளில் தரிசனம் செய்வார் - அங்குள்ள
குறைகளை அக்கறையுடன் பார்ப்பார்
ஆவன செய்வதற்கு ஆலோசனை வழங்கி
அளித்திடுவார் தெம்பு தன் அனுபவம் கூறி.

கடமையிற் கண்ணாய், கவர்ச்சியிலே பெண்ணாய்
கொண்ட இலட்சியம் குன்றிடா அம்மணியே
வளம் பல கொண்ட வளர் இளம்பரிதி போல

வலயக் கல்வித்திணைக்களத்தில் வலம்வரும் அம்மணியே
வலயக் கல்வித்திணைக்களத்தில் வலம்வரும் அம்மணியே
அன்னையின் சேவையிலே கல்வி வலயம் வந்தவேளை
*01.10.1998* முதல் துணுக்காய்
வலயக் கல்விப்பணிப்பாளரானார்
அமைத்திட்டார் அழகான வலயக் கல்விப் பணிமனையுடன்
மூலவள நிலையமொன்றும் நிறைவுடனே.

பேணுகை முகாமைத்துவம் உடையவராய்
பெருமை பல பெற்றுத் தந்த பெருந்தகையே - நல்ல
அலுவலக வேலைகளைக் கட்டமைப்பாய் விரிவு செய்து
வசதி பல செய்து பணி சிறப்புடனே ஆற்றச் செய்தார்

தேவையான ஊழியரைத் தகுதியுடன் தேர்ந்தெடுத்து
ஆசிரியர் தேவைகளை அக்கறையாய் செய்ய வைத்தார்
நிர்வாக விடயத்திற் கண்டிப்பாய் நின்றாலும்
நிலைமைகளை முன்னிட்டு இரக்கமுடன் பேசிடுவார்

இன்முகத்தோடு உபரித்து இன்னல்களைக் கேட்டறிவார்
இயன்றவரை உதவிடுவார் இல்லையென்பதில்லை இவர்
பெருமை பல பெற்றுத்தந்த பெருந்தகையே
பெருமகளே உங்கள் பிரிவு எமை வாட்டினாலும்
உயர்வு பல பெற்று நீரும் உவப்புடன் எங்கள் குறை
உண்மையாய்த் தீர்ப்பீரென்ற உணர்வினால் தேறுகிறோம்

அனைவரின் உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கும் அம்மா
தேவைகள் தீர்த்து வேண்டியவை நல்கும் அம்மணியே
பாரதியின் கூற்றுக்கிணங்கப் பார் போற்றிடும் பெண்மணியே
அதிகாரி என்றில்லாமல் அருகழைத்து விடைபகரும் அம்மணியே

சென்று வருவீரம்மா நீர் செல்லுமிடமெல்லாம்
மங்காப் புகழுடன் மகிமையும் பெற்றிட - தங்கள்
இல்லம் செழிப்புற இனியவை நிறைந்திட - நற்
சேவை துலங்கிட வாழ்த்தி விடை தருகின்றோம்.

## 26.10.2008இல் நடைபெற்ற
## கல்லூரிப் பரிசளிப்பு விழாவில்
## பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்ப்பாண
## வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
## அவர்களை வாழ்த்தி கல்லூரிச் சமூகம் பாடி உவந்தளிக்கும்
## வாழ்த்துப் பாமாலை

அறிவுக் கண்ணது அகிலத்தில் தழைக்கவே
ஆலயம் போலவே கல்லூரி அமையுமே
நன்னறி வென்றும் தரணிக்கு உதவவே
தங்கத்தாயாய் அருளேஸ்வரி தோன்றினாள்.
அடிப்படைக் கல்வியில் அனைவரும் உயரவே
அச்சு ஒளி வீசும் அன்னையும் ஆகினார்
நெருக்குதல் இன்றி நேர்ப்பணி தொடர
நிதர்சனமாக நேர்வழி காட்டினார்.

காலம் அறிந்து கடமைகள் செய்தார்
ஞாலம் உயர நற்பணி ஆற்றினார்
மாணவர் எம்மைத் தம் மக்களாக்கி
கல்வி உலகிற்குக் கலங்கரை ஆக்கினார் .

பொறுமைகளோடு பெருமைகள் காத்து
புன்சிரிப்போடு பூமியை மாற்றினார்
வெற்றிக்கு வழியை வேர்களம் ஆக்கி
விந்தை உலகை வீறுடன் ஏற்றினார்.

**யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி,**
**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள்.**

# வாழ்க நீடூழி

மழலைகளின் மொழி கேட்டு
மனதால் மயக்கம் கொண்டு
மேன் மேலும் அதை வளர்த்து
மாகாண மட்டத்தில்
மணம் வீசும் மலராகி
முன்பள்ளித் தோட்டத்திற்கு
புத்துணர்வைக் கொடுக்கும் எங்கள்
மாண்புமிகு அம்மாவே!

உங்கள் அன்பு ததும்பும் அணுகுமுறையும்
அறிவூறும் செயற்பாடும் கண்டு - எங்கள்
நெஞ்சமே வியக்குதம்மா ! அரும்பாக
இருந்த நாங்கள் நீங்களிட்ட அறிவுரத்தால்
புத்தம் புது மலர்களாக மலர்ந்துபோய் நிற்கின்றோம்.

நாளைய விருட்சமாகும் இன்றைய
வித்துக்களை நல்முறையில் விதைப்பதற்கு
நாங்கள் நிலமாவோம் என உறுதி பூண்டு
முன்பள்ளி எழுகின்ற திசையெங்கும் - நீங்கள்
ஆதவன்போல் ஒளி வீசி
அறிவருளை அள்ளி வழங்க
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரமாண்டு
நீங்கள் வாழ்க நீடூழி!

வவுனியாப் பிரதேச முன்பள்ளி
ஆசிரியர்கள் - 2

# அனுபவக் கடல்

அவைத் தலைவர் அவர்களே
பிரியாவிடை பெற வந்திருக்கும்
எங்கள் பிரியமுள்ள அம்மாவே
அவர்தம் அருந்துணைவரே,
எம் பிரியமுள்ள உப அதிபரே,
ஆசிரிய சகோதர, சகோதரிகளே,
அனைவருக்கும் வந்தனங்கள், வணக்கங்கள்.

கல்வி உலகிலே
கலங்கரை விளக்காய்,
அருளின் ஈஸ்வரியாய் அருளாட்சி
செய்கின்ற எம் அன்னையே,

மனிதத் தன்மை மரணித்துக்
கொண்டிருக்கும் இந்நாளில்
மனிதத்தின் இருப்பிடமாய், மங்காது
ஒளிபரப்பும் மாண்புமிகு அன்னையே

அறிவுக் கடல் என்று அனைவரும் சொன்னாலும்
அனுபவக் கடல் என்றே சிந்தனை சொல்கிறது
தங்களை அறிவுக் கடல் என்பதா?
அனுபவக் கடல் என்பதா?

ஏழைந்து ஆண்டுகளாய்
தத்தெடுத்த அனுபவங்கள்
தென்மராட்சி வலயத்திற்
சுடர் விட நாம் கண்டோம்

தொய்வுகள் கண்டு உடன்
பௌவியமாய் சீர்செய்யும்
பண்பினைக் கண்டு பெருமிதம் நாம் அடைந்தோம்
அதிகாரக் கண்டிப்பு அன்பான அரவணைப்பு

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை / அச்சமென்பதில்லையே"
பாரதியின் குரல் ஒலிக்கிறதே காதுகளில்
அஞ்சாமை தங்களிடம் மண்டியிட்டுக் கொண்டதுவோ?

கற்றலுக்குக் காலம், நேரம் தடையல்ல
போர்க்காலச் சூழல் என்ற
பொய்ச்சாட்டும் தேவையில்லை
சுயகற்றற் கையேடு பறைசாற்றும்

என்றென்றும் தங்கள் பணியை
பாலர் கல்வி முதல் பதின்மூன்றாம் தரக்
கல்விவரை எல்லாத் தரத்தினருக்கும்
ஏற்ற கல்வி முயற்சி

அத்திவாரம் பலமானாற் கட்டடம் உறுதி பெறும்
அத்திவாரம் அச்சுக்கல் சரியாக அடுக்காவிடில்
கட்டடம் ஆட்டம் கண்டு விடும்
தத்துவம் பொய்ப்பதில்லை
சரித்திரம் கண்ட உண்மை.

அத்திவாரம் உறுதியாக அரிய பணி
ஆற்றியமை எல்லோர்க்கும் இதமளிக்கும்
எல்லாக் குழந்தைகளும் எனது குழந்தை
என்ற பக்குவம் யார்க்கு வரும்?

தன்னலமற்ற தாய் உள்ளம் நாம் கண்டோம்
பஸ்சுக்காய் கால்கடுக்கக் காத்திருக்கும்
எம்மவரைக் கருணையுடன ஏற்றி வரும்
காலத்தை மறப்போமா?

"கல்வியைக் கண்டால் கையை நீட்ட வேண்டும்"
காதுக்குள் என்றும் தேனாக இனிக்கிறதே.
அன்பான துணைவருடன் அருமைக் குழந்தைகளுடன்
இசைபாடி வாழ எந்நாளும் இன்புற்று வாழ
இறைபதம் வேண்டி விடை பெறுகின்றேன்.

நனறி.

திருமதி இ. ஜீவேந்திரா
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
19.03.2008

## தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்கள் நடாத்திய பிரிவுபசார விழாவின்போது

# வாழ்த்தி வழங்கிய பாராட்டுப் பாமாலை

வேதத்திற்கே தலைவனாம் வேதநாயகனெனும்
நாமம் கொண்டானைத் தனது நாயகனாய்க் கொண்ட
தாயே அருளீஸ்வரி தாழ் பணிந்தோமம்மா
தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர் நாம்

எடுப்பார் கைப்பிள்ளைகள் நாங்கள் என்று
ஏங்கியிருந்த வேளை ஏந்தினீர் எம்மை
தூக்கம் மறந்து எமக்காய் விளையாட்டல்லா விளையாட்டுத்
துடிப்புடனே எமக்களித்தீர் விளையாட்டளவிலே

நாம்பெற்ற இன்பம் இவ்வையகம் பெற்றிட வேண்டுமென்று
யாழ்வலயம் சென்றதைப் பெருமையாய் எண்ணுகின்றோம்
சிறப்பான பணியைச் செய்திட வேண்டுமென
இறையாசி வேண்டுகின்றோம் தங்கள் பணி சிறக்க !

எத்தனை பலமுள்ள கட்டடங்கள் ஜொலிப்பது
மண்ணின் கீழ் மறைந்துள்ள அத்திவாரங்களிற்றான் என்று
எவருமே சிந்திக்காத விதமாய்
வித்தியாசமாய்ச் சிந்தித்த எம் அம்மாவே.

நாம் கண்டவர்களிலே நீங்கள் வித்தியாசமானவர்
பூவைப் பார்த்து இரசிப்பவர்கள் மத்தியில் நீங்கள்
வேரிற்கு நீரூற்றியவர் என்பதால்
நாம் பாக்கியம் பெற்றவர் தான் கடந்த நாட்கள்

எம்வலயம் உம்மைப் பிரிந்திடும் வேளையில்
எம் கண்வழியே கண்ணீர் வடிய ஆனந்த நிழற் படத்துடன்
உங்கள் பெருமைதனை நாளிதளில்
தினம் தினம் பார்த்துப் பூரிக்கின்றோம் அம்மா.

தங்கள் உயர்வுதனில் நாமும் பெருமை கொண்டு
தங்களின் பணி சிறக்க இறையாசியையும் வேண்டி
முன்பள்ளி ஆசிரியர் சார்பாக வாழ்த்துகின்றோம்
தீர்க்காயுளுடன் வாழ்க அம்மா நீங்கள் என்றென்றும்.

உலக ஆசிரியர் தினம் 10.06.2009
திருமதி அ. வேதநாயகம் அவர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்
அவர்களுக்கு

## வாழ்த்துப்பா

தாயே நீ வாழ்க
ஏதுமற்ற ஏதிலியாய் ஏந்திநாம் நின்ற போது
உடையுடன் உபகரணம் உவந்தளித்த
தாயே நீ வாழ்க.

கிட்ட இருந்தோர் கூட எட்டி அணைக்கர்த வேளை
எட்ட இருந்தும் எம் நெஞ்சைத் தொட்டணைத்த
தாயே நீ வாழ்க.

அகதிகளாய் முகாம் வாழ்க்கை அனுபவித்த வேளை
அங்குவந்து அரவணைத்து ஆறுதல் தந்த
அன்னையே நீ வாழ்க.

சேவைக்கென்றே தேய்ந்து மணக்கும்
சந்தன மரமே நீ வாழ்க
கல்விப் பணிதனைக் கருத்துடன் ஆற்றும்
கற்பகத் தருவே நீ வாழ்க.

கற்பவர் நெஞ்சிற் கருணையும் திடமும் நிற்க
உழைப்பவர் நீ வாழ்க
வல்லான் இறையின் அருளும் ஆசியும்
எல்லாம் பெற்றிங்கு நீ வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க.

அன்புடன் வாழ்த்தி நிற்கும்
இராமாவில் நலன்புரி நிலையத்திலிருந்து
விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

# வேர்களை மறவாத வெற்றித் திருமகளை வாழ்த்துவோம் வாரீர்

நந்தாச் சுடர் விளக்காய்
நறு மணத்தின் புது மலராய் - மங்கா
புகழ் பரப்பி நிற்கும் புனித தெரேசாள்
உளம் மகிழ்கின்றது நும் வரவு கண்டு

ஈழத்திருநாட்டின் எத்திசையும் மணம் வீசும்
பார் போற்றும் யாழ் வலய நாயகியை
வேர்களை மறவாத வெற்றித் திருமகளை
கணிதமதை தேனில் குழைத்தளித்த வித்தகியை வாழ்த்துவோம்.

சாதனைக்கே தோள் தொட்டு நின்ற தென்றல்
கண்ணியம் கடமை கட்டுப்பாட்டினை என்றும்
கண்ணெனக் காத்திடும் பெண்ணின் பெருந்தகை
நல்வரவு கண்டு பூரித்தோம் இன்று.

மானிட விழுமியத்தை மலர வைக்கும் எம்
கல்லூரி மெய்வன்மைப் போட்டிதனைச் சிறப்பிக்க
நேயமுடன் வந்திட்ட யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர்
தம்பதியரை வாழ்த்துவோம்! வாழ்க பல்லாண்டு!

**யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**
அச்சுவேலி.
18.02.2010.

# பட்டதுயர்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியோரும்
உதட்டளவிற் சிரித்து உள்ளத்துட் குமைந்தோரும்
உருக்குலைக்க நினைத்து ஊர்கூட்ட முயன்றோரும்
உள்ளத்தோடு உடல்கறுத்துத் தலைகுனிய
உண்மைக்காய் உறுதியுடன் உழைத்த நாட்களையும்

நெஞ்சமற்ற நீசரின் செயல் கண்டு
அஞ்சி ஒதுங்காது அறவழியிற் சென்று
கொஞ்சமும் மதிக்காத கஞ்சருக்கும் நெஞ்சில்
தஞ்சம் கொடுத்துத் தர்மத்தைத் தலைநிறுத்தி
துஞ்சாது நாளும் பணிசெய்த நாட்களையும்

கொடுத்த பொறுப்புக்களை எடுத்தெறிந்து நடந்தோரை
மனதிலிருந்து பழிவாங்க நினைக்காது
வெடுக்கென்று பேசி வீண் பொழுது கழித்தோரை
சினந்து வெறுத்துவிலக்கி ஒதுக்காது
அடுத்தணைத்து நடந்து பணி செய்த நாட்களையும்

உதயத்தில் வலயத்திற் பணிக்காக வந்தமர்ந்து
ஊழியர்கள் தங்கள் பணி முடிந்து சென்ற பின்னும்
இரவுவரை விழித்திருந்து கடமைகள் நிறைவேற்றி
இழைத்துக் களைத்து இடருற்று மயங்கி
இரு கண்ணும் குளமாகி அழுத நாட்களையும்

கடமை தவறின் கண்டித்துப் பேசி
கண்ணியம் குன்றின் கடுமையாய் நடந்து
அடுத்த கணமே அன்பினைச் சொரிந்து
எடுத்த கருமத்தை வெற்றியாய் முடித்து
பெருமையிற் பூரித்து மகிழ்ந்த நாட்களையும்

நெஞ்சிலே சுமக்கிறோம்
செய்திட்ட பணியில் நிறைவினைச் சுமந்து
எய்திட்ட வீண்பழியில் வெந்து நொந்தழுது
விட்டுப்பிரிய முடிவெடுத்து விட்டீர்கள்
மட்டிலாப் புகழோடு எங்கும் வாழ்வீர்கள்
பட்டதுயர் உங்கள் பாதைக்கு ஒளியூட்டும்.

திரு. ந. விஜயரெட்ணம், உ. க.ப.
வலயக் கல்விப் பணிமனை

சரசாலை மத்தி, மயூரி அம்பாள் முன்பள்ளி
ஆசிரியர்கள், மழலைகள், பெற்றோர்கள்
திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் அவர்களுக்கு
மனமுவந்து அளிக்கும்

# பிரிவுபசார வாழ்த்து மடல்

பங்கயம் போற் பரிமளிக்கும் புன்னகை
பாசத்தைப் பாராட்டும் பாங்கு
பெண்மையே பெருமை பெற்றோம் - சாருமிறை
பேறரிய உம் கல்விப் பணியாற் பேருவகையுற்றோம்.

இரண்டாயிரத்தைந்து கார்த்திகை இருபத்தெட்டதனில்
இதமாக புது வசந்தம் வந்ததுபோல் வந்தீர்
இங்கிதமாய் தென்மராட்சி மண் மகிழ
அருளோடு ஈஸ்வரி எனும் நாமம் கொண்டு
அமுதக்கல்வி, கலை, உடல்வன்மை செழிப்புறவே
சேவைகள் பல செய்தீர் செப்புகின்றோம் நற்பணிதனையே.

முன்பள்ளிக்காய் மூலை முடுக்கெங்கும்
முடங்கியே கிடந்தோம் - நாம்
முளைதிறன் மிக்கோரை மகிழ்விக்கும்
எம்பணியிற் பெருமை எய்தப்படவில்லை
அறிவு சொல்ல அடியெடுத்து வைத்த எம்மாற்றல்
அங்கீகாரமின்றி அனாதையாய் நின்ற வேளை தனில்

எம் அருள் நிறை தாய் வந்தார்
அரவணைத்தே எமை எடுத்தார்
ஆதரித்தே எமைக் காத்தார்
கல்வி வலயமென்னும் குடையின் கீழ்
தொண்டு நிறுவனங்களின் தயவுடனே
பணி சிறக்கப் பாதையது அமைத்தே தந்தார்.

முன்பள்ளி ஒவ்வொன்றாய் முனைப்புடனே
தேடி வந்து தரிசித்து
தக்க தேவை தானறிந்து தயவுடனே தீர்த்து வைத்தீர்
எம் மழலையின் சிறு அசைவைக்கூட
ஆனந்தமாய் அனுபவமாய் அர்த்தமுள்ளதாய்
ஆக்கி வைத்தீர் ஆனபணிபலவும் செய்தீர்.

மெய்வன்மைப் போட்டிகளாய் மேன்மை நிறை
சித்திர ஆக்கப் போட்டிகளாய்
சிந்தை கவர் தமிழ்த்தினப் போட்டிகளாய்
கல்வி வலய மட்டத்தினிற் கருத்தாக நடாத்தி
கணிப்புச் செய்த பெருமை கவினுறு
அன்னையே கனவு நிறை அம்மாவே
உம்மையே சாரும், சாரும்.

பெற்றோரும் விழிப்புணர்வு பெற்றாற்றான்
கல்வி உயர்வு கைகூடும் கருத்துடனே எம்
கருத்தரங்கு ஒவ்வொன்றும் செயற்றிறன் நிறைந்ததாய்
ஆக்கிடவே அரும் பாடுபட்டு நீருழைத்தீர்
கல்விப் பணியதனில் வெற்றியும் பெற வைத்தீர் - நீர்
உள்ளம் உவக்கின்ற சேவைதனில் நிறைந்து
பல்லாண்டு வாழ்க ! வாழ்க !

**ஆசிரியர்கள், மழலைகள், பெற்றோர்கள்.**

தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளராகக்
கடமையாற்றி யாழ். வலயம் செல்லும்
திருமதி அ. வேதநாயகம் அவர்களுக்கு
தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் சங்கம் வழங்கும்

## வாழ்த்துப்பா

முன்பள்ளிகள் மிளிர்ந்திட முன்னின்று உழைத்தவரே!
எம் பெருந்தாயே அருளீஸ்வரி அம்மையாரே!
முன்னணியில் எம் மண் மிளிர மகிழ்ந்தீரே
மொட்டுக்கள் மலராய் மலர மொழியோடு
கணித அறிவூட்ட வழிகாட்டிய அம்மையாரே!
கலைத்தேவியின் தோன்றலே காலமெல்லாம் வாழ்த்துகின்றோம்
தென்மராட்சிக் கல்வியில் தெம்மாங்கு பாடிடவே
தென்றலாய் நின்ற தேவியாரே!
தென்மராட்சி தரும் பிரியாவிடையிது...

மழலைகள் மனங்களில் மறுவிலா இடம்பிடித்தவரே
மாசிலா மணியே! மனமுவந்து வாழ்த்துகின்றோம்
மலரும் பணியதை யாழ். மண்ணில் தொடர்ந்திடவே
மகிழ்வுடனே வாழ்த்துகின்றோம்...
அம்மா என நாமமழைத்தால் அருகில் வந்து
அறிவூட்டி அன்பு வழிகாட்டிய அன்னையாரே
அகிலம் உம்மைப் போற்றிடும் வேளை
அகமார வாழ்த்துகின்றோம்
சேவையது செய்தே மழலைச் செல்வங்கள் வாழ
வழி செய்தவரே வந்தனங்கள் கூறுகின்றோம்
வாழ்க பல்லாண்டு! வளர்கநும் சேவை!
வாழ்க பல்லாண்டு! வளர்கநும் சேவை!

வாழ்த்தி வழங்கும்
தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் சங்கம்.
2008.03.21

# ஒருநிமிடம் பிந்தமாட்டீர்...

போரினாற் பொசுங்கிப்போன
கல்வியின் நிலையை மாற்றி
கடந்த இரண்டே கால் வருடங்களாய்
தென்மராட்சி மண் மகிழ
சாதனைகள் பலவும் ஈட்டி
தூயதாம் கல்விப் பணிகள் செய்தீர் - அம்மா.

கல்விதான் எம்மிரு கண்களென
கருதியே ஒளியைத் தந்தீர்
காலத்தால் நற் பணிகள் செய்தீர்
நவில்கின்றோம் நன்றி தனையே.

சின்னஞ்சிறு கூரையின் கீழ்
இயங்குமெம் முன்பள்ளி
தம் நிலைதனை மாற்றி வைத்தே
பாலர் கனவுக் கூடங்களாய்
மழலைக் காட்சி அகங்களாக
மாற்றியே பணிகள் செய்தீர்.

ஊஞ்சல் இராட்டினத்துடன்
மழலையர் மனம் மகிழ
விளையாட்டுப் பூங்காக்கள்
வினைத்திறனாய் அமைக்கச் செய்தீர்

முன்பள்ளிகள் கூடி நாமே
விளையாட்டுபகரணங்கள் பலவும்
ஒரே நாளில் வண்ணமாய் செய்துமுடிக்க
திட்டந்தனைத் தீட்டித் தந்து
எங்கும் நேரடி முகாமை செய்து வெற்றியாய்
முடித்தீர் விளையாட்டு செயற்றிட்டந்தனையே.

எம் முன்பள்ளி ஒவ்வொன்றின்
விளையாட்டு நிகழ்வுகட்கும் - விருந்தினராய்
அழைத்தால் மறுப்பேதும் இன்றி
திடமாய் வந்து நிற்பீர்
ஓர் நிமிடம்கூட பிந்தமாட்டீர்
காலம் நேரம், கடமை கண்ணாகக் காத்து நின்றீர்

முன்பள்ளி மழலையர் எம்முடன்
மழலையாக நீர் பகிர்ந்திட்ட மகிழ்ந்திட்ட
நாட்கள் அதிகம் தான்
அந்த அன்பு அலாதியானது அற்புதமானது
எம் கல்விப் பாதைதனில் அந்த அன்பு
கூட வரும் வழிகாட்டி வரும்.

ஆன பணி பலவும் செய்து
யாழ் வலயம் செல்லும்
அன்னை நீர் உயர் பணி செய்து
உவப்புடன் வாழ்க வாழ்க.

வி.ஜெயகௌரி,
மயூரி அம்பாள் முன்பள்ளி.

# சேவை வெளியீடு


SCIENCE MATHS QUIZ COMPE
VENUE : T/ ST.JOSEPH CO
TRINCOMALEE.
: 23-08-2004
2006~2007


உலக
வீரசிங்கம் மகா

# பகுதி – 3

## திருமதி
## அருளேஸ்வரி வேதநாயகம்
## அவர்களின் சாதனைகள்....



| | | |
|---|---|---|
| Name | : Mrs.Aruleswary Vedanayagam | |
| Address | : 30/3 Athiyady, Jaffna. | |
| Qualification | : M.A (Pub. Administration) | |
| Service Particulars | : | |
| | J/St.Theresa's Girls School | 01.10.1971 - 20.01.1972 |
| | J/Palaly Teachers College | 21.01.1972 - 31.12.1973 |
| | N/St.John's Bosco's Vid Hatton | 01.02.1974 - 15.01.1978 |
| | N/St.Galriels B.M.V. Hatton | 01.02.1974 - 15.01.1978 |
| | J/Avarangal N.R.V | 16.01.1978 - 29.02.1986 |
| | J/Avarangal Mahayana | 01.03.1986 - 30.11.1990 |
| | Kopay In service Adviser | 01.09.1985 - 30.11.1990 |
| | ADE, Jaffna - (SLEAS - III) | 01.12.1990 - 31.12.1993 |
| | ADE Jaffna Zone - II | 01.01.1994 - 14.04.1996 |
| | Thunukkai DEO Mullaitivu (SLEAS Class - II) | 15.04.1996 - 30.09.1998 |
| | Thunukkai ZDE | 01.10.1998 - 13.04.2000 |
| | Ministry of Education NEP (Development DDE) | 14.04.2000 - 25.01.2003 |
| | Provincial Dept of Edu. (in-charge Development of Education) | 26.01.2003 - 28.11.2005 |
| | ZDE, Thenmaradchy | 29.11.2005 - 10.03.2008 |
| | Jaffna, ZDE | 10.03.2008 - 02.06.2011 |

# வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் மாண்புறு சேவை

"ஒருவரது உண்மையான குணம் அவருக்கு அதிகாரம் வந்த பிறகுதான் வெட்ட வெளிச்ச மாகும்."

- பிட்டாகாஸ்

**அறிமுகம்**

அறிஞர் சுகிசிவம் அவர்களது "வெற்றி நிச்சயம்" என்ற புத்தகத்தைக் கடந்த ஓரிரு வருடங்களுக்குள் என்றோ ஒரு நாள் வாசிப்பதற்கு நேரம் கிடைத்தது. அப்புத்த கத்திற் சுகிசிவம் அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது எனது நினைவில் ஆழமாகப் பதியப்பட்டு விட்டது.

"மனிதர்களில் மூன்று வகையினர் உண்டு. எல்லோரும் செய்வதையே தானும் செய்து செத்துப் போகின்றவர்கள் ஒரு வகையினர். எவரும் செய்ய முன்வராதவற் றைத் தான் செய்துமுடித்து வாழ்ந்து காட்டுபவர்கள் இன்னுமொரு வகையினர். எவரும் செய்ய முடியாதவற்றை தான் செய்ய முற்பட்டு மரணத்தைத் தழுவுபவர்கள் மூன்றா வது வகையினர்." என்றவாறு சுகி, சிவம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அவரது இக் கருத்து என்னைத் தொடர்ந்து சில நாட்கள் சிந்திக்க வைத்தது. இக்கருத்துக்களுக்கு உதார ணங்களைத் தேடிப்பார்க்கத் தூண்டியது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களது முகாமைத்துவத்தின்கீழ், தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண் டிருந்த காலம் அது. பிள்ளைநேயப் பாட சாலை என்ற எண்ணக்கருவை மையப்படுத்தி, எமது வலயப்பாடசாலைகளுக்குப் புத்து ணர்ச்சி ஊட்டும் செயற்பாடுகளில், கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் அம்மா அவர்கள் இரவு பகல் பாராது ஈடுபட்டுக்கொண்டிருந்த நாட்கள் அவை. அச்செயற்பாடுகளின்போது அவரது செயற்றிறன்மிக்க சேவையைப் பற்றி, பன்முகத்தன்மை வாய்ந்த ஆளுமையைப் பற்றி வலய ஆசிரியர்கள், அதிபர்கள், சககல்வி அதிகாரிகள் வாழ்த்தி நின்ற வேளையில் தான், சுகி சிவம் அவர்கள் குறிப்பிட்ட எவரும் செய்ய முன்வராதவற்றை, தான் செய்து வாழ்ந்து காட்டும் மனிதர்களுக்கு உதார ணத்தை என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. இதுவே பின்நாளில் இவரது சேவை தொடர் பான, சற்று ஆழமான தேடுதலைச் செய்து, வரலாற்றுப் பதிவுகளை முடிந்தளவு ஆவணப் படுத்துவதற்கான விருப்பினை என்னுள் தோற்றுவித்தது.

எனது தாய்மண் திருகோணமலை. எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளராகச் சேவை புரிய வருவதற்கு முன்னர், அன்றைய வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிலே, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, சுமார் ஐந்து வருட காலம் சேவையாற்றி இருந்தார்கள். வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் திருகோணமலை உவர் மலையில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டிருந்தது. அதாவது எனது தாய் மண்ணில் அது தனது தலைமை அலுவலகத் தைக் கொண்டிருந்தது. எனவே, எனது தாய் மண்ணில் இருந்தபடி திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் கல்விப் பணிக்கு

ஆற்றிய சேவையினைப் பற்றிய தேடுதலைச் செய்து ஆவணப்படுத்துவது எனக்கு மகிழ் வினைத் தரும் என்ற எண்ணத்தில் உழைத்த எனது சிலநாட் பணியின் பெறுபேறே இந்த ஆவணமாகும்.

இது ஒரு முழுமையான ஆவணம் என என்னால் ஒருபோதும் கூறமுடியாது. ஏனெனில், இதனை எழுதுவதற்கு நான் முயன்றபோது, எழுத்துவடிவில் எனக்குக் கிடைத்த சான்றுகளையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் பணி புரிந்த, பணி புரிந்துகொண்டிருக்கின்ற, அதிபர், ஆசிரியர்களுடன் நான் தொலைபேசி யூடாகவும், நேரடி உரையாடலுக்கூடாகவும் பெற்றுக்கொண்ட தகவல்கள் அனுபவக் கருத்துக்களையும் உள்ளெடுத்தே இவ் ஆவணத்தை நான் தயாரித்திருக்கின்றேன். எனினும், திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களது பன்முகப்பட்ட சேவையின் முழுமையான பரிமாணத்தையும் தேடிப் பெறுவதற்கு ஏற்ற வசதிகளோ, வாய்ப்புக் களோ என்னிடம் இல்லை. அதனால் எனது தாய் மண்ணில் இவர் ஆற்றிய சேவைகளின்



ஒரு சிறு பகுதியை மட்டுமே தேடி, திரட்டி இருக்கின்றேன் என்ற குற்ற உணர்வு என்னிடம் மிகையாகவே இருக்கின்றது.

**முன்னுதாரணங்கள் :**

Involment Makes You Important" என்று கூறுவார்கள். இதனையே தமிழில் "ஈடுபாடு ஆழமானால் மேம்பாடு விரைவில் உண்டு" என்று கூறுவதும் உண்டு. எமது வலயக் கல்விப்பணிப்பாளர் அம்மா அவர்களது செயற்பாடுகளுடன் இக்கருத்தைத் தொடர்புபடுத்தும்போது பெறும் விளக்கம் சற்று விரிவுபட்டதாக அமைந்து விடுகிறது. எந்த ஒரு அதிகாரியும் தனது சேவையின்மீது தன்னுடைய ஈடுபாட்டினை ஆழமாகவும் அகலமாகவும் காட்டினால்; சமூகத்திற்கான மேம்பாடு விரைவில் உண்டு என விளக்கம் பெறக்கூடியதாக வாழ்ந்துகாட்டிக்கொண் டிருப்பவராக; திருமதி அருளேஸ்வரி வேத நாயகம் அவர்கள் திகழ்கின்றார்கள். 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்திலும், கல்வி அமைச்சிலும் முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவிலும், கல்வி அபிவிருத்திப் பிரிவிலும், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக அவர்கள் ஆற்றிய பணிகளின் அறுவடைகள். இன்று இம் மாகாணங்களது வலயப்பாட சாலைகளிலும் முன்பள்ளிகளிலும் விளைவு களாக வெளிப்படுவதனை நாம் கண்டறிய முடிகிறது. 2000 ஏப்ரல் 14 தொடக்கம் 2005 நவம்பர் 28 வரையான இந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியிலும் ஒன்றிணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின், கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சேவை யாற்றிய திருமதி அ. வேதநாயகம் அவர்களது தன்னலமற்ற, கல்வி அபிவிருத்தி சம்பந்தமான சேவைகள் தொடர்பிற் கிடைத்த கருத்துக் களிற் பின்வரும் கூற்றுக்கள் எமது வேத நாயகம் அம்மா அவர்களது பணியினை மதிப் பிடும் அளவீடுகளாக அமைந்துவிடுகின்றன.

"தைரியத்துடன் செயற்படாதவர்களிடம் இருக்கும் அதிகாரமும் அறிவும் எந்தப் பயனையும் தராது" என்றார். வால்டஸார் கிரேஸியன் என்ற அறிஞர். இந்த அறிஞரது கூற்றை நிரூபிக்கும் வகையில் எங்கள் மத்தியில் எத்தனையோ உயரதிகாரிகள் கதிரைகளை அலங்கரித்து வரும்போது விதிவிலக்காகச் செயற்படும் ஒரு சில அதிகாரிகளுள் எமது வேதநாயகம் அம்மாவும் ஒருவர். செய்ய முடியாதது; கஷ்டமானது என மற்றையவர்கள் ஓரம் கட்டிவிட்ட பல்வேறு விடயங்களை வெற்றிகரமாகச் செய்துகாட்டி, ஒரு புன்சிரிப் போடு "முயற்சி திருவினையாக்கும்" "இன்றே செய் ; நன்றே செய்" எனக் கூறியபடி அடுத்த செயலுக்காக அவர் அகலும்போது சோர்ந்து கிடந்த உள்ளங்கள்கூட, ஒருவித உத்வேகத்துடன் சிலிர்த்து எழுந்து சிறப்பாகப் பணியாற்றியதான பல உதாரணங்களை நாம் அனுபவித் திருக் கின்றோம்."

இது இறக்காமம் பகுதிப் பாடசாலைகளிற் பணிபுரிந்த ஆசிரியர்கள் பலரிடமும் இருந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்து வரிகள்.

"இன்று மாணவர் மத்தியில்; குறிப்பாக, எமது தமிழ் மொழிமூல மாணவர் மத்தியில் எழுத்தாக்கத்திறன் மிகவும் மந்தமாகக் காணப்படுகிறது. இந்நிலையை மாற்றியமைக்கப் பல்வேறுபட்ட காலப்பகுதியில், பல்வேறுபட்ட செயல் மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும், குறிப்பிடத்தக்களவு மாற்றம் எவையும் ஏற்படவில்லை. எனவே, இந்நிலையை மாற்ற தொடர்ந்தும் கல்வியியலாளர்களும், புத்திஜீவிகளும், செயற்பட வேண்டியுள்ளது......... இத் தேவைகளை இனம்காட்டி, மாணவர்களை எழுத்துருவாக்கங்களுக்கு வழிப்படுத்திய கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களுக்கும், எனது பாராட்டுக்கள்.

இது 2002ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக இருந்த உயர்திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களது பாராட்டு வரிகள்.

திருமதி. அ. வேதநாயகம்
பிரதிக் கல்பிப் பணிப்பாளர்
ஆரம்பக் கல்வித் துறை
மாகாணக் கல்வி அமைச்சு

அம்மா,

**ஆரம்பக் கல்வி கற்றல் உபகரணப் பயன்பாடுகள்.**

தங்களது வழிகாட்டுதலின் கீழ், நாடாத்தப்பட்ட மேற்படி செயலமர்வு மிகவும் பயனுடையதாக இருந்தது. இவ்வாறான உபகரணங்களின் உச்சப் பயன்பாட்டை அறிந்து கொண்டதில் மிகவும் மகிழ்வடைந்தோம். இவ்வகை அரிய உபகரணங்களைக் கையாள்வதற்கு நாம் நன்கு தேர்ச்சி பெற்றமைக்காக, எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இது நெடுங்கேணிப்பகுதிப் பாடசாலை ஒன்றின் ஆரம்ப பிரிவு ஆசிரியரான திரு. செ. செந்தில்நாதன் (வ/ஆயிலடி அ.த.க. பாடசாலை, நெடுங்கேணி) அவர்களது உணர்வின் வரிகள்.

இதுவரை எத்தனையோ அதிகாரிகள் மாகாண மட்டங்களில் இருந்து எமது வலயங்களுக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள், விசாரணைகள், பாடசாலைத் தரிசிப்பு, மேற்பார்வை ஆகிய செயல்களைத்தான்

செய்துள்ளனர். மாணவர்களது கல்வி அபிவிருத்தியிலே விசுவாசமான அக்கறை கொண்டு எமது வலயத்துக்குச் சமுகமளித்து, முழுநேரமும் எம்முடன் இருந்து மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எங்களைச் சிந்திக்கவைத்து அவற்றிற்குத் தீர்வுகாணும் வழிவகைகளைக் கண்டறியும் உணர்வுபூர்வமான செயற்பாட்டினை இன்று தான் நாம் அறிந்துகொண்டோம். கல்வி வரலாற்றில் புதியதோர் அத்தியாயமாக



இதனை நாம் கருதுகின்றோம். தங்கள் வழிகாட்டலில் எமது அர்ப்பணிப்புணர் வுடனான சேவையினை வழங்க நாம் தயாராகி விட்டோம்.

இது சம்மாந்துறை கல்வி வலய அதிபர், ஆசிரியர்களால் 30.04.2004இல் எமது கல்விப் பணிப்பாளர் அம்மா அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதி வரிகள்.

இந்த ஆக்கத்திற்கான தேடுதல்களில் நான் ஈடுபட்ட பொழுது கிடைத்த மேற்படி கருத்து வரிகளே எமது கல்விப் பணிப்பாளர் அவர்களது குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய சேவைகள் பற்றி, பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராயத் தூண்டியது எனலாம்.

1. மாணவர்களை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்.
2. கல்விசார் சேவையாளரை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்.
3. பாடசாலைகளிற் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டிற்கு அவசியமான வளங்களை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்.
4. பெற்றோரை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்.

**1. மாணவர்களை மையப்படுத்திய கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள்**

எமது கல்விப் பணிப்பாளர் அம்மா அவர்களது சேவையில் மிகப்பெரியபங்கு சேவையானது நேரடியாகவே மாணவர்களது கல்வி மேம்பாட்டை மையப்படுத்தியதாகத் தான் இருந்துள்ளது. கற்றலில் எங்கெங்கு எந்தெந்தப் பிரிவுகளில் மாணவர்கள் நலிவடைந்திருப்பது அவதானிக்கப்படுகிறதோ, உடனடியாகவே அந்தந்த மாணவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அம் மாணவர்களைத் தூக்கிவிடும் விதத்திலேயே இவரது கடமையின் பெரும்பங்கு அமைந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இவரது இந்தவகையிலான செயற்பாடுகள், பாடசாலை மாணவர்கள் என்ற எல்லையையும் கடந்து, முன்பள்ளிப் பிள்ளைகள்வரை சென்றடைந்தமைதான் வியப்புக்குரியதாயுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளது தரவுகளைச் சேகரித்து, பதிவுசெய்து, ஆவணப்படுத்தி, பலம், பலவீனங்களை அடையாளம் கண்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்காக உழைத்த இவரது உழைப்பின் பயன், இன்று எமது பகுதி முன்பள்ளிகளிலும், அங்கு சேவையிலுள்ள ஆசிரியர்களிடத்திலும் ஆணி வேரைப்போல உறுதியாகப் பதியப் பட்டிருக்கின்றது.

விளைவுகள் வெளிப்பட்டு நிற்கின்றது. இவரது சேவைக்காலத்தின் முதல் மூன்று வருட காலப்பகுதிக்குள்ளேயே வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து 2932 முன்பள்ளிகள் ஆய்வு நிலைக்கு உட்பட்டிருப்பது என்பது ஒரு சாதாரண சாதனை அல்ல.

முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பான சேவைகள் ஒருபக்கம் நடைபெற, இன்னு மொரு பக்கத்திற் பாடசாலைகளிலே சிறுவர் முற்றம் அமைத்தல், சிறுவர் ஆக்கத்திறனைத் தூண்டும் கதைப்புத்தகங்கள் தயாரித்து வெளியிடல், ஆரம்பக்கல்வி மாணவர் களுக்கான ஆங்கிலச் செயற்பாட்டு நூல்களை வெளியிடல், சிங்கள மொழிமூல மாணவர் களுக்கெனத் துணைநூல்களாக, பாடப் புத்த கங்கள், சித்திரக் கதைப்புத்தகங்கள் போன்ற வற்றை வெளியிடல், முதன்மை நிலை இரண்டு, முதன்மை நிலை மூன்று மாணவர் களை மையப்படுத்தி எழுத்தாக்கத்திறன் பயிற்சிக்கான பயிற்சி நூல்களை வெளியிடல், சிறுவர்களுக்கான கணித உபகரணங்களை வடிவமைத்தலும், உருவாக்கி வழங்குதலும், சுற்றாடல்சார் செயற்பாடுகளுக்கு உதவக் கூடிய செயல்நூல்களை வெளியிடல், இழந்த கல்வியைப் பெறும்வகையில் மீண்டும் கற்போம் என்ற தலைப்புடன் கணிதம், தமிழ் ஆகிய செயல்நூல்களை வெளியிடல், புன்சிரிப்பு என்ற செய்திமடல் ஒன்றினை மாதாந்தம் வெளியிடல், பாடசாலை களிடையே குடும்ப மட்ட விழாக்களை நடாத்த ஊக்குவித்தல், மாணவர் சிந்தனை யைத் தூண்டக் கூடியதான விஞ்ஞான செயல் நூலினை அச்சிட்டுப் பாடசாலைகளுக்கு வழங்குதல், கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான விஷேட செயற்றிட் டங்களை க.பொ.த. சாதாரணதர மாணவர் களை மையப்படுத்தி, வலயப்பாடசாலைகள் மட்டத்தில் நிறைவேற்றுதல் என நீண்டு செல்லும் இவரது சேவைகளினால், இவரது சேவைக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த அனைத்து இன மாணவர் களுமே மிகச் சிறந்த பயனை அனுபவித்துள் ளனர். விளைவுகளை அறுவடையாகத் தந்துள்ளனர் என்பது ஆதாரங்களுக்கூடாக அறியக்கிடக்கின்றது.




வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களக் கல்வி அபிவிருத்தி அலகானது, மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக் கைகளில் உள்ள நலிவுகளை இனம்கண்டு பல்வேறு விஷேட செயற்பாடுகளைத் திட்ட மிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. .......

..... அந்தச் செயற்பாடுகளின் தொடர்ச் சியாக, இன்னுமொரு வெளிப்பாடாக அமைவதே சுற்றாடற் கல்விசார் செயன் முறை வழிகாட்டி என்னும் இந்த நூலாகும். இந்நூலில் ஒவ்வொரு குறிக்கோளுக்கும் வழங்கப்பட்டிருக்கும் விளக்கங்கள், படங் களைப் பார்க்கும்போது மாணவர்கள் தாமாகவே பொருட்களை எடுத்துச் செயற் பாடுகளில் ஈடுபட்டு அனுபவம் பெறும் வகையில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.........

.... எனவே இவ்வாறான தேவைகளை இனம்கண்டு வழிகாட்டல் செய்து, நூல்களை ஆக்கி வெளியிடத் தூண்டி நிற்கும் திருமதி அ. வேதநாயகம் (பி.க.ப.) அவர்களைப் பாராட்டுகின்றேன்.

எஸ். மகாலிங்கம்,
மாகபணக்கல்விப் பணிப்பாளர்,
வடக்கு, கிழக்கு மாகாணம்.

கற்றல் என்பது ஒரு மனிதனின் பிறப்புடன் ஆரம்பமாகும் உயிர்த்துடிப்புள்ள ஒரு செயற்பாடாகும். (Vital Activity) தாயின் கருவறையில் ஆரம்பிக்கும் கற்றற் செயற்பாடு பின்னர் படிப்படியாகக் குடும்பம், சமூகம், நாடு என்று பெரிய வட்டமாக நீண்டு செல்கின்றது. இயல்பாகவே ஆற்றல் நிறைந்த குழந்தைகளுக்கு, வெவ்வேறு படிநிலைகளில் செயற்பாடு சார்ந்த அறிவை வழங்குவதன் மூலமும், தொடர் பயிற்சிகள் மூலமும், தான் சார்ந்து வாழும் சூழலை அறிந்து கொள்ள வைக்க முடியும். ......... இவ்வாறான செயற்பாடுகளைப் படிமுறையாக ஒழுங்கு படுத்தி, வழிகாட்டிகளினூடாக வடிமைத்துக் கொடுப்பதில் ஆற்றல் மிக்க கல்வி அபிவி ருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப் பாளரும், அவரது குழுவினரும் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது........

..... இது போன்ற முயற்சிகளில் முன் னின்று உழைத்துவரும் கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப் பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களது அயராத உழைப்பே இவ் வெற்றிக்குக் காரணமாகும்.

ஆர். தியாகலிங்கம்
செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத் துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

........... க.பொ. த. சாதாரண பரீட்சை 2004 முடிவுகளை கோட்ட ரீதியாக அவதானிக்கும் பொழுது எல்லாக் கோட்டங்களிலுமே கணித பாடத்துக்கான சித்தி வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக, அட்டாளைச் சேனைக் கோட்டத்தில் 21% அதிகரிப்புக் காணப்படுகின்றது. வலய மட்ட சித்தி வீதமானது. தேசிய மட்டத்திலும் 10 % கூடுதலாக உள்ளது. இவ் அதிகரிப்புக்கு வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக் களத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் அனுசரணை, வழிகாட்டல்களுடன் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிதபாட விஷேட செயற்திட்டம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

யு.எல். முகம்மது ஹாசிம்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
அக்கரைப்பற்று -(05.05.2005)

........ மனித உன்னத நிலையை நோக்கியதான கல்வி மேம்பாட்டை நோக்கி நீங்கள் எங்களை வழி நடாத்திய அந்தப் பசுமையான பொற்காலத்தை எமது வித்தியாலயச் சமூகம் ஒரு போதும் மறந்துவிடமாட்டாது..... "தைரியத்துடன் செயற்படாதவர்களிடம் இருக்கும் அறிவும், அதிகாரமும் எந்தப் பலனையும் தராது." என்றார் வால்டஸார் கிறேசியன் என்ற அறிஞர். இவரது இந்தக் கூற்றை மெய்ப்பிப்பதுபோல தற்துணிவு கொண்டு செயற்பட்ட உங்களது முகாமைத் துவ ஆற்றல் காரணமாக மாணவர்களும், ஆசிரியர்களும் தத்தமது செயற்பாடுகளில் ஒரு பாய்ச்சலையே காட்டி நின்றமை வரலா றாகும்.

திருமதி வ. மேகலிங்கம்
அதிபர், யா/ நாவற்குழி ம.வி.

**2. கல்விசார் சேவையாளரை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்:**

எமது கல்விப் பணிப்பாளர் அவர்களது சேவைக்காலத்தில் மாணவர்களை மையப் படுத்திய சேவைகளுக்கு அடுத்த நிலையில் உயர்வானதாக அமைந்திருப்பது கல்விசார் சேவையாளரை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகளாகும்.

ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப் பணிப்பா ளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டம் இவர்களுக்கும் அப்பால், விஞ் ஞான கூட உதவியாளர்கள் என ஒவ்வொரு நிலைப் பணியாளர்களையும் அணுகி, அவர் கள் தமது தொழில்சார்ந்தும், தனிப்பட்ட வகையிலும் எதிர்கொள்ளும் பிரச்சினை களைக் கலந்துரையாடி அடையாளம் காணுவது இவரது தனித்துவம் மிக்க அணுகு முறையாகும். அவ்வாறு இனம் கண்டு கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள்,



திட்டமிடப்பட்ட வகையில் எட்டப்படடு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். தேவையானபோது தேவையான விடயங் களுக்கு செயற்பாட்டு ரீதியிலான செயல மர்வுகள் வடிவமைக்கப்பட்டு, நிறைவேற்றி முடிக்கப்படும். பின்னர் அவை மதிப்பீடு செய்யப்பட்டு, மீண்டும் ஒரு புதுச் சுற்றில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும். படிமுறைகளுக் கூடான இவரது இவ்வாறான செயற்பாடு, இதுகால வரையிலான நிர்வாக அதிகாரிகள் மட்டத்தில் காணக்கிடைக்காத ஒரு தனித்துவமான செயற்பாடாகவே எங்கள் ஆசிரியர் குழாத் தினால் வியப்புடன் நோக்கப்பட்டது.

ஆசிரியர் என்ற வரையறைக்குள் அரச பாடசாலை ஆசிரியர்களுக்கும் அப்பால், முன்பள்ளி ஆசிரியர்களையும் அணுகி, அவர்கள் தம் அர்ப்பணிப்புணர்வுடனான சேவைகளை மேலும் வினைத்திறனாக்கும் வண்ணம், அவர்களுக்கான பயிற்சிகளைத் திட்டமிட்டு வழங்கி, உயிர்த்துடிப்புள்ள சேவைகளை வழங்க தயார்படுத்தியது வேதநாயகம் அம்மா அவர்களது தனித்து வமான ஒரு பணியாகவே சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஒவ்வொரு வட்டத்துக்குமான வேலைத் திட்டங்களை, கால அட்டவணைப்படி முன்கூட்டியே வரைந்து, அதன்படி தமது வேலைகளை முன்னெடுக்கும் முகாமைத்து வப்பாங்கு இவரிடம் காணப்பட்ட ஒரு சிறப்புப் பண்பாகும். அதற்கும் அப்பால், ஒவ்வொரு வலய மட்டத்திற்குமான அபிவி ருத்தித் திட்டங்களை வலய மட்ட அதிகாரி களோடு இணைந்து திட்டமிட்டு அதனைப் புத்தக வடிவில் அமைத்துக் கொள்வது அத்திட்டங்களைச் செயற்படுத்தத் தேவை யான உதவிகளையும், ஆலோசனை களையும் அவர்கண்டு வழங்கி, அவர்களை ஊக்கப் படுத்தி நிற்பது வருட இறுதியில் வலய மட்டங்களிலான பணி நிறைவேற்று அறிக்கை களைக் கோரிப் பெற்றுக்கொள்வது, இறுதி யில் தனது பணியினை தானே மதிப்பிடும் ஒரு அறிக்கை தயாரித்து ஆய்வு செய்வது என்பது இவரது வித்தியாசமான செயற்பாடாக அமைந்திருந்தமை வியப்பானது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை அம்மாவினது சேவைக் காலத்தில் இயங்கிய ஏறக்குறைய 3000 வரையிலான முன்பள்ளிகளில் மிக அதிக அளவான முன்பள்ளிகள் அவ்வப்பகுதிச் சன சமூக நிலையங்களினாலேயே நிர்வகிக் கப்பட்டு வந்தன. எமது மாணவர்களது பரீட் சைப் பெறுபேறு வீழ்ச்சிக்கு முன்பள்ளி களுக்கும் பாரிய பங்கு உண்டு என்பதை ஏற்றக்கொண்டு, அங்கும் தனது கவனத்தைச் செலுத்திய கல்விப்பணிப்பாளர் அம்மா அவர்கள், தனது சேவைக் காலத்தில் முன் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி, அதனை நிர்வகித்து வந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர்களுக்கான செயலமர்வுகளைத் திட்டமிட்டுச் செயற் படுத்தியமையானது இவரது ஆளுமையின் இன்னுமொரு பரிமாணத்தைக் காட்டி நின்றது.

எம்மிற் பலரும் தாம் செய்யக்கூடிய, செய்யவேண்டிய பணிகளைச் செய்யச் சோம் பற்பட்டு விலகி நிற்பது எமது அனுபவம். அவ்வாறு விலகி நிற்பதை நியாயப்படுத்தச் சுற்று நிரூபங்களைத் தூக்கிக் காட்டுவர். "இந்தச் சுற்று நிரூபத்தின்படி இதற்குமேல் எதுவும் செய்யமுடியாது." இந்தச் சுற்று நிரூபத்தின் படி இதனை அப்படிச் செய்ய முடியாது" எனத் தாம் விளங்கிக்கொள்ளாத சுற்று நிரூபத்தைத் தூக்கிப் பிடித்து தமக்குரிய பணிகளைச் செய்யாது இருப்பது மட்டுமன்றி "இந்தச் சுற்று நிரூபத்தின்படி நீர் செய்தது தவறு" என மனிதாபிமானத்துடன் கடவு ளுக்கு பயந்து சேவை செய்யும் சேவை யாளர்களைக்கூட தட்டிப்பணிய வைத்து இன்பமடையும் அதிகாரிகளுக்கு மத்தியில் "இந்தச் சுற்று நிரூபத்திற் குறிப்பிடப் பட்டி ருக்கும் இந்தச் சொல் போதுமே நாம் இதனைச் செய்தவற்கு" எனத்துணிந்து இறங்கிச் சேவை செய்தவர் தான் எமது கல்விப்பணிப்பாளர் அவர்கள், சுற்று நிரூபங்களுக்குள் தனது சேவைகளுக்கான எல்லைகளைப் போட்டுக் கொள்வதைக் காட்டிலும், தனது சேவைகளின் விரிவுக்காகச் சுற்று நிரூபங்களைப் பயன்படுத்தியவர்தான் எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள். அதனால் தான் குறுகிய காலப்பகுதிக்குள் தமிழ், சிங்கள மொழிமூலக் கல்விசார் பணியாளர்களாலும், பிள்ளைகளாலும் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகளில் விரிவாக ஈடுபட்டு, விளைவுகளை அறுவடை செய்ய அவரால் முடிந்தது.

எமது பலம், பலவீனங்களை நாமே மதிப்பிடுவது என்பது எமக்கு முடியாத, விருப்பமற்ற ஒன்றாகவே இருந்து வருகிறது. அது மட்டுமன்றி, எமது பலவீனங்களை மற்றையவர்கள் சுட்டிக் காட்டும்போது, தாங்க முடியாதவர்களாக எழுந்து, கொந்த ளித்து, கூப்பாடு போட்டு, ஒரு சுனாமியையே ஏற்படுத்தி நிற்பதில் நாம் வல்லவர்களாக இருக்கின்றோம். இந்தச் சூழலுக்குள் இருந்துகொண்டு தான் எமது கல்விப்ப ணிப்பாளர் அவர்கள், யாருமே செய்யத் துணியாத ஒன்றைச் செய்து காட்டி எங்கள் எல்லாருக்கும் வழிகாட்டியாக நிற்கின் றார்கள். ஆம் மாணவர் கல்வி அபிவிருத்தியில் கல்வி அலுவலர்களின் இதுவரைகால பணி பற்றிய மதிப்பீடு ஒன்றைச் செய்து, கல்விப் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரும் எங்கெங்கே நிற்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எங்கெங்கே நிற்கவேண்டும்? அவர்களது இடத்துக்கு அவர்களை அழைத்துச்செல்ல, உயர் அதிகாரிகள் என்னஎன்ன உடனடியாகச் செய்யவேண்டும்? என்பது பற்றிய ஒரு

ஆய்வினைச் செய்து, எல்லோரையும் சிந்திக்கத்தூண்டியவர் இவரே ஆவார்.

கல்வி அபிவிருத்திப் பணியில் தனது நீண்டகால அனுபவத்தினூடாக வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளராகக் கடமை யாற்றும் திருமதி அ. வேதநாயகம் அவர்கள். நேரடியாக களத்திற்குச் சென்று "மாணவர் கல்வி அபிவிருத்தியிற் கல்வி அபிவிருத்தி அலுவலகங்களின் பணிபற்றிய மதிப்பீடு" ஒன்றினைச் சிறப்புற நிறைவேற்றி அறிக்கை யாகச் சமர்ப்பிப்பது மிகவும் பயனுடைய விடயமாகும். இது வெறும் மதிப்பீடாக மட்டும் அமையாது, மதிப்பீடு செய்யப்பட்ட பிரதேசங்களில் அலுவலர்களை உடனுக் குடன் இணைத்து, அதற்கான பரிகார நடவடிக்கைகளும் மேற்கொண்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.



மதிப்பீட்டுக்காகச் சென்ற இடங்களி லெல்லாம் அதிகார தோரணையிலன்றி, பண்பாக அலுவலர்களுடன் பழகி, சகல வலய அலுவலர்களினதும் நன்மதிப்பைப் பெற்று ள்ளார்.....

..... இத்தகைய ஒரு மதிப்பீடு அவசிய மானது எனச் சிந்தித்து, பொருத்தமான ஒரு அணியினைச் சேர்த்து, அர்ப்பணிப்புடன் சேவையை ஆற்றி, ஆக்கபூர்வமான அறிக்கை யைச் சமர்ப்பித்திருக்கும் திருமதி அ. வேத நாயகம் அவர்களையும், அவரோடு பணி செய்த அலுவலர்களையும் பாராட்டு கின்றேன்.

"முயல்க, நிறைவு செய்க"

திரு. இ. தியாலிங்கம், செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள் விவகார அமைச்சு,
வடக்கு, கிழக்கு மாகாணம் (2005)

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கீழுள்ள 24 கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் 700 க்கும் மேற்பட்ட பாட நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களின் பணிகள் பற்றிய ஆய்வானது ஒரு இலகுவான விடயமல்ல. அவ்வகையிலான ஒரு பணியினைச் செய்து முடித்து, 67 பக்கங்கள் கொண்ட ஒரு ஆய்வறிக்கையை புள்ளி விபரத் தகவல் களுடன் முன்வைத்தமை, வியப்பான ஒரு செயல் தான். இதனைச் செய்து முடித்தவர் எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள். கிழக்கிலே பொத்துவில் தொடங்கி, வடக் கிலே பொலிகண்டி ஈறாக இவரது பாதங்கள் பதியாத ஊர்களே இல்லை எனக் கூறு மளவுக்குப் போக்குவரத்து வசதிகளற்ற கிராமங்களின் பாடசாலைகளுக்குத் துவிச் சக்கர வண்டிகளிற்கூடச் சென்றும் கல்விப் பணி ஆற்றியவர் இவர். தமிழர் வாழ்ந்த பகுதிகளிலெல்லாம் பாதைகள் தோறும் தடைகள் போடப்பட்டு, இறக்கி, ஏற்றி, இருத்தி எம் பயணங்களுக்குத் தடைகள் போடப்பட்டிருந்த அந்தப் பயங்கரமான காலங்களிற்கூட, எதிர் கொண்ட எல்லாவிதக் கஷ்டங்களுக்கும் முகம் கொடுத்தபடி, சம்மாந்துறை, சம்பூர், சாய்ந்த மருது, சவளக் கடை, சங்கானை என சோர்வே இல்லாமல் ஒவ்வொரு ஊரிலும் தானே நேரில் சென்று களநிலை ஆய்வுகளைச் செய்து, அதற்கேற்ற

பொருத்தமான செயற்திட்டங்களை வரைந்து, செயற்படுத்தி, குறுகிய காலத்துக்குள்ளேயே மதிப்பீட்டினையும் செய்து கல்விப் பணியாளர்களது சேவைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்ற அம்மா அவர்கள் மேற் கொண்ட செயற்பாடுகளுக்கு பல நூற்றுக் கணக்கில் உதாரணங்களைக் கூறலாம்.

1999ஆம் ஆண்டில் இலங்கைத் தீவு முழுவதிலும் கல்வி மறுசீரமைப்புக் கொண்டு வரப்பட்டுச் வேகமாகச் செயற்படுத்திக் கொண்டிருந்த வேளையில், 2001ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இந்த மறு சீரமைப்புத் தொடர்பிலான தெளிவும், செயற்படுத்தலும் வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் எந்தளவுக்குச் செயற் பாட்டில் உள்ளது என்பதை அறிந்து கெள்வதற்காக, வினாக்கொத்து ஒன்றைத் தயாரித்து, அதிபர்கள், தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கி, அவர் களது தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மறுசீரமைப்புப் பற்றிய யதார்த்த நிலையை அறிந்துகொண்டு மீண்டும் அவை தொடர்பான செயலமர்வுகளைத் திட்ட மிட்டு செயற்படுத்தி முடித்தவர் இவர். இந்தச் செயற்பாட்டின் தொடர் நடவடிக்கையாக ஒவ்வொரு வலயத்திலிருந்தும் பன்னிரு ஆசிரியர்களைத் தெரிவுசெய்து; அவர்களுக் கான பயிற்சிகளை வழங்கி, அவர்கள் தமது வலயப்பாடசாலைகளுக்குச் சென்று தத்தம் பாடத்துறை சார்ந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதனை ஏற்பாடு செய்து 1999இல் கொண்டுவரப்பட்ட கல்வி மறு சீரமைப்பானது 2002ஆம் ஆண்டுக்கு முன்பாகவே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முழுமையாகவும், வெற்றிகரமாகவும் செயற்படுத்தப்பட அயராது உழைத்தவர் எங்கள் வேதநாயகம் அம்மா அவர்கள் என்பதை கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் பல அதிபர்கள், ஆசிரியர்களும்கூட, நான் இவ் ஆய்வுக்கான தகவல்கள் சேகரிப்பில் ஈடுபட்ட போது உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி நின்றனர்.

"காய்த்த மரம்தானே கல்லெறிபடும்" இவ்வார்த்தை மரங்களுக்கு மட்டுமல்ல; மனிதர்களுக்கும், குறிப்பாக மனிதநேயம் மிக்க நல்லவர்களுக்கும் முற்றிலும் பொருத்து வதாக அமையும் என்பது; மக்கள் சேவையை மகேசன் சேவை என வாழும் எத்தனையோ புனிதமான சேவையாளர்களது வாழ்க்கையின் அனுபவங்களாயிருக்கின்றன. இருந்தும் அவர் கள் ஓய்ந்து போவதோ, ஒதுங்கிக் கொள்வதோ இல்லைத் தானே? எமது கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் அம்மா அவர்கள் கூட இதற்கு விதிவிலக்காகவில்லை என்பதே வரலாறா கியது. வெட்டி வீழ்த்திய துண்டுகூடத் துளிர்விடத் தொடங்கும். அது முருங்கையின் இயல்பு. தடைகளைப் போட்டுத் தள்ளி வீழ்த்தினாலும், விழவிழ எழுவதும், வீறு கொண்டு சேவை செய்வதும் எங்களது கல்விப் பணிப்பாளர் அம்மா அவர்களது இயல்பு.

### 3. வளங்களை மையப்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகள்:

பாடசாலைகளிற் கற்பித்தல் என்பது வெறுமனே தகவல்களையும், தரவுகளையும் மட்டும் கற்றுக்கொடுப்பது என வரையறுக்க முடியாது. அதற்கும் அப்பால் பிள்ளைகளது சிந்தனையைத்தூண்டி, புதிய புதிய அனுபவங் களைப் பெற வாய்ப்பளிப்பதன் மூலம் பிள்ளைகள் அறிவினையும், திறன்களையும் பெற்றுக் கொள்ளவைக்கின்ற ஒரு செயல் முறை; பொதுவாகவே பிள்ளைகள் எதையும் ஆராய்ந்தறியும் இயல்புடையவர்கள். அவர்களிடையே காணப்படும் இயல்பான ஆற்றல்களை இனம்கண்டு அவற்றை

ஆக்கபூர்வமான வகையில் வெளிக்கொண்டு வரக் கூடியவாறான வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்கமைக் கப்படுவது மிக மிக அவசியமானது என்ப தனை உறுதியாக நம்பிய எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள், தமது வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றில் சேவைபுரிந்த காலத்தில் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு உதவக் கூடியதான மிகவும் காத்திரமான வளங்களை உருவாக்குவதில் அயராது உழைத்திருப்பதைப் பாடசாலை களிலும் நூலகங்களிலும் காணப்படும் நூல்களும், சஞ்சிகைகளும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

விளையாட்டு அல்லாத விளையாட்டு, முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைந்நூல், எழுத்தாக்கத்திறன் விருத்திக்கான மாதிரிப் பயிற்சி நூல் மீண்டும் கற்போம் தொடரில் அமைந்த தமிழ், கணிதம், செயல்நூல்கள், சுற்றாடல், கல்விசார் செயன்முறை வழி காட்டி, சூழலை அறிவோம், எளிய பரிசோதனைகள், கணித விளையாட்டுக்கள். முக்கோணிகள் என நீண்டு செல்லும் கற்றலுக் கான துணை நூல்களது வெளியீடுகள், மற்றும் புன்சிரிப்பு என்னும் மாதாந்திர செய்திமடல் என்பவை எமது கல்விப் பாணிப்பாளரது வள அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான ஒரு சில உதாரணங் களாகும்.

முன்பள்ளிச் சிறார்களுக்கான விளை யாட்டு அல்லாத விளையாட்டு என்னும் நூல் எழுத்துருவாக்கி முடிக்கப்பட்டும் நீண்ட காலமாக நூலுருவாக அச்சேறாது மறந்து போன ஒரு விடயமாக, கைவிடப்பட்ட ஒரு விடயமாகப் போய்க்கொண்டிருந்த ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்ட Unicef நிதியானது மீளப் பெறப்படக்கூடிய ஒரு தலைமை அலுவலகத் தோடு தொடர்புகொண்டு, அதை அச்சேற்றி நூலுருவாக வெளியிடும் பொறுப்பை ஒரு குறுகிய கால அவகாசத் துடன் கேட்டுப் பெற்று, அக்கால எல்லைக் குள்ளாகவே முடித்துக்கொடுத்த எமது வேதநாயகம் அம்மாவினது செயலால் மகிழ் வடைந்த Unicef அமைப்பு இவரது செயற்றி றனை நம்பி, இவர் கோரிய திட்டங்களுக்கு எல்லாம் பின்னாளில் நிதி உதவி வழங்கியமை வரலாறாகும். ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்த விளையாட்டு அல்லாத விளையாட்டு புத்தகமானது தமிழ், சிங்கள மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டு 3000 தமிழ் பிரதிகளும் 500 சிங்களப் பிரதிகளும் என அச்சிடப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணத் தில் இருந்த அனைத்து முன்பள்ளிகளுக்கும் குறித்த காலப்பகுதிக்குள் வழங்கி முடிந்தமை யானது. அம்மா அவர்கள் புரிந்த சாதனையா கவே Unicef கருதியது எனலாம். அதனால் தான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி ஒன்றினை வழங்கும் நோக்குடன் பயிற்றுநர் கைந்நூல் ஒன்றினைத் தயாரித்துத் தருமாறு மூன்று மாத காலத்துள் தயாரித்து தருமாறு வடக்கு கிழக்க மாகாண கல்விச் செயலா ளரைக் கேட்டது. அப்பொழுது செயலாளராக இருந்த திரு. க. பரமேஸ்வரன் அவர்களும், எமது வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அம்மாவினது ஆற்றல் மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் தான் போலும் மூன்று மாத காலத்துள் முடித்துத் தவருவதாக வாக்குறுதி வழங்கினார்கள். இதை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்ட லுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளராக இருந்த க. பரமேஸ்வரன் அவர்களது வரிகளே உறுதி செய்கின்றன.

"..... வடக்கு கிழக்கு மாகாண சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத் தில், நிறுவனங்களினால் கருத்து முன்வைக் கப்பட்டு, கலந்துரையாடப்பட்டு எமது பகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கைந்நூல் ஒன்றைப் பொருத்தமான வகையில் தயாரிப்பதென முடிவு காணப்பட்டது. யுனிசெவ், சர்வோதயம், சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ), போரூட் ஆகிய நிறுவனங்களின் பாவனையிலுள்ள கைந்நூல்களைச் சேகரித்து, ஆராய்ந்து எமது மாகாணத்துக்கான பயிற்றுநர் கைந்நூலைத் தயாரித்து மூன்று மாதகாலத்தின் பின் நடக்க இருக்கும் அடுத்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத்திற் சமர்ப்பிக்க வேண்டும் என எமது அமைச்சின் ஆரம்ப, பிள்ளைப் பருவ, ஆரம்பக்கல்விப் பிரிவிற்கு பொறுப்பான திருமதி அ. வேதநாயகம் அவர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வள வழிகாட்டி நூல்களை வழங்குதல், எட்டு மாவட்டங்களிலும் பயிற்சிகளை ஒழுங்கு செய்து நாடாத்துதல், உதவிக் கல்விப் பணிப் பாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல். என்னும் பல்வேறு வேலைப் பழுவின் மத்தியிலும் குறித்த தவணையில் கொழும்பில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங் களுடனான கூட்டத்தில் மேற்படி கைந்நூல் சமர்ப்பிக்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

"ஆயிரம் வார்த்தைகளை விட அர்த்த முள்ள ஒரு நூல் மேலானது."

க. பரமேஸ்வரன், செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 30.11.2001
(முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைந்நூலின்
அணிந்துரையில் இருந்து)

செயலாளர் க. பரமேஸ்வரன் அவர்கள் வழங்கிய பாராட்டு வரிகளைப் போலவே, செயலாளர் திரு. ஆர். தியாகலிங்கம் அவர் களும், அவரது சேவைக் காலத்தின்போது கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் அம்மா அவர்கள் மேற்கொண்ட கற்றல் வள மேம் பாடு தொடர்பான செயற்பாடுகளின்போது உடனுக்குடன் பாராட்டி இருப்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிந்தது.

"..... மாணவர்கள் மத்தியில் எந்த ஒரு விடயத்தையும் சிந்திப்பதற்கோ, அவ்விட யத்தைப் பற்றி ஆராய்வதற்கோ விருப்பமோ, முயற்சியோ குறைவாக விளங்குவது இன் றுள்ள சமுதாயத்திற் பரவலாகக் காணப்படும் ஒரு நிலையாகும். இந்நிலை மாறி மாணவர்கள் ஆய்வு செய்பவர்களாகவும், அதன்மூலம் தமது சிந்தனையை வளர்ப்பவர்களாகவும், இதன் விளைவால் ஆக்கத்திறன் உடையவர்களா கவும் மாற வேண்டியது அவசியமாகும். இதனைப் பிள்ளைப்பருவத்தல் அறியச் செய்வதன்மூலம், வளரும் காலத்தில் ஒரு மாணவனுக்கு அதற்கான பயிற்சி கொடுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இதனை எமது வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்வி அபிவிருத்திப் பிரிவு முன்னெடுத்துச் செய்ய முனைந்திருப்பது பாராட் டப்படவேண்டியதாகும். முயற்சியை திட்டமிட்டு நெறிப்படுத்திய கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர் களைப் பாராட்டி ஆசி கூறுகின்றேன். .....

"முயற்சி திருவினையாக்கும்"

ஆர். தியாகலிங்கம்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு, கிழக்கு மாகாணம்.
(எளிய பரிசோதனைகள் என்ற நூலுக்கான
ஆசியுரையில் இருந்து)

பிள்ளைகளிடத்திலே விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகளை மேம்படுத்தும் நோக்குடன் ஆக்கப்பட்டதே எளிய பரிசோதனைகள் என்ற நூலாகும். பத்து விதமான பரிசோதனைச் செயல்முறைகளை உள்ளடக்கி இருக்கும் இந்த நூல், மாணவர்களைத் தோற்றுவித்து, மேலும்மேலும் பரிசோதனைகளில் ஈடுபட வைப்பதற்குத் தூண்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது. Unicef நிறுவன அனுசரணை பெற்று இந்நூல் வெளியிடப் பட்டது குறிப்பிடத்தக்கது.

முதன்மை நிலை 02, 03 மாணவர்களிடையே சிந்தனைக் கிளறல்களுக்கான பயிற்சியும், அறிவும் வழங்கப்படல் வேண்டும். அதனூடாக எழுகின்ற எழுத்தாக்கத்திறன்களின் விருத்தி படிமுறையாக வளர்த்தெடுக்கப்படுமாயின் அம்மாணவர்கள் உயர் வகுப்புக்களிலும் தடைகளை எதிர்கொள்ளாது கற்க முடியும் என்ற எதிர்பார்ப்போடு, கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சில் ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவுக்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக வேதநாயகம் அம்மா அவர்கள் இருந்த காலத்தில்வெளியிடப்பட்ட இன்னுமொரு வள நூலே எழுத்தாக்கத்திறன் விருத்திக்கான மாதிரிப் பயிற்சி நூல் என்பதாகும். வெவ்வேறுபட்டதாகத் திறன்களை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கக்கூடியதான முப்பது பயிற்சிகளை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டிருக்கும் இந்தப் பயிற்சி நூலுக்கும் அனுசரணையானது Unicef நிறுவனத்திடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

"இன்று மாணவர் மத்தியிற் குறிப்பாக, எமது தமிழ் கற்கும் மாணவர் மத்தியில் எழுத்தாக்கத்திறன் மிகவும் மந்தமான நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையை மாற்றி அமைக்கப் பல்வேறுபட்ட நிலைகளில், பல்வேறுபட்ட காலப்பகுதிகளில், பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் குறிப்பிடத்தக்களவில் மாற்றம் ஏற்படவில்லை. எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தொடர்ந்தும் கல்வியியலாளர்களும், புத்தி ஜீவிகளும் செயற்பட வேண்டியுள்ளது.

இம் முயற்சியில் எமது வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, அமைச்சின் ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு எழுத்தாக்கத்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் முன்னோடியாக "எழுத்தாக்கத்திறன் விருத்திக்கான பயிற்சி நூல்" ஒன்றினை வெளியிட முன் வந்துள்ளது.

மாணவர்கள் இலகுவான முறைகளைப் பின்பற்றித் சித்திரங்களின் ஊடாக, தங்கள் சிந்தனைத் திறனை உயர்த்தி எழுத்துருவில் வடிவமைக்க இந்நூலிற் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டுள்ளன....

இத் தேவையை இனம்கண்டு அதற்கேற்ற எழுத்துருவாக்கத்துக்கு வழிப்படுத்திய கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களைப் பாராட்டு கின்றேன்.............

திரு. ஆர். தியாகலிங்கம், செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

இதேபோன்று எமது கல்விப்பணிப்பாளர் அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்கத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்திற் பாடசாலைகளுக்கான நேரடித்

தரிசிப்புக்களை மேற்கொண்டு ஆங்காங்கே ஆரம்ப வகுப்பு மாணர்களை மதிப்பீடு செய்து, அவர் தம் அடைவுகளையும், பிரச்சினைகளையும் அறிந்து, உரிய தீர்வு காண்பதை ஒரு தொடர் செயற்பாடாக மேற்கொண்டிருந்தபோது தான் பல்வேறு பாடசாலைகளிலும் இருந்த மாணவர்கள் சுற்றாடல் சார்ந்த செயல்முறை அனுபவங்கள் குறைந்தவர்களாக இருந்து வருவதை அவரால் இனம்காண முடிந்தது. ஆசிரியர்களில் பலரும்கூட, மாணவர்கள் செயல் முறை அனுபவங்களைப் பெறுவதற்கு வழிகாட்டாது விரிவுரை முறையிலேயே கற்பித்தலை மேற்கொண்டு வந்தமையையும் அவதானிக்க முடிந்துள்ளது. அந்த நிலையில் ஆசிரியர் களுக்குப் பிரச்சினையாக இருந்த அலகுகள் கண்டறியப்பட்டு, தேவையான வளப் பொருட்கள் சூழல்களிலிருந்து சோதிக்கப் பட்டு, அந்த அந்த இடங்களிலேயே மாணவர் கள் செயற்பாடுகளில் ஈடுபட்டு அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இவ்வகையில் பாட சாலை வகுப்பறைகளில் மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகளிற் பெறப்பட்ட அனுபவ அறிவுகளின் அடிப்படையில் ஆசிரியர்களுக் குப் பயிற்சி வழங்கப்பட்டன. பயிற்சிக்குப் பின்னரான அவர்களது சேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டபோது இவ்வகையான செயற்பாடுகளின் வெற்றி கண்டறியப்பட் டது. இவ்வாறான அனுபவங்களினது விளை வாக எமது கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் அம்மா அவர்களது நெறிப்படுத்தலில் உருவா னதே "சுற்றாடல் கல்விசார் செயன்முறை வழி காட்டி" என்ற பயிற்சி நூலாகும். முதன்மை நிலைகள் 1, 2, 3 பிரிவு மாணவர்களுக்கு உதவும் வகையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட இந்த நூல்போல, ஒரு பயிற்சி நூல் இலங்கைத் தீவின் வேறு எந்தஒரு மாகாணங்களிலும் அக்கால கட்டத்தில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

"கற்றல் என்பது ஒரு மனிதனின் பிறப் புடன் ஆரம்பமாகும். உயிர்த்துடிப்புள்ள ஒரு செயற்பாடாகும். (Vital Activity) தாயின் கருவறையில் ஆரம்பிக்கும் கற்றற் செயற்பாடு பின்னர் படிப்படியாக; குடும்பம், சமூகம், நாடு என்று பெரிய வட்டமாக விரிந்து செல் கின்றது.

குழந்தைகள் வாழும் சூழலும், இயற் கையும் சிறந்த ஆசான்களாகும். சூழலை அவதானிப்பதன்மூலமும், அங்கே நடை பெறும் செயற்பாடுகளை அறிந்து கொள்வதன் மூலமும், பலவிடயங்களை ஒரு குழந்தை கற்றுக் கொள்கிறது. சூழலிலுள்ள சடப் பொருட்களையும் சக்திகளையும் இனம் காணும் பண்பும், ஆற்றலும் குழந்தைகளிடம் பயிற்சிகள் மூலமும், செயற்பாடுகள் மூலமும் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் இயல்பாகவே ஆற்றல் நிறைந்த குழந்தைகளுக்கு வெவ்வேறு படிநிலைகளிற் செயற்பாடு சார்ந்த அறிவை வழங்குவதன்மூலமும் தொடர் பயிற்சிகள் மூலமும் தான் சார்ந்துவாழும் சூழலை அறிந்து கொள்ள வைக்கமுடியும்.....

இவ்வாறான செயற்பாடுகளைப் படி முறையாக ஒழுங்குபடுத்தி, வழிகாட்டி களினூடாக வடிவமைத்து, நூலாகக் கொடுத்திருப்பதிற் கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களது பணியினைப் பாராட்டி நிற்கின்றேன்........

ஆரம்பப் பிரிவுக்கு மிகவும் ஏற்றதான சுற்றாடற் கல்விசார் செயல்முறை வழிகாட்டி என்ற இச்செயல்நூல், மிகச்சிறந்த ஒரு வழிகாட்டியாக விளங்கும். இதுபோன்ற முயற்சிகளில் முன்னின்று உழைத்துவரும் திருமதி அ. வேதநாயகத்தின் அயராத

உழைப்பே இந்நூலின் பிறப்புக்கும், வெற்றிக்கும் காரணமாகும்.

ஆர். தியாகலிங்கம், செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

வேதநாயகம் அம்மா அவர்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்த 2003, 2004ஆம் ஆண்டு காலகட்டத்தில் மிகவும் சிலாகித்தும், பெருமித உணர்வுடனும் நினைவு கூரப்பட வேண்டிய ஒரு விடயம் மடுக்கல்வி வலயத்தில் நடைபெற்றது. இவ்வலயப் பாடசாலைகளை 2004ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் தரிசித்துவரும் போது, இவராற் பல பாடசாலைகளிலும் அவதானிக்கக்கூடிய பிரச்சினையாக இருந்தது சித்திரபாட ஆசிரியர் இன்மை என்பதாகும். இவ் வலயத்திற் சித்திரபாடம் கற்க விரும்பும் மாணவர்கள் அதிகமுள்ள பாடசாலைகளது தரவுகளைச் சேகரித்துக்கொண்ட எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள், அவ் வலயத்தின் சித்திரப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி, அவ்வப் பாடசாலைகளிற் சித்திரபாடத்தைக் கற்று சாதாரண தரப்பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைகயில் இருந்து நீங்கி வீட்டோடு தங்கிவிட்ட மாணவர்களது விபரங்களைத் திரட்டி, அவர்களை அவ்வப்பாடசாலைக்கு வரவழைத்து, கலந்துரையாடி, அவர்களைக் கொண்டு சித்திர பாடம் கற்க விரும்பி இருந்த மாணவர்களுக்கான விஷேட வகுப்புக்களை பாடசாலை அதிபர்களது மேற்பார்வையில் ஒழுங்குபடுத்திக் கொடுத்து அவசியமான அறிவுறுத்தல்களைச் சித்திர பாட உதவிக் கல்விப்பணிப்பாளருக்கும் வழங்கினார்கள். அது மட்டுமன்றி இடையிடையே மடு வலயத்தோடு தொடர்பு கொண்டு மேற்படி வகுப்புக்களது முன்னேற்றத்தைப் பற்றிய தகவல்களையும் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் (2004) மடுவலயத்தில் இருந்து சித்திரபாடத்துக்குத் தோற்றிய மாணவர்களுள் அதிகமானவர்கள் சித்தியடைந்தமை வரலாற்றுப் பதிவாகும்.

ஆரம்ப பிள்ளைப்பருவ மாணவர்களிடையே கணித எண்ணக்கருக்களை ஆழமாகப் பதிய வைப்பதற்காக முக்கோணிகள், கணித விளையாட்டுக்கள், கணிதம், மாணவர் செயல் நூல் எனப் பல்வேறு கற்றல் வளங்களையும் உருவாக்கி அதனூடாக மாணவர்களது கற்றல் அடைவை உயர்த்துவதற்காக; தனது வடக்கு கிழக்கு மாகாண சேவைக் காலத்தில் அயராது உழைத்த எமது கல்விப் பணிப்பாளர் அவர்களது சேவைகளால் எமது பகுதி ஆசிரிய, மாணவ சமுதாயம் மிக மிகச் சிறந்த பயனை அனுபவித்துக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் இவற்றுக்காக உழைத்த, உழைத்து வரும் வேதநாயகம் அம்மா அவர்களோ, தனது அயராத, சோர்வற்ற கல்விச் சேவைகளுக்குத் தேவையான, போதுமான ஒத்துழைப்புக் கிடைக்காது பல தடவைகள், பலநாட்கள், வேதனைகளையும் அனுபவித்திருப்பதாக, அவருடன் இணைந்து பணியாற்றிய பல சேவையாளர்கள் இன்றும் கூட விரக்தியோடு கூறிநிற்பது எம்மையும் வேதனைப்படுத்துவது மட்டுமல்ல; வியப்படையவும் வைக்கின்றது.

வே.கா.சந்திரகுமார்,
ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.

# அது ஒரு பொற்காலம்

"மாற்றந் தொலைக்கோ, மனிதருள்ள ஊர்தானோ; மாணவரும் அங்கு படிக்கவருவாரோ?...."

இது முன்னைய காலங்களில் யாழ்ப் பாணத்திலிருந்து வன்னிப்பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற ஆசிரியர் களைப் பார்த்து, ஏனையோர் எள்ளற் சுவையோடு, ஏளனக்கவி பாடுவதுபோல மைந்த, கவிஞரொருவரின் கவி வரிகள். இஃது கற்பனையின்பாற்பாட்ட வெறும் வரிகளன்று. அன்றைய வன்னியிற் பின்தங்கிய பல கிராமப் பாடசாலைகளின் உண்மை நிலை ஓரளவிற்கு இத்தகையதாகவே காணப்பட்டது.

தொண்ணூற்றாறுகளோடு இடம் பெற்ற வலிகாமம் இடப்பெயர்வுடன் இக் கருத்தும், கணிப்பும் சடுதியாக மாற்றம் கண் டது. தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக் கிடமின்றி ஒட்டுமொத்த யாழ்ப்பாணம், வன்னிப் பெருநிலப்பரப்பினை நோக்கி இடம் பெயர நேர்ந்தது. கற்றோர், மற்றோர், அதிகாரிகள் என்ற பாகுபாடின்றி யாவருமே இப்பேரலையில் எற்றுண்டனர். "எந்தத் தீமைக்குள்ளும் ஒரு நன்மையுண்டு' என்பதற் கிணங்க, இந்நிகழ்வு சம்பந்தப்பட்டவர்களுக் குப் பெருந்துயர் விளைத்தபோதும் பெருநிலப் பரப்பு இதனால் நலம்பல கண்டு வளம் பெற்றமை மறைக்கமுடியாத உண்மை.

இத்தகைய பின்னணியிலேயே, துணுக்காய்ப் பிரதேசத்தின் கல்வி மறுமலர்ச் சிக்கும், எழுச்சிக்கும் தனது சேவைக்காலத்தை முழுமையாக அர்ப்பணித்து உழைத்த திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் அவர்களின் வருகை இப்பிரதேசத்திற்கு ஒரு வரமாக அமைந்தது.

இப்பிரதேசத்தில் அம்மா வேத நாயகம் அவர்கள் ஆற்றிய சேவையின் கனதியை அறிந்துகொள்ளவேண்டும் எனில், இப்பிரதேசத்தின் இட அமைவு தொடர்பாக நோக்கவேண்டிய தேவையின் கட்டாயம் எழுகிறது.

**இடஅமைவும் கல்வி அபிவிருத்தியும்**

மிகப்பரந்து விரிந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குக்கோடியில், மாங்குளம் சந்தியிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் துணுக்காய்ப் பிரதேசம் மைந்துள்ளது. ஆனால் இப்பிரதேசத்திற்கான கல்விப்பணிமனை இங்கிருந்து வெகுதொலை வில் முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்தது. நிர்வாகமையத்தின் பாரிய தொலைவுகாரண மாக இங்கு அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் என ஒட்டுமொத்தக் கல்விப் புலமே அநேக எதிர்களை எதிர்கொள்ள நேர்ந்ததுடன் கல்வி அபிவிருத்திற்கும் இடை யூறாக அமைந்தது.



போதிய அக்கறையின்மை, வளப் பங்கீடுகளிற் பாரபட்சம், அண்மித்த மேற்

பார்வையின்மை, நிர்வாகத் தேவைகளை நிறைவு செய்வதில் இடர்ப்பாடெனப் பல காரணங்களினால் இப்பிரதேசம் கல்வி விருத்தியிற் குன்றிப் புறக்கணிப்புக்குள்ளாகி இருந்தது.

இவ்வாறு ஏற்கனவே இருந்த பாதிப்புகள் மத்தியில், இடப்பெயர்வோடு பெருந்தொகையான மாணவர்களும் இப்பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தனர். இத்தகைய ஒரு நிலையில், முதன்முதலில் திருமதி வேதநாயகம் அவர்களின் சேவை விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளராக ஆரம்பமாகியது. தொடர்ந்து துணுக்காய்க் கோட்டக் கல்வி அலுவலர், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளரெனப் பதிவியிலுயர்ந்து, சேவையிற் சிறந்து விளங்கிய இவரது காலப்பகுதி, விதந்து நோக்குதற்குரியது.

உயரதிகாரிகளோ, சாதாரண பணியாளர்களோ எவராயினும் கல்விப்புலம் சார்ந்த யாவரையும் தன் உறவாகக்கருதி மதித்து அன்பு செய்தார். பாடசாலை மாணவர்களைக்கூடக் கண்டு பழகி, அவர்கள் பிரச்சனைகளை நேரடியாக இனங்கண்டார். இதனாற் கற்றோர், மற்றோர் என்ற வேறுபாடோ, இளையோர், மூத்தோர் என்ற பாகுபாடோ இன்றி, எல்லோரும் அவரை "அம்மா' என்றே அழைத்தனர். கருத்தினிற் கல்வி விருத்தி, மனதினில் மனிதநேயமும், அன்பின் நெகிழ்ச்சியும் காட்சிக்கெளிமை, இத்தகைய பண்புகள் இப்பிரதேசத்தின் கல்வி தொடர்பாகச் சாதாரண பாமரமக்களையும் நம்பிக்கைகொள்ள வைத்தது. பெரும் எதிர்பாரர்ப்பினையும், அவர்களது மனங்களில் ஏற்படுத்தியது.

விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராகவிருந்த அம்மா, 1996ஆம் ஆண்டு முதல் துணுக்காய்க் கோட்டக் கல்வி அலுவலராகத் தனது பணியை ஆரம்பித்தார். இப்பிரதேசத்தில் நியமனம் செய்யப்பட்ட முதலாவது கல்வி நிர்வாகசேவை இப்பிரதேசத்தின் கல்விச் செயற்பாடுகளை அடிமட்டத்திலிருந்து அதியுயர்நிலைவரை கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்புப் புதிய கோட்டக்கல்வி அதிகாரியின் முன் பூதாகரமாக நின்றது.



பாடசாலைகள், மாணவர்கள் விரும்பிவந்து கற்பதற்கேற்ற கவிநிலையற்று, வலுவான கற்றல், கற்பித்தலின்றிக் காணப்பட்டன. அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சித் தேவைகள் பல நிறைவு செய்யப்படவேண்டியிருந்தது. அவர்களிடையே உற்சாகமும், பாடசாலைப்பற்றும், வேலையிலீடுபாடும், ஆர்வமும் எனப் பல விடயங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்பட்டது. மொத்தத்தில் அதிபர், ஆசிரியர், மாணவர் என்ற வேறுபாடின்றி, பௌதிக வளம், மனித வளம் என்ற பாகுபாடு இன்றிப் பலபடச் செயற்றிட்டங்களை பயிற்சிகளை, ஊக்குவிப்பை, உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

மிகத் துல்லியமான புள்ளிவிபரங்கள் திரட்டப்பட்டு இருந்த சகலவளங்களும் ஒன்றுபடுத்தப்பட்டன. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களூடாக சாத்தியமான உதவிகளைப் பெறுவதற்குப் புள்ளி விபரங்களூடாகச் சரியான, சாத்தியமான செயற்றிட்டங்கள் தீட்டப்பட்டன. திட்டங்கள்

வாயிலாகக் காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

கோட்டக்கல்வி அதிகாரி என்ற வகையிற் சகல விடயங்களையும் ஒன்றிணைத்து, முன்னின்று வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பைத் திருமதி வேதநாயகம் அவர்கள் தனக்கேயுரிய துணிவோடும், அர்ப்பணிப்போடும் அதேநேரம் விருப்போடும் ஏற்றுக் கொண்டார்.

மிகுந்த தொலைவு, இடர்மிக்க காட்டுப்பாதைகள், பயணிக்க வாகனங்களின்மை, கல்வி அதிகாரிகளின் அக்கறையின்மை அல்லது அர்ப்பணிப்பின்மை எனப் பல காரணிகளினால் மிகத் தொலைவிலிருந்த சிறிய, பின் தங்கிய பாடசாலைகள் அலட்சியப்படுத்தப்பட்டுப் புறக்கணிப்புக்குள்ளாகியிருந்தன. கல்வி மேற்பார்வை செய்வோரின் காலடிகள் காணாத பாடசாலைகள் பல. இத்தகைய பாடசாலைகள் அவசரமாக விருத்தி செய்யப்படவேண்டியதன் அவசியம் அவரால் உணரப்பட்டது.
"நோய் நாடி நோய் முதல் நாடி - அதன்
வாய் நாடி வாய்ப்பச் செயல்" செய்யும் தன்மை அம்மாவிற்கு இயல்பாகவே உள்ளது. அதற்கேற்ப, பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியின் பிரதான செயற்பாடுகளைப் பின்தங்கிய கிராமப் புறப்பாடசாலைகளை மையமாகக் கொண்டு, அவற்றை முன்னிலைப்படுத்தி மேற்கொண்டார். துணுக்காய்ப் பிரதேசத்தின் மிகத் தூரத்திலமைந்த, சிறிய பாடசாலைகளை நோக்கிப் பல்வேறு இடர்களின் மத்தியிற் பயணித்த முதற்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகமே என்பதை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாகப் புத்துவெட்டுவான், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், கல்விளான் குளம் போன்ற தொலைதூரப் பாடசாலைகளை அம்மா அடிக்கடி தரிசித்தார். இவற்றின் வளர்ச்சிக்குக் காலாக அமைந்தார். இப் பயணங்கள் சொல்லொணாச் சிரமங்களின் மத்தியிற் பெண்ணொருவரால் மேற்கொள்ளப்பட்டமையையும், இப்பயணங்களின்மூலம் இப்பாடசாலைகள் பெற்ற நலன்களையும் நினைவு கூராதிருக்க முடியாது. இத்தகைய பின்தங்கிய பாடசாலைகளிலொன்றான புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை அதிபரவர்கள் அம்மாவின் சேவையை நயந்து பின்வருமாறு நினைவு கூருகின்றார்" அவருடைய அலுவலகத்தி லிருந்து கிட்டத்தட்ட 15 கிலோமீற்றர் காட்டுவழியாகப் பயணஞ்செய்து அடிக்கடி எமது பாடசாலைக்கு வருவார். எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபட்டார். குறிப்பாக, 1957 முதல் 40 ஆண்டுகாலம் ஆரம்பபாடசாலையாகப் பின் தங்கியிருந்த பாடசாலையை தரம் 09 வரை அம்மா தரம் உயர்த்துவதற்கு உதவினார். இது இப்பகுதி மாணவருக்குப் பேருதவியாக அமைந்தது. புத்துவெட்டுவான் கிராமமக்கள் என்றுமே அம்மாவை நன்றியுடன் நினைவு கூருகின்றார்கள். கோட்டக்கல்வி அதிகாரியாகவும் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளராகவும் அம்மா கடமையாற்றிய காலம் பொன் எழுத்துகளாற் பொறிக்கப்படவேண்டிய காலம்" இவ்வாறு அம்மாவின் சேவையைப் பெற்ற ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும், பாடசாலைச் சமூகமும் நினைவுகளை நெஞ்சில் நிறுத்திப் போற்றுவர் என்பது திண்ணம்.

இவ்வாறு, திருமதி வேதநாயகமவர்கள் தனது கோட்டத்தின் கல்வி நிலையின் பலம், பலவீனம், வாய்ப்புகள், அறைகூவல்களை துல்லியமாகச் சரியான முறையில் இனங்கண்டு; பலத்தை உந்துசக்தியாக்கி உயர்த்தவும், பலவீனங்களை நிவர்த்தி செய்யவும் அனேக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சகல முயற்சிகளையும் ஒழுங்குடன், ஒருமைப்படுத்தி வேகத்தோடு முன்னெடுத்துச் செல்வதற்குக் கோட்டக் கல்வி அலுவலகரின் தலைமையிற் கோட்டக் கல்வி அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டது. இதனூடாகப் பல்வேறு கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. அர்ப்பணிப்பும், சேவைமனப்பாங்கும், ஆர்வமும் உள்ள பல பெருமக்கள் ஒன்றுபட்டு இந்நடவடிக்கை களை முன்னெடுத்தனர். அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் மையப்புள்ளியாக அம்மா அமைத் தார். அசாதாரணமான யுத்த இடப்பெயர்வுச் சூழலில் முற்று முழுதாக மனிதநேயத்துடனும் சேவைமனப்பாங்குடனும், தன்னலம் கருதாது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கல்வி அபிவிருத்தி சம்பந்தப்பட்ட வரையிற் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டுமன்றி, முழுக்கல்வி உலகுக்குமே எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கவை. இவற்றள் குறிப்பாகவும், சிறப்பாகவும் பாராட்டத்தகுந்தவையாகப் பல நடவடிக்கைகள் அமைந்தன. இவற்றுள் ஒரு சிலவற்றையாவது இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

**கல்வி அபிவிருத்தியும் ஆசிரிய வாண்மையும்**

கோட்டமட்டத்திலான இலசவச கல்விச்சேவை நிலையம் நிறுவப்பட்டு, பாடசாலை நேரந்தவிர்ந்த நேரங்களில் ஆற்றல் படைத்த, அதேவேளை, அர்ப் பணிப்பு மிக்க ஆசிரியர்களது ஒத்துழைப் புடன் நடாத்தப்பட்டது. தொடர் இடப் பெயர்வு, யுத்தச் சூழல் என்பவற்றாற் பெரிதும் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான மாண வர்களின் கல்வி மேம்பாட்டிற்கு இச்சேவை வரப்பிரசாதமாக அமைந்தது.

ஆரம்பக்கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ், பாடசாலைகள் தோறும் பரீட்சைகள்மூலம் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் துல்லியமாக இனங் காணப்பட்டு அம்மாணவர்களுக்குப், பாடசாலை நேரத்தின் பின்பு அதிபர், ஆசியர்களது ஒத்துழைப்புடன் எழுத்தறி வூட்டல் நடிவடிக்கை மேற்கொள்ளப்பட் டது. இச்செயற்றிட்டம் எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்குப் பெரும் நன்மை விளைத்தது. குறுகிய காலத்தில் அவர் களிடையே பெரும் மாற்றம் ஏற்பட்டமையும், மதிப்பீடுகள்மூலம் இனங்காணப்பட்டது. இச்செயற்றிட்டத்தை அதிபர், ஆசிரியர் களோடு தானும் ஒருவராகக் கூடநின்று செயற்படுத்தியமை அன்று பலரையும் வியக்க வைத்து. தரம் 9 மீத்திறன் மாணவர்களுக்கான மூன்றாண்டு கல்வி அபிவிருத்திச் செயற் றிட்டம் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாடத்திற்கான விசேட செயற்றிட்டம், தரம் 11இல் சமூகக்கல்வி, தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் செய லட்டைகளை தயாரித்து மாணவர்களுக்கு வழங்கி, இழந்த கல்வியை ஈடுசெய்யும் பொருட்டான விசேட செயற்றிட்டங்கள் போன்றவை 1996/1997 காலப்பகுதியில் துணுக்காய் கோட்ட மாணவர்களின் பெறு பேற்றில் ஏற்பட்ட திடீர் மாற்றத்திற்கு வழி கோலியது என்றால் மிகையாகாது.



**வரைபு**

துணிக்காய்க் கோட்டத்தில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்

பொருட்டு; க.பொ.த. (உ/த சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு வைத்து, பொருத்த மானவர்களை, தெரிவு செய்து, அவர்களுக்கான வதிவிடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய் தார்.

இடைநிலைப் பாடசாலைகள் அற்ற பின்தங்கிய பிரதேசங்களில் இருந்த பெருமள வான மாணவர்களின் கல்வியைக் கருத்திற் கொண்டு நிழல் பாடசாலைகளை உருவாக்கி, ஐயன்கன்குளத்தில் இணைக்கப்பட்ட மல்லாவி மத்திய கல்லூரி, கல்விளான் குளத்தில் இணைக்கப்பட்ட துணுக்காய் அ.த.க பாடசாலை, அம்பலப் பெருமாள் குளத்தில் இணைக்கப்பட்ட கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை எனும் பெயர்களில் நிழல் பாடசாலைகள் இயங்கி யமை அன்றைய அறிவுப்பசிக்கு விருந்தாயின.

பல்வேறு காரணங்களாலும் பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களை, உதவி அரச அதிபரின் உதவியுடன் கிராமசேவையாளர் ஊடாக விபரங்களைத் திரட்டி அவர்கள் இடை விலகிய காரணங்களைக் கண்டறிந்து மீளவும் அவர்களைக் கற்றற் செயற்பாட்டில் ஈடுபட வைப்பதற்காக அரும்பாடுபட்டவர். இது மட்டுமல்லாமல் மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பரீட்சை வழிகாட்டல்கள் எனக் குறிப்பாக தரம் 05 பு.ப.பரீட்சை, க.பொ.த, சா/தரம், க.பொ.த (உ/தரம்) வகுப்புகளுக்குத் துறைசார் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. கற்றற் காலத்தை முழுமையாகவோ, பகுதி யாகவோ இழந்த மாணவர்களுக்கு இவ் வகுப்புகள் நன்மையளிப்பனவாக அமைந்தன.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்**

கற்றலோடு மட்டும் நின்றுவிடாமல், மாணவரது பண்புவிருத்தியை, ஆளுமை விருத்தியைக் கருத்திற்கொண்டும் பல்வேறு செயலமர்வுகள் மாணவர்களுக்கு நடாத்தப் பட்டன. குறிப்பாக "மாணவ முதல்வர்களது தலைமைத்துவப்பண்புகளை மேம்படுத்தல்" போன்ற செயலமர்வுகள் மிகுந்த பயனுள்ள வையாக அமைந்தன. இவை தவிரப் பல்வேறு பாட அபிவிருத்திப்பட்டறைகள், சிறப்புப் பாடமுகாம்கள் என்பன அப்போதைக் கப்போது மாணவரது தேவைகள் இனங் காணப்பட்டு அதன் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டன. அத்தோடு ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு விசேடமான ஆரம்பக்கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேலும்; பாடசாலை, கோட்ட மட்டங்களிற் பல்வேறு கல்விக்கண்காட்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டன. இவை ஆசிரியர், மாணவர்களது பல்வேறு விசேட திறன்களையும், புத்தாக்கங்களையும் வெளிக்கொணர உதவின. அழகியற்றிறனை விருத்திசெய்ய ஓவிய, இசை, நடன, நாடகப் போட்டிகள் நடாத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. சிறந்த கலைப் படைப்புகள் தேர்வு செய்யப்பட்டுத் துணுக்காய்க்கல்விக் கோட்டம் மாபெரும் கலைவிழா ஒன்றினையும் நடாத்திப் பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

தமிழ்த்தினப்போட்டிகளைச் சிறப் பாக, வன்னிப்பெருநிலப்பரப்பு - உபமாகாண மட்டத்திலான போட்டிகளைப் பொறுப்பாக நடாத்தி முதலாமிடத்தினை மல்லாவி மத்தியகல்லூரி பெற்றதன்மூலம் கோட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் துணுக்காய்க் கோட்டம் தட்டிக்கொண்டது. அவ்வாறே உபமாகாண மட்டம் உடற்பயிற்சி, மெய் வன்மைப் போட்டிகளையும் சிறப்புற நடாத்தி சகலதரப்பினரதும் மாபெரும் பாராட்டுக் களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இடப்

பெயர்வு இத்தகைய அற்புத நிகழ்வுகளை நாம் காண வாய்ப்பளித்ததே என வியந்தனர்.



எந்தவித நிதிகளும் அற்ற நிலையிற் கோட்டமட்டத்திலான சகல போட்டிகளுக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களை குழுக்களாக நியமித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் விளையாட்டு, உடற் பயிற்சி, தமிழ்த்தினம், கணித விஞ்ஞானம், புதிர்போட்டிகள் போன்ற பலபோட்டிகளை நடாத்தியமை மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தது. துணுக்காய்க் கோட்டத்தில் நூலக வாரத்தைப் பிரகடனப் படுத்தி, அவ்வாரத்தில் இயங்கா நிலையில் இருந்த நூலகத்தை மீள இயக்குவதற்கும், நூலகமற்ற பாடசாலையில் நூலகத்தை புதிதாக உரிய முறையில் உருவாக்குவதற்கும் வழிகாட்டியவர்.

கோட்டமட்டத்திற் கணிதம், விஞ்ஞானம் தொடர்பாக விசேட நடவடிக்கைகளும், அக்கறையும் செலுத்தப்பட்டது. கணித, விஞ்ஞான விநாடிவினாப் போட்டிகளைச் சிறப்புற நடாத்தியதுடன் பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பல அரும்பணிகளை ஆற்றி, துணுக்காய்க் கல்விக்கோட்டம் சகலதுறைகளிலும் முதன்மை நிலை பெற்ற கல்விக்கோட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வளர்ச்சி கண்ட கால கட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி மறுசீரமைப் பின்கீழ், கல்வி நிர்வாகப் பரவலாக்கங்களில் 24 புதிய கல்வி வலயங்கள் தோற்றம் பெற்றன. அவ்வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு கல்வி வலயங்களாகியது. அதில் ஒட்டுசுட்டான், மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கி மிகப்பரந்த கல்வி வலயமாகத் துணுக்காய் 01.10.1998 திகதி முதல் கல்வி வலயம் தோற்றம் பெற்றது. துணுக்காய் வலயத்தின் இன்றைய வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்ற வகையிலும், துணுக்காய் கல்வி வலயத்தின் முதலாவது கல்விப் பணிப்பாளர் என்ற பெருமையும் அம்மாவையே சாரும்.

கோட்டக்கல்வி அதிகாரியாகத் திருமதி வேதநாயகம் அவர்கள் ஆற்றிய அளப்பெருஞ்சேவைகளுக்கு ஓர் அங்கீகாரமாக, அவரின் சேவையை முழுமையாகப் பெறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பாக 01.10.1998 முதல் துணுக்காய்க் கல்வி வலயம், புதிய கல்வி வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் என மூன்று கோட்டங்கள் அடங்கிய புதிய வலயமாக உருவெடுத்தது. புதிய வலயத்தின் பணிப்பாளராக அம்மா அவர்கள் பொறுப் பேற்றார்.

**அலுவலகமும் ஆளணிகளும்**

புதிதாக நிறுவனமொன்று உருவாகும் போது ஏற்படக்கூடிய அத்தனை அறைகூவல்களும் புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் முன் நின்றன. அதுவும் அசாதாரண சூழலிற், பல்வேறு தடைகளுக்குட்பட்ட ஒரு பிரதேசத்தில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் மத்தியில் வலயத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதென்பது சாதாரண செயற் பாடன்று. அசுர உழைப்பும், அர்ப்பணிப்பும்,

புத்திசாதுரியமும் மிக்க ஒருவருக்கே இதனைச் சாதிக்க முடியும்.

புதிய வலயம் அமைக்க நிலம்தேடி, கட்டிடங்களை நிர்மாணித்து, பணியாளர்கள், தளபாடங்கள், உபகரணங்கள், துறைசார் உத்தியோகத்தர் எனப் பல்வேறு ஒழுங்க மைப்புகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மிகச் சாதாரணமான தொலைபேசி வசதியோ, வலயக்கல்விப்பணிப்பாளருக்கென்று ஒரு வாகனமோகூட அன்று அவருக்கு இருக்காத போதும், ஒரு கல்வி வலயத்திற்குரிய சகல கருமங்களையும் சீராக முன்னெடுக்கக்கூடிய ஒரு சிறந்த வலயத்தை அம்மா உருவாக்கினார்.

ஏற்கனவே கோட்டக்கல்வி அதிகாரியாகவிருந்த அனுபவம், பிரதேசத்தை நன்கு தெரிந்து வைத்திருந்தமை அவருக்கு, அவருடைய சேவைசிறக்கக் கைகொடுத்தது.

**பாடசாலைத் தரிசிப்பும் கல்வி அபிவிருத்தியும்**

கல்விப்பணிப்பாளர்கள் எவரும் கனவிலும் கண்டிராத பாடசாலைகள் ஒவ்வொன்றாய்த் தரிசித்துப் பிரச்சனைகளைச் செவிமடுத்து, அவற்றுக்கு அந்த இடத்திலேயே தீர்வுகண்டு, பெரிய வளமான பாடசாலைகளையே சுற்றிச்சுற்றி வந்து. குண்டுச்சட்டியிற் குதிரையோட்டும் கல்வி அதிகாரிகள் மத்தியில் அம்மா அதிசயப் பிறவியாய்க் கடமை புரிந்தார்.

கற்றல், கற்பித்தலிற் சீர்திருத்தங்கள், மாற்றங்கள் என்றதும் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் நடாத்தி; அதிபர், ஆசிரியர்களை விழிப்பூட்டுவதில் துணுக்காய் வலயமே முன்னிற்கும். புதிய கருத்துகள் உற்சாகத்தோடு ஊட்டப்பட்டது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்" என்னும் குறள் காட்டும் நுட்பம் கைவரப்பெற்றவரான பணிப்பாளர் எவ்வெக்காரியம் எவராற் சிறப்புற முடிக்கமுடியும் என்பதைத் துல்லியமாக இனங்கண்டுகொள்ளும் ஆற்றல் காரணமாகப் பணிகளைப் பொருத்தமானவர்கள் மூலம் கச்சிதமாகச் செய்து முடித்தார்.

வன்னிச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரிய பல திட்டங்கள் அற்புதமாகத் தீட்டப்பட்டன. அத்திட்டங்கள் நம்பகத்தன்மைமிக்க, மிகவிபரமான புள்ளி விபரங்களின் அடிப்படையில் தீட்டப்பட்டு, அவசியமான, அவரசமான தேவைகள் செயற்றிட்டங்களாக்கப்பட்டு; அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் வேண்டப்பட்டன. அவ்வுதவிகளூடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. தொண்டு நிறுவனங்களை மிகச் சரியாகவும், மிக அதிகமாகவும், கல்வி அபிவிருத்திப்பணிக்குப் பயன்படுத்திய ஒரே ஒரு கல்வி அதிகாரி திருமதி வேதநாயகமே என்பதை, எளிதில் எவராலும் மறுக்க முடியாது. இவ்வாறு ஏற்றவேளையிற் பொருத்தமானவர்களிடம் பெருமுயற்சியின் விளைவாகப் பெற்றுக்கொண்ட உதவிகள் துணுக்காய்க் கல்வி வலயத்தின் வளர்ச்சிக்கு, அதுவும் அன்றைய சூழலில், வற்றாத வளநதியாய்ப் பாய்ந்து வளமூட்டிற்று.

**ஆசிரியர் பற்றாக்குறையும் நிவர்த்தியும்**

ஏற்கனவே கோட்டக்கல்வி அதிகாரியாகச் சேவையாற்றிய காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யத் தகுதியும், செயற்றிறனும் மிக்க 106 தொண்டராசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு, பற்றாக்குறை நிலவிய பாடசாலைகள் தோறும் சேவையிலீடுபட்டனர். இவர்களின் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டை மேலும் வலுவூட்டும் பல்வேறு நடவடிக்கைகள் காலத்திற்குக்காலம் வலயத்தினால் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு வதிவிடக் கருத்தரங்குகள், பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டதோடு பல்வேறு வகைகளில் அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்

டுப் பாராட்டப்பட்டனர். மாணவர் தொகை வீங்கிப் பருத்து, அதேவேளை ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய அக்காலகட்டத்தில் துணுக்காய்க் கல்வி வலயத்தின் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டை தோளிற்சுமந்து வளர்த்தெடுத்த, தொண்டராசிரியர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதில் வலயம் முன்னின்று அவர்களுக்கு பலசலுகைகளை யும், உதவிகளையும் தொண்டு நிறுவனங்களூ டாக வாங்கி ஒத்துழைத்தது. இவர்களில் தொடர்சேவை யாற்றிய அனைவரும் நிரந்தர ஆசிரியர்களாகி இன்றும் முன்மாதிரியான ஆசிரியர்களாக, சிறந்த சேவையாளர்களாக வழிகாட்டியவர். அன்றைய துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் என்பதை அவ்வாசிரியர்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

மாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஒத்துழைப்பை வேண்டி, பல செயற்றிட்டங் கள், கருத்தரங்குகள், பயிற்சிகள் எனப் பலவும் மேற்கொள்ளப்பட்டன. துணுக்காய்க் கல்வி வலயம், துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டு சுட்டான் என்ற மூன்று கஷ்டப் பிரதேசங் களின் வலயமாக விளங்கி எதிர்கொண்ட அறைகூவல்கள் எண்ணற்றவை

**இடப்பெயர்வும் பாடசாலைகளின் நிலையும்**

சில பாடசாலைகள் இடம்பெயர்ந் தோர் நலன்புரி முகாம்களாக விளங்கின. பல பாடசாலைகள் யுத்த நெருக்கடியினால் உரிய இடங்களில் இயங்கமுடியாதிருந்தன. 35 பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்கிய போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தன. நிரந்தரமாக இயங்கிய பாடசாலைகளும் பல பற்றாக்குறைகளையும், நெருக்கீடுகளையும் எதிர்கொண்டிருந்தன. இத்தனை அறைகூவல்களையும் ஒட்டுமொத்த மாக எதிர்கொண்டு, அதேவேளையில் அசாதாரண இடப்பெயர்வு, யுத்தச்சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைமக்களின் ஒரே நம்பிக்கையாக விளங்கிய அவர்களது பிள்ளைகளின் கல்வியைக் கட்டிக்காத்து வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு வலயக் கல்விப்பணிமனைக்கிருந்தது. இப் பாரிய பொறுப்பின் காத்திரம் கல்விப்பணிப் பாளரால் முழுமையாக உணரப்பட்டது. அசுர உழைப்பு, அயராத முயற்சி, தன்னல மின்மை, விவேகம் நிறைந்த ஒரு கல்விப்பணிப் பாளர் அவ்வேளையில் அங்கு கடமையாற்றிது இறைசித்தமே. மலையே சரிந்தபோதும் தன் தலையாற் தாங்கி வன்னிக்குழந்தைகளின் கல்வியை வளர்த்தார்.

**ஆரம்பக்கல்வி அபிவிருத்தி**

கல்வி அபிவிருத்தியின் அடித் தளமான ஆரம்பக்கல்வி அவ்வேளையிற் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. மொழி, கணித அறிவிற் பிள்ளைகள் பின்தங்கியிருந்தனர். இவ்வாறு பின்தங்கிச் சோர்வடைந்திருந்த மாணவர்கூட்டம் தன்னம்பிக்கையுடன் கற்றலை எதிர்கொள்ள; தரம் 03 மாணவர் களுக்கான மூன்றாண்டுக் கல்வி அபிருத்திச் செயற்றிட்டம், வெற்றிகரமாக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் முன்னெ டுக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் கோட்டங்களையும் உள்ளடக்கிச் செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பதிலும், தேர்வை எதிர்கொண்டு, சித்தி பெறுவதிலும், சாதாரணமாக அனேக மாணவர்கள் இடர்ப்பாடுகளை எதிர்கொள் வது வழமை. எனினும் கோட்டத்திற்குப் பொறுப்புவகித்தபோதிலும், வலயக் கல்விப் பணிப்பாளரான போதிலும் திருமதி வேதநாயகம் அவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு வழங்கிய அக்கறை அதிகமான தும், இடையறாததுமாகும். தற்போதைய

உலகில் கணிதம், விஞ்ஞானம் சார்ந்த விடயங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் அதிகமானது என்பது மட்டுமல்ல; மிகச்சிறந்த ஒரு கணித ஆசிரியராகவிருந்து, கணித பாடத்தைக் கற்பித்த ஒருவர் என்ற வகையிற் கணிதம், விஞ்ஞானம் தொடர்பில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நன்கு புரிந்தவராகவும், கணிதத்தின் முக்கியத்துவம் உணர்ந்து, யாழில் கணிதவள மூலநிலையம் உருவாக்கி அதன் பொறுப்பை ஏற்றுச் சிறப்புற நடத்திய அனுபவமும்கூட இதற்குக் காரணமாகும்.

இத்தகைய அடிப்படையில் தரம் 07 மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடங்களிற் செயற்றிறன் விருத்தி, தரம் 08, 09 மாணவர்களின் கணிதபாட அடைவுமட்டத்தை உயர்த்துதல், தரம் 11இல் கணித, விஞ்ஞான அடைவினை உயர்த்துதல் போன்ற பல மூன்றாண்டுக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. அத்தோடு வருடாவருடம் கணித, விஞ்ஞானப் புதிர்ப்போட்டிகள் ஊடாக மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், கணிதபாட ஆசிரியர்களது வாண்மைவிருத்தி தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் தானே நேரடியாக கணித ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளைச் சேவையாகச் செய்து, ஆசிரியர்கள் வளப்படுத்தப்பட்டன.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்**

இவ்வாறு மாணவர்களின் ஏனைய பாடங்கள், அழகியற்செயற்பாடுகள், மெய்வன்மைப் போட்டிகள், தமிழ்த்திறன் போட்டிகள், முறைசாராக்கல்வி, நூலகவிருத்தி என்பன தொடர்பாகவும், செயலமர்வுகள், பயிற்சிகள், பட்டறைகள் எனப் பலபடப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றோடு அதிபர்களுக்கான நிர்வாகம், முகாமைத்துவம் தொடர்பிலும் அடிக்கடி பயிற்சிகள் வழங்கப்பட்டன.



வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆளணியினர் தொடர்பாகவும் பல்வேறு வாண்மை விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வாராவாரம் வலயமட்டச் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு இனங்காணப்பட்ட பிரச்சனைகளுக்கு உடனுக்குடனேயே சாத்தியமான தீர்வுகள் காணப்பட்டன.

**ஆசிரியர் தாபனமும் நிதியும்**

அதிபர், ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் முல்லைத்தீவில், முல்லை மாவட்டக் கல்விப்பணிமனை அமைந்திருந்தமை காரணமாக நியமனம் தொடர்பானவை, சம்பள வேற்றம், சம்பள நிலுவைகள், முற்பணங்கள், கடன்கள், ஏனைய பல்வேறு பிரச்சனைகளையும் தமது தொழில் தொடர்பில் எதிர்நோக்கியிருந்தனர். இவை அனைத்தையும் குறுகிய காலத்திற்குள்ளேயே சரியான முறையில் விரைந்து தீர்வுகளைக் கண்டது துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம். இவ்வாறு இவர்களின் தொழிற் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்து, அவர்கள் திருப்தியோடும், மகிழ்ச்சியோடும் தமது கடமைகளை மேற்கொள்ள வழிவகுத்தமையில்

வலயக்கல்விப் பணிப்பாளரின் பங்கு அதிக மானது. தமது வலயத்தின் மாணவர்களது நலன்களைப் பேணுவதில் மட்டுமன்றி, அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களது நலன் களைப்பேணி தொழிற்றிருப்தியை ஏற்படுத்தி யதிலும் அனைவரது மதிப்பையும், நம்பிக்கை யையும் அம்மா பெற்றுக்கொண்டார்.

எனவே, புதியதொரு வலயத்திற்காகக் கால்கோளிட்டு, நிர்மாணித்து, செப்பனிட்டு, வழிநடத்தியது மட்டுமன்றித் தொடர்ந்து வருவோர் தமது கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சரியான வழித்தடத்தில் இலகுவாக இட்டுச்செல்லப் பாதை சமைத்தவ ராகவும் திருமதி வேதநாயகம் அமைகின்ற மையைக் குறிப்பிடவேண்டும். எனினும் இத்தகைய கடினபணியை ஆற்றுவது அவருக் குக் கடினமானதன்று, என்பதை அவரின் ஆற்றலை அறிந்தவர்களுக்குப் புரியும். இங்கு விசேடமாக வரலாற்றிற் பதிவுசெய்ய வேண்டிய விடயம் அவர் தம் கடமையை ஆற்றிய காலப்பகுதியும், சேவைபுரிந்த பிரதேசமும் ஆகும்.

**நிறைவுரை**

வன்னியின் வரலாற்றில் மிகநெருக் கடியான காலகட்டங்களில் ஒன்றில் மிகச் சிறப்பாகக் கடமையாற்றிய வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளீஸ்வரி வேத நாயகம் என்பதை வரலாறு நிச்சயம் பதிவு செய்து கொள்ளும்.

சரியான புள்ளிவிபரங்களைச் சரியாகச் சேகரித்தல், அவற்றை நிரற்படுத்தல், ஆவணப்படுத்துதல் என்பவற்றினூடாகச் சரியாகத் திட்டமிடுதலும் செயற்றிட் டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்து வதிலும் மட்டுமல்ல; அவற்றைச் செயற் படுத்தும் வளங்களை, ஆதரவைப் பெறுவதி லும் அவருக்கு நிகர் அவராகவே விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அவரிடம் காணப்பட்ட அதீத தன்னம்பிக்கையும், அசாத்தியத் துணிச்சலும் அவரை ஓர் இரும்புப் பெண்மணி எனப் பார்த்தோரை வியக்கவைத்தமை ஒன்றும் ஆச்சரியமல்ல.

இவ்வாறு வன்னியின் வரலாற்றில் மிக நெருக்கடியான காலகட்டங்களில் ஒன்றிற் றானும் அந்நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த போதும், தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி, எதிர்மறைகளை, நேர்முகமாய் மாற்றி, அறைகூவல்களை வெற்றிகொண்டு, எதை இழப்பினும் கல்வியை இம்மாணவர் இழந்து விடக்கூடாது என்ற இலட்சிய வேட்கை யோடு, நான்கு முழு ஆண்டுகள் துணுக்காய்க் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் தொடர்ந்து துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளரா கவும் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் ஆற்றிய உன்னத சேவையினை இன்றும் அப்பிரதேசம் மனத்திருத்திப் போற்றுகின்றது. தனது சேவையினை அவர்கள் மீண்டும் ஒருமுறை மனதோடு மீட்டிப் பார்க்கும் வேளையில் ஒவ்வொரு காலகட்டங் களையும் ஒப்பிட்டுப் பார்ப்பார். அவ்வேளை யில் வன்னிப் பிரதேசத்தில் அவர் ஆற்றிய சேவையின் தராசு தாழ்ந்து நிற்கும். அதைக் கண்டு அவரே வியந்து போவார். ஆத்ம திருப்தியில் ஆனந்தமடைவார்.

திருமதி கோகிலவாணி தேவராஜா,
திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை.

# யாழ் கல்வி வலயப் பாடசாலைகளில் விஞ்ஞானக்கல்வி - ஒரு நோக்கு

**1992ஆம் ஆண்டு காலப்பகுதியில்...**

யாழ். கல்விவலயம் IIஇல் திருமதி அ.வேதநாயகம் கணித உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும்போது திரு.எஸ்.சுந்தரலிங்கம் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார். இவர்கள் இருவரும் யாழ். மாவட்டத்திற்கான கணித விஞ்ஞான மூலவளநிலையத்தினை 10-03-1992இல் யா/கோப்பாய் மகாவித்தில் ஆரம்பித்து வைத்தனர். இதன் மூலம் மாணவர்களுக்குக் கிடைத்த பயன்கள் அளப் பரியன.

இக்காலப்பகுதியில் விஞ்ஞானபாட ஆர்வத்தைத் தூண்டும் வகையில் விஞ்ஞான வினாடி வினாப் போட்டி நடாத்தப்பட்டது. ஆறு கோட்டங்களில் ஐந்து மாணவர்கள் தரம் 6-11 வரையுள்ள வகுப்புக்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு 150 மாணவர்கள் பங்கு கொண்டனர்.

- இரண்டாம் சுற்றுப்போட்டி யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் 22.06.1992ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. வெற்றிபெற்ற மாணவருக்கு சான்றிதழ் களும் பரிசுப்பொருட்களும் வழங்கப் பட்டன.
- கொத்தணி மட்டத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு விசேட விஞ்ஞான வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.
- வானியற் பாசறைகள், இலத்திரனியல் செயல்முறை வகுப்புக்கள் இவ் வள நிலையத்தால் நடாத்தப்பட்டது.
- இடம் பெயர்வு ஏற்பட்டபோது வலிகாம வலயப் பாடசாலைகளுக்கு இவ் வள நிலையத்தில் விஞ்ஞானச் செயன்முறைப் பயிற்சி வழங்கப்பட்டு பெறுபேற்று வீதம் அதிகரிக்கப்பட்டது.
- பாடசாலைகளில் செயன்முறை உப கரணங்கள் குறைவாக இருக்குமிடத்து வளநிலையத்தின் மூலம் செயன்முறைப் பயிற்சி வழங்கப்பட்டன.

**திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்**

- 1996 இல் துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியபோது ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்தில் விஞ்ஞானப்பகுதி செய்முறை நூல்கள் தயாரித்து வழங்கப்பட்டன.

மேலும், மணிவிழாக்காணும் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் யாழ். கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில்;

- இடைநிலை வகுப்புக்களுக்குரிய ஆய்வு கூட ஒழுங்கமைப்பு, போட்டி அடிப் படையில் சீராக்கப்பட்டது.
- குழுச்செயற்பாடுகள் மூலம் மாணவர் களை ஆர்வத்துடன் ஈடுபட ஆசரியர்களுக் கான பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- தேசிய கல்வி நிறுவகத்தின் உதவியுடன் வளவாளர்களைக் கொண்டு 2010இல் தரம் 9, தரம் 10, 11 இற்குரிய ஆசிரியர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியிலும், யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் செயன்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

**விஞ்ஞானத்துறை சார்ந்த இணைப்பாட விதானச் செயற்பாடுகள்**

- விஞ்ஞான வினாடி வினாப்போட்டி வருடாவருடம் நடாத்தப்பட்டு மாணவர்க

ளுக்கு சான்றிதழ்களும், பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

- வலயமட்டத்தில் விஞ்ஞானபாட கண்காட்சி 2009இல் யா/ இந்து மகளிர் கல்லூரியில் மாணவருக்கு செயன்முறைத் திறன் அறிவுக்கு வழி செய்யப்பட்டது.

**செயன்முறைப் பாசறைகள்**

- 2009இல் பின்வரும் பாடசாலைகள் இனங் காணப்பட்டு செயன்முறைப் பாசறைகள் நடாத்தப்பட்டன.
  யா/அத்தியார் இந்துக்கல்லூரி
  யா/ ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்
  யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்
  யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்
- வானியல் பாசறைகள் 2009, 2010களில் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடாத்தப் பட்டன.
- தரம் 9 மாணவர்களுக்கும் இருமொழி மூலம்மாணவர்களுக்கு வானியல் பாசறை கள் நடாத்தப்பட்டன.
- தரம் 11 மாணவர்களுக்கு இருமொழி மூலம் இலத்திரனியல் செயன்முறைப் பயிற்சி வழங்கப்பட்டன.
- 2011 இரண்டாம் தவணைக்கான கண்காட்சிக்குரிய செயற்பாடுகள் ஆசிரி யர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.
- தரம் 9, 11 இற்கு இருமொழி மாணவர் களுக்கும் தவணை ரீதியாக மதிப்பீட்டு வினாத்தாள் வழங்கப்பட்டு மாணவரின் புள்ளிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலில் மேலும் செயற்பாடுகளை மேம்படுத்த வழிகாட்டப்பட்டு வருகின்றது.
-

**நூலகப் பயன்பாடு**

- பாடசாலைகளுக்கு மேலதிக வாசிப்புக் களுக்கான விஞ்ஞானத்துறை சார்ந்த புதிய விடயங்களைக் கொண்ட நூல்கள் பயன் படுத்த வழிசெய்யப்பட்டுள்ளது.
- அன்றாடத் தேர்ச்சிக்கும் சூழல் பிரச்சனை களை இனம் கண்டு தமது செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் வழிகாட்டப்பட்டு வருகின்றது.

**செயன்முறைச் செயல்நூல்கள்**

- 2008இல் JICA செயற்றிட்டத்தில் தரம் 10, 11ற்கு விஞ்ஞானச் செயன்முறைச் செயல் நூல்களை யாழ். கல்வி வலயத்தினால் தயாரித்து சித்தி வீதம் குறைந்த பாடசாலை மாணவருக்கு வழங்கப்பட்டது.
- 2008இல் தரம் 10, 11ற்குரிய செயன்முறைச் செயல்நூல் மாகாண கல்வித் திணைக் களத்தின் அனுசரணையுடன் தயாரித்து யாழ். மாவட்ட பாடசாலை முழுவதுக்கும் வழங்கப்பட்டது.
- 2009இல் தரம் 7, தரம் 8 இற்குரிய விஞ்ஞானச் செயன்முறை செயல்நூல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- 2010இல் தரம் 9 இற்குரிய புதிய பாடத்திட்டத்திற்குரிய செயன்முறைச் செயல்நூல் தயாரித்து அடைவு மட்டம் குறைந்த பாடசாலை இந்நூலை மாணவர் கள் கற்பித்தற் செயற்பாட்டின்போது பயன்படுத்துகின்றனர்.

# Zonal Wise Science Performance in G.C.E (O/L)

## 2009 -2010

## Passed Percentage Vs Year

| | 2008 | 2009 | 2009 |
|---|---|---|---|
| Jaffna | 58.4 | 57 | 66.9 |
| Nallur | 62.05 | 59.4 | 72.8 |
| Kopay | 32.25 | 36.6 | 50.3 |






## Zonal Wise Science Performance in G.C.E (O/L) 2008 -2010

### Passed Percentage Vs Year

| | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| % Pass | 55.94 | 55.8 | 65 |






- யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் காலப்பகுதியில் பின் தங்கிய மாணவர்களைக் கொண்ட கோப்பாய் கோட்டப் பாடசாலைகள்.
- 2008லிருந்து 2009இல் க. பொ.த சாதாரண சித்தி வீதம் 3.25%ஆல் அதிகரித்துள்ளது.
- 2009லிருந்து 2010 க.பொ.த சாதாரண சித்தி வீதம் 13.7% ஆல் அதிகரித்துள்ளது.
- இதற்குக் காரணம் அதிபர் ஆசிரியர்களினது ஒத்துழைப்புடன் கல்விப் பணிப்பாளர் உதவிக்கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்களினதும் அயராத முயற்சியின் பயன்பாடு என்பது முக்கியமானதொன்றாகும். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து குறுகிய காலத்தில் யாழ் வலய மாணவர்களின் கல்வியில் எழுச்சியை ஏற்படுத்திய சாதனையாளராக திருமதி அ.வேதநாயகம் திகழ்கின்றார்.

திரு.ச.அருந்தவரத்தினம்
ஆசிரிய ஆலோசகர், விஞ்ஞானம்
யாழ். கல்வி வலயம்.

# கடமையே கண்ணாக பணியால் உயர்ந்த மணிவிழா நாயகி திருமதி அருளீஸ்வரி வேதநாயகம்

மணிவிழாக் காணும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேத நாயகம் அவர்களை இந்த வேளையில் வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்ச்சியடை கிறேன்.

யாழ்ப்பாண மண்ணின் மிகப் பெறுமதி மிக்க சொத்தாக விளங்கும் கல்விப்புலத்தினை மேம்படுத்தும் பணியினை திருமதி வேதநாயகம் அவர்கள் முக்கியமான பங்கை ஆற்றியுள்ளார்.

யாழ். கல்விப் பணிப்பாளராக இருந்தபோது எமது நிறுவனத்தின் போசகராக இருந்து வழிகாட்டி பூரண ஒத்துழைப்பை எமது நிறுவனத்திற்கு வழங்கிய மதிப்பிற்குரிய திருமதி அருளீஸ்வரி வேத நாயகம் அவர்களை சேவை நலன் பாராட்டு வதில் பெருமிதம் அடைகிறேன்.

கல்வி என்பது பூரண மனிதனை உருவாக்குகின்றது. கல்வியின் மூலம் மனிதனுள் புதைந்திருக்கும் ஆற்றல்கள் வெளிப்படுத்துவது மாத்திரமல்லாது அவரு டைய ஆளமை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவு கிறது. கல்வியைப் பெற்றுக்கொடுப்பதில் ஆசிரியர் பங்கு மகத்தானது. கற்பித்தற் கலையை உயிர் மூச்சாகவும், மாணவர் முன்னேற்றத்தை இலட்சியமாகவும் கொண்ட ஆசிரியர் நிலை மாற்று வகிபாகமாக மாணவர் மத்தியில் இடம் பிடிக்கின்றனர். திருமதி வேதநாயகம் அவர்கள் கணித ஆசிரியராக கணித வளவாளராக, ஆசிரிய ஆலோசகராகக் கல்விப் பணிப்பாளராக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கல்விக்குப் பெரும் தொண் டாற்றியுள்ளார். இவரது சுறுசுறுப்பு, விடா முயற்சி, எடுத்த கருமம் முடிக்கும் ஆற்றல், வழிகாட்டி, ஆலோசகராக இருந்து கடமை யாற்றியுள்ளார். இவரது ஆலோசனை மாண வர், ஆசிரியர், அதிபர், கல்வி உத்தியோகத்தர் அனைவருக்கும் தனது அனுபவம் மூலம் பல கல்வி நடவடிக்கைகளில் இவர் ஈடுபட்டுள் ளார். கணித வள நிலையம் அமைத்து அரிய தொண்டுகளை மேற்கொண்டுள்ளார்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கும் அளப்பரிய பணிகளை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக க.பொ.த (உயர்) வகுப்பில் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதும், இடைநிலை வகுப்பில் ஆங்கில மொழியினூடான விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதுடன் கள வேலைகளிலும், மாணவரின் ஆராய்ச்சி களிலும் முக்கிய பங்கை வகித்துள்ளார். உயிரியல் பாடத்தில் மாணவர் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்தமையால் அதற்குரிய வழிகாட்டல் கருத்தரங்குகளை நடைமுறைப் படுத்த வழிகாட்டியுள்ளார். இதன் பொருட்டு கொழும்பில் இருந்து வளவா ளர்கள் வர வழைக்கப்பட்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. ஆசிரியரின் நெளிவுசுழிவு களை அறிந்து கருத்தரங்குகள் நடாத்தப் பட்டன. புதிய பாடத்திட்டத்திற்கு அமை வான கருத்தரங்குகள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் ஆசிரியருக்கான கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன. மாண வருக்கான கருத்தரங்குகள் அவர்களின் தேவையை அறிந்து நடாத்தப்பட்டன. அவரது வழிகாட்டலில் ஆசிரியருக்கான

களப்பயணம் மேற்கொள்ளப்பட்டன. கற்பித்தல் சாதனங்கள் பெற்றுக் கொள்வதற்கு ஒத்தாசை புரிந்துள்ளார். குறிப்பாக G.T.Z நிறுவனத்திடமிருந்து கற்பித்தற் துணைச் சாதனங்கள் பெற உதவியுள்ளார். ஆங்கில மொழி மூல விஞ்ஞான பாடக் கற்கைக்கு உறுதுணையாய் இருந்து கருத்தரங்குகள் சோதனைகள் நடாத்துவதற்குப் பல வழிகளி லும் உதவி புரிந்துள்ளார்.

திருமதி அ.வேதநாயகம் அவர்கள் அன்பும், அறிவும் மிக்கவர். கடமையே கண்ணாக இருந்து செயற்படுபவர், பின் தங்கிய மாணவருக்கு உரிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளுபவர், பொருத்தமான கல்விப் பணிப்பாளராக இருந்து வழிகாட்டுபவர். இவரது கல்விச் சேவை நீடிக்கவும், நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் சிறப்பாக இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கின்றோம்.

**திருமதி ம.இராஜாராம்**
*கற்கை நெறிப் பணிப்பாளர்,*
*தொண்டைமானாறு வெளிக்களநிலையம்*

# கல்வி விழிப்புணர்வு குறும்படங்களும் கல்விப் பணிப்பாளரும் இயக்குனரின் - ஓர் அனுபவப் பகிர்வு

2007 போர் மூட்டங்கள் இன்னும் கலைந்து விடாத ஒரு மாலைப்பொழுது தென்மராட்சியில் குக்கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களை நோக்கி மீளக் குடியமர்ந்து கொண்டிருந்தவேளை. என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என்ற இனம் புரியாத பயம் கௌவிப் பிடித்துக் கொண்டிருந்த காலை, என் நண்பன் ஒருவனைக் காணபதற்காக வரணியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது எனது மோட்டார் சயிக்கிளையும் முந்திக் கொண்டு ஒரு Heavy duty ஒடு Super. T.V.S மோட்டார் சயிக்கி ளில் ஒரு பெண்ணும் ஆணுமாக வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். தெருப்புழுதியும் அவர்களது மோட்டார் சயிக்கிள் புகையும் எனது வேகத்தைக் கட்டுப்படுத்தின.

நான் உரிய இடத்தைச் சென்றடைந்த வேளை அங்கே ஆறு ஏழு பேர் கொண்ட கூட்டத்தில் அந்தப் பெண்மணி ஏதோ கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்தக் கூட்டத்தில் தான் எனது நண்பனும் இருந்தமையால் அதில் நானும் இணைந்து கொண்டேன். "தயவு செய்து உங்கட பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப் புங்கோ. கல்வியால தான் நாங்கள் எதையும் சாதிக்கலாம். எங்கட எதிர்காலம் சிறக்க வேண்டுமென்றால் உங்கட பிள்ளைகள் படிக்க வேண்டும். மதிய உணவு, யூனிபோம் துணி, புத்தகம் கொப்பியெல்லாம் நாங்கள் தருவம், நல்ல ஆசிரியர்கள் அதிபரையும் உங்கட பள்ளிக்கூடத்திற்கு நியமிச்சிருக்கிறம். பிள்ளைகள் வந்தால் தானே பள்ளிக்கூடத்தை நாங்க இயக்கலாம்" என்று உரையாற்றிக் கொண்டிருந்தார் அப்பெண்மணி. நான் எனது நண்பனின் முகத்தைப் பார்த்தேன். "உவதான் மச்சான் தென்மராட்சிக்குப் புதிசா வந்த கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் மற்றவர் அவரது கணவர் வேதநாயகம். என் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அந்திசாயும் நேரம் ஆறு மணிக்கு ஊரடங்குச் சட்டம். இந்த நிலைமையிலும் இப்படியொரு சேவையா! துடிப்பான பார்வை. மிடுக்கான நடை, கனிவான பேச்சு, வெற்றிதான் என் மூச்சு என்று எண்ணும் படியாக அவர் காணப்பட்டார்.

கதைக்க வேண்டும் போல் இருந்தது. ஆயினும் அவர் கடமை நிமிர்த்தம் அடுத்த கிராமத்தை நோக்கி அவசரமாய் புறப்பட்டமையால் அன்று முடியவில்லை. கடமை நேரத்திற்கு அப்பாலும் கல்வி விருத்திக்காய் தன் கணவருடன் இணைந்து காரியமாற்றிக் கொண்டிருந்த கல்விப் பணிப்பாளரை சந்தித்துக் கதைக்கும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அடுத்த வாரம் எனத கடமை நிமித்தம் யா/மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்திற்கு நான் சென்ற வேளை, அதிபருடன் கல்விப் பணிப்பாளர் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அதிபர் திரு. சிவானந்தம் அவர்கள் என்னை கல்விப் பணிப்பாளருக்கு அறிமுகப்படுத் தினார். நான் பழக்கிக் கொண்டிருந்த "முது சொம்" விசேட கூத்தைப் பற்றியும் எடுத்து ரைத்தார். "அப்படியா நல்லது கூத்தென்றால் எனக்கும் பிடிக்கும். நானும் பார்க்க

விரும்புகிறேன்" நாடகத்தினைப் பார்த்தார். நாடகம் சொல்லும் செய்தி எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது. இதனைக் கிராமம் கிராம மாகக் கொண்டு சென்று மேடையேற்றினால் என்ன? இதனால் மக்களுக்கும் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்" நானும் சம்மதித்தேன். குறிப்பிட்ட திகதி ஒன்றில் வரணிப் பகுதியில் அந்நாடகத்தை (கூத்து) மேடையேற்றி மக்களோடு ஓர் கலந்துரை யாடலை வைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட அந்த நாளும் வந்ததும் கல்விப் பணிப்பாளர் தமது வாகனத்தில் வருகை தந்திருந்தார். அதிபரும் ஆயத்தமாகி விட் டார். அதில் நடிக்கும் மாணவர் ஐந்து பேர் வந்து சேரவில்லை. தூரத்தில் பயங்கரமான வெடிச் சத்தங்களும் ஷெல் கூவிக்கொண்டு போகும் இரைச்சல்களும் காதைப் பிளந்து கொண்டிருந்தது. "அங்கே ஏதோ பிரச்சனை யாம் பிள்ளைகளால் வர முடியாதாம். ஊரடங்கு நேரமும் முன்னதாகவே அறிவிக்கப் படலாம்" என்ற செய்திகளால் அன்றைய நிகழ்வு தடைப்பட்டுப் போனது.

"சேர் இப்படிச் சம்பவங்கள் இனியும் நடக்கலாம். எனக்குப் பட்டதை உங்களுக்குச் சொல்கிறேன். சரிவருமென்றால் நீங்கள் தான் யோசிக்க வேண்டும். இந்த நாடகத்தை வீடியோப் படமாக்கி கையில் வைத்திருந்தால் நினைத்த நேரம் ஊரூராய் போய்க் காட்டி விழிப்புணர்வையும் ஏற்படுத்தலாம்" "நல்ல யோசனை உந்த அலுவலை உடனடியாகச் செய்வோம் அதற்கு காசு பணம் வேணுமே எங்க போக எப்படிப் பெற்றக்கொள்ள" என்று என் கருத்தை முன்வைத்தபோது "காரியத்தில் இறங்குங்கள் காசைப் பற்றி யோசிக்க வேண்டாம்" என்றார் கல்விப் பணிப்பாளர்.

குறும்படத்திற்கு ஏற்றதாய் கல்வி விழிப்புணர்வு ஊட்டுவதாய் ஒரு புதுக் கதையை நான் சொன்னேன். மாற்றங்கள் சில சொல்லி ஆசீர்வாதமும் தந்து ஆரம்பிக்கச் சொன்னார் அந்தப் பணிப்பாளர். திரு.க. இரட்னேஸ்வரனின் சிறிய ரக கைக்கமராவு டன் கைதடி நாவற்குழி தெற்கு கரையோரக் கிராமத்தில் படப்பிடிப்பை ஆரம்பித்தேன். பள்ளிக்குப் போகாமல் விளையாடிக் கொண் டிருக்கும் சிறுவர்களை, பாதியில் படிப்பை விட்டதால் மனம் நொந்து போய் தூண்டில் போட்டி சீவிக்கும் வளர்ந்த சிறுவர்கள் அறிவுரை சொல்வதாகவும், பள்ளிக்குப் போகும்படி அடித்துக் கலைப்பதாகவும் அந்தக் காட்சி இடம் பெறவேண்டும்.

திட்டமிடப்பட்டபடி கரையோரத் தில் இக்காட்சியைப் படமாக்க அக்காலச் சூழ்நிலை இடம் தரவே இல்லை. கடலில் கால் வைத்தால் உயிரும் போகும் நிலை. எனவே ஊர்முகப்பில் காணப்பட்ட ஓர் தாமரைக் குளத்தில் வைத்து இக்காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தோம். பார்வை யாளர் கூட்டம் அதிகரிக்கத் தொடங்க காவலரண் பக்கத்திலிருந்து கண்காணிப்பு ஏற்பட எனது தாயார் ஓடிவந்து 'தம்பி இனிக் காணும் அவங்கள் வந்தால் பிரச்சனை" என்று பாதியிலே நிறுத்திவிட்டார். வேகமாகவே நாங்கள் அந்த இடத்தை விட்டு அகன்றோம். மனதில் ஓர் பயம் ஏதாவது ஆகிவிடுமோ. அடுத்த நாள் விசாரித்தேன். பிரச்சினை ஏதும் இல்லை என அறிந்தேன். எடுத்த காட்சிகளை கணனியில் போட்டுப் பார்த்தோம். திருப்பி எடுக்கவும் புதிதாய் படம் பிடிக்க வேண்டிய தேவையும் இருந்ததால் ஐந்து நாள் கழித்து மீண்டும் முயற்சித்தோம். சந்தடி ஏதுமின்றி ஊர் நடிகர்களையும் அழைத்து நினைத்த காட்சிகள் அனைத்தையும் எடுத்து விட் டோம். அடுத்த காட்சிகளைப் பயமற்ற ஓர் இடத்தில் எடுக்கத் தீர்மானித்தேன். நடந்த பிரச்சினைகளை அறிந்த கல்விப் பணிப்பாளர் விரைந்து வந்து எங்களுடன் விரிவாக ஆராய்ந் தார். சிக்கலைத் தவிருங்கள் அடுத்த நிகழ்

களத்தை, பாதுகாப்பானதாய் தெரிவு செய்யுங்கள். எனது வீட்டையும் நடிகர் தேவையெனின் எனது குடும்பத்தையும் நீங்கள் பயன்படுத்தலாம் என்று சிறந்த ஓர் தயாரிப்பாளருக்குரிய கடமையுடன் அவர் சொன்னார். ஏற்றுக் கொண்டு அடுத்த நாள் அவர் வீட்டில் படம் பிடித்தோம். கூலி வேலை செய்து குத்தி இடித்துத் தன் பிள்ளை களைப் படிப்பிக்கும் ஏழைத் தாயாக அவரின் ஒரே மகளைத் தெரிவு செய்தோம். அவரின் கணவரே அப்பெண் மீது இரக்கமுற்று உதவி செய்யும் அவ்வீட்டுக்காரனாக நடிக்கவும் சம்மதித்தார். இந்தப் படப்பிடிப்பு அவர் வீட்டு முற்றத்திலும் கோடிப் புறத்திலும் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.முத்துலிங்கத்துடன் கல்வி வலயக் கடமைகளை பொறுப்போடு ஆற்றிக் கொண்டிருந்தார்.

அடுத்த நிகழ்களத்தை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலே பீடாதிபதி யின் அனுமதியுடன் தெரிவுசெய்தேன். பாதுகாப்பு நோக்கம் முக்கிய காரணம். கல்லூரியின் உபபீடாதிபதி திரு.பா.தன பாலன் மற்றும் விரிவுரையாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் விருப்புடன் இணைந்து படத்திலே நடித்தனர். கல்விப் பணிப் பாளரின் மேற்பார்வை யுடனேயே படம் உருவானது. இரட்னேஸ் வரனின் படப்பிடிப்பு, ஒளித்தொகுப்பு, பாடல்கள், கேதீஸின் இசையும் சேர்ந்து "வாழும் போதே" எனும் கல்வி விழிப்புணர்வு குறும்படம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலே வெளியிட்டு வைக்கப்பட்டது. அந் கழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.சத்தியசீலன் அவர்கள் கலந்து சிறப்பித் தார்.

அக்குறும்படம் தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுமல்ல ஏனைய கல்விப் புலங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டது.

இப்படத்தின் வெற்றியுடன் "இன்னுமோர் குறும்படம் எடுக்க வேண்டும் அம்மா" என்று திரு.பா.தனபாலன் கல்விப் பணிப்பளரைக் கேட்டுக்கொண்டார். அதற்குச் சம்மதித்த கல்விப் பணிப்பாளர் தயாரிப்புப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள "வெற்றிக்கு வழி' எனும் குறும்படத்தை எடுத்து முடித்தோம். "வறுமை கல்விக்குத் தடையல்ல" என்ற கருப்பொருளில் அமைந்த அந்தப் படம் நல்லூர் வீர அம்மன் கோவிலி லும், நீர்வேலிக் கிராமத்திலும், யா/ சாதனா வித்தியாலயத்திலும், யா/ கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயத்திலும், யாழ்ப்பாணப் பொது நூலகங்களிலும் எடுத்து முடிக்கப்பட்டது. அந்தப்படமும் கிராமங் கள், அகதி முகாம்கள், கோவில்கள், பாட சாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் காண்பிக்கப்பட்டு கல்வியின் சிறப்பை உணர்ந்து கொள்ள காரணமாய் அமைந்தது. இப்படத்திற்கான நிதியை யாழ்ப்பாணம் C.H.I. நிறுவனத்திடமிருந்து பெற்று தயாரிப்பு வேலைகளை சிறப்பாக நிறைவேற்றினார் கல்விப்பணிப்பாளர்.

கற்பித்தலில் ஆசிரியரை சிறப்பாக ஊக்குவிக்கவும் ஆசிரியத்துவத்தை மேன் மைப்படுத்தவும் என "ஒப்பிலாமணியே" என்ற படம் 2008ஆம் ஆண்டு ஆசிரியர் தினத்தன்று வெளியிடப்பட்டது. இதில் பிரதம பாத்திரத்தை யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி கலாமணி அவர்களும் உபபீடாதிபதி பா.தன பாலனும் ஏற்று நடித்தனர். தயாரிப்பு பொறுப்பினை கல்விப் பணிப்பாளர் ஏற்றுக் கொண்டார். இந்தப் படமும் முற்றுமுழுதாக

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலே படமாக்கப்பட்டது. யமனுடைய காட்சி ஒன்று படமாக்கிக் கொண்டிருந்த வேளை மின்சாரம் நின்றுவிடவே அங்கு பணிபுரியும் ஊழியர்களின் மோட்டார் சயிக்கிள் ஒளியைக் கொண்டு படம் பிடித்துக் கொண்டிருந்த வேளை, மோட்டார் சயிக்கிளின் உறுமல் சத்தங்களைக் கேட்டு இராணுவ அதிகாரிகள் திடீரென கல்லூரிக்குள் பிரவேசிக்க, யமனுடைய வேடத்தில் இருந்த உபபீடாதிபதி தனபாலன் விடயத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்த, இராணுவத்தினர் விளங்கிக் கொண்டு வெளியேறிய நிகழ்வுகள் மறக்க முடியாதவை. மாட்டு வண்டிச்சவாரி மற்றும் ஏனைய நிகழ்வுகள் நீர்வேலிக் கிராமத்திலேயே நடைபெற்றது. இந்தப் படமும் தயாரிப்பாளர் என்ற வகையில் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அவர்களுக்கு பெருமையைத் தேடித்தந்தது. இப்படத்திற்கான நிதியினை அவர் ESP நாகரத்தினம் அவர்களிடம் பெற்று இப் படத்தின் வெற்றிக்கு உதவினார்.

உண்மையில் ஒரு தயாரிப்பாளரும் இயக்குநரும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்பட்டாற் தான் வெற்றி நிச்சயம் என்பதைக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து செயற்பட்டபோது உணர்ந்து கொண்டேன். அவரது ஆலோசனை, வழிகாட்டல், நிதி வளங்களைப் பெற்றுக் கொடுக்கும் அணுகுமுறை, நடிகர்களுடன் இணைந்து செயற்படும் தன்மை என்பன எடுத்த நோக்கம் நிறைவுற காலாக அமைந்தன. வெற்றிக்கு வழி, ஒப்பிலாமணி ஆகிய இரு படங்களின் வெளியீட்டு விழாவிற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களை அழைத்தன் மூலம் கல்வி எழுச்சியில் யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஆகிய மூன்று உயர்கல்வி நிறுவனங்களையும் இணைத்து செயற்பட்ட ஒரு சிறந்த தயாரிப்பாளராக திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் செயற்பட்டுள்ளமை கல்வி அபிவிருத்தியில் அவர் வைத்திருந்த ஈடுபாடும் தெள்ளத்தெளிவாய் விளங்க வைக்கின்றது. எனது நான்காவது படமான "மின்மினி" இயக்கத்தின் போது அப்படத்தின் தயாரிப்பாளரோடு நானடைந்த சொல்லெணாத் துன்பங்களை நோக்கும்போது கதை, வசனம், நெறியாள்கையுடன் அம்மாவுடன் இணைந்து மூன்று படங்களிலும் பணியாற்றிய அந்த இனிமையான நாட்கள் என் வாழ்வில் மறக்கப்பட முடியாத நாட்களாகவும், என்னை விருத்தி செய்து கொள்வதற்கு துணை செய்த காலங்களாகவும் அம்மாவின் தயாரிப்பில் மூன்று வெற்றிப்படங்களை இயக்கிய பெருமிதமும் என்றும் என்னால் மறக்கப்பட முடியாததாகும். இக்குறும்படங்கள் வடமாகாணம், இலங்கை, உலகம் முழுவதும் மிகப் பெரும் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

திரு.க.இ.கமலநாதன்
*விரிவுரையாளர், நாடகத்துறை,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.*

# மனிதம் மிளிரும் ஒளிவிளக்கு

"மனிதம் என்னும் ஓர் இனம்
எழுந்து வந்து எழுந்து வந்து
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்"

என்ற அவாவில் மனிதத்தைத் தேடி அலையும் எமக்கெல்லாம்

ஓர் விடிவெள்ளியாய்
ஓர் கலங்கரை விளக்காய்
ஓர் அன்புப் பொக்கிசமாய்
ஓர் சமூகச் சிற்பியாய்
ஓர் தமிழ்த்தாயாக
ஓர் கணித மேதையாக
ஓர் மனித விழுமியப் பொக்கிசமாய்

என்றெல்லாம் ஓர் பெரு பல்பயன் கொண்ட விருட்சமாக அருள் தந்தவர்தான் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அம்மா அவர்கள்.

அம்மா என்று குரல்கள் வந்து கொண்டிருக்கின்றதே என்று பார்த்தால் அங்கே அக்கூட்டத்தின் நடுவில் அம்மா ஓர் நுட்பத்தை வழங்கிக் கொண்டிருப்பார்.

நான் திருகோணமலையில் ஆசிரிய ஆலோசகராய் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் சிறுவர் அரங்கை வளர்க்கவும் அதனூடாக மனிதம் என்பதை வளர்த்தெடுக்கவும் ஆசிரியர் குழாமாக மாகாணக் கல்வித்திணைக்களம் கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலைகளில் செயற்பட்ட வேளை எமது அம்மாவைக் கண்டோம். பாலர் பாடசாலை, சிறுவர் அபிவிருத்தி என அம்மா அமைச்சில் முனைப்பாக இருந்தார்.

தொடர்ந்து தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கல்விப்பணிப்பாளராக, கதிரையை மட்டும் பிடித்துக்கொண்டிராது வலயத்தின் சகலமட்ட நிர்வாகிகளிடையே ஆழமான உறவை விஸ்தரித்தமையும் பரந்துபட்ட செயற்றிட்டங்களை முன்வைத்து சிறப்பாகச் செயற்படுத்தியிருக்கிறார் என்பதும் பலராலும் இன்றும் பேசப்படுகிறது. யாழ். கல்வி வலயத்திற்கு வந்த பின்பும் அவர்கள் அம்மாவை நாடி வருவதையும் அம்மாவின் ஒவ்வொரு நிகழ்விலும் உறவு பாராட்டி உரிமை கொண்டாடி நிற்பதையும் பார்க்கும் போது அம்மா யாழ். வலயத்தில் மட்டுமல்ல எங்கும் இயல்பு அதுதான் ஓர் சேவை வள்ளல், ஓர் சிறந்த உறவுப்பாலம் என்பது உறுதியாகிறது.

கீழ்வரும் படங்கள் யாழ். கல்வி வலயத்தில் முன்பள்ளிகளில் அவற்றின் மேம்பாட்டுக்கெனச் செய்த செயற்பாடுகள் அவரின் சிறந்த திட்டங்களை / நுட்பங்களை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

1) வலயமட்ட விளையாட்டு விழாவை சிறப்புற ஒழுங்குசெய்து சகல முன்பள்ளி கொடிகளை ஆசிரியர்கள் ஏற்றி மகிழ வலயக்கொடியை அம்மா ஏற்றி வைக்கும் நிகழ்வு மாவட்டத்தில் புதுமையானது. புதுப்புதுத் திட்டங்களை களத்தில் நின்று உருவாக்குவதில் வல்லவர்.



2) முன்பள்ளிகள் பல வான்ட் இசை முழங்க அதில் பாலர் மகிழ, ஒரு பெரிய அணி திரண்டு விருந்தினர்களை வரவேற்க ஆயத்தமாகும் அற்புத களம்.





யாழ் வலய கில்னர் முன்பள்ளியில் பாலர்கள் உடற்தளர்வுப் பயிற்சிக்காக ஆயத்தமாகிறார்கள். பெருவிருப்புடனான பங்கு பற்றல் தெளிவாகிறது.

3) அம்மாவின் கல்வி முயற்சியைப் பாராட்டி கல்வி அபிவிருத்திக்கு நிதிகளை வழங்கும் மனிதநேய ஈகையாளன் E.S.P நாகரத்தினம் பெருமகிழ்வுடன் பாலர்கள் ஆசிரியர்கள் சகிதம் வரவேற்கப்படும் பெருநிகழ்வில் வான்ட், கீழைத்தேயப் வாத்தியங்கள் வேடபுனைவுகள் என பல முன்னெடுப்புகளில் பாலர்கள், எமது கல்விப்பணிப் பாளரின் பெருவிருப்பில் பிள்ளைகளைக் களம் இறக்கும் பாரிய திட்டங்களை இங்கு கவனிக்க முடிகிறது. யாழ். கல்வி வலய பாலர்களின் விளையாட்டு விழா வில் பிள்ளைகள் பாண்ட் அணிவகுப்பில் ஆரவாரிக்கின்றனர்.



ஊரெழு கலைவாணி முன்பள்ளியில் பாலர்கள் வினோத உடை நிகழ்வில் மகிழ அம்மா பிரதம விருந்தினராக சிறப்பிக்க பெருவிளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பிள்ளைகளின் குதூகல மகிழ்வில் தாயாக நடுநாயகமாக பயன் உருவாக்கும் சூழல்.



யாழ். சிவன் பாலர் பாடசாலையில் பாலர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றி மகிழ்தல்.



வருடந்தோறும் யாழ். கல்வி வலயத்தில் கண்காட்சி பெருவிழாவாகச் செய்து மகிழும் ஓர் பெரும் சிறப்புக்கு வித்திட்டவர் அம்மாவே என்றால் மிகையாகாது.






கலைவிழாவை ஒவ்வொரு வருடமும் சகல பிள்ளைகளும் பங்குபற்ற நடாத்த வேண்டும் என வலியுறுத்தி நடாத்தி மகிழும் நிலையை ஏற்படுத்தியுள்ளார்.






உலக ஆசிரியர் தினத்தை எவரும் சிந்திக்காததை முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் கௌரவிப்புச் செய்து அம்மா மகிழ அதில் மகிழ்ந்த ஆசிரியர்கள் அம்மாவின் அன்பு மேலீட்டையும் முன்பள்ளி அக்கறையையும் பாராட்டி பொன்னாடை போர்த்தி பரிசில் வழங்கி சிறப்பிக்கும் பெருநிகழ்வு முன்பள்ளிச் செயற்பாடுகள் ஆங்காங்கே நடந்து மறைந்து போகக்கூடாது. அது செய்தி மடலாக வெளிவரவேண்டும் என வலி யுறுத்தி வருடந்தோறும் செயற்படுத்த வேண்டும் எனச் செயற்படுத்தி வருகையில் 2ஆம் இதழ் வெளியீட்டில் சிறப்பாக ஓர் முயற்சி எனக் கலந்து சிறப்பிக்கும் கருமத்திரு Dr.தியாகராசா, விரிவுரை யாளர் திரு.பா.தனபாலன், உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.எஸ். மகேசு, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்மையா, இவ்வாறு பலரையும் கவரும் வகையில் ஓர் நாற்று செய்தி மடலை வெளியிடக் காரணகர்த்தாவாக அயராது உழைத்துவரும் எமது கல்விப் பணிப் பாளர் மகிழ்ந்திருக்கும் நிலை. அதனூடே ஓர் பெரிய வெளியீட்டு விழா.










இவ்வாறெல்லாம் மேலும் பலப்பல அற்புத நுட்பங்களை அவ்வப்போது திணைக்கள நேரம் மட்டுமன்றி மாலை நேரங்களில் வீட்டிற்கும் அழைத்து திட்டமிடும் ஓர் பெரும் ஆர்வலராக சமூக மேம்பாட்டாளராக அக்கறையுடன் செயற்படும் பெரும் கல்விவித்தகராக மதிக்கப்படுவர். இதனால் எந்நேரமும் அவருடன் இணைந்து செயற்படப் பலர் காத்திருந்தனர். உறவும், அன்புப் பால மாக வளரலாயிற்று. இத்தகைய செயல் வள்ளல் பற்றி சிறிதுகாலம் முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவரும் முறைசாராப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளருமான திரு.மு.இராசநாயகம் கூறுகையில்,

**முன்பள்ளிச் செயற்பாட்டில், எமது கல்விப் பணிப்பாளர் - சிறு குறிப்பு**

யாழ். கல்வி வலயத்தில் முன்பள்ளிகளின் உயர்ச்சிக்காக பெரும் பணியாற்றிய உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.க.பஞ்சலிங்கம்

அவர்களது சடுதியான மறைவுக்குப் பின் சிறிது காலம் பதில் கடமையாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கேற்பட்டது. முன்பள்ளிச் செயற்பாடுகள் பற்றி முன் அனுபவம் இல்லாத நிலையில் பொறுப்பேற்ற எனக்கு வலயக் கல்விப் பணிப்பாளரும் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும், உதவிக்கல்விப் பணிப்பாளர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் உற்ற துணையாக உடன் இருந்தது தெம் பளித்தது.

எமது கல்வி முறைமையில் முன்பள்ளி களின் செயற்பாட்டின் முக்கியத்துவம், அவற்றின் தேவை குறித்து ஆழமாகவும், தெளிவாகவும், சாத்தியமான வழியிலும் சிந்திக்கும் ஒரு கல்விப் பணிப்பாளராக இருந்து எமக்கு வழிகாட்டியவர் எமது கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் என்றால் மிகையாகாது. எனது பணிக் காலத்தில் நடைபெற்ற செயலமர்வுகள், கண் காட்சி, கலை நிகழ்வுகளில் அவரது வழி காட்டலும் பங்களிப்பும் மகத்தானது.

முன்பள்ளிகள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பும், ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் நிறைந்த சூழலை வழங்குவதோடு, கற்றலுக் கும் உடல், உள, மனவெழுச்சி விருத்திக்கும் அடிப்படையாக விளங்கக்கூடிய பயனுள்ள அனுபவங்களையும் வழங்கவேண்டுமென முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு களின் போது தவறாது வலியுறுத்தி வந்தார்.

எனது பணிக்காலத்தில் யாழ். வலய முன்பள்ளிகளின் மகுடநிகழ்வாக 'கற்றல் கண் காட்சியும் கலைநிகழ்வும்' - என்ற நிகழ்வினைக் குறிப்பிட்டுச் சொல்லாம். அந்நிகழ்வு மிகப்பிரமாண்டமான முறையில் 03, 04.08.2008 ஆகிய திகதிகளில் இருநாள் நிகழ்வாக யா/செங்குத்தா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. பெருமளவிலான பெற்றோர் கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் பார்வையிட்டு பாராட்டுதல் களைப் பெற்ற நிகழ்வாக இருந்தது.

முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப் பாளர்கள், சிறார்கள், பெற்றோர்களது கூட்டிணைவில் சிறப்பாக அது நடந்தேற ஒருங்கிணைப்பாளராக இருந்து வழிகாட்டி யவர் எமது கல்விப் பணிப்பாளர் ஆவார். முன்பள்ளிகளின் கற்றல் தேர்ச்சிகள் பல்வேறு விருத்திக் கோலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவை கருத்தில் எடுக்கப்பட்டு கண்காட்சி ஒழுங்கமைக்கப் படல் வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப் பாக இருந்து எம்மைச் செயற்பட வைத்த பெருமை கல்விப் பணிப்பாளர், திருமதி, அ.வேதநாயகம் அவர்களையே சாரும். அத்துடன், அவர் முன் பள்ளிகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள், இணைப்பாளர் களது நலன்கள் குறித்தும் அதிக அக்கறை கொண்டவராக இருந்தார். அந்த வகையில், முன்பள்ளி ஆசிரியர்களது தொழில் திருப்தி தொழில் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத் தப்பட்டு அவர்களது தரமேம்பாடு விருத்தி செய்யப்படவேண்டும் என்பதிலும் அக்கறையுடையவராக இருந்தார். மேலாக, முன்பள்ளி ஆசிரியர்களது தொழில்சார் மனப்பாங்கு விருத்தி செய்யப்பட வேண்டும், அதற்கான புதிய நடைமுறைகள் மேற்கொள் ளப்படல் வேண்டும் என்பதில் குறியாக இருந்து செயற்பட்டார்.

அத்துடன், அவர் பற்றிப் பதிவுசெய்ய வேண்டிய முக்கியமான இன்னொரு விடயம், முன்பள்ளி ஆசிரியர்களின் கைகளில் பைபிள் போலப் பயன்படுகின்ற 'விளையாட்டு அல்லாத விளையாட்டு" என்ற வழிகாட்டி நூல் தமிழில் வெளிவர காரணஸ்தராக இருந்தவர் என்பதாகும்.

நிறைவாக, எனது பணிக்காலத்தில் முன்பள்ளிகளின் விரிவான செயற்பாடுகள் பற்றிய தாடனம் அவருக்கிருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.

**எமது முன்பள்ளி இணைப்பாளர் செல்வி சி.கார்த்திகாயினி கூறுகையில்,**

பிள்ளைகளுக்கு உறுதியான ஒரு அத்தி வாரத்தை இடும் தளமாக முன்பள்ளிகள் இயங்க வேண்டியதன் அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளது. உறுதியான அத்திவாரத்தை இடும் தனங்களாக இந்த முன்பள்ளிகள் மாறவேண்டுமானால் முன் பள்ளி ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தி செய்யப்படல் வேண்டும் என்று பணிபுரிந்தவர் எமது அம்மா திருமதி அ.வேதநாயகம் அவர்கள். வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அத்தனை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கல்வி அமைச்சின் ஆரம் பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்பட்ட வள வழிகாட்டி பயன் படுத்துதல் தொடர்பான மூன்று நாள் பயிற்சி நெறியினை வழங்கி முன்பள்ளிச் செயற்பாடு களில் ஓர் விழிப்பை ஏற்படுத்திய பெருமை எமது வலயக்கல்விப் பணிப்பாளர் அவர் களையே சாரும். இவர் வடக்குக் கிழக்கு மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்தபோதே முன்பள்ளிக் கல்வியை மேம்படுத்துவற்காக அத்திவாரத்தை இடும் பெரும் பணிகளை ஆரம்பித்துவிட்டார்.

கல்விப் பணிப்பாளராக பதவியில் வருவதற்கு முன்பே ஆசிரியராக கடமை யாற்றும் போது நீர்வேலி அத்தியார் (1983) இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சி செயலமர்வின்போது கணித எண்ணக்கரு தொடர்பான விழிப் புணர்வை மிக எளிமையாக செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட "Pre-School Teacher Tutor work shop" யாழ்ப்பாணத்தில் 06-12-2002, 07-12- 2002 இரண்டு நாள் நாடாத்தி உள்ளார். Pre-school Teacher's Resource guide - 2007 (5 நாள் பயிற்சி). தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்தபோது இவர் முன்பள்ளிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து முன்பள்ளிகளின் செயற்பாடுகளை மாற்றம் செய்து, பல மாதிரி முன்பள்ளிகளை உருவாக்கி உள்ளார்.

மேலும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்ற அன்றில் இருந்து முன்பள்ளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்வித்திணைக்களம் சார் ஆதரவு இன்றித் தாமாகவே இயங்கிவந்த முன்பள்ளி களை ஒன்றிணைத்து முன்பள்ளி ஆசிரியருக் கான வாண்மைவிருத்திப் பயிற்சிகளை வழங்கி யுள்ளார்.

யாழ். வலய முன்பள்ளி ஆசிரியருக்கான அரும் கொடையாகக் கிடைத்த எமது வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் முன்பள்ளி சமூகத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது. கல்விச் சமூகத்தில் பணிபுரிந்த பல பணிப் பாளர்களின் செயற்பாடுகளில் போற்றக்கூடிய செயற்பாடுகள் திருமதி அ.வேதநாயகம் அவர்களது முன்பள்ளி ஆசிரியருக்கும் ஆண்டு ஒன்று ஆசிரியருக்குமான நல்லுறவைப் பேணும் வகையில் ஓர் செயலமர்வு இதனூ டாக முன்பள்ளிக்கல்வியை இலகுவான முறையில் வழிபடுத்தக்கூடியதாக அமைந்தது. மேலும் பெற்றோர் முன்பள்ளி ஆசிரியர் செயலமர்வு, முன்பள்ளி கல்விச் செயற் பாட்டின் கல்வி முறை பற்றி பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தனது வேலைப் பழுவுக்கும் மத்தியிலும் முன்பள்ளி ஆசிரியருக்கு மதிப்பளித்து தனது நேரத்தை ஒதுக்கி முன்பள்ளி நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து தனது முழுமையான பங்களிப்பை வழங்கிய பெருமையும் அம்மை யாரையே சாரும். இவரின் பணியானது பாமரமக்கள் தொடக்கம் அறிஞர்கள் வரை கிடைக்கப் பெற்றது. இதன் காரணமாக தமது கிராமங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்திய முன்பள்ளிச் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு கோட்ட ரீதியாக, வலய ரீதியான செயற்பாடுகள் வெளிக் கொண்டு வரப்பட்டது. இதனூடாக முன் பள்ளி ஆசிரியரின் பணியானது முக்கியத் துவப்படுத்தப்பட்டது. வெளித்தெரியவந்தது என்றால் எமது வலயக்கல்விப் பணிப்பாளரின் சேவையேயாகும்.

வலயரீதியாக ஆசிரியர் தினத்தில் ஆசிரியரை கௌரவிப்பது போன்று யாழ். வலய முன்பள்ளி ஆசிரியர்களை ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பெருவிழா எடுத்து பதக்கம் அணிந்து 2008ஆம் ஆண்டு கௌரவித்துள்ளார். மேலும் யாழ். மாவட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாபெரும் கல்விக் கண்காட்சியும், கலை நிகழ்வையும் புதிய வடிவில் நடாத்திய பெருமை அன்னையையே சாரும். அது மட்டுமன்றி விளையாட்டுவிழா, பேச்சுத்திறன் காணும் விழா போன்ற விழாக்களை புதிய முறையில் வழிகாட்டி நடாத்தியுள்ளார்.

எமது முன்பள்ளி ஆசிரியர்களால் "அம்மா" என்று அழைக்கப்படும் எமது வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் எமது "அன்னை" ஒரு குழந்தையை தாய் எவ்வாறு அரவணைத்து பராமரித்து வளர்க்கிறாளோ அவ்வாறு எமது முன்பள்ளி ஆசிரியர்களை வழிப்படுத்தும் எமது "அன்னையின்" சேவை எமக்குக் கிடைத்தது இறைவன் அருள். "குருடர்களாக வாழ்ந்த நாம் வெள்ளைப் பிரம்பினைப் பெற்றது போல்" உணர்கின் றோம். அன்னையே

எமது பணியினை உலகிற்கு எடுத்துக்காட்டி எம்மை உலகத்தோர் உணர, நாம் உயர வழிகாட்டியாக இருந்த அன்னையே உங்கள் சேவை எமக்கு என்றும் தேவை.

முன்பள்ளி முன்னேற
முன்னின்று உழைத்த அன்னையே
மும்மூர்த்திகளும் அருள்புரிய
மூவுலகம் போற்ற
வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்.

இந்தவகையில் கல்விச் சமூகத்தில் எந்த அங்கத்தினரைச் சந்தித்தாலும், அம்மா பற்றி ஒவ்வொருவரின் கல்விக் நுட்பங்களிலும், அன்புடன் உறவாடுவதில் அனைவரும் மகிழ்வுடன் செயலாற்றுவதில் முன்னின்று களம் சமைப்பவர். சொல்லாமலே செய்ய வேண்டும் என்ற பெரும் சிந்தனை கொண் டவர். இத்தகைய சேவைச் சிந்தனை யாளர்கள். ஒவ்வோர் அதிகாரபீடங்களிலும் அமருவார்களாயின். எமது கல்விச்சமூகம் மட்டுமல்ல இயற்கை அழகான எமது நாடும் இயல்பு வாழ்வு பெறும். செழித்து வளரும். அனைவரும் இச்சிந்தனை செலுத்தி உலகம் போற்றும் அம்மாவாகுவோம். சமூகம் தானே மலரும்.

## மு/ஐயன்குளம் அ.த.க.பாடசாலை,
## அதிபர் ஆசிரியர்கள்
## வலயக்கல்விப்பணிப்பாளர்
## திருமதி.அ.வேதநாயகம் அவர்களிற்கு
## அளித்த பிரிவுபசார நிகழ்வில் 2000-04-09
# வாழ்த்தி வழங்கிய பாமாலை

பிரியாவிடை ஏற்க
பிரியமுடன் வந்திருக்கும் எமை
பிரியா நாயகியே
பிரியமான வந்தனங்கள்
பிரிவுத் துயரினையே - நெஞ்சிலே
சுமந்த வண்ணம்
சுற்றியே வீற்றிருக்கும்
அனைவருக்கும் வந்தனங்கள்.

அரும்பெரும் குருவே
அருளேஸ்வரி அன்னையே
அதிகாரி அன்னையே
அதிகாரி என்று எமக்கு
அதிகாரம் காட்டாது
அன்புடன் அறிவும்
ஆணவம் அற்ற வாழ்வின் மகிமையும்
அன்றன்று ஊட்டி நின்றீர்
எப்படி உம்மை மறப்போம்

தப்பிதம் கண்ட போதும்
தண்டிக்க முனைந்திடாமல்
நட்புடை தோழன் போல்
நயமாக எடுத்துக் கூறி
ஒப்புரவாகப் பேசி
உள்ளத்தை உருக்கி நின்ற
ஒப்பற்ற உங்கள் பணி
எப்படி நாம் மறப்போம்.

செல்வி ந.நகுலேஸ்வரி,
ஆசிரியை.

மு/வவுனிக்குளம் படிவம் 4 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
மதிப்பிற்குரிய திருமதி .அ.வேதநாயகம் அவர்களிற்கு
2000-03-04 அன்று நடாத்திய பிரியாவிடையின்போது பாடப்பட்ட

## பாமாலை

ஒரு பிரியாவிடை நடக்குது ரொம்பக் கவலையாக இருக்குது
அம்மாவின் பிரிவிலே நாமும் இங்கு மூழ்கியே
(ஒரு பிரியாவிடை)

அல்லும் பகலும் அம்மா வாழ்ந்தா எங்களுக்காக - அந்த
உள்ளம் இப்போ கலங்கிப்போனது இடமாற்றத்திற்காக
மாலை ஒன்று தொடுத்து வைத்தோம் அம்மாவுக்காக அதை
கழுத்தினிலோ அணிந்து விட்டோம் பாராட்டுக்காக
(ஒரு பிரியாவிடை)

இலவு காத்த கிள்ளை போல இத்தனை காலம்
இந்த அம்மா வரைந்ததெல்லாம் கணிப்பீட்டுக்கோலம்
வலயமெனும் பாத்திரத்தில் தேனெடுத்தாளே - நாம்
கல்வி எனும் கடலிலே நீந்திடத்தானே
(ஒரு பிரியாவிடை)

நாங்களெல்லாம் இன்று இங்கு கூடியதேனோ - இன்று
அம்மாவின் சேவை நலம் பாராட்டத்தானே
ஆக மொத்தம் வீதி வரை நாடகம் தானே - இதில்
ஆழுக்கொரு பாத்திரத்தில் நடித்திடத்தானே
(ஒரு பிரியாவிடை)

**துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை நடாத்தியஷ அம்மாவின் பிரிவுபசார நிகழ்வில் வாழ்த்தி வழங்கிய**

# பாமாலை

தாமரைப் பூவின் தங்கக் கவசமே
பாமாலை தூவுகின்றோம் குருவான மலருக்கு
வலயப் பணிமனையின் கலங்கரை விளக்கமே
வாழ்த்தி வணங்குகின்றோம் தங்கள் நிறைவான சேவையை
(தாமரைப் பூவின்)

அல்லும் பகலும் அயராது உழைத்து
கனவிலும் நினைவிலும் அதனையே நினைத்து
மாணவர் கல்வியே மகேசுவரன் பூசையென
நினைத்துத் தன் சேவையை நிறைவாக அளித்த
(தாமரைப் பூவின்)

மாற்றலாகிப் போகும் அம்மா உனை நினைத்து
மனம் வருந்தித்தானே நாம் இங்கு கூடுகின்றோம்
அதிகாரமும் அன்பும் அலுவலக நிர்வாகமும்
உன்கையில் தான் அம்மா அடைக்கலம் தேடியது
(தாமரைப் பூவின்)

வலயக் கல்விப்பணிமனையின் ஒவ்வொரு தூண்களும்
பாடசாலைகளும், வீதி ஓரங்களும்
உங்களின் மூச்சே கல்வி அபிவிருத்தி
என்று தானே கவி பாடுகின்றன
(தாமரைப் பூவின்)

அருளீஸ்வரி அம்மா உன்
அருள் ஒழுகு முகமம்மா - வெள்ளை
மனம் அம்மா - இனி
எங்கு காண்போமம்மா
(தாமரைப் பூவின்)

பேரோடும் புகழோடும் சீரோடும் சிறப்போடும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திடுவீர் என்று
தன்னலமற்ற சேவையைப் போற்றுகின்றோம்.
மனதார வாழ்த்துகின்றோம் எமை மறவாதீர் அம்மா
(தாமரைப் பூவின்)

செல்வி.ம.குமுதினி
வலயக் கல்விப்பணிமனை, துணுக்காய்.

## ஊர் விளங்க சேவை செய்த
## உத்தமியே வாழி! வாழி!

போரரக்கன் களமாடி பொசுக்கிச் சென்ற தேசமதில்
போய்வரவே பாதையில்லா பொட்டல் வெளிகளிலே
கார்மேகம் மழைபொழியும், கால்பதித்து நடந்து சென்று
ஊர் விளங்க சேவை செய்த உத்தமியே வாழி! வாழி!

யாரெங்கு துவண்டிடினும் போயங்கு வீற்றிருந்து
தாயன்பு தனைக் கொண்டு தாங்கியுதவியவள்
பேர் விளங்கும் பிள்ளைநேயப் பள்ளிகளின் மலர்வுக்காய்
ஊரோடி உழைத்து நின்ற உத்தமியே வாழி! வாழி!

முன்பள்ளி மழலைகளின் முகமலர்ந்து புன்னகைக்காய்
என்பள்ளி தான் அவையும் என அணைத்து வளர்த்தபடி
அன்பள்ளிச் சொரிந்துநின்ற அன்யைிவள் சேவையினை
நம்பள்ளிச் சுவர்கூட வாழ்த்தி நிற்கும் வாழி! வாழி!

தென்றெலெனத் தவழ்ந்தபடி தென்மராட்சி வீதிகளில்
கண்துஞ்ச நேரமின்றி காலமெல்லாம் ஓடியவள்
இன்னுமொரு வரலாற்றை எம்மண்ணில் படைத்திடவே
இன்றகன்றாள், எங்குற்றும் வாழி! வாழி!

**யா/நாவற்குழி மகா வித்தியாலய சமூகம்.**

# சாதனைகள்.....



# பகுதி – 4

திருமதி
அருளேஸ்வரி வேதநாயகம்
அவர்களின் அர்ப்பணிப்புக்கள்....



## அருளேஸ்வரி அம்மாவைப் பற்றி...

Its our privilege to have you as our Director of Education. Your intellectual capacity and dynamic approaches to school-level education are bringing much success. I wish to say that you are a lady to be remembered in the education history of the North of Sri Lanka.

**J/St.Jhon Bosco's Vidyalayam Prize Day 8th Nov. 2009**

யாழ். மாவட்டத்தின் ஏனைய வலயங் களைவிடச் சிறந்தவகையில் இருக்கவேண்டு மென்ற நோக்கில், கடமையே கண்ணாகக் கருதிச் செயற்படும் தங்களின் செயற்பாடு களின் விளைவாக வீழ்ச்சியடைந்திருந்த கல்வித் தரங்களிற் படிநிலை வளர்ச்சிகள் ஏற்பட்டிருப்பது பெருமைப்பட வேண்டிய தொன்றாகும். யாழ். வலயத்திற்கு தங்கள் வருகையைத் தொடர்ந்து எமது பாடசாலை காட்டிவரும் சாதனைகளும் குறிப்பிடத்தக் கவையாக அமைந்துள்ளன.

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை பரிசுத் தினம் 12.09.2008**

நாட்டில் அமைதியற்ற சூழல் இருந்த காலகட்டத்தில் ஏற்பட்ட பல்வேறு சிரமங் களிற்கும் முகம் கொடுத்து கணிதபாடத்தின் விருத்திக்கு அரும்பாடுபட்டார். இக்கால கட்டத்திற் கணித பாடவிருத்தியிற் காட்டிய ஆர்வத்தினால் 1994/95 காலப்பகுதியில் பொதுநலவாய அமைப்பினால் "கணித, விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வியியலாளர் விருது இலண்டனில் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். இவருடைய செயற்பாட்டினால் நாடே பெருமையடைந்தது.

ஏறத்தாழ ஒரு தசாப்த காலத்தின்பின் இவரது சேவையை இழந்திருந்த யாழ்.மண் மீண்டும் பெருமையடைந்து தென்மராட்சிக் கல்விப்பணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலகட்டத்தில் தென் மராட்சிக் கல்விவலயம் மிகத்துடிப்புடன் செயற்பட்டது. தரம் 5, க.பொ.த. (சா.த) க.பொ.த (உ.த) பெறுபேறுகளில் வளர்ச்சி நிலை காணப்பட்டது. இணைப்பாட விதானச் செயற்பாடுகளினிலும் தென்மராட்சிக் கல்வி வலயம் சிறந்த நிலையை அடைந்தமை நாம் அறிந்ததாகும். மிகக் குறுகிய காலத்தில் மாணவர்களின் கல்வி நிலை வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும், அதிபர் ஆசிரியரின் வினைத்திறன்கள் உயர்நிலை அடைய வேண்டும் என்பதற்காகவும் அயராது உழைத்து வருகிறார். கல்விப்பணியைச் சிறப்பாக ஆற்றிவரும் வலயக்கல்விப் பணிப் பாளர் அவர்கள் வசதிகுறைந்த மாணவர்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் இடையூறுகள் அதற்கு முகங்கொடுத்து எவ்வாறு சிறப்பாகச் செயற்படுகிறார்கள் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய "வாழும் போதே", "வெற்றிக்கு வழி" என்ற இறுவெட்டுக்களைக் கல்வியியற் கல்லூரியுடன் இணைந்து வெளியிட்டுள்ளார். இது அவர் எமது சமூகத்திற்கு வழங்கியிருக்கும் முன் மாதிரியான விடயமாகும்.

தனது நீண்டகால அரசசேவையில் தனக்கென ஒரு தனியிடத்தினைப் பெற்றுள் ளார். இனிய முகபாவமும், தாயன்பும் கொண்ட இவரிடம் எமது பிரச்சினைகளை

இலகுவாகக் கொண்டு செல்லக் கூடியதாக உள்ளது. யாழ். கல்வி வலயம் சகல துறை களிலும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற பேரவாக் கொண்ட இவரது அளப்பரிய சேவையை மறக்கமுடியாது. பாரதி கண்ட புதுமைப் பெண் இவர்.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**
**பரிசுத் தினம் - 2008**

எமது வலயத்தின் கல்வியை மிக உன்னத நிலைக்குக் கொண்டுவந்து கல்வித் துறையின் உச்சக் கட்ட விளைவைச் சமூகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பாடுபடும் பணிப்பாளர் இவர். கடந்த காலங்களில் தான் வகித்த பதவிகள் மூலம் பெற்ற அனுபவங் களைத் தனது பிரதேசத்திற் கல்வியை மேம் படுத்த விழையும் முயற்சியில் அயராது உழைத்துக் கொண்டிருப்பவர். ஆசிரியராக ஆரம்பித்த பணியை இன்று வலயக் கல்விப் பணிப்பாளர் எனும் நிலையில் தொடர்ந்து கொண்டிருப்பவர். விடுமுறைநாள் என்பது இல்லாத ஒரு பணியாளராக யாழ்ப்பாணத் தின் அதியுயர் செல்வமான கல்வியை வளர்த்துச் செல்ல உழைத்துக் கொண்டிருக் கும் எமது பணிப்பாளர்

**யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**
**பொன்விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2008**

பழகுவதற்கு அன்பானவர், பண்பான வர், செயற்றிறன் மிக்கவர் எடுத்துக் கொண்ட கருமத்தை நிறைவேற்றுவதில் உறுதியான உள்ளம் கொண்டவர். மாணவர்களின் உயர்ச்சி ஒன்றையே தன்னுடைய உயிர் மூச்சாகக் கொண்டவர். பெண்ணாக இருந்தும் பல சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டி ருப்பவர். தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பல சாதனைகளுக்குச் சரித்திரம் படைத்தவர். எமது கோப்பாய்ப் பிரதேசத்தின் மீதும், அங்கு அமைந்துள்ள பாடசாலைகள் மீதும் அக்கறை கொண்டவராதலினால் இப்பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் மிகுந்த அக்கறை கொண்டு அதற்கான பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்ப வர்.

**யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,**
**பரிசளிப்புத் தினம் - 2008**

கற்பித்த காலங்களில் மாணவ உள்ளங்களைத் துல்லியமாக வென்றெடுத்த கணித நல்லாசானாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். எமது வலயமட்டம் யாழ் மாவட்டத்திற் சிறப்பாக இருக்க வேண்டு மென்ற நோக்கிற் கடமையே கண்ணாகக் கருதிச் செயற்பட்டு வருவதன் காரணமாக, கல்வித்தரங்களின் படிநிலை வளர்ச்சி முன்னேற்றம் அடைந்திருப்பது பெருமைப் பட வேண்டிய தொன்றாகும்.

**யாழ். நல்லூர் சென். பெனடிக் வித்தியாலயம்**
**பரிசளிப்பு விழா 2010**

கல்வி அபிவிருத்திக்கென்றே கடவுளி னாற் படைக்கப்பட்ட தாங்கள் ஓய்வுறக்க மின்றி செயற்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். தங்களது இவ்வளப்பரிய சேவையைச் சுமார் இரண்டரை வருடங்களாவது தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் பெறுவதற்கு அவர்களது பெற்றோர்கள் கோடி தவம் செய்துள்ளார்கள் என்று கூறுவது மிகையாகாது. கல்வி உலகில் கணிதபாட ஆசிரியராக அறிமுகமான தாங்கள் அத்துறையில் படைத்த சாதனை களின் அடிப்படையில் பொதுநலவாய அமைப்பினால் (Commen Wealth Association) உலக நாடுகள் மத்தியில் *1994/95* காலப் பகுதியில் நடத்திய போட்டியில் கணித விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியியலாளர் விருது, *1996* ஆம் ஆண்டு யாழ். கல்விச் சமூகத்தவர்களாற் கௌரவிக்கப்பட்டு அதியுயர் கௌரவ சேவை விருது, *2008*இல் லயன்ஸ் கழகத்தாற் கௌரவித்து வழங்கப்

பட்ட விருதுகளைப் பெற்று, தமிழ் இனத்திற்கே பெருமை தேடிக் கொடுத் துள்ளீர்கள்.

**யாழ். மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.**
**பரிசில் நாள் - 2008**

படிக்கும் காலத்தில் அன்பு, அறம், நேயம், சகிப்புத் தன்மை முதலான பல ஆளுமைப்பண்புகள் நிறைந்த, கணித பாடத்தில் ஆர்வம் கொண்ட மாணவியாகத் திகழ்ந்தீர்கள். கணித பாடத்தில் மாணவர்கள் சிறப்புத்தேர்ச்சி பெறவேண்டும் என்ற ஆசையைப் பூர்த்திசெய்யச் சகல பள்ளி களிலும் கணித மன்றங்களை உருவாக்கி னீர்கள். கணித மூலவள நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்ற கனவை நனவாக்கினீர்கள். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாள ராகக் குறுகிய காலம் பணியாற்றினாலும் வினைத்திறன் மிக்க செயற்பாட்டினால் எல்லோர் உள்ளங்களிலும் இடம் பிடித் தீர்கள். 2008ஆம் ஆண்டு பங்குனித்திங்களில் இருந்து யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக தாங்கள் பணியைத் தொடர்கிறீர்கள். யாழ். வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஆசிரிய ஆளணி வளத்தினை நியமித்து, மேலதிக வகுப்புக்களை நடாத்தி, தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதற்காக அரும்பணியாற்றுவதைக் கண் கூடாகக் கண்டு மகிழ்வடைகின்றோம். அதிபர், ஆசிரியர் வினைத்திறன் மிக்கவர் களாக விளங்கவேண்டும் என்பதற்காகச் செயற்றிட்டங்கள் பலவற்றை முன்னெடுப் பதைக் கண்டு பூரிப்படைகின்றோம். மேலும் கணிதபாடம் சிறக்க வேண்டும் என்பதற்காக "யாழ் வலயத்தில்" 2010ஆம்ஆண்டை "கணித அபிவிருத்தி ஆண்டாய்" பிரகடனப்படுத்திய தங்களின் செயற்பாட்டைப் போற்றுகின் றோம். கல்விச் செயற்பாடுகளை நிறைவேற்று வதில் தங்களின் அன்பு நிறைந்த கண்டிப்பு யாராலும் மீறமுடியாததாகும்.

நீண்டகால அரசசேவையில் தனக் கெனத் தனியிடத்தைப் பெற்ற தாங்கள்; இன்முகத்துடன் அன்பு, அறம், நேயம் தொடருறு கல்விச்சேவை ஆகிய பண்புகள் நிறைந்தவராய் யாழ். பிரதேசத்திற் செய்யும் சேவையைப் பாராட்டி, கோப்பாய் லயன்ஸ் கழகம் "மிகச் சிறந்த நிர்வாகி" என்ற விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியமையை எண்ணி உவகையடைகின்றோம். வாழ்த்துகின்றோம். இத்தகைய தகுதியும், திறமையும், பொறுப்பும், ஞாபகசக்தியும், புனிதத்தன்மையும் பெற்ற தாங்கள் வருகை தந்து, கருணைக் கரங்களால் மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்க எம் பள்ளி பாக்கியம் பெற்றதென்றே கூற வேண்டும். தாங்கள் பல்லாண்டு சகல செல்வங்களும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**யாழ். கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்**
**பரிசுத் தினம் - 2009**

பார் சிறக்க அழகான உயிரோவியங் களின் கல்விப்பசிதீர்த்து, ஆளுமைமிக்க மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் அர்ப்பணிப்பான சேவைபுரியவென உயர் சேவையாம் ஆசிரியப்பணியைத் தேர்ந் தெடுத்தீர்கள். உதவிக்கல்விப் பணிப் பாளராகப் பதவி உயர்வு பெற்று; கணித, விஞ்ஞான பாட அபிவிருத்திக்காக தாங்கள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. கணித மூலவள நிலையம் அமைத்து, பின்தங்கிய மாணவர்களுக்கான உயிரோட்டமான செயற்றிட்டங்களைச் செயற்படுத்தி, கல்வி அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்ட "துல்லியம்" சஞ்சிகையினை வெளியீடு செய்து, மாணவர் மையக் கல்வியினை கல்விப் புலத்தில் பர்ணமிக்கச் செய்தீர்கள். துணுக் காய் வலயத்தின் கல்விப் பணிப்பாளராக, வடக்குகிழக்கு மாகாணத்தில் பள்ளிக்குப் பொறுப்பான பணிப்பாளராக, தென்ம ராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளராக,

தாங்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகள் தாங்கள் கடந்துவந்த காலத்தில் புகழ் பூத்த சாதனை மைல்கற்களாகும்.

தாங்கள் யாழ். கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த ஓரிருவாரங்களுள் எமது பாடசாலையினை இரு முறை தரிசித்து அதிபர் ஆசிரியருடன் கலந்துரையாடி எமது தேவைகளைக் கேட்டறிந்து, பெற்றோர் சந்திப்பினை ஏற்படுத்தி எம்மை ஊக்குவித் தமையை நாம் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றோம். தங்கள் சேவை, அன்புடன் அரவணைத்து, ஆதரவுடன் நல்வழிகாட்டும் உன்னதமானது என்பதை இக்குறுகிய காலத்தில் நாம் உணர்வுபூர்வமாக அறிந்துள்ளோம். "அணுகுவதற்கு எளியவராய்", "ஆசிரியர்களுக்கு அவர்தம் சிரமங்களைப் புரிந்தவராய், மாணவர் நலனே உயர் குறிக்கோளாய், தாங்கள் எம்மத்தியில் சேவையாற்றி வருகிறீர்கள். திரு. இரா. தேவநாயகம் அவர்களே! தங்கள் மனையாளின் கல்விப் பணிக்கு தாங்கள் காட்டும் பேராதரவும் எமது சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புக்களுக்கும் தாங்கள் காட்டும் அனுசரணையும் போற்றுதற்குரியது. தங்கள் துணைவியாருடன் இணைந்து சிறார்களுக்கான கல்வியின் முக்கியத்துவத்தைக் காட்டும் குறும் திரைப்படத்தை தயாரிப்பதில் உதவி புரிந்துள்ளீர்கள். தங்கள் கலையார்வத்தினையும் நடிப்புத் திறனையும், தங்கள் கல்விக்கான பணியாற்றலையும், நாங்கள் அத்திரைப் படத்தினைப் பார்க்கையில் உணர்ந்துள்ளோம்.

**யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்**
**பரிசளிப்பு விழா - 2008**

2005ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எமது தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்விப் பணிப்பாளராக தாங்கள் கடமையேற்றதற்குப் பின்னர் எமது பிரதேசப் பாடசாலைகளில் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தியை நோக்கிய மாற்றங்கள் சொல்லில் அடங்காதவை. குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட குழப்ப சூழ்நிலையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப்பகுதிகளில் தங்களது துரித செயற்பாட்டின் மூலம் சுயகற்றல் ஏடுகளைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கியமை, தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா.த), கா.பொ.த. (உ.த) பரீட்சை என்பவற்றில் மாணவர்களின் சித்தி வீதங்களை உயர்த்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரு வெற்றியைத் தந்துள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயத்தை யாழ். மாவட்டத்திலேயே முன்னணி வலயமாக மாற்றவேண்டுமென்ற அவாவுடன் தாங்கள் ஆற்றிவரும் சேவை எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைப்பதுடன், தங்களது காலத்தில் தென்மராட்சி வலய பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களைத் தேடிப் பெற்று வழங்குவதிலும் தங்களுக்கு நிகர் தாங்களே. இன்று பிள்ளைநேயப் பாடசாலைகள் எனும் திட்டத்தில் பாடசாலைகளில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்கள் தங்களது சேவையை இன்னும் பல ஆண்டுகளுக்குப் பேசப்போகின்றன.

எமது பிரதேசக் கல்விப் புலத்தவர்கள் எல்லோராலும் "அம்மா" என்று அன்பாக அழைக்கப்படும் எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சியில் காட்டிய அக்கறையையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

**யாழ். கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம்**
**பரிசில் நாள் 21.01.2008**

யுத்தத்தால் பெரும் பாதிப்பிற்குள்ளான பிரதேசமான தென்மராட்சி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக பொறுப்பெற்று

அப்பிரதேசத்தின் அபிவிருத்தியை துரிதமாக மேற்கொண்டு கல்விச் சமூகத்தின் மனங்களில் இடம்பிடித்த சாதனையாளர். நேர்மனப் பாங்குடன் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்ற வேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்.

**யாழ். ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம்**
**பரிசுத் தினம் 2008**

கோப்பாய் கணித மூலவள நிலையத்தை ஆரம்பித்து வளர்த்துவரும் அங்கு காணப்பட்ட கற்றல் உபகரணங்களின் படைப்பாளரும் இவரே ஆவார். துணுக்காய் பிரதேசக் கல்விப் பணிப்பாளராகக் கடமையை ஏற்று வன்னிப் பிரதேச சிறார்களின் கல்வியை மேன்மைதனில் உயர்த்திடவே அரும் சேவைகள் ஆற்றி வந்தார். அவரது மிகுந்த ஆற்றல் காரணமாக அங்கிருந்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திப் பிரிவுத் தலைவராகப் பதவி உயர்வு பெற்று வ.கி.மாகாண சபையில் கடமையாற்றினார். அக்காலத்தில் வ.கி. மாகாணத்தின் அனைத்து வலயங்களிலும் அளப்பரிய சேவை ஆற்றினார். தென்மராட்சிப் பிரதேசம் செய்த புண்ணியத்தின் பலனாக அவரது சேவை எமது பிரதேசத்திற்கு கிடைக்கப் பெற்றது. தாங்கள் எமது கல்வி வலயத்தில் பதவி ஏற்று இருவருடங்களாக இருந்தபோதும் ஆற்றிய பணிகள் அளவிற்கரியன. எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டு தாங்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்காகவும் சாதாரண பரீட்சைக்காகவும் மேற்கொண்ட முயற்சிகள் பெருவெற்றியைத் தந்துள்ளன.

இவர் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசின் உதவிளையும் தக்க தருணத்தில் அவற்றைப் பெற்று மாணவர் கல்வித் தேவைகளை, வசதிகளை அறிந்து தானும் தனது கீழ்ப்பணியாற்றும் நிர்வாகப் பணியாளர்களையும் வழிநடத்தி கல்வி அபிவிருத்தியிலும், நிர்வாக முகாமைத் திறனுடன் செயலாற்றி வரும் கடமை வீராங்கனையாவார். இவரது துரித செயற்பாட்டினால் வ.கி. மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இவரது நிர்வாகத் திறமையைப் பாராட்டியமை எமக்கும் பெருமை தருவதாகும். இவர் அமைதியும், கனிவான பேச்சும், உதவும் மனப்பான்மையும் கொண்ட கல்விப் பணிப்பாளர். பாடசாலையின் குறைநிறைகளைக் கண்டறிந்து உடன் நிவர்த்தி செய்யும் கல்விப் பணிப்பாளர். 2007ஆம் ஆண்டு எமது வலயத்தில் நடத்தப்பட்ட உலக ஆசிரியர் தினத்திற்கு வருகை தந்த அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் சின்னம் சூட்டி கௌரவித்தமையை குறிப்பிட விரும்புகின்றேன். இச் செயற்பாடானது ஏனைய வலயங்களிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. எமது வலயப் பாடசாலைகளின் வளர்ச்சியிலே கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்டுவரும் தாங்கள் எமது பாடசாலை உயர்விலும் அக்கறையாக இருந்து உதவியுள்ளீர்கள்.

**யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்**
**பரிசில் நாள் 2007.10.25**

மாணவர்களின் அபிவிருத்தி ஒன்றே நோக்கமாகக் கொண்டு "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கமைய மிகச் சுறுசுறுப்பாக இயங்கி வருபவர். எளிமையான தோற்றமும், இனிமையான பேச்சும், வேலைகளை நிறைவு செய்வதில் உறுதியும் கண்டிப்பும் கொண்ட அவரது ஆளுமை பாராட்டுதற்குரியது. கிராமப்புற ஏழைச்சிறார்களின் கல்வி வளர்ச்சியில் கூடிய அக்கறை கொண்ட இவர் கிராமப்புற மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரடியாகச் சென்று கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளைக் கூறிக்கொண்டிருப்பவர். அது மட்டுமல்ல

தானே செய்து காட்டியவர். இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றியுள்ள இவர் அங்கெல்லாம் ஏழைச்சிறார்களின் கல்விக்காக அயராது பாடுபட்டவர். அரசசார்பற்ற நிறுவனங்களின் பயன்பாட்டை உச்ச அளவில் கல்விக்காக பெற்றுக் கொள்பவர்.

கோப்பாய் கோட்டக் கல்வி அடைவுகள் பற்றிப் பலர் பலவாறாகப் பத்திரிகைகளில் விமர்சிப்பது நாம் அறிந்ததே. இவ் விமர்சனத்தைப் பொய்யாக்கி இப்பிரதேசத்தையும் தலைநிமிர வைக்கவேண்டும் என அயராது பாடுபடுபவர். எமது வலயக் கல்விப் பணிப்பாளர் பணிசெய்த இடங்களிலெல்லாம் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். இவரது பிந்தைய சாதனையாகப் பறைசாற்றி நிற்பது தென்மராட்சிக் கல்வி வலயம். "அன்னயாவிலும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே" என்ற மகாகவியின் அடிசுளை தனது தாரகமந்திரமாகக் கொண்டு செயற்படும் உயர் பணிப்பாளர்.

**யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி**
**பரிசில் நாள் - 2008**

ஆசிரியப் பணியிலும், கல்வி நிர்வாகப் பணியிலும் நீண்டகால அனுபவத்திரட்சி மிக்கவர். கல்விச் சேவையில் பல்துறைகளில் பரிணமித்த தாங்கள் கோப்பாய் கோட்டத்தின் கணித ஆசிரிய ஆலோசகராகவும், யாழ் மாவட்டத்திற்கான கணித விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் இருந்து ஆற்றிய பணிகள் இன்றும் நினைவுபடுத்தக் கூடியவை. கணித மூலவளநிலையத்தை முதன் முதலாக ஆரம்பித்து அதன் முக்கியத்துவத்தை கல்விப் புலத்தில் அறிமுகப்படுத்திய பெருமை தங்களையே சாரும்.

இலண்டனில் கணிதவிஞ்ஞான தொழிநுட்ப கல்வியியலாளர் விருது வழங்கப்பட்டமை யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்குத் தங்களால் கிடைக்கப்பெற்ற வெகுமதியாகும். தற்போது யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகப் பொறுப்பேற்றிருப்பது ஆரோக்கியமான கல்விச் சமூகத்திற்கும், கல்வி முகாமைத்துவத்திற்கும் பெரும் துணையாக அமையும்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பரிசுத் தினம் 2008.07.12**

இடம் பெயர்வுகளையும் பல இன்னல்களையும் சுமந்து நகர்ந்து கொண்டிருக்கும் தென்மராட்சிப் பதியில் நீண்ட தூரத்தில் இருந்து வந்து வலயக்கல்விப் பணிப்பாளராக கடமைபுரியும் பெருமதிப்பிற்குரிய திருமதி. அ. வேதநாயகம் அவர்கள் பல தடைகளைத் தாண்டி செவ்வனே கடமை புரிந்து வருபவர், கண்ணியமானவர், நேரந்தவறாதவர்; அவர் கடமை ஏற்ற குறிப்பிட்ட காலத்தினுள் எண்ணிலாச் சேவைகளை எமது தென்மராட்சிப்பதி பெற்றுள்ளது. எமது பாடசாலையின் திருத்த வேலைகளையும் துரிதகதியில் தன் அலுவலக ஒதுக்கீட்டில் செய்து தந்துள்ளார்.

"சுவிஸ் நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட எமது பாடசாலைக் கட்டடக் குறைவேலைகள் நாட்டு அசாதாரண சூழ்நிலையால் தடைப்பட்டிருந்த போதும் அப்பணி தொடர்வதற்கு இன்றும் முயன்று கொண்டிருப்பவர். ஆரம்பக் கல்வியே அடித்தளமானது எனக்கருதி அதன்மீது அதிக அக்கறை காட்டுபவர். அண்மையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் கௌரவித்து விழா எடுத்து ஊக்கம் கொடுத்தவர். இவ்வாறாக கல்விப் பணிக்காக அவர் ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கின்ற சேவைகள் அளப்பரியன. இவை அனைத்தும் எம்மால் என்றும் மறக்க முடியாதவை. நன்றிக்குரியவை. தொடர்ந்தும் இவரது சேவையை

எமது தென்மராட்சிப் பதி எதிர்பார்த்து நிற்கின்றது.

**யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசலை**
**பரிசில்நாள் 2007.11.04**

கடந்த பல வருடங்களாக (2½ வருடம்) எமது வலயத்தின் பொறுப்பினை ஏற்று அனைத்துப் பாடசலைகளிலும் கல்வி அபிவிருத்தி, மற்றும் பௌதீகவள அபிவிருத்தி ஆகியவற்றின் உயர்வுக்காக, தினம் தினம் அயராது உழைத்து வந்தவரும் இன்று அதே பணியினை அதே சிந்தனைகளோடு யாழ் வலயத்திலும் ஆற்றியவர் பெருமாட்டி அருளேஸ்வரி வேதநாயகம் அம்மா அவர்கள். மனித உன்னத நிலையை நோக்கியதான கல்வி மேம்பாட்டை நோக்கி நாங்கள் எங்களை வழிநடத்திய அந்தப் பசுமையான பொற் காலத்தை எமது வித்தியாலயச் சமூகம் ஒருபோதும் மறந்து விடமாட்டாது. எமது வித்தியாலய மைதானப் புனரமைப்பு, விஞ்ஞான கூடப் புனரமைப்பு, நூலகப் புனர மைப்பு, பிரதான மண்டபப் புனரமைப்பு, குடிநீர்தாங்கி அமைத்தல், குடிநீர் விநியோகத் திற்கான குழாய்கள் பொருத்துதல் வகுப் பறைப் புனரமைப்பு போன்ற பௌதீக வளமேம்பாட்டுத் திட்டங்கள், எமது வித்தியாலயத்தில் நிறைவுபெற நீங்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகளை நாம் இன்றும் கூட நன்றியுணர்வோடு நினைவுக்கு கொண்டு வருகின்றோம். "தைரியத்துடன் செயற்படாதவர்களிடம் இருக்கும் அறிவும் அதிகாரமும் எந்தப் பலனையும் தராது" என்றார் வால்டசார் க்ரேஸியன் என்ற அறிஞர். இவரது இந்தக்கூற்றை மெய்ப்பிப்பது போல தற்துணிவு கொண்டு செயற்பட்ட உங்களது முகாமைத்துவ ஆற்றல் காரணமாக எங்களது வலயப்பாடசாலையைச் சேர்ந்த மாணவர் களும் ஆசிரியர்களும் தத்தமது செயற்பாடு களில் ஒரு பாய்ச்சலையே காட்டி நின்றமை வரலாறாகும். ஒருவர் இந்த உலகத்தில் சம்பாதித்த உண்மையான சொத்து அவர் செய்த நல்ல காரியங்கள்தான் என்றார் நபிகள் நாயகம் முஹம்மது அவர்கள். நபிகளது கூற்றுப்படி பார்த்தால் நீங்களும் உங்கள் துணைவரும் இணைந்து எமது தேசத்தின் கல்விப் புலத்தில் தேடிக் கொண்ட உண்மையான சொத்துக்களை நாம் இலகுவாக அளவிட்டுக் கொள்ள முடியாது. நீங்கள் இருவருமே உங்களது உடல் உழைப்பினால் தேடிய செல்வங்களை எல்லாம் எமது பிரதேச மாணவர்களது கல்வி மேம்பாடு கருதி செலவிட்டு வந்த அந்த உன்னத செயல்களை அறிந்து நாம் நன்றியுணர்வு கொண்டு உங் களை - இருபெரும் உன்னத உள்ளங்களையும் வரவேற்று நிற்கின்றோம்.

**யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்**
**பரிசில் நாள் 2008.10.21**

நிமிர்ந்த பார்வை! நிறைஞானக் கல்வி
நின்றொளிர் கல்விப் பணிப்பாளரே!
தமிழினம் ஓங்கத் தலையுயர்த்தி உழைக்கும்
தகமைசால் வேத நாயகமே! வாழி! வாழி!!

**பாவாளர்**
**டானியல் - தேவமதுரம்**
**2008.09.29**

நு/கற்றன் புதித கபியியல் பாலிக்கா மகளிர் வித்தியாலயத்தில் உங்களை ஒரு நல்லாசிரியராகப் புடம் போட்டுக் கொண் டீர்கள். கோப்பாயில் உங்களால் அமைக்கப் பட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் மூலம் மாணவரின், குறிப்பாக கணித பாடம் காரணமாக உயர்கல்வி தொடர முடியாமற் போகுமோ என்று அஞ்சிய பின்தங்கிய மாணவரின் முன்னேற்றத்திற்கான செயற்றிட் டங்கள் உங்கள் முகாமைத்துவத்தின் கீழ் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. பல காரணங்களின் நிமித்தம் பள்ளிக்குப் போகாத பிள்ளைகள் பற்றி ஆய்வு மனப் பான்மையுடன் செயற்பட்டுப் பரிகார

ஏற்பாடுகள் செய்துள்ளீர்கள். பின்னர் மாக காணம் முழுவதிற்குமான கல்வி அபிவிருத் திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப் பாளராகச் செயற்றிறனுடன் செயலாற்றிப் பன்முகத்தன்மை கொண்ட அனுபவங்களு டன் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று, பல செயற்றிட்டங்களை உயிரூட்ட மான முறையில் செற்படுத்திய பின் யாழ்ப் பாண கல்விப் பணிப்பாளராக வந்துள்ளீர்கள்.

உங்களுடைய கல்வி தொடர்பான அணுகுமுறை மாணவர் மையமானதாகவும் செயற்பாட்டின்போது ஆசிரியர்களின் சிரமங்களைப் புரிந்து கொண்டதாகவும் பலரும் பேசிக் கொள்கிறார்கள்.

தொழில் நிறுவனம் சிறப்பாக இயங்கிய காலத்தில் நீங்கள் வாழ்க்கைத் துணையாகக் கரம் பிடித்தவள் கல்வி அபிவிருத்திப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட பலவழிகளில் உதவினீர்கள். உங்கள் ஆலோசனையும் அனுசரணையும் அவரின் கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருந்துள்ளது என்று கூறினால் மிகையன்று. நாட்டு அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தொழில் நிறுவனம் 1996இல் மூடவேண்டிய நிலை ஏற்பட்ட பின் பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராகச் செயற்பட்டுள்ளீர்கள்.

திருமலையில் ஆங்கிலம் போதித்த போது உங்களால் வழிகாட்டப்பட்ட மாணவர்களில் 98% மாணவர் சித்தியடைந் துள்ளனர். தற்போது உங்களுடைய வாழ்க்கைத் துணையின் கல்வி அபிவிருத்திப் பணி மேன்மையுறுவதற்கு அனுசரணை வழங்கி எமது வலயச் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவிவருகிறீர்கள்.

அச்சுவேலி மெச்சு புகழ் அருளேஸ்வரி அம்மணி
அறிவு செறி நிறைவு பெற்ற முழுமதியின் சுடரொளி
துச்சமெனத் தடைதகர்த்தி தூண்டா மணி விளக்கென
துலங்கி இலங்க மாணவர்களுக்குத் தோள் கொடுக்கும்
தாயும் நீ

அன்னை இந்திரா, திரேசா, கல்பனா, சௌந்தலா
அவர்கள் தொடரில் ஆளுமையில் நிறைந்தபணிப்பாளரே
எண்ணமெல்லாம் கல்விக்காக இரவுபகலாய் உழைப்பதே
ஏற்று வந்தீர் யாழ் வலயம் போற்றி வரவேற்கிறோம்

கரம்பிடித்த கணவன் வேதநாயகத்தின்துணையுடன்
தரம் உயர்த்தித் தகைமை சேர்க்க உரமாய் நின்று
உதவிடும்
வரம் பெற்ற மக்கள் சுற்றம் வாழ்க வாழ்க வாழ்கவே
சிரம் தாழ்த்திப் போற்றுகின்றோம் சிறப்புப் பலவும்
பெற்றிட.

**யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்**
**பரிசில் தினம் 2008.05.29**

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவி என்பதைத் தெரிவிப்பதில் நாம் எல்லொரும் பெருமைப்படுகிறோம். எமது கல்லூரியில் க.பொ.த (உ/த) வகுப்பில் கணிதப் பிரிவில் இணைந்து விடுதியிலிருந்து கற்றுப் பாடசாலைக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளார். பாடசாலைக்காலங்களில் சிறந்த கணித பாட மாணவியாகத் திகழ்ந் ததுடன் கல்லூரியின் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி எமது கல்லூரிக்குச் சிறப்பையும் பெருமை யையும் சேர்த்தார். அவரால் இன்று எமது கல்லூரி பெருமை பெறுகின்றது. கல்லூரித் தாய் மகிழ்வடைகின்றாள்.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் முன்பள்ளி அபிவிருத்திக்கும் ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கும் பொறுப்பாக இருந்த காலப்பகுதியில் கல்விமேம்பாட்டிற்

காக உழைத்து வடக்கு கிழக்கு மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார்.

ஓர் சிறந்த ஆசிரியராகவும் திறமை யான நிர்வாகியாகவும் இருக்கின்ற காரணத்தி னால் தன்னுடைய பட்டறிவினால் மாணவர் களின் கல்வி நலையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மேம்பாடடைய வேண்டும் என்றும் அயராது உழைத்து வருகின்றார். மாணவர்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் இடையூறுகளை எவ்வாறு சிறப்பாகச் செயற்பட வைக்க முடியும் என்று தனது சக உத்தியோகத்தர்களுடனும் அதிகாரிகளுடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி அவர் வழிப்படுத்தி வருவது பெருமைக்குரியது. அது மட்டுமல்லாமல் நேரடியாகவே பெற்றோர்களுடனும், மாண வர்களுடனும் கலந்துரையாடி கல்வியின் முக்கியத்துவத்தை உணரவைப்பதுடன் கல்வி விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தி வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணக் கல்விவலயம் கல்வித்துறையில் வளர்ச்சியடைய வேண்டும் என்ற பேரார்வங்கொண்டு அளப்பரிய சேவை செய்து வருகின்ற கல்விப் பணிப்பாளர்கள் எல்லா மக்களிடமும் அன்பான முறையில் பழகி எல்லோராலும் மதிக்கப்படுகின்றார்.

**யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
**பரிசுத்தினம் 2008.10.16**

தான் கடமை புரிந்த இடங்களிலே கல்விப் பணி சிறக்க அயராது பாடுபட்டார். கற்றலில் பின்னடைந்த மாணவர்களின் அடைவை மேம்படுத்துவதில் மிகவும் அக்கறை கொண்டவர். ஆரம்பக் கல்வியில் தனிக்கவனம் செலுத்துபவர். கணிதத்துறை விருத்தியில் அவரது சிந்தனை ஆழம் நிறைந்தது. இத்துறையின் பின்னடைவைப் போக்கி 20 வீதத்தில் இருந்த பெறுபேற்றை 60 வீதமாக உயர்த்தினார். மேலும் ஆசிரியர் பணி சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத் தோடு உலக ஆசிரிய தினத்தை முன்னிட்டுப் போட்டிகளை வைத்து ஆசிரியவாண்மையை விருத்தி செய்தவர். செயலமர்வுகளில் கூடிய அக்கறை காட்டி வருபவர். இவ்வாறு இவரது சேவைகளை அடுக்கிக் கொண்டே போக லாம்.

நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் கடமையே கண்ணாகக் கொண்டு மாணவர் கல்வி வளர்ச்சிக்காக மகத்தான சேவையாற்றிக் கொண்டிருப்பவர். அதிகாரமும் அன்பும் கலந்து தனது நிர்வாகக் கடமைகளை மேற்கொள்பவர். எமது தேவைகளை அறிந்து உதவிகளை அளிப்பவர் மட்டுமல்லாது பாடசாலைக்கு நேரடியாக வருகை தந்து குறைகளைக் கேட்டு நிவர்த்திப்பவர்.

இவர் பாரதிகண்ட புதுமைப் பெண்
தாமரைப் பூவின் தங்கக் கவசம்
கணிதத்தின் கலங்கரை விளக்கு
மாணவர் கல்வி மகேசுவன் பூசை என்றெல்லாம் பாமாலை சூட்டப்பட்டவர்.

*10.12.2005* அன்று சிறுவர் அரங்க நிகழ்விற்கு தீவகத்திற்கு மாணவரை அழைத் துச் செல்ல வேண்டியிருந்தது. அப்போது எமக்கு வாகன உதவி அளித்து அன்றைய கடும் மழையின் மத்தியில் எம்முடன் தாமும் வருகைதந்து சிறப்பித்திருந்தார். இது குறித்து நான் பெரிதும் மகிழ்வடைகிறேன். இளமைத் துடிப்புள்ள இவரின் சேவை எமது மண்ணுக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

**யா/ வரணி மகா வித்தியாலயம்**
**பொன்விழா 2006.02.07**

தமிழோடு சைவம் தழைத்தோங்கும் புண்ணிய பூமியிலே தங்களுக்கு வஞ்சமில்லா உளமும், கள்ளமில்லா சிந்தனையும் எல்லை யில்லா கல்வியையும் அளித்து தாலாட்டிச் சீராட்டி சீர்போற்றும் நங்கையாய் வித்திட்டு விருட்சமாகி அன்னராசா - இராசமணி தம்பதி களின் மடியிலே மகவாகத் தவழ்ந்து ஆரம்பக் கல்வியை தளர்வில்லா மன உறுதியும் முயற்சி யுடனும் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தி எய்தினீர்கள். தொடர்ந்து கணிதப் பிரிவிலே ஊட்டம் பெற்று அறிவு திறன் மனப்பாங்கிலே பல்வேறுபட்ட கோணங்களிலும் திறன்களைப் பெற்று 1971இல் ஆசிரியர் நியமனத்தின் மூலம் கல்விச் சமூகத்தினுள் உள்ளீர்க்கப்பட்டீர்கள். மாணவ உள்ளங்களைத் துல்லியமாக வென்றெடுத்த நல்லாசானாகத் திகழ்ந்துள்ளீர்கள். முதல் முதலாக கணித விஞ்ஞான மூலவள நிலையத்தை நிறுவி கல்விச் சமூகத்திற்க அளித்துள்ளமை எமது கல்விச் சமூகத்திற்கு கிடைத்த பெரு வெற்றியாகும். உங்கள் கல்விப் பணி சிறந்தோங்கும் காலகட்டத்திலே வலயம் 2இன் பிரதிக் கல்விப் பணிப்பாளராக துடிப்புள்ள சேவையை உவப்புடன் ஆற்றினீர் கள். பின்னர் யாழ் மண்ணில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வால் துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை யாற்றி வன்னி மக்களின் விடிவுக்காய் உங்கள் வியர்வையைக் கடின உழைப்பால் உரமாக இட்டீர்கள். வடக்கு கிழக்கு மாகாண அமைச்சிலும் திணைக்களத்திலும் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பாக இயங்கி உச்ச சேவையை வழங்கி வரும் கால கட்டத்திலே யாழ். மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாக உழைக்க வேண்டும் என்ற பேரவாவினால் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்ற இப்போர்ச் சூழலிலே பெற்றோருக்கும், மாணவர்களுக் கும் கல்வியில் விழிப்புணர்வு தோன்றும் வண்ணம் "வாழும்போதே" என்று கூறும் திரைப்படமொன்றை நெறியாள்கையும் செய்துள்ளீர்கள்.

எமக்கு காலம் தந்த கொடையாக 10.03.2008இல் இருந்து யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்று எமது மண்ணிலும் கல்விப் புரட்சியை ஏற்படுத்தி யுள்ளீர் என்றால் எவ்வித ஐயமும் இல்லை. உங்கள் சேவையை சந்து பொந்துகளில் முடங்கிக் கிடந்த மாணவ உள்ளங்களையும் விழித்தெழச் செய்துள்ளீர்கள் என்பது கல்வி யுலகிற்குத் தெட்டத் தெளிவாகச் சுட்டி யுள்ளது.

**யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்**
**பரிசுத்தினம் 2008.11.14**

2008 மார்ச் முதல் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று சேவை செய்து கல்விப் புலத்திற்கே அளப்பரிய பெருமையைத் தேடித்தந்து கொண்டிருக் கிறார்.

எமது கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியராகயும் திறமையான நிர்வாகியாகவும் இருக்கின்ற காரணத்தினால் தன்னுடைய பட்டறிவினால் மாணவர்களின் கல்வி நிலையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்றும், இணைப் பாட விதானச் செயற்பாடுகள் மேம்பாடடைய வேண்டும் என்றும் அயராது உழைத்து வருகிறார். மாணவர்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் இடையூறுகளை இனங்கண்டு அதற்கு முகங் கொடுத்து அவர்களை எவ்வாறு சிறப்பாகச் செயற்பட வைக்க முடியும் என்று தனது சக உத்தியோகத்தர்களுடனும், அதிபர்களுட னும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி அவர்களுக்கு வழிகாட்டி ஆலோசனை கூறி அவ்ாகளை வழிப்படுத்தி வருவது பெருமைக் குரியது. அது மட்டுமல்லாமல் நேரடியாகவே

பெற்றோருடனும் மாணவர்களுடனும் கலந்துரையாடி கல்வியின் முக்கியத்துவத்தை உணர வைத்து கல்வி விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தியவர். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, அதிபர், அலுவலகர் கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முகமாக கோட்ட ரீதியாக அனைவரையும் ஒரே இடத்தில் கூட்டி தங்கப் பதக்கங்களை அணிவித்து "ஒப்பிலாமணி" எனும் குறும் படத்தினை தயாரித்து இறுவெட்டுக்களை சகல அதிபர்களுக்கும் இலவசமாக வழங்கி யமை ஒரு சிறப்பம்சமாகும்.

யாழ். கல்வி வலயம் கல்வித் துறையில் வளர்ச்சியடைய வேண்டும் என்ற பேரார்வம் கொண்டு "யாழ்ப்பாணத்திலே எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் இல்லை" என்ற உயரிய நோக்குடன் இவ்வருடம் செயற் றிட்டம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் சிறந்த பெறுபேற்றினையும் பெற்று அளப் பரிய சேவை செய்து வருவித்த கல்விப் பணிப்பாளர்.

**யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை பரிசளிப்பு விழா 2009.10.28**

தற்போது யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகவிருந்த எங்கள் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைத்து வருகின்றார் திருமதி அ.வேதநாயகம் அம்மா அவர்கள். கல்வியையும் பாடசாலை அபிவிருத்தியையும் தனது இரு கண்களாய் கருதி உரிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் பாடசாலைகளுக்கு வழங்கி மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற் பட்டுக் கொண்டிருப்பவர். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுக்கு கல்வியால் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆலோசனை வழங்குவதிலிருந்து குறும்படம் வரை செயலாற்றியவர். எமது பாடசாலையின் வளப்பற்றாக்குறைகளை இனங்கண்டு அவ்வவ்போது ஏற்ற வளங்களை வழங்கிக் கொண்டிருப்பவர்.

**யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் பரிசளிப்பு விழா 2010.01.19**

தென்மராட்சிப் பிரதேச மக்களின் மனதிலிருந்து நீங்கா இடம் பிடித்துக் கொண்ட பல்துறை அனுபவமும், ஆளுமை யும், நேர்மையும், யாவருடனனும் மனந் திறந்து பழகும் சுபாவமும் ஆற்றலும் கொண்ட வரும் 1994ஆம் ஆண்டு யாழ். கல்விச் சமூகத்தவரால் "அதிபர் கௌரவ சேவை விருது" 1995ஆம் ஆண்டு லண்டனின் பொது நலவாய அமைப்பினால் "கணித விஞ்ஞான தொழிநுட்பக் கல்வியியலாளர் விருது" 2008 ஆம் ஆண்டு சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் "நிர்வாக சாதனையாளர் விருது" என்றவாறாக பல்வகை விருதுகளைப் பெற்றவர். தென் மராட்சிப் பிரதேச மக்களின் கல்வியில் மறு மலர்ச்சியை ஏற்படுத்தியவர். தென்மராட்சிக் கல்வி வலயத்தின் இவரது பணிக்காலத்தில் தென்மராட்சி மக்களின் கல்வி வளர்ச்சிக்காக நேரகாலம் பாராது தனது துணைவரின் ஆசி யுடன் பிரதேசத்தின் மூலை முடுக்கெல்லாம் திரிந்து கால்களை ஆழப்பதித்து, கல்வி கற்றவர், கற்காதவர், ஏழை, பணக்காரன் என்ற பேதம் பாராது யாவருடனும் அன்பாகப் பழகிச் செயற்பட்டமை யாராலும் மறக்க முடியாத ஒரு உண்மை. தனது உத்வேக செயற்பாட்டிற்கு எம்மையும் உள்வாங்கி நாமும் இன்று அவர் போல் செயற்பட முன்னு தாரணமாகத் திகழ்ந்தவர். இன்று யாழ். கல்வி வலயத்திலும் உயர்ந்தவராகத் திகழ்கிறார். இவரது பணி யாழ். கல்வி வலயத்தில் மட்டுமல்ல ஏனைய வலயங்களிற்கும் பரவ வேண்டுமென எல்லாம் வல்ல வேரற்கேணி கந்தன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**யா/ மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் த.க.வித்தியாலயம் பரிசில் நாள் 2009.10.07**

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் எமது வலயத்தின் அனைத்து மாணவர் களினதும் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தி இதய சுத்தியுடன் அர்ப்பணிப்பான சேவையைப் புரிந்து சிறந்த நிர்வாகியாக விளங்குகின்றார். அன்று தொட்டு இன்றுவரை மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ்சாது கல்விக் கருமமே தனது நோக்கம் எனக்கொண்டு செயற்பட்டு வருகின்றார். எமது வலயத்தில் ஜெய்க்கா பாடசாலை அதிபர்களின்முன் வைப்பு நிகழ்வினை சிறப்பாக நடாத்தி சிறப்பான கேடயங்களை பாடசாலைகளுக்கம் அதிபர்களுக்கும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் எமது பாடசாலையும் பல கேடயங்களைத் தட்டிக் கொண்டது பெருமைக்குரிய விடய மாகும்.

**யா/ புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**
**பரிசில் தினம் 2010.10.30**

அறிவு, பக்தி, நற்குணப்பண்புகள், செயலூக்கம், விடாமுயற்சி எனும் அரும் பண்புகளோடு வளர்ந்து, ஆசிரியராக கணிதத் துறையில் முத்திரை பதித்து, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாள ராக, கணித மூலவள நிலைய முகாமையாள ராக உயர்ந்தீர்கள். வடக்கு கிழக்கு மாகாணத் தில் கல்வி அபிவிருத்திப் பிரிவில் தாங்கள் பணியாற்றிய காலம் போற்றுதற்குரியது. கல்வி அபிவிருத்தியை ஒரு ஒழுக்க முறைக்குள் உட்படுத்தி சீராக்கம் செய்து ஆசிரியர் கல்வியில் சேவை முன்பயிற்சிக்கான ஒரு பாடத்திட்டத்தையும், நிகழ்ச்சி நிரலையும் தயாரித்து நெறிப்படுத்தினீர்கள். வலயக் கல்விப் பணிப்பாளராக தங்கள் பணி பல்வேறு தளங்களில் செயல்படுகிறது. எவரையும் இலகுவில் வசீகரிக்கக் கூடிய அன்பும் கண்டிப் பும் நிறைந்த நிர்வாக முறை, பாடசாலைகளை நேரில் அணுகி அங்குள்ள குறை நிறைகளை நேரில் அறிந்து ஏற்றமாற்று நடவடிக்கை களுக்காக செயற்படும் விதம், ஆசிரியர்களு டைய வாண்மைவிருத்தி, தொழில்சார் பயிற்சிகளில் அவர்களை ஈடுபடுத்தி நல்ல கலாச்சாரத்தை உருவாக்க விழைதல், மாணவர்களுடன் உரையாடி அவர்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து செயற்ப டும் கருணை, இன்னும் சமூகத்தின் அடி மட்டம்வரை சென்று வீடு வீடாகப் பெற் றோரை, கிராமத்தவரைச் சந்தித்து, அவர் களுடைய தேவையறிந்து பயமகற்றி பக்குவ மாகப் பேசி, பிள்ளைகளை வழிப்படுத்தல் செய்விக்கும் உழைப்பு இவை அனைத்துக்கும் மேலாக, மாணவரின் தேவைகளை இனங் கண்டு அவற்றை நிறைவு செய்யக்கூடிய ஏதாவது மார்க்கங்களைத் தொடர்ச்சியாகத் தேடி அறிந்து பெற்று வழங்கும் கடின உழைப்பு. அலுவலக நேரத்திற்கு அப்பாலும் செயற்பட்டு பல்வேறு உதவி நிறுவனங் களையும் பாடசாலைகளையும் தொடர்பு படுத்தி தேவைகளை நிறைவு செய்விக்கும் திறமை. இவற்றுடன் நல்ல குடும்பத் தலைவியாகவும் செயற்பட்டு வருகின்ற தன்னிகரற்ற பண்பு என பல்வேறு தளங்களில் நின்று செயற்படும் நல்ல பெண்மணியாகத் திகழ்கிறீர்கள்.

எங்கள் பாடசாலையுடனான தங்கள் தொடர்பு பூர்வஜென்ம புண்ணியபலனாகும் என்றவாறு பல்வேறு இடையூறுகட்கு உட்பட்டு இருந்த ஒரு காலத்தில் இப்பாட சாலையைத் தத்தெடுத்தது போல் கையி லேந்தி, பாடசாலையின் வளமான உறுதியான எதிர்காலத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத் தினீர்கள். கல்வி அபிவிருத்தியில் கரிசனை கொண்டீர்கள். பௌதீக வளத்தேவைகளை படிப்படியாக நிறைவு செய்ய உதவினீர்கள். இன்று தலை நிமிர்ந்து நிற்கும் குமாரசாமி மண்டபத்தின் பணிகள் தங்களின்

கொடையாகும். இசுறு பாடசாலையாக எம்மை உறுதிப்படுத்தியதன் மூலம் எமது பாடசாலைக்கு மேலும் கட்டட வசதிகளை யும், பல கற்றல் கற்பித்தல் பயிற்சிகளையும் பெறுவதற்கு வசதி செய்தீர்கள். முக்கியமாக இசுறு வேலைத்திட்ட கால்கோள் நிகழ்விற் காக எங்களில் ஒருவராக, எங்களுக்கும் மேலான அக்கறையுடன் இணைந்து செயற் பட்டீர்கள். இக் கல்லூரியின் தர்மகத்தா சபை யின் தலைவராக, வளங்களை ஒருமுகப் படுத்தும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து செயற்படுகிறீர்கள். இந்தச் சொத்துக்களிலான வருவாய் மாணவர் கல்வி அபிவிருத்திக்குச் சேருவதற்காக, நீதிமன்றம் செல்லவும் தயாராய் இருக்கிறீர்கள். இவ்வா றான பல பெருமைகளை உடைய தாங்கள் பெருமனத்துடன் இன்று எமது மாணவச் செல்வங்களின் அடைவு மதிப்பீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது குறித்து நாம் பெருமை அடைகிறோம்.

**யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி**
**பரிசளிப்பு விழா 2010**

நாட்டில் மிகப் பயங்கர யுத்த சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் எமது பகுதியில் கல்வி வளர்ச்சிக்கு பூரணபங்காற்றிய தோடு தொண்டரடிப்படையில் ஆசிரியர் களையும், அலுவலகப் பணியாளரரையும் நியமித்து முழுநிறைவான பயிற்சிகள் வழங்கி மனநிறைவோடு எமைப்பணிசெய்ய வைத்தீர் கள். நாம் ஒவ்வொருவரும் நிரந்தரநியமனம் பெற பெருமுயற்சி எடுத்தீர்கள். எம்மையெல் லாம் வாழவைத்த தாயாகவே உங்களை மதிக்கிறோம். நீங்கள் செய்த உதவியை உயி ருள்ளவரை மறக்கமாட்டோம். உதவியென்று கூறுவது தவறு எமது வாழ்க்கைக்கு ஒளியூட்டிய தெய்வமாகவே கருதுகின்றோம். தாங்கள் மேன்மேலும் கல்விப் பணியில் சேவை புரியவும் நீண்ட ஆயுளுடன் பல் லாண்டு வாழவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அலுவலகப் பணியாளர்கள்**
**துனுக்காய் வலயம்**

திருமதி அ.வேதநாயகம் உ.க.ப (விஞ், கணிதம்) அவர்களின் விடா முயற்சியையும், கடமையுணர்வையும், பொறுப்புணர்ச்சி யையும் பாராட்டுகின்றேன். அவரால் வெளியிடப்பட்ட நவீன கணித கற்றல் கற்பித்தலுக்குப் பெரிதும் உதவக்கூடிய "உபகரணப் பெட்டிகள்" மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன். மாணவர்களின் கணித எண்ணக்கருவை சிறுவயதிலே விளையாட்டு மூலம் விருத்தி செய்வதற்கு ஏற்ற கணித விளையாட்டுக் கருவிகள் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு - புதிய அத்தியாயத்தை மலர்வித்துள்ளது. அவர் முன்மாதிரியைப் பின்பற்றி ஆசிரியர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு மாணவ உலகம் ஆசிரியர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு மாணவ உலகம் பயன்பெறும் நுட்பங்களைக் கண்டறிந்து தங்கள் அறிவை மேலும் விரி வடையச் செய்வார்கள் என்று நம்புகிறேன். கணித விஞ்ஞான மூலவளநிலையத்தின் முன்னேற்றத்தையும் செயற்பாடுகளையும் "துல்லியம் என்னும் நல்லியல் மலர்" என்றும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கும்.

**திரு.ப. சண்முகராசா B.Sc, Dip in ED.**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

மாணவச் செல்வங்களின் உத்வேக வளர்ச்சியும் கணிதப் புலத்தில் அவர் காணும் உயர்ச்சியுமே குறிக்கோளாக் கொண்டு உழைக்கும் ஆற்றல் உள்ள ஆசிரியப் பெரு மக்களை உருவாக்கும் நற்பணிக்கும் ஆற்றல் உள்ள ஆசிரியப் பெருமக்களை உருவாக்கும் நற்பணியின் நடுநிலையமாக விளங்குவதே கணித மூலவள நிலையமாகும். கோவையில் பூத்த கணிதப் பூங்கா மாணவர் தேவைக்குகந்த

தீஞ்சுவைத் தேறலை நல்கும் தீரமும் திறமும் கொண்டதே. இதன் உயிர்நாடியாக உண்மை உழைப்பின் பேரொளியாக விளங்கும் பெண்மை திருமதி வேதநாயகமே. கண்டு, கேட்டு உய்த்துணர்தல் என்ற கருத்தைக் கண்ணியப்படுத்திக் கணித உபகரணங்களை ஆக்கி மாணவர்களை ஆர்வமுறச் செய்த கீர்த்தி நம்மண்ணுக்குச் செய்த மகத்தான கல்வித் தியாகமே. உள உறுதியும் உணர் வலைகளும் முயன்று ஆக்கும் உயரிய ஆக்கங் கள் எம்மண்ணின் தேச மன்னராகவரும் சேய்களுக்குச் செம்பரிதிபோல் உறுதி நல்கி ஒளியும் செய்து உயரவைக்க வேண்டும். சொற்களிலும் பார்க்க செயல்கள் உரத்த குரலில் பேசும் என்பர். அந்தவகையில் செயற்றிறன்மிக்க இவர்களின் சேவை மாணவ உலகை மாண்புறுத்தும் "நெல்லும் உயிரன்றே நீருமுயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது போல நல்ல தலைமையும் தியாக உணர்வும் தெளிவுறு சிந்தனையும் இன்றைய உலகு வேண்டிநிற்கிறது. அந்த வகையில் வேம்பெனக் கசக்கும் கணிதத்தை தீஞ்சுவை முக்கனிச் சாறென இனிக்க வைக்கும் பெருமுயற்சி வெற்றியும் கண்டமையதார்த்த சாதனை போதனைக்குகந்த உபகரணப் பெருக்கு சோதனையில் சோம்பிய மாணவ உலகின் வேதனை போக்கிய வியத்தகு தளான்மையே. இந்த உதவிக் கல்விப் பணிப் பாளர் அவர்களின் ஊக்கத்தோடு ஆசிரிய உலகு ஆக்கப் பணியில் அடியெடுத்து வைப் பார்களாக. செயற்றிறன்மிக்க சீரிய ஆசான் களாக நம்மண்ணின் சிறார்களை நன்நெறிப் படுத்துவார்களாக. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்ற வள்ளுவன் வளமொழி ஆசிரியப் பணியாளர்களின் செவிகளில் ஒலிக்க சிந்தை திருந்தி பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உணர்வோடு வல்ல எம்

**திரு.கோ.சி.வேலாயுதம்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**யாழ். கோட்டப் பணிமனை**

# தென்மராட்சியில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தியவர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்

2000ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் காரணமாக தென்மராட்சியிற் பாடசாலைகள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி, மீண்டும் 2002ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியது. அவ்வேளைகளில் தென்மராட்சியில் உள்ள பாடசாலைகள் எல்லாம் மீண்டும் இயங்கமுடியாத நிலையிற் சில பாடசாலைகள் இணைக்கப் பட்டு இயங்கி வந்தன. அந்த நிலையின் 2005ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தென் மராட்சி வலயத்திற்கு ஒரு பெண் வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர் வந்து சேர்ந்த நேரம் தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு ஒரு நல்ல நேரமாக அமைந்தது. அவர் தனது செயற்பாடுகளை உடனேயே ஆரம்பித்தார். அவரது வாகனம் ஒவ்வொரு பாடசாலையாகத் திரிந்தது. தான் செல்லும் ஒவ்வோர் பாடசாலையிலும் அவர் நேரடியாக வகுப்புக்களுக்குச் சென்று மாணவர்களுடனும், ஆசியர்களுடனும் கலந்துரையாடினார். மாணவர்கள் கற்றலில் ஏன் கஸ்டப்படுகிறார்கள் என்பதனை விளங்கிக் கொண்டார். அவர்களுடைய பெற்றோர்களை அணுகினார். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உள்ள பிரச்சனைகளைப் பெற்றோர்களுக்கு விளக்கினார். பெற்றோர்களுடன் அடிக்கடி கலந்துரை யாடினார். இது சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கு எமது வித்தியாலயத்திற்கும் வருகை தந்திருந்தார். அவர் முதன்முதல் எமது வித்தியாலயத்திற்கு வருகைதந்த சமயம், நான் பாடசாலையில் இருக்கவில்லை. அவர் நேரடியாக வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட்டார். அவர்கள் எல்லாப் பாடங்களையும்விட, ஆங்கில பாடக் கொப்பிகளை மிகவும் அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருந்தார்கள். அதைப் பார்த்த அம்மா அவர்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அம்மா அவர்கள் ஆங்கில ஆசிரியரை அழைத்து அவரைப் பற்றி விசாரித்தார். அவர் தான் ஒரு தொண்டர் ஆசிரியர் எனவும், வேதனம் எதுவும் இன்றி 2002ஆம் ஆண்டில் இருந்து கல்வி கற்பிப்பதாகவும் எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட அம்மா அவர்கள் தனது கைப்பைக்குள் இருந்து 1000/- ரூபாவை எடுத்து ஆசிரியருக்குக் கொடுத்து அவரைப் பாராட்டியதுடன் கற்பித்தல் செயற்பாட்டில் ஊக்கத்தினையும் அளித்தார். அது மட்டும் அல்லாது மாதம் மாதம் 1000/- ரூபா அதிபர் மூலமாகத் தன்னிடம் பெற்றுக்கொள்ளும்படி கூறிச் சென்றார். அவர் எமது வித்தியாலய சம்பவத் திரட்டில் எழுதியவரிகள்

"இன்று இப்பாடசாலையைத் தரிசித்து, கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளை அவதானித்தேன். தமிழ்மொழியைவிட ஆங்கில மொழியில் மாணவர்கள் சிறப்பாகச் செயற்படுகிறார்கள். ஆங்கில ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்" என்று குறிப்பிட்டுச் சென்றார்.

இதே போன்று பல பாடசாலைகளுக்குச் சென்று அவர் செயற்பாடுகளைப் பார்வையிட்டு ஆலோசனைகளையும் வழங்கி

வந்தார். மீண்டும் சில காலங்கள் பாடசாலைகள் மூடப்படவேண்டிய நிலை தோன்றியது. அக்காலத்திற் பிள்ளைகள் கல்வியை மேற்கொள்ளாமல் வீட்டிலே இருந்துவிடுவார்கள். அவர்களுக்கு வீட்டிலேயே இருந்துகொண்டு சுயமாகக்கற்கும் வழியை ஏற்படுத்தவேண்டும் என்ற பெரும் நோக்கோடு அதிபர், ஆசிரியர்களை அழைத்து அவர்கள் மூலமாகவும், கல்வியில் ஈடுபாடு உடைய பெற்றோர்கள் மூலமாகவும் வீடுகளிலும் அருகே உள்ள சனசமூக நிலையங்களிலும், மாணவர்களை அழைத்துக் கற்பிக்கும் புரட்சிகரச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மாணவர்களிற்குத் தாமாக, இலகுவாகத் தரக்கூடிய சுய கற்றற் கையேடுகளை ஒவ்வொரு பாடங்களுக்கும் அச்சிட்டு வழங்கி, எமது பிரதேசம் என்றும் இல்லாதளவிற் கல்வித் துறையிற் சாதனை படைக்கத் தன்னையே அர்ப்பணித்த பெருமனிதராவார். காலையில் இருந்து மாலைவரை கல்வி அபிவிருத்தியிலேயே கண்ணும் கருத்துமாக நின்று செயற்பட்ட ஒரு பெண்மணி. அதிபர்களாகிய எமக்கெல்லாம் தைரியத்தைக் கொடுத்து ஒரு வலயக்கல்விப் பணிப்பாளராக மட்டுமல்லாது ஒரு தாயாக இருந்து வழிகாட்டியவர். நாம் மாணவர்களின் கல்வி சம்பந்தமான எந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டாலும் அதற்கு உடனே அனுமதி அளித்து, தாமும் பங்காளராக வந்து அதனைச் செயற்படுத்தி அதில் பெருவெற்றி காண வைத்தவர். குறிப்பாக, எமது வித்தியாலயத்தில் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது செயற்பாட்டுப் பட்டறைக்கு வருகைதந்து அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்களை ஊக்கப்படுத்தினார். அன்று அவர் எமது வித்தியாலய சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் எழுதிய சில வரிகள்.

"இன்று இப்பாடசாலையில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவுச் சுற்றாடல்சார் செயற்பாட்டுப் பட்டறையையும், இடைநிலைப் பிரிவு கணிதபாடச் செயற்பாட்டுப்பட்டறையினையும் பார்வையிட்டேன். அவை மாணவர்களினாலும், பெற்றோர்களினாலும், ஆசிரியர்களினாலும் மிகவும் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்வை ஒழுங்குபடுத்திய அதிபர், ஆசிரியர், பெற்றோர்களுக்கு எமது பாராட்டுக்கள்"

என்று எழுதப்பட்டிருந்தது. இவை போன்று பல செயற்பாட்டுப் பட்டறைகள் எமது வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு செயற்பாடும் பணிப்பாளர் அவர்களினாற் பாராட்டப்பட்டது. அது மட்டுமல்லாது மாணவர்களின் பாடசாலைக் கல்விக்கு இடையூறுகளாக இருந்த காரணங்களை அவர் இனங்கண்டு அவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்தார். எமது வலயப் பாடசாலைகள் எல்லாம் சிறந்த கல்விநிலையுடனும், புதிய மெருகுடனும் விளங்கவைத்து, மாணவர்கள் மகிழ்ச்சியாகப் பயிலக்கூடிய சிறப்பிடங்களாக்கினார். வருட இறுதியில் விழா எடுத்து A, B, C எனத் தரம் பிரித்து, பாடசாலைகளுக்கு கேடயங்கள் வழங்கி, பாடசாலைகளை மகிழ்விற்குள்ளாக்கினார். அவர் தனது குறுகிய காலப்பகுதியில் தென்மராட்சியில் அளப்பரும் சேவைகளைச் செய்துள்ளார். இயங்காது இருந்த பாடசாலைகளைப் பெற்றோர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி மீண்டும் இயங்கச் செய்த பெருமை இவரையே சாரும். அவர் தென்மராட்சியில் உள்ள ஒவ்வொரு பாடசாலையைப் பற்றியும், அவற்றில் உள்ள அதிபர், ஆசிரியர், மாணவர்களைப் பற்றியும் சரியான முறையில் அவதானித்து வைத்திருப்பார். அவர் ஒரு பாடசாலையைப் பற்றி அறிய

விரும்பினால் அப்பாடசாலை செல்வதற்கு அதன் சுற்றாடலில் உள்ள வீடுகளுக்கும், அருகே உள்ள பொது இடங்களுக்கும் சென்று அப்பாடசாலை பற்றி சமூகம் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொள்வார். அதன்பின்புதான், அவர் அப்பாடசாலையைச் சென்று தரிசிப்பார். அது அவரது பழக்க தோஷமாக இருந்துவந்தது. அவர் தனது காலப்பகுதியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர், முதன்மை ஆசிரியர்கள் மூலமாக "தமிழறவு' என்ற நூலை வெளியிட்டார். அந்நூல் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முதன் முதலாக எமது பாடசாலையில் வலயக் கல்விப்பணிப்பாளரினால் மாணவர் நலனுக்கு வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த நூல் மாணவர்களால் படிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அது மட்டுமல்லாது 2007ஆம் ஆண்டு எமது வித்தியாலயத்தில் நடைபெற்ற புவியியல் பாடப்பட்டறை அதாவது தேசப்படங்களைப் பயன்படுத்தி, புவியியல், வரலாற்று அம்சங்களைக் கற்பதற்கான செயற்பாட்டுப்பட்டறை நடைபெற்றது. அம்மா அவர்கள் அதற்கு பிரதமவிருந்தினராக வருகை தந்திருந்தார். அவர், தான் மட்டும் அந்நிகழ்விற்கு வருகை தராமல் தன்னுடன் சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரி ஒருவரையும் அழைத்து வந்து எமது பிள்ளைகளின் செயற்பாடுகளைக் காண்பித்தது மட்டுமன்றி, அவர்கள்மூலமாக பல உதவிகளையும் பெற்றுத் தந்தார். அவர் எமது சம்பவத் திரட்டுப்பதிவேட்டிற் குறிப்பிட்டவரிகள்:

"இன்று இப்பாடசாலைக்குச் சமுகமளித்து நடைபெற்றுக் கொண்டிருந்த சமூகக்கல்வி பயிற்சிப்பட்டறையிற் பங்கேற்றேன். மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இதனை ஒழுங்குசெய்த ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்". எனக் குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமல்லாது, தான் இடமாற்றம் பெற்று யாழ். வலயம் சென்றபின்பும் அங்கு உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு எமது செயற்பாட்டுப் பட்டறையினை எடுத்துக்கூறி அவர்களை எமது பாடசாலைக்கு அனுப்பி, அவர்களைச் செயற்பாட்டுக் கோவைகளைப் பார்வையிடச் செய்தார்.

எமது வித்தியாலயத்திற்குப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து செய்யப்பட்ட பின்இணைப்பினை அவர்கள் நல்லுறச் செய்த பெருமை அம்மா அவர்களையே சாரும். எமது வித்தியாலயச் செயற்பாடுகள், நிகழ்வுகள் எதுவென்றாலும் எங்களுடைய அம்மா பங்கெடுக்காத நிகழ்வே இல்லை என்று தான் கூறவேண்டும். அதற்கு சான்று பகரும் விதத்தில் சில நிழற்படங்களை இங்கு தருகின்றோம். இவ்வாறு அவர் தென்மராட்சி வயத்தில் இது வரை கல்வித் துறையில் நிகழாத அபிவிருத்தியைக் குறுகிய காலத்தில் மேற்கொண்டமைக்கான சாதனைக் காரணி அவரது மகிமைத்துவம் பொருந்திய முகாமைத்துவத் திறனேயாகும்.

நவீன மனித வளமுகாமைத்துவ ஆற்றலுக்கு அவர் தனது சேவைக் காலத்திற் பல சாதனைகளை மேற்கொண்டுள்ளார். பல தேசிய கல்விசார் விருதுகளையும், பரிசில்களையும் வென்றுள்ளார். அவர் மாற்றலாகிச் சென்றார் என்ற செய்திகேட்டுக் கலங்கி நின்றோம். இருந்தும் அவரது பதவி உயர்வுகளும், சந்தோஷங்கள் காரணமாக ஆறுதல்

அடைந்தோம். அவர் தென்மராட்சியை விட்டுச்செல்லும் இறுதிநாள் அன்று, அவர் எமது வித்தியாலய நுழைவாயில் திறப்பு விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து வாழ்த்திச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவர் இறுதியாக எமது சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் எழுதிய வாசகங்கள் :

"இன்று பாடசாலை நுழைவாயிலைத் திறந்து வைத்து ஆசி வழங்கினேன். பாடசாலை வளம் பெற என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்"

அ. வேதநாயகம்., Z.D.E

அவர் யாழ். வலயம் சென்று தமது சேவையைத் தொடர்ந்தாலும், அவர் தொலை பேசி மூலமாகவோ, நேரிலோ தொடர்பை ஏற்படுத்துவது இதுவரை நடைபெற்று வருகிறது. அவர் மணிவிழாக் காணும் இவ்வேளையில் அவருடைய மணிவிழா மலருக்கு இவ் ஆக்கத்தை வழங்குவதைஇட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். அவர் தமது ஓய்வுக் காலத்தில் நோய் நொடிகள் இன்றி எப்போதும் சந்தோஷமாக வாழ வாழ்த்து கின்றேன்.

ஜெ.தேவேஸ்வரன்,
அதிபர்,
யா/ சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்.

# வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக அம்மையாரது சேவைகள்

மாகாணக் கல்வித் திணைக்களத்தில் திருமதி வேதநாயகம் அம்மா அவர்கள் பணியாற்றிய காலப்பகுதியில் அவருடன் இணைந்து கல்வி அபிவிருத்திப்பிரிவிலே விஞ்ஞான பாடத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

அவர் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராகவிருந்த காலத்தில் அலுவலக வேலைகளைப் பொறுப்பளித்துவிட்டு, கல்வி அபிவிருத்திப் பணிகளிலேயே அதிக கவனம் செலுத்தினார். கல்வி வலயங்களிற்கும், பாடசாலைகளிற்கும் சென்று கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான அலுவலர்களையும், பாடசாலை அதிபர்களையும் விழிப்படையச் செய்ததுடன்; சேவைக்கால ஆலோசகர்களிற்கும், பாடஆசிரியர்களிற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவதிலே அதிக ஆர்வம் காட்டினார். குறிப்பாக; ஆரம்பப் பிரிவு, மற்றும் கணித விஞ்ஞானப் பிரிவுகளில், தொடர்பான பயிற்சிச் செயலமர்வுகளில் அதிக ஆர்வம் காட்டியிருந்தார்.



அக் காலத்தில் அம்மையாரின் செயலமர்வு என்றாற் சம்பந்தப்படும் சகல ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்துகொள்வர். செயலமர்வுகளை முறையாகத் திட்டமிட்டுத் தேவையான கையேடுகளை வழங்குவதுடன் பொருத்தமான வள அணியினர்மூலமாகச் செயலமர்வுகளை நடாத்திமுடிப்பார். செயலமர்வின் இறுதியில் ஆசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு கருத்துக்களைத் தெரிவிப்பதிலிருந்தே அவரது பணிகள் எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை உணர முடிந்தது. செயலமர்வுகளின் தொடக்கத்திலிருந்து முடிவடையும்வரை முழு நேரமும் பயிற்சி பெறுவோருடன் தங்கியிருந்து அது நிறைவெய்தும்வரை தமது பங்களிப்புகளை வழங்குவார். செயலமர்வு நிறைவடைந்ததும் அதன் பெறுபேறுகள் தொடர்பாக ஆராய்வார். அறிக்கைகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட வலயங்களிற்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர், செயலாளர் அவர்களிற்கும் அனுப்பிவைப்பார். அது அவரிடம் நான் கண்ட சிறப்பு. இத்தகைய செயற்பாடுகள் அவருக்கு பல பாராட்டுக்களைப் பெற்றுத் தந்தது மட்டுமல்ல; அந்த நாட்களில் தினப்பத்திரிகைகளில் அவரது செயற்பாடுகளைப் பாராட்டிக் கல்விச் சமூகம் பல பாராட்டுச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

அம்மையாருடன் கடமையாற்றிய காலத்தைப் பொறுத்த மட்டிற் சிறந்த அனுபவத்தையும், பல தேர்ச்சியையும் பெறச்செய்தது. நானும் இவருக்கு உறுதுணையாக இருந்து உழைத்திருக்கின்றேன். இன்று வடக்குக் கிழக்கிலே மாகாணமட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் கணித, விஞ்ஞான பாட

வினாவிடைப் போட்டிகள் இவரது காலத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாணவரிடையே சுயகற்றல் ஆர்வத்தை தூண்டுவதற்காக மிகவும் வித்தியாசமான முறையிலே சிந்தித்துச் செயற்படுத்தியவர் என்பதைக் குறிப்பிட்டுக் கூறியே ஆகவேண்டும்.

உண்மையும், நேர்மையும், உழைப்பு அனைத்தும் அவரது சிறப்பு. தானும் இடைவிடாது செயற்படுவதுடன் சகல அலுவலகங்களையும் செயற்பட்வைத்துக் கொண்டே இருப்பார். யாரும் சோர்ந்து விடாதபடி உற்சாகமூட்டுவார். வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற் கடமையாற்றிய காலத்திற் கல்வி அபிவிருத்தி அலுவலர்களது செயற்பாடுகளின் வினைத்திறன், விளைதிறன் தொடர்பாக ஒரு ஆய்வை மேற்கொண்டார். அதனை அறிக்கைப் படுத்தியும் இருந்தார். இது அவருக்குப் பல விமர்சனங்களை ஏற்படுத்தினாலும் துணிவுடன் வெளியிட்டார். இவ்அறிக்கை ஒவ்வொரு அலுவலர்களினதும், சேவைக்கால ஆலோசகர்களினதும் சேவை, எதிர்பார்த்த அளவைவிடப் பின் தங்கியிருந்தமையை அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கான ஆலோசனைகளையும் வெளிப்படுத்தியிருந்தார். உண்மையான பற்றுறுதியோடும், சமூக உணர்வோடும், அர்ப்பணிப்புடனும் கடமையாற்றியதனாலேயே அவர் ஆசிரியராகவிருந்து சிறந்த பணியாற்றி, இலங்கை கல்வி நிர்வாகச் சேவையிற்கு பதவியுயர்வு பெற்று படிப்படியாக முன்னேறி இன்று யாழ். மாவட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற உயர்வான ஒரு நிலையிற் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கின்றார். இவ்வளவும் அவரது சேவையால் அவருக்குக் கிடைத்த மதிப்பும், மரியாதையும், பதவியுயர்வுகளுமே என்றால் அது மிகையல்ல.

திரு.எஸ். சௌந்தரநாயகம்,
விஞ்ஞான பாடக்கல்விப்பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்.

# தொண்டைமானாறு வெளிக்களநிலையத்தில் திருமதி. அ.வேதநாயகம் - ஒரு மைல்கல்

'அறிவியல்' வளர்ச்சியினூடாக ஆக்கத்திறன் மிக்க ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கமுடியும்" என்ற குறிக்கோளைக் கொண்டு கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அறிமுறை மட்டுமல்லாது செயற்பாடு சார்ந்த கல்வியை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வரும் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் எமது தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் போசகராகவும், சிறந்த ஆலோசகராகவும் செயற்பட்டு வருவது எமக்குப் பெருமை தரும் ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

"கல்வியின் மூலம் மனிதனுள் புதைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவது மாத்திரமல்லாதது அவரது ஆளுமை விருத்தியும் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில் தரமான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதும் அதனைக் குழந்தைகள் மனதில் பதிய வைப்பதும் என்பது சாதாரண ஒரு விடயமல்ல. அத்தகைய ஒரு பாரிய பொறுப்பைச் சுமந்து நிற்கும் ஆசிரியரின் பங்கு குழந்தைகளின் அறிவு சார்ந்த வளர்ச்சியில் மகத்தான ஒன்றாகும். இதற்கான ஒரு முன்னுதாரணமாகவும், எடுத்துக் காட்டாகவும் விளங்கும் திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் தனது கல்விச் சேவையை ஒரு கணித ஆசிரியையாக ஆரம்பித்து, தனது சிறப்பான பணிகளின் மூலம், படிப்படியாக கணித வளவாளராக, சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக, கணித விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப்பணிப் பாளராக, கல்விப்பணிப்பாளராக உயர்வு பெற்று இன்று யாழ்ப்பாணத்தின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் தனது அர்ப்பணிப்புடனனான சேவையை வழங்கி வருவதுடன், தனது அனுபவத்தினூடாகப் பெற்ற அறிவை ஆசிரியர்கள் அதிபர் களிடையே பகிர்ந்து அவர்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை வழங்கி வருகின்றார்.

அவர் கணித விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய போது அவரால் முன்னெடுக்கப்பட்ட கணித மூலவளநிலையம், கணிதத்தில் பின்தங்கிய மாணவர்களக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தமையை கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எவரும் மறக்க மாட்டார்கள். அதேவேளை அவரால் வெளியிடப்பட்ட ஆய்வுநூல்கள், கணித செயற்பாட்டு நூல்கள் இன்றும் பயனுடையதாக இருக்கின்றன.

தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகளின் நேரடியாகவே தனது பங்களிப்பை வழங்கி, க.பொ.த உயர்தர விஞ்ஞான மாணவர்களின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தவும், அறிவியல் வெளிக்களப் பயணங்களை ஒழுங்கு செய்தும், உயிரியல் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்குகளை கொழும்பில் இருந்தும் கூட பொருத்தமான வளவாளர்களை அழைத்து மிகச் சிறப்பாக நடத்தி மாணவர்களின் உயிரியல் பாட பெறுபேறுகளை உயர்த்துவதற்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

விஞ்ஞான, கணித பாடங்களில் உயர் பெறுபேறுகளை அடைந்து கொள்ள வேண்டுமானால் ஒவ்வொரு மாணவரையும் செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காக

கற்பித்தல் சாதனங்களைப் பெற்றுக்கொடுப்ப தற்கும், தர உள்ளீட்டு நிதியில் இருந்தும் அவற்றை எவ்வாறு பெறப்படலாம் என்றும் உரிய வழிகாட்டல்கள் அவரால் மேற்கொள் ளப்பட்டன.

தற்போது பெற்றார், மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழியிலான கற்றல் பிரபல்யம் அடைந்துவரும் வேளையில் அவை தொடர்பான கருத்தரங்குகள், செயற்பாடு களை முன்னெடுத்து வருவதால் ஆங்கில மொழிக் கற்கையின் பெறுபேறும் யாழ்ப் பாணக் கல்வி வலயத்தில் உயர்ந்து வருகின்ற மையைக் காணமுடிகின்றது.

திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் அன்பும் பாசமும் கொண்டவராக விளங்குவ தால் அவர் மீது எல்லோருக்கும் ஒரு விருப்பம் கடமை நேரத்தில் தனது பணிகளை ஆற்றும் வேளைகளில் சில கண்டிப்பான நடவடிக்கை களையும் மேற்கொண்டு வருவது அவரது முகாமைத்துவத்திறனை வெளிப்படுத்துகின் றது. எந்த வேலையையும் சரியாக, சரியான நேரத்தில் செய்து முடிக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் செயல்பட்டு வரும் ஒரு உன்னதமான கல்விப்பணிப்பாளரை நாம் பெற்றிருப்பது ஒரு பேறாகும்.

அம்மையாரது கல்விச் சேவை எமது இனத்திற்குத் தொடர்ந்து கிடைக்கவும், நீண்ட ஆயுளையும், நலமான வாழ்க்கையையும் பெற்று, தனது இனிய சிறிய குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ நாம் ஒவ்வொருவரும், இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி ம.இராஜராம்,
*கற்கை நெறிப் பணிப்பாளர்,*
*தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.*

# அது தென்மராட்சி முன்பள்ளிகளின் வரலாற்றுக் காலம்

அன்று தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றவர்தான் எங்கள் அம்மா திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள். கல்விப் பணிப்பாளராக கடமை யேற்ற அவர்கண்களில் முன்பள்ளிகளும் முன்பள்ளி ஆசிரியர்களும் படத்தவற வேயில்லை. அன்றில் இருந்து அம்மாவது வலக்கண் பார்வை எம்மீதே இருந்தது என்று நாம் பெருமையுடன் நினைத்துப் பார்க்கின் றோம்.

முதல் வேலையாக அம்மா முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி எமது தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தை புனரமைத்தார்.

அதனைத் தொடர்ந்து தென்மராட்சி யில் உள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலும் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டு சிறார்களை மகிழ்வித்ததுடன் ஆசிரியர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியதுடன் அவர்களை அன்புடன் வழிநடத்தியது மட்டுமன்றி, அந்தந்த முன்பள்ளிகளில் உள்ள குறை நிறைகளையும் தேவைகளையும் தனது மனதில் பதித்துக் கொண்டதுடன் அவற்றை எவ்வாறு நிறைவு செய்யலாம் என்றும் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் சங்கக்கூட்டத்தை தனது மேற்பார்வையிலே கூட்டச் செய்தார். அது மட்டுமன்றி முன்பள்ளிகள் தோறும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை அமைக்கச் செய்து மாதாந்தம் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடலில் தானும் பங்கு பற்றி பெற்றோர்களுக்கு உரிய கடமைகள் பொறுப் புணர்ச்சிகள் பற்றி நட்புறவுடன் விளங்கப் படுத்தி பெற்றோர்களிடையே நல்லதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அது மட்டுமன்றி தனது தற்துணிவில் அரசசார்பற்ற நிறுவனங்களை அணுகி கட்டடம் இல்லாத நான்கு முன்பள்ளிகளுக்கு புதிய கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள் ளார். அங்கே தாங்கள் பெருமையுடன் குறிப்பிட வேண்டியது என்னவெனில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி வரத்தாமத மாகும் வேளையிலே தனது சொந்த நிதியைக் கூட விட்டு உதவி புரிந்துள்ளார் என்பதை நாங்கள் பெருமையுடன் மனஉவகையுடன் நினைத்துப் பார்க்கத் தவறுவதேயில்லை.

கட்டிடங்களை அமைத்துக் கொடுத் ததோடு எங்கள் அம்மா தனது கடமை முடிந்துவிட்டது என விடாது பல முன் பள்ளிக்கு விளையாட்டு முற்றங்களைக்கூட அமைப்பித்துக் கொடுத்துள்ளார் என்றால் மிகையாகாது.

அம்மாவின் நடவடிக்கைகளில் அடுத்ததொன்று J.R.S. நிறுவனத்தினருடன் தொடர்பை ஏற்படுத்தி முன்பள்ளி ஆசிரி யர்களுக்கு ஆசிரியர் பயிற்சியினை கட்டம் கட்டமாக வழங்கியமை போற்றுதற்குரியது. இந்த நடவடிக்கையினால் தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் பயிற்றப்பட்ட வர்கள் ஆகினர். பயிற்சியுடன் அம்மையார் தனது நடவடிக்கையை

நிறுத்திவிடவில்லை. J.R.S. நிறுவனத்தின் மூலம் முன்பள்ளிக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், முன்பள்ளி விளை யாட்டு உபகரணங்கள் போன்றவற்றைக்கூட தென்மராட்சி அனைத்து முன்பள்ளிகளுக்கும் கொடுத்துள்ளார்.

விளையாட்டு முற்றம் இல்லாத முன்பள்ளிக்கு தனது தலைமையில் பெற் றோர்களின் பங்களிப்புடன் செயற்பாட்டு பூங்காக்களை அமைத்துக் கொடுத்து அங்கே அந்த சிறார்கள் விளையாடி மகிழ்வார்கள். பெற்றோருடன் சேர்ந்து தானும் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள் எங்கள் அம்மா.

இதேபோல் சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் தொடர்பு கொண்டு தென் மராட்சி முன்பள்ளிகளுக்கு பாய், வாளி போன்றவற்றுடன் விளையாட்டு உபகரணங் கள் கற்றல், கற்பித்தல் உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இவற்றுக்கிடையே அம்மாவின் மகத்தான சேவைகளில் ஒன்று முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து தரம் ஒன்றுக்குச் செல்லவிருந்த மாணவர்களுக்கான இலவச சீருடையை வழங்கி வறுமைப்பட்ட சிறார் களின் பாடசாலைக் கல்விக்கு பேருதவி செய்தார்.

இவற்றோடு முன்பள்ளி சிறார் களிடையே அறநெறிக் கல்வியை மேம்படுத்து முகமாக முன்பள்ளிகளில் ஆத்திசூடி விழாவினை நடாத்துவதற்கு முன்பள்ளிகளின் அருகில் இருக்கம் ஆலயங்களுடன் தொடர்பு கொண்டு முன்பள்ளிகளில் ஆத்திசூடி விழாவினை நடாத்த ஏற்பாடு செய்தார். அது மட்டுமன்றி அந்த நிகழ்வுகளில் தானும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.

அதேபோல அனைத்து முன்பள்ளி களிலும் விளையாட்டு விழாவினை நடாத்தும் படி முன்பள்ளி ஆசிரியர்களை வலியுறுத்தி நடாத்தவும் செய்தார். அதனைத் தொடர்ந்து பிரதேச ரீதியாக குடும்ப மட்ட விளை யாட்டுப் போட்டியினை நடாத்த தூண்டி னார் குடும்ப மட்ட விளையாட்டுப் போட்டி போட்டிகளை நடாத்தச் செய்தார். குடும்ப மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டி மாணவர்களிடையே பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி யினையும் நடாத்த ஏற்பாடு மேற்கொண்டு வந்தார். அங்கே பிரதேச ரீதியில் வெற்றி யீட்டிய மாணவர்களை வலையமட்ட விளை யாட்டுப் போட்டி வரை கொண்டு சென்றார்.

அது மட்டுமன்றி கலைநிகழ்வுகளைக் கூட குடும்பம் பிரதேசம், வலயம் என நடாத்த உந்து சக்தியாக இருந்தார் என்றால் மிகை யாகாது. அது மட்டுமன்றி சிறுவர்தின விழாவினைக்கூட மாவட்ட மட்டம் வரைக் கும் கொண்டு சென்றார். கண்காட்சிகள் கூட நடாத்தி வைக்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக 2008ஆம் ஆண்டு தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் களுக்கு வரலாறு காணாத வகையிலே ஆசிரியர் விழாவினை தனது தற்துணிவில் நடாத்தி முடித்தார். அந்த விழாவில் தென்மராட்சி ஆசிரியர்கள் அனைவருக்கும் சாறி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அன்றைய நாள் தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வரலாறு காணாத நாள்.

**கல்விப் பணிப்பாளரின் சேவைகளில் மைல்கற்கள் சில**

**போஷாக்கு:**

போஷாக்கு என்பதை எடுத்துக் கொண்டால் எமது பிரதேச முன்பள்ளிகளைப் பார்வையிட வரும் வேளைகளில் சிறார்

களுடன் மிகவும் அன்னியோன்யமாக பழகும்போது, அவர்களது உணவுப் பழக்க வழக்கங்களைக் கேட்டு அறிந்து கொண்டு அவர்களது குடும்ப நிலையையும் போஷாக்கு நிலையையும் நன்கு புரிந்து கொண்டு பெற்றோர்களுக்கான கலந்துரையாடலை அவர்களது நேரத்துக்கேற்ப ஏற்படுத்திக் கொடுத்து தானும் அதிலே ஒரு கல்விப் பணிப்பாளர் என்ற கோதாவில் இல்லாது தானும் பெற்றோர்களில் ஒருவராக அதில் கலந்து கொண்டு அவர்களுடன் சந்தோஷ மான கலந்துரையாடலின் மூலம் பிள்ளை களின் போஷாக்கு நிலை பற்றி விளக்கிக் கூறி பெற்றோர்கள் மூலம் ஒவ்வொரு நாளைக்கு ஒரு பெற்றோர் என்ற ரீதியில் போஷாக்கினை வழங்குவதற்கு ஏற்பாடு செய்து பெரு வெற்றி யையும் கண்டு கொண்டவர்தான் எங்கள் அம்மா.

**சுகாதாரம்**

முன்பள்ளிகள் இருக்கும் குழந்தை களை ஒரே பார்வையில் கணக்கெடுத்து அவர்களின் குடும்ப நிலையை கணக்கிட்டுக் கொள்வதில் பெருவல்லவர் எமது அம்மணி. அந்த வகையில் குழந்தைகளின் நிலைப் பாட்டைக் கணித்து அவர்களைப் பற்றி ஆசிரியர்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களது சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அந்தந்த பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் பொது மருத்துவ மாதுகளுடனும் கலந்துரையாடி அவர்கள் மூலம் பெற்றோர்களுக்கான விழிப் புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்படுத்தி அதில் தானும் ஒரு பெற்றோராக கலந்து கொண்டு பெற்றோர்கள் மூலமே குழந்தைகளை இயல்பான சுகாதாரப் பழக்க வழக்கத்துக்கு கொண்டு வந்தது மட்டுமன்றி, மேலதிக சுகாதார நடவடிக்கைகளுக்கு முன்பள்ளி ஆசிரியர்களைத் தூண்டி அதில் நல்லதொரு அடைவு மட்டத்தையும் கண்டுள்ளவர்தான் எமது அம்மா.

அம்மா பதவியேற்ற ஆரம்பத்தில் அவரைக் கண்டவுடன் ஓடி ஒளித்து பயந்து நடுங்கிய முன்பள்ளி ஆசிரியர்களை எல்லாம் அன்புடன் அரவணைத்து கனிவுடன் கதை பேசி கல்விப் பணிப்பாளர் என்றால் அவர் களுக்கு இருந்த பயத்தினை அடியோடு நீக்கி அவர்களுடன் ஒரு சொந்தத் தாயைப் போல நல்ல சகோதரியைப் போல் பழகி அவர் களுடன் நட்புடன் பழக்கத்தை வைத்துக் கொண்டார். இருந்தபோதிலும் அவர் தேவையான வேளைகளில் அவர்களை அன்பாக கடிந்து கொள்ளவும் தவறுவதில்லை.

இவ்வாறெல்லாம் எம்மை வழிநடத்தி ஆற்றல்படுத்தி எமக்கு எமது சேவையின் மீது ஒரு பற்றை ஏற்படுத்தித் தந்த எமது அம்மா மாற்றலாகி சென்றது எம்மை பெரும் துன்பக் கடலில் வீழ்த்தியது. எம்மை அம்மாவிடம் இருந்து ஏன் பிரித்தாய் இறைவா என்று நாம் அடிக்கடி இறைவனை நொந்து கொள்கின் றோம்.

ஆனால் பிறிதொரு வலயத்துக்கு மாற்றலாகிச் சென்றாலும் அம்மாவுக்கு எம்மீது இருந்த அன்பு துளியளவும் குறையவே இல்லை எனப்தை உணரும் போது நாம் மிகுந்து ஆனந்தம் அடைகின்றோம்.

திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம்
*முன்பள்ளி இணைப்பாளர், சாவகச்சேரி பிரதேசம்*

# தென்மராட்சியின் விஞ்ஞானக் கல்வியை ஒளிபெறச் செய்த அருளேஸ்வரி அம்மா

போரின் கோரப்பிடியிலே சிக்கித் தத்தளித்துப் பல்வேறு வகையிலும் பாதிப்புக்களை எய்தியிருந்த தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகளைச் சீரிய செயற்பாடுகளின்கீழ் நேரிய நிலையில் நிறுத்திவைத்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிலே, முதன்மை யானவராக மிளிர்பவர் அருளேஸ்வரி அம்மா அவர்கள் என்றால் அது மிகையாகாது. அம்மா அவர்கள் அசாதாரண ஒரு சூழலிலேதான் வலயக்கல்விப் பணிப்பாளர் பதவியைக் கையேற்றிருந்தார். பொதுமக்களும், அரச நிறுவனங்களும் பிறவும் தரித்திருப்பதா? அல்லது இடம் பெயர்வதா எனத் தடுமாறித் தவித்திருந்த ஒரு காலகட்டத்திலே தயங்காத தன்மையோடும், கலங்காத உறுதியோடும் எதிர்காலச் சந்ததியினராகிய மாணவ உலகிற்குக் கல்விச் செல்வத்தை நல்கிச் செல்ல அன்னையவர்கள் ஆற்றிய அரும்பணியை மறப்பது நன்றி கொன்ற கொடும்பழிக்கு உட்படும் ஒன்றன்றோ! அந்த வகையிலே அன்னையவர்கள் விஞ்ஞானக் கல்வியை ஒளிபெறச் செய்த பாங்கினை உற்று நோக்க வேண்டியுள்ளது.

ஆறாந்தர மாணவர்களுக்குப் புரியக் கூடிய இலகு நடையிலே, பாடப்பரப்பினை உள்ளடக்கியவகையிலே சுயகற்றற் கையேடு களை உருவாக்கி, உரியபோது மாணவர் களிற்கு வழங்கிய நிலை, இங்கு கருத்திற் கொள்ளத்தக்க ஒன்றாகவுள்ளது. வெறுமனே மாணவர்களுக்குக் கையேடுகளைக் கையளிப் பதுடன் குறித்த பாடத்திற்கான கற்பித்தற்பணி முற்றுப் பெற்றதாக அவர் நினைக்கவில்லை. அவற்றை மாணவர் விளங்கவும், ஆசிரியர் விளக்கவும் ஏற்ற வழிகாட்டற் கருத்தரங் குகளை ஒழுங்கமைப்பதற்கு, செவ்வனே நடத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை, போற்றத்தக்க வகையிலே வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டிருந்தார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற அரிய கருத்திற்கு இணையப் பொருத்தமான ஆசிரியர்களைப் பொருத்த மான வகையிலே ஈடுபடுத்தி, பாடம் சார் பணிப்பாளர்களை யும், முதன்மையாசிரியர்களையும் இணைத்து, உரிய கருமம் சரியாக முன்னெடுத்து முடிக்கப் பட்டது இங்கு சிறப்பாக வலியுறுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

அடுத்தபடியாக, ஏழாந்தர மாணவர் களுக்கு அடிப்படை விஞ்ஞானத் தேர்ச்சியை உறுதி செய்வதற்காகவும், தொடர்ந்துவரும் வகுப்புக்களில் மாணவரது விஞ்ஞான அறிவின்மீது தொய்வுநிலை ஏற்படாமல் இருப்பதற்காகவும், பொருத்தமான பாடப் பரப்புக்களிலே தொடர்ச் செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. அந்த வகையிலே மாணவர்கள் அசாதாரண சூழலிலும், செயற்பாடுகளை இடையீடு இன்றி மேற் கொள்ள ஏற்ற சந்தர்ப்பம் அமைந்ததென்றே சொல்லவேண்டும். எடுத்துக்காட்டாகப் பார்வையும் கேள்வியும், தள்ளுகையும் இழுப்பும், மின்னைப் பயன்படுத்தல் போன்றவகையிற் பத்துச் செயற்பாட்டுத் தொடர்கள் மேற்கொள்ளப்பட்டமை நினைவில் கொள்ளத்தக்கதாகும். அதேபோல, எட்டாம்தர மாணவர்களுக்கும் எட்டுத் தொடர்ச் செயற்பாடுகள் வழங்கப்பட்டன. அமுக்கப் பிரயோகம், அங்கிகளை வகைப்

படுத்தல், ஒளிக்கதிர் நடத்தை, கைத்தொழி லில் இயற்கைவளம் போன்ற பாட விடயங்கள் விளக்கமாக உட்படுத்தப்பட்டன.

மாகாண மட்டப் பரீட்சையைக் கருத்திற் கொண்டும், இழந்த கற்றலை ஈடுசெய்தலை எண்ணத்தில் இருத்தியும், ஒன்பதாந்தர மாணவர்களுக்கு ஏற்ற செயற்பாட்டுத் தொடர்களும் மேற்கொள்ளப்பட்டன. சக்தி, சக்தி முதலிடங்கள், உயிர்ப்பல்வகைமை காத்தல், மின்னிலிருந்து காந்தவியல் போன்ற ஏழு செயற்பாட்டுத் தொடர்கள் மேற் கொள்ளப்பட்டன. அதேபோல பத்தாந்தர மாணவர்களுக்காக ஐந்து கையேடுகள் வழங்கப்பட்டன. பதினோராந்தர மாணவர் களுக்குப் பரீட்சை நோக்கிலே செயற்பாடு களை முன்னெடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது. இதற்கு எதிலியர் அனு சரணையுடன் விஞ்ஞானக் கையேட்டுப் புத்தகம் ஆக்கப்பட்டது. மாணவர்கள் சுயகற்றலை மேற்கொள்ள ஏற்ற ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன. கூடவே மீள வலி யுறுத்துவதற்கும், பின்னூட்டல் செயற்பாடு களுக்கும் ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன. இச்செயற்பாடுகளிலே ஆசிரியர்கள், முதன்மை ஆசிரியர்கள், பாடத்துறைசார் பணிப்பாளர்கள் எந்த வகையிலே ஈடுபடுகி றார்கள் என்பதை நேரடியாகக் கண்காணித்து, மதிப்பீடு செய் கின்ற பணியை வலயக் கல்விப் பணிப்பாளர் அம்மா அவர்கள் மேற் கொண்டி ருந்ததனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி, க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் மூன்று செயற்பாட்டுத் தொடர்கள் அடங்கிய பௌதிகவியற் கையேடுகள் வழங்கப்பட்டு கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகள் மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

க.பொ.த. (உ.த)இல் பௌதிகபாடத்தில் மாணவர் பெறுபேறு குறைவாக இருப்பதை இனங்கண்டு வலய மட்டத்திற் பௌதிகபாட மேம்பாட்டுக் குழு ஒன்றை அமைத்து, பாட அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தி யதுடன் உயர்தர வகுப்பிற்கு செயல்முறைக் கான சிறந்த கையேடு (நூல்) ஆக்கி மாணவர் களுக்கு வழங்கி, சுயாதீனமாகச் செயன் முறைகளைச் செய்ய வழிசமைத்துக் கொடுத் தமை சாமர்த்தியமான செயற்பாடாகும். இக்காலப்பகுதியிலே அம்மாவின் சீரிய வழி காட்டலிற் க.பொ.த. (உ.த) பெறுபேறுகள் உயர்வடைந்து மாவட்டமட்டத்திற் குறித்துப் பேசப்பட்டமையும், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து பொறியியற்றுறைக்கு 12 மாணவர்கள் தெரிவாகிச் சென்றமையும் சாதனைக்கான மைல்கற்களாகும்.

பாடச் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி, விஞ்ஞானத் துறைசார் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும் பணிப்பாளர் அவர்கள் ஏற்ற ஒழுங்கமைப்பினை வகுத்தமைத் திருந்தார். ஆறாந்தரம் முதல் பதினோராம் தரம்வரையான மாணவர்களுக்கு விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளை நடத்தி முடித்ததோடு, வெற்றி பெற்றோருக்கும், பங்கு பற்றியோருக்கும் பரிசுகளும், கேடயங்களும் வழங்கப்பட்டன. போட்டி நிலையில் மாணர்கள் உற்சாகமாகச் செயற்பட்ட வகை யிலே, விஞ்ஞானப் பாடஅடைவும் உயர் வுற்றது. இவ்வாறான நிலையிலே பணிப்பாளர் அவர்கள் ஆசிரியர், அதிபர், மாணவர், பெற் றோர் என்ற பலதிறத்தாரது நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டது சிறப்பம்சமாகும்.

எந்தவொரு வலயக் கல்விப் பணிப் பாளரும் ஒழுங்கு செய்யாத வகையிலே விஞ்ஞான ஆசிரியர்களுக்குச் சிறப்பான பல விஞ்ஞானபாடச் செயலமர்வுகள் வலயக் கல்விப் பணிப்பாளர் அம்மா அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டன. செயலமர்வுகளிலே

ஆசிரியரோடு தாய் ஒருவருக்கு இருக்கத்தக்க பரிவோடு பழகி, அவர்களை உற்சாகப் படுத்திய பாங்கு உள்ளுந்தோறும் உவகை யளிக்கத்தக்க தொன்றாகும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், சுற்றாடல் சார் செயற்பாடுகளில், உள்ள விஞ்ஞான விடயப் பரப்புக்களில் தெளிவு பெறும் வகையில், பாடவிதானத்திலுள்ள விஞ்ஞான செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்கு படுத்தி எங்களைத் தயார் செய்து, எங்களூ டாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிற்குப் பயிற்சி அளித்ததுடன், ஆரம்ப வகுப்பு மாண வர்களிற்கு வலய மட்டத்திலும் பாடசாலை ரீதியாகவும், சுற்றாடல் முகாம்களை நடத்தி விஞ்ஞானம்சார் விழிப்புணர்வை ஏற்படுத்த அயராதுழைத்தவர். விஞ்ஞான ஆசிரியர் களிற்கு உரிய பயிற்சியளித்து அவர்களுக் கூடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சுற்றாடல்சார் விருத்திப் பயிற்சிகளைச் சிறப்பாக நடத்தி முன்பள்ளி ஆசிரியர் வாண்மை விருத்திக்கு வித்திட்டுள்ளார்.

விசேட தேவையுடைய மாணவத் தொகுதியினருக்கு உரியவகையில் உதவும் கருமத்தையும் அவர் சரியாகப் புரிந்துள்ளார் என்றே கருதவேண்டும். கைதடியில் அமைந் துள்ள நவில்ட் பாடசாலைக்குக் குழுவாகச் சென்று விஞ்ஞான செய்முறைகளை மேற் கொண்டு, மாணவரது அடிப்படைத் திறன் களை அதிகரிக்கச் செய்யும் வகையிலே விஞ்ஞானப் பட்டறையை நடத்தி அரிய கருமங்கள் பலவற்றைப் புரிந்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரமாணவர் களுக்காக 2006, 2007 ஆகிய ஆண்டுகளிலே விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும், உபகரணப் பட்டறை நிகழ்வுகளையும், மாதிரி வினாத்தாள் செயற்பாட்டுடனான கருத்தரங் குகளையும் பதின்மூன்று நிலையங்களிலே நடத்துவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறார். இந்தச் செயற்பாடுகளுக்குக் கைம்மேற் பலனும் கிட்டியது என்றே சொல்லவேண்டும். அதாவது, இவரது காலத்தில் விஞ்ஞான பாட அடைவு வீதமானது மிக உயர்வாகக் காணப் பட்டதையும் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

போர்ச் சூழலிலே அடிக்கடி ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுண்டு. இந்நிலையில், மாணவரது கற்றற் செயற்பா டுகளும், ஆசிரியரது கற்பித்தற் செயற்பாடு களும் மறந்து மங்கி மறைந்து விடக்கூடாது என்றவகையிற் சிறப்பான முறையிற் சுயகற்றற் கையேடுகள் தயாரித்து வழங்கி, பிரத்தியேக வகுப்புக்கள் வீடுகளிலும் ஒழுங்கு செய்யப் பட்டமை ஆசிரியரதும், மாணவரதும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை எல்லாம் என்றென்றும் நன்றே உள்ளம் கொள்ளத்தக்க தாகவுள்ளது. உண்மையிலே மாணவர் நலனும், கல்வி மேம்பாடும், பணிப்பாளர் அவர்களின் இலட்சியமாக இருந்தது என லாம். விடுமுறை நாளென்றோ, ஓய்வு நாளென் றோ எதுவும் அவருக்குக் கிடையாது. ஓயாத நிலையிலே என்றென்றும் ஓடிஓடி உழைத்த வர் அவர். ஒரு வருடத்தில் 365 நாட்களுமே அவருக்கு வேலை நாட்கள்தான். இந்த வகையிலே எந்தவொரு வலயக்கல்விப் பணிப் பாளரும் செயற்படுவார் என்று சொல்ல முடியாது. இவ்வாறான ஒரு பணிப்பாளரை யாம் பெற்றிருந்தது பெறலரும் பேறு என்றே குறிப்பிடவேண்டும்.

திருமதி கந்தசாமி

# கணிதத்தில் இனிமை கண்டவர்

மனித சமுதாயத்தின் அறிவுக் கண்களைத் திறந்து மனிதனை முழுமனிதனாகவும் ஆரோக்கிய மான சிந்தனையாளனாகவும் வாழ வழிசெய்வது கல்வியாகும். அத்தகைய கல்விக்கு முதன்மை கொடுத்து வாழ்பவர்கள் பலபேர், தாம் கற்ற கல்வியை நன்றே மற்றோர்க்கு உரைத்திடுவோர் சிலபேர். அந்த சிலபேரில் அன்னையாய் அறிவூட் டியவர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்.

இவரது சேவைக்காலத்தின் ஆரம்பத்தில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகவே கல்விச் சமுதாயத்தில் காலடி பதித்தார். மாணவ நடுசத்தி ரங்களிடையே தண்மதியாகக் காட்சியளித்தார். ஒவ்வொரு மாணவ மணிகளையும் தனித்தனியே இனங்கண்டு கல்வி புகட்டுவதில் நல்லாசானாக, சுடர் விளக்காக விளங்கினார். என்றால் அது மிகையாகாது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" இவ்விரு விழிகளில் எண் என்னும் கணிதத்தை இலகுவாக மாணவர்க்குப் புகட்டி நல்விளைவுகள் கண்ட பேராசானாக மாணவர் மத்தியில் மதிக்கப்பட்டவர்.

இதன் பின்னர் இவரது திறமையாலும், அயராத உழைப்பாலும் ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்த்தப்பட்டார். மாணவர்களின் அறிவுப் பசிபோக்கிய இவர் ஆசான்களுக்கு ஆசானாகப் பிரகாசித்தார். 1985 - 1990 வரையான இப்பதவிக் காலத்தில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். பாடசாலைத் தரிசிப்பின் போது ஆசிரியர்களுடன் சுமூகமான உறவினைப் பேணி கற்பித்தல் சம்பந்தமாகப் பல நுட்பங்களை எடுத்துக்கூறி கற்பித்தல் கற்றல் சிறப்பாக அமைவதற்கு வழிசமைத்தார். மாணவர்களுக்கு கணித பாடத்திலும், கணித ஆசிரியர்களிலும் விருப்பினை ஏற்படுத்துவதற்கு அயராது பாடுபட்டார். தானங்களிற் சிறந்தது. "வித்தியா தானம்" என்பதை மிளிரச் செய்தார்.

*1990 - 1995* வரையான காலப்பகுதியில் கணிதபாட உதவிக்கல்விப்பணிப்பாளராகச் சேவையாற்றினார். இக்காலப்பகுதியில் கணிதத்திற்கான கழகத்தினை முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார். கணிதபாட ஆசிரியர்களது திறமைகளையும், அவர்களது செயற்றிட்டங் களைச் செய்வதற்கும் மாணவர்களுடைய செயற்பாடுகளை நன்றே நிறைவேற்றுவதற்கும் இக்கழகம் பெருந்துணையாக விளங்கியது. இக்கழகம் உருவாக்கப்பட்டதனால் கணிதபாட ஆசிரியர்களின் ஒன்றுகூடல் இடம்பெற்றதுடன், மாணவர்கள் கணிதபாடத்தில் அக்கறையின்மை, பாடத்தில் ஏற்படுகின்ற இடர்பாடுகள் போன்ற வற்றுக்கான தீர்வுகள் கலந்துரையாடலின் மூலம் முன்வைக்கப்படுதற்கும் இக்கழகம் அடித்தளமாக விளங்கியது எனலாம்.

மாணவர்களுக்கு கணிதபாடத்தினை இலகுவாகக் கற்பிப்பதற்கும், இப்பாடத்துறையில் விருப்பத்தையும் அக்கறையும் ஏற்படுத்துவதற்கும் உபகரணப் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது என்பதை வெளிக்கொணர்ந்த பெருமையும், திறமையும் இவரையே சாரும். பாடசாலை மட் டத்தில் உபகரணச் செயற்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தவும், அலகு ரீதியாகப் பொருத்தமான உபகரணத்தைத் தயாரித்துப் பயன்படுத்தவும் தானே முன் மாதிரியாக நின்று ஆசிரியர்களுக்கு கைகொடுத்தவர் எனக் கூறுவது பொருத்தமா னதாகும்.

அத்துடன் கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், கல்வி கற்கும் மாணவர்கள் ஆகியோரது அறிவுப் பொக்கிசத்தை விஸ்தரித்து விருத்தியாக்கும் நோக்குடன் கணிதப்போட்டி, கணித உபகரணப் போட்டி, கணிதப்புதிர்ப்போட்டி, கேத்திர கணித மதிப்பீடு, கேத்திர கணித ஓவியப்போட்டி போன்றன இவர் உதவிக்கல்விப்பணிப்பாளராக

இருந்த காலத்திலே ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப் பட்டன. இதன் மூலம் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருடையே கணிதத்திறனை வளர்த்த ஆரம்ப கர்த்தா இவர் எனக் கூறினால் அது சாலச் சிறந்ததே ஆகும்.

இவரது அன்றைய காலப்பகுதியில் ஆசிரியர்களுக்கான தரவட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இத்தரவட்டங்களுக்கு வித்திட்டவரும், அவற்றை நடைமுறைப்படுத்தியவரும் இவரே ஆகும். தற்போது இத்தரவட்டங்கள் மெருகூட்டப் பட்டு சிறப்பாகப் பாடசாலைகளில் இயங்கி வருகின்றது.

இவரது அன்பாலும், திறமையாலும், எதையும் எதிர்கொள்ளும் மனஉறுதியாலும் ஆசிரியர்களுக்கிடையேயான உறவு நன்னிலையில் காணப்படுகின்றது. ஆசிரியர்களின் மனோநிலை யை உணர்ந்து பக்குவமாக எதையும் எடுத்துக்கூறி, ஆதரவு காட்டுவதிலும் இவருக்கு நிகர் இவரே தான்.

வகுப்பறைச் செயற்பாட்டின் போது ஒவ்வொரு மாணவனும் தனித்தனியே கவனிக்கப் பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டி அதை உறுதிப்படுத்திய பெருமையும் இவரையே சாரும்.

மாணவர்களுக்காகப் பல செயற்றிட்டங் களை செய்து முன்வைத்தவர். எனினும் திசை கொண்ட எண் தொடர்பான செயற்றிட்டம் அனைவராலும் பாராட்டப்பட்டதென்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இச்செயற் பாடானது கோப்பாய் வட்டாரப் பாடசாலை களுக்கு மட்டுமல்லாது ஏனைய பிரதேசப் பாடசாலைகளுக்கும் பரப்பப்பட்டு அவர்களுக்கு பயன் கிடைக்க வழிகாட்டியது. அன்றைய கொத்தணி அதிபர்களினால் இவரது சேவைகள் பாராட்டப்பட்டவை என்பது இங்கு நினைவு கூர வேண்டியது அவசியமாகும்.

இவர் உதவிக்கல்விப்பணிப்பாளராக இருந்த காலத்திலேயே யா/ கோப்பாய் மகா வித்தி யாலயத்தில் கணித மூல வள நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார். கற்பித்தல் கற்றல் செயற் பாடுகள் ஒழுங்கு முறையாக நடைபெறுவதற் காகப் பல கணித உபகரணங்களைத் தானே முன்னின்று செய்தார். பாடசாலை மாணவர்கள் அங்கு சென்று கற்கும் நிலையை உருவாக்கினார். காலப்போக்கில் வடமாகாணத்தில் 42 மூலவள நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்நதவரும் இவரேயாகும். அனைத்துப் பிராந் திய ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்ற பரந்த மனப்பாங்குடனேயே இந்நிலையங்களை ஆரம்பித்து வைப்பதில் முழுமூச்சாக உழைத்தவர். இம்மூலவள நிலை யத்தின் மூலம் “கணித தினம்” கொண்டாடுவதற்கு ஆவன செய்தவர். இவரது சிறந்த செயற்பாட்டின் மூலம் கற்றல் கற்பித்தல் உபகரணப் போட்டி பிறமாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்பட் டன.

பாடசாலையில் கல்வி கற்று கணித பாடத்தில் தவறிய 50 மாணவர்கள் மூலவளநிலை யத்தால் நடாத்தப்பட்ட விசேட வகுப்புக்களில் கலந்து கொண்டனர். இதன் போது இவர்களில் 49 மாணவர்கள் சித்தியடைந்தனர். இதற்கான காரணம் கற்பித்தலின் போது மாணவர்கள் அன்பா கவும், அரவணைப்பாகவும் நடாத்தப்பட்டனர். அவர்களது அப்பியாசக் கொப்பிகள் சிவப்புப் பேனாக்களினால் திருத்தப்பட்டு, அவர்கள் விட்ட தவறுகள் எடுத்துக் கூறப்பட்டது. அவர்கள் அதில் நிறைவு காண்பதற்கும் வழிகாட்டப்பட்டது.

இவரது சேவைகள் மூலவள நிலையத்தில் மட்டும் நிற்காது ஏனைய பிரதேசங்களுக்கும் நடமாடும் சேவையாக விஸ்தரிக்கப்பட்டது. சில இடங்களில் இரவு பகல் சேவையாக நடாத்தப் பட்டது. கணித விஞ்ஞான கண்காட்சியை நடாத்த வேண்டுமென்பதில் உறுதியாகச் செயற்பட்டவர். இவரது விசேட கற்பித்தல் திறமையை வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. செ. செல்வரட்ணம் அவர் களால் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு தனியொரு மனிதராகி நின்று இவ்வளவு சேவையையும் செய்ய முடியுமென்றால் இத்தனை கணித ஆசிரியர்கள் இருந்தும் எம்மால் ஏன் முடியவில்லை? முடியாது என்று எதுவும்

இல்லை. அவரது வழிகாட்டலை, உறுதிப்பாட்டினையும் பின்பற்றுவோமானால் இயலாமை என்பது இல்லாமலே போகும்.

"தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றான் பாரதி. அது போல் கணித பாடத்தில் ஒவ்வொரு மாணவனையும் சித்திபெற வைப்பதற்கு முடியவில்லை என்றால் "கணித ஆசான்களே" என்று எம்மைப் பெருமை பேசிக் கொள்வதில் என்ன இன்பம்?

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்:" என்பதற்கிணங்க கணிதத்தின் இனிமையை சுவைபட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அள்ளி வழங்கியவர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அம்மா அவர்களே என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன்.

"பிரிகின்ற வேளையிலும்
அண்மையிலே நாம் நின்று
ஆசி பல பெற்றிடுவோம்
வெண்மை மனம் கொண்ட எந்தன்
வெகுமதியாம் மொழிகளை
கனிவான முகத்துடனே நீங்கள் பெற்றிடுக!
உண்மையாய் உங்களைக் கல்வி உலகம்
மறக்காது! மறக்காது!
விடை தந்து நாமுங்களை
வாழ்த்துகின்றோம் வாயார வாயார
உங்கள் சேவை எம் நெஞ்சில்
நிலையாக வாழ்ந்திடுமே!

திரு.சி.திரிகரன்,
அதிபர், யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை.

# தர்மகர்த்தா சபையின் தலைவி

கல்வி உலகில் அம்மா என்று எல்லோரா லும் அன்புடனும் விருப்புடனும் அழைக்கப்படும் பெருமை உடையவர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள். கல்வி வாய்ப்புக்களுக்கு எங்கெல்லாம் தடைகள் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் தாமாகவே முன்வந்து பிரசன்ன மாகி விடும் பண்பு அவரின் தனிச்சிறப்பு ஆகும்.

அச்சுவேலியைப் பிறப்பிடமாக கொண் டவர். அயலூரான கோப்பாயைப் புகுந்த இட மாகக் கொண்டவர். அறிவு, பக்தி, நற்குணப் பண்புகள், செயலூக்கம், விடாமுயற்சி எனும் அரும் பண்புகளோடு வளர்ந்தவர். ஆசிரியராக கணிதத் துறையிலே முத்திரை பதித்து ஆசிரிய ஆலோசகராக மூலவள நிலைய முகாமையாளா ராக பிரதிக்கல்விப் பணிப்பாளராக, கோட்டக் கல்வி அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்தவர். வடக்கு கிழக்கு மாகாண சபையில் கல்வி அபிவிருத்திப பிரிவில் பணியாற்றியவர். அக்காலத்தில் கல்வி அபிவிருத்தியை ஒரு ஒழுக்க முறைக்குள் உட்படுத்தி சீராக்கம் செய்து ஆசிரியர் சேவை முன்பயிற்சிக்கான ஒரு பாடத்திட்டத் தையும் நிகழ்ச்சி நிரலையும் தயாரித்து நெறிப் படுத்திக் கொண்டவர்.

பட்டங்கள் பல பெற்றாலும் திட்டங்கள் பல செய்தாலும் அவற்றைச் செயலில் முடிக்கின்ற கைத்திறன் பெற்றவரே எடுத்த காரியத்தை முடிக்கின்ற திறமை கொண்டவராக இருப்பர். இதை தலை, இருதயம், கை இணைப்பு என்கி றோம். இந்த மூன்றினதும்(34) சமநிலைச் சேர்க் கையே திறன் என்கிறோம். மனதில் நினைத்தைச் செயலில் காட்டுகிற கை அம்மாவின் நம்பிக்கை ஆகும். அந்தக் கைபட்ட இடம் கல் என்றால் அங்கு நெல் விளையும், முள்ளென்றால் அது மலராகும்.

அம்மாவிற்கும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரிக்கும் இடையிலான தொடர்பு மிக ஆழமானது. சோமாஸ்கந்தாவின் அற்புதமான கட்டமைப்பு, கோவில் தர்மகர்த்தாசபை, அதன் சிறப்பான பாரம்பரியம் நிறுவுனர் மழவராயர் கந்தையா அவர்களின் கல்வி நோக்கங்கள் அக் கல்லூரியின் அண்மைக்காலத் தேக்கம் என்பவை அனைவரையும் அக்கறைப்பட வைத்தது. அம்மா கடமை ஏற்றதும் முதலில் வருகை தந்தது எமது பாடசாலைக்காகும். அன்று அவர் அங்கு ஆற்றிய உரை அவர் அதுவரை காலமும் அப் பாடசாலை மீது கொண்டிருந்த அக்கறையை எடுத்துக்காட்டு வதாக அமைந்திருந்தது. எமது பாடசாலையின் அடிப்படைப் பிரச்சனைகளை அவர் அன்று நன்கு விளங்கிக் கொண்டார்.

எவரையும் இலகுவில் வசீகரிக்கக் கூடிய அன்பும் கண்டிப்பும் நிறைந்த நிர்வாகமுறை அவருடைய பலம். பாடசாலைகளை நேரில் அணுகி அங்குள்ள குறை நிறைகளை நேரில் கண்டறிவது, ஏற்ற மாற்று நடவடிக்கைகளுக்காக திட்டமிடு வது, ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொழில் சார் பயிற்சிகளில் அவர்களை ஈடுபடுத்தி நல்ல கல்விக் கலாச்சாரத்தை உருவாக்க விழைதல், சமூகத்தின் அடிமட்டம் வரை சென்று மாணவர் களின் அடிப்படைத்தேவைகளை அறிந்து வீடு வீடாகச் சென்று பெற்றோரை கிராமத்தவர்களைச் சந்தித்து தேவையறிந்து பயமகற்றி பக்குவமாகப் பேசி பிள்ளைகளை வழிப்படுத்தும் மனப்பாங்கு இவை அனைத்துக்கும் மேலாக மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்யக்கூடிய ஏதாவது மார்க்கங்களை தொடர்ச்சி யாகத் தேடி அறிந்து பெற்று வழங்கும் கடின உழைப்பு. அலுவலக நோக்கத்திற்கு அப்பாலும் செயற்பட்டு பல்வேறு உதவி நிறுவனங்களையும் பாடசாலையையும் தொடர்புபடுத்தி தேவைகளை நிறைவு செய்விக்கும் திறமை அவருடைய மேலதிக பலமாகும்.

அவர் யாழ். வலயத்தில் தனது பணியி னைப் பொறுப்பெடுத்த காலம் இடையூறுமிக்க காலமாகும். சொந்த இடங்களுக்கு வேலைக்கு செல்லமுடியாதிருந்த பல நூறு ஆசிரியர்களை பாடசாலைகளில் இணைத்து பணி வழங்க வேண்டிய நிலை. சிறிது காலத்தில் இடைத்தங்கல் முகாம்களுக்கு சீருடை, புத்தகங்கள், தளபாடங் கள், ஆசிரியர் போன்றவற்றை வழங்க வேண்டி வந்தது. அவர் தனது கடின உழைப்பால் இந்த

நிலைமைகளைச் சமாளித்து வெற்றி கண்டதும் மட்டுமன்றி அங்கிருந்த மாணவர்களுக்கு மேலதிகமாக இழந்த கல்வியை மீட்டெடுக்க வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தினார்.

இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியே வந்த பொழுது உடனடியாக அவர்களைப் பாடசாலை யில் சேர்க்கவும் அவ்வாறு சேர்க்கும் பொழுது அங்கு ஏற்படும் தளம்பல் நிலைமையைச் சமாளிப் பதற்காகவும் இரவு பகல் பாராது உழைத்து வெற்றி கண்டார்.

போர் நடைபெற்ற காலங்களின் விளைவு, கல்விச்செல்நெறி மறந்த நோக்கற்ற ஒரு மாணவ சமுதாயம் உருவானதாகும், எழுத்தறிவு வாசிப் புத்திறன் இன்மை போன்ற அடிப்படைக்குறை களுடன் மாணவர்களில் கணிசமான தொகையினர் பாடசாலையில் இருந்தனர். இதனால் கிராமப்புற பாடசாலைகள் மட்டுமல்லாமல் நகர்ப்புற பாடசாலைகளும் பாதிப்புக்குள்ளாகி இருந்தன. இவ்வாறான ஒரு நிலையில் அனைத்து மாணவர் களுக்கும் எழுத்தறிவு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உதவிக்கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் அவர்களின் கல்விக் குழுவினருடன் நேரடியாக களத்தில் இறங்கினார். கல்வியற் கல்லூரியைச் சேர்ந்த பா.தனபாலன், க.கமல நாதன், பேராசிரியர் கலாமணி என்போரின் துணை யையும் பெற்று கிராமம் தோறும் சென்றனர்.

எழுத்தறிவு மட்டத்தில் கீழ்நிலையி லுள்ள பாடசாலைகளின் பட்டியலில் எமது பாடசாலையும் இருந்ததால் எம்மீது அதிக கரிசனை கொண்டார். எமது பாடசாலையின் ஊட்டல் பிரதேசம் அனைத்திற்கும் தனது குழுவினருடன் சென்றார். அங்குள்ள சமாசங்களின் பிரதிநிதிகள் பெற்றோர்களுடன் நேரில் சென்று கதைத்தார். பள்ளி வரும் பிஞ்சுப்பாலகனை அவன் இல்லம் சென்று வரவேற்றார். இந்த முயற்சிகளின் பயனை ஒருவருடகாலத்தினுள்ளேயே அறிந்து கொள்ளத்தக்கதாக எழுத்தறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தில் எமது பாடசாலை தனியிடம் பெற்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாணவரும் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். எழுத்தறிவற்றவர் எவருமில்லை என்று ஆகியது.

எமது பாடசாலை இசுறு நிகழ்ச்சித் திட்டத்தினுள் உள்வாங்கப்படுவதற்கும் மிகவும் முன்னின்று உழைத்தார். நிரந்தரமான அதிபர் இல்லாதிருந்த காலகட்டத்தில் பதிலதிபராக இருந்த சிவலீலாதேவி அவர்களுடன் சேர்ந்தி யங்கிப் பாடசாலைக்கு தளபாட வசதிகள் ஏற்படுத்தினார். இசுறு நிகழ்ச்சித்திட்டம் வெற்றி பெற அனைத்து உதவிகளும் செய்தார். இசுறு அடிக்கல் நாட்டு நிகழ்வைச் சிறப்பிக்க கிட்டத் தட்ட ஒரு வாரகாலம் எம்மில் ஒருவராக பாடசாலையில் தரித்து நின்று செயற்பட்டு புதிய கட்டடங்கள் பெறுவதில் பங்காற்றினார்.

எங்கள் பாடசாலையின் தர்மகர்த்தா சபையின் தலைவியாகவும் வெற்றிகரமாகச் செயற்பட்டார். பல்வேறு உச்ச ஆளுமைகளின் சங்கமிப்பான தர்மகர்த்தா சபையினரை ஒருமுகப் படுத்தி கடந்தகால நிகழ்வுகளால் தொடர்பற்று சிதறிப்போயிருந்த சொத்துக்களை இனங்கண்டு பேசி அவற்றை நன்றிணைத்து வருமானம் வரும் வழிமுறைகளை உறுதி செய்தார். தேவைப்படும் பொழுது நீதிமன்றம் சென்றும் இதற்காக உழைத்தவர்.

ஏழைப்பிள்ளைகளின் கல்வி, எழுத வாசிக்கத்தெரியாத பிள்ளைகளின் முன்னேற்றம், பாடசாலைகள் பல்வேறு சாதனைகளை நோக்கிச் செல்ல வழிகாட்டுவது என்ற அடிப்படையிலான நோக்கங்களுக்காக தீவிரமாக சிந்தித்து எமது நிறுவுனர் அமரர் மழவராயர் கந்தையா அவர் களின் நல்நோக்கங்கள் நிறைவுபெற வேண்டும் என்ற உள்ளார்ந்த மனவிருப்புடன் சேவையாற்றி னார். கண்டிப்பும் அன்பும் கருணையும்மிக்க அவருடைய அணுகுமுறை எங்களுக்குச் சரியான வழி இதுவெனக்காட்டியது. இன்னும் சில காலம் பணியாற்றியிருக்கலாம் என்கின்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் உள்ளது. எனினும் ஓய்வு பெறு வது அறிந்து உறுதியாக இருந்தார். வலயக் கல்விப்பணிப்பாளர் எனும் பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்றாலும் கல்விப்பணியில் அவர் தொடர்ந்தும் இருக்க இறைவனைப் பிரார்த்திப் போம்.

தர்மகர்த்தா சபை சார்வில்
திரு.இ.ராஜமகேந்திரன்,
செயலாளர், அதிபர்
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

தென்மராட்சி பிரதேசத்தில்
ஈராண்டு காலம் வலயக்கல்விப் பணிப்பாளராக
அரும்பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும்
**திருமதி அ.வேதநாயகம் அவர்களின்**

# சேவையைப் பாராட்டிப் பாடிய பாமாலை

அச்சுவேலிப் பதியதிலே அருள்நிறைந்த குடும்பத்தில்
உச்சமாக உலகடைந்த அருளேஸ்வரி எனும் தாயார்
நிச்சயமாகக் கல்விதனை வளர்த்தெடுக்கும் பணிபுரிய
இச்சமயம் வாழ்த்துகின்றோம் வாழி பல்லாண்டினிதே.

தற்பெருமை சிறிதுமிலாத் தரம் நிறைந்த அறிவாற்றல்
நற்கருணை கலைநயப்பு நாளும் மிகு சுறுசுறுப்பு
பெற்றுயர்ந்த பெரும்பதவி பேணும் ஒரு தனிச்சிறப்பு
கற்றுயர்ந்த கலைமகளே வாழி பல்லாண்டினிதே.

எத்திசையும் புகழ்மணக்கும் ஏற்றமிகு மாதரசி
சித்தமிரங்கிச் சிறார்க்கு கற்றற் கையேடளித்து
நித்தம் மாணவர்கற்று உச்சப் பெறு பேறடைய
மெத்தப் பணிபுரிந்த நல் உத்தமியே வாழி வாழி.

அதிபர்களோ டாசான்கள் அனைவரையும் ஊக்குவித்து
நிதிவளங்கள் கண்டறிந்து நியாயமாய்ப் பயன்படுத்தி
அதிகுறைந்த மாணவரின் அடைவுமட்டம் மேலுயர்த்தி
நதிபோற் பணிபுரிந்த வேதநாயகம் அம்மா வாழி வாழி.

பள்ளிகளெல்லாம் புதிய பொலிவாக்கிப் பரிசளித்து
துள்ளிவரும் மாணவர்க்குப் பிள்ளைநேயக் கல்வி தந்து
அள்ளியணைத்தைந்தாம் தரப் புலமையிலே வென்றோர்க்கு
நல்லிதயப் பரிசளித்து நற்றாயே வாழி வாழி.

காசினியில் ஆசான்களைக் கௌரவிக்கும் தினத்தன்று
மாசில்லாப் பதக்கமதை சூட்டியே ஊக்குவித்து
பாசமுடன் ஆசான்களின் பணிபுகழ்ந்து பாராட்டி
நேசமுடன் அனைவருள்ளமும் கவர்ந்த தாய் வாழி.

மகளிர் கல்லூரியதன் நூலக அபிவிருத்தியையும்
கட்டடங்கள் புனரமைப்பு தளபாடத்திருத்த வேலை
அத்தனைக்கும் நிதிவழங்கி எம்குறையைத் தீர்த்து வைத்த
சித்தம்நிறை அருளேஸ்வரி அம்மாவே வாழி வாழி.

அருளேஸ்வரி அம்மா வாழி அருளும் புகழும் வாழி
திருமண பந்தம் வாழி திருநிறை மக்களும் வாழி
பெருமிகு பணிகளும் வாழி கருதிடும் இலட்சியம் வாழி
மருவிடும் கந்தன் அருளால் பல்லாண்டுகள் வாழி வாழி.

**அதிபர், ஆசிரியர்கள்**
*யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி*
*23.03.2008*

# மாதா பிதா குரு தெய்வம் போற்றி மாண்பு மிக்க இந் நன்நாளிலே

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி என்பது போல்.

சுந்தர நற்றமிழால் சொல்லடுக்கி என்
சொந்தக் கவிதனைப் பாடுகிறேன் - பாடும்
அடியில் ஏதும் பிழையிருந்தால்
அடியேன் என்னைப் பொறுத்திடுவீர்.

அழகுற வீற்றிருக்கும் விழாவின் கதாநாயகி
பெருமைக்குரிய கல்விப்பணிப்பாளர் அவர்களே!

கண்ணின் மணியாகிக் காக்கும் உயிராகி
விண்ணின் விழியாகி விளங்கும் மதியாகி
எங்கும் எழிலின்பம் இலங்க வழிகோலி
பொங்கும் கல்வியைப் பொழிந்திடும் பணிப்பாளர் அம்மா!

உங்கள் புகழ்தனைச் சொல்லத்தான் முடியுமா?
இல்லை சொல்லாது மறைக்கத்தான் முடியுமா?
யான் பட்ட அனுபவங்கள் - இவர்களால்
யான் பெற்ற பலாபலன்கள்
நாட்டிலே நடப்பவை வீட்டிலே கதைப்பவை யாவும்
திரட்டியே ஆக்கினேன் இச் சிறு கவிதனை.

கோயில் சென்று கும்மாளம் அடிப்பவரையும்
கோஷ்டிகளாய் சேர்ந்து குழப்பங்கள் செய்வாரையும்
டெனிம் ஜுன்ஸ் அடித்து - ஓட்டல்
ரிசேட்டும் இட்டு வீதியிலே சென்று
விசில் அடிப்பவரையும்
பாடசாலைக்குச் செல்லாது
படத்திற்குச் செல்வாரையும்

தீனா குறுப் என்பாரையும்
தினம் தினம் டிமிக்கி விடுபவரையும்
பாடத்தை ஒழுங்காகப்
படிக்காமல் இருப்பவரையும் - அடிக்கடி
பாட்டி இறந்துவிட்டாரென்று
பாடசாலைக்கு வராமல் விடுவோரையும்.

அன்பு எனும் பாசக் கயிற்றாற் கட்டி
எம்மை ஆளாக்கிய
தென்மராட்சி கல்வி சமூகத்தை கட்டியெழுப்பிய
பணிப்பாளர் அம்மா.

எந்தக் குழந்தையும் நல்லகுழந்தைதான்
மண்ணிற் பிறக்கையிலே – அவர்
நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே என்பர்
அன்னைக்கு அன்னையாய்
எம்மை ஆசைக்கு ஆசையாய்
ஏந்தி வளர்த்த நம் பணிப்பாளர் அம்மா

பத்தரை மாற்றுத் தங்கங்களாய் – தன்
முத்திரை பதித்திடும் நம் பணிப்பாளர் அம்மா
இத்தரை தனில் மகிழ்வுடன் வாழ
தத்துவம் சொல்லிடும் இரத்தினங்கள்.

சுப்பசொனிக் பல்குழல் இடியோசையானாலும்
செப்பனிடும் வித்தகரே தப்பாது வந்திடும்
நம் கடமை நிறைவேற்றும் பணிப்பாளர் அம்மா
பூரண ஹர்த்தால் நாளானாலும்
நம்மைப் பூரணப்படுத்தி உதவிய
சுயகற்றற் கையேடுதான் என்ன?

பணிவு கொண்ட நல்ல பண்பு கொண்டு யாவும்
படிக்க வைத்தே உம்மைப் பிடிக்க வைத்து
துணிவு கொண்டு உள்ளத் தூய்மை எம்
துன்பங்கள் போக்கிடும் இன்பப் பணிப்பாளர் அம்மா

ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அவர்கள் யாவரும் சமனாய் இருப்பாள் பணிப்பாளர் அம்மா
ஆண்டிலே ஒரு நாள்
அதிலே பிரியாவிடை ஆனாலும்
நம் பணிப்பாளர் அம்மாவை
நாள்தோறும் தொழுதிடுவோம்.

அன்பின் ஆலயங்களாய் அறிவின் சுடர்களாய்
பண்பின் சிகரங்களாய் தென்மராட்சி கல்வி வலயம்
புகழ்பாடும் குடும்பமே நீவீர் அம்மா!
வளரும் மதியென மகிழ்வுடன் வாழ்க!

**க.பொ பா.த (உ/த) மாணவிகள்**
மட்டுவில் பிரதேசம், தென்மராட்சி வலய பிரிவுபசார வைபவம்

# சேவையே தேவை

வயல் சூழ்ந்த மருத நிலம்
வரம் கொடுக்கும் ஆனை அப்பன்
வானளாவிய முகிற் கூட்டம்
பச்சைப் பசேல் என்ற பஞ்சு மெத்தை
இயற்கை அரண் கொண்ட நம் முன்பள்ளிக்கு
அன்னையே வருக வருக.

காவினங்கள் புள்ளினங்கள்
சாலை எங்கும் இசை ஒலிக்க
சின்னப்பாலகர் உம் வரவை
இசையோடு ஒலிக்க
வருக உம் வரவு நல்வரவாக.

கல்விக் கதவை மெல்லத் திறந்தீர்
கலைகள் யாவும் கற்பனை செய்தீர்
காலச் சக்கரம் மெல்லச் சுழன்றது
கல்விச் சாலைகள் கலைக் கூடங்கள்
பள்ளிச் சாலைகள் துள்ளி எழுந்தன.

சிந்தனை எல்லாம் உம் வசமாக
எம்மைச் சிறை செய்தீர்
இன்று கூண்டிற் கிளியாய் -
எம்மைத் தூண்டில் மீனாய்
வருத்தம் கொடுக்கின்றீர்.

எம்மண் உம்மைத் தொழுதிட
உங்கள் சேவை எங்கள் மண்ணில் நிலைத்திடவில்லை
சேவையே தேவை என்று
சேவை செய்த உம் செங்கோல்
என்றும் நன்றே நின்று நிலவுக.

**சாவகச்சேரி பிரதேச மாணவிகள்**
சேவை நலன் பாராட்டு விழாவில்

## சாவகச்சேரி பிரதேச மாணவிகளின்
# பாராட்டுப் பாமாலை

நன்றி சொல்ல உமக்கு வார்த்தையில்லை எமக்கு
நாம் தாம் மயங்கிறோம்
காலம் உள்ள வரைக்கும் உம் சேவை உயர
நாம் தாம் விரும்புறோம்
பலகாலம் நீர் புரிந்த பணியாலே நாம் உயர்ந்தோம்
பசும்பொன்னா பித்தளையா தவறாக நாம் நினைத்தோம்
நேரில் வந்த அம்மாவே....

உலகறிய எமக்குச் சேவை செய்த பிறகும் ஏம்மா சஞ்சலம்
உம்முடைய அன்பும் எம்முடைய அன்பும் ஒன்றாய்ச் சங்கமம்
தென்மராட்சி மாணவரின் கல்வியினை முன்னெடுக்க
சேவை செய்த பெரும் பணி உம்மைச் சாருமே
கள்ளமில்லா மாணவரின் நெஞ்சமெங்கும் நாயகரே
உள்ளிருக்கும் நாடியெங்கும் உந்தன் உயிர்தான்
அருள்தரும் அருளீஸ்வரியே உமை என்றும் வாழ்த்திடுவோம்.

விழி மூடாதிரவுபகல் எமக்காகச் சேவை செய்தீர்
உம்மைப் போல தெய்வம் இல்லை
உள்ளம் போல கோவில் இல்லை
ஆசானை ஊக்குவித்து செய்முறைகள் பல இயற்றி
(நன்றி சொல்ல)

பாடசாலைச் சிறாரின் கல்விதனை முன்னெடுத்து
அறிவினை ஊட்டும் பணிப்பாளரே
எம்முடைய நாயகமே ஊர் வணங்கும் நல்லவரே
உம்முடைய பண்பு அந்த வானம் எல்லையே.
கல்விக்கென வந்த அம்மாவே
சரிபாதி நீரல்லவா
நடக்கையில் எந்தன் கூட வரும்
நிழல் போல.
கண்ணன் கொண்ட ராதையென ராமன் கொண்ட சீதையென
எம் நெஞ்சில் இடம் பிடித்த வேதநாயகம் அம்மாவே.
(நன்றி சொல்ல)
உம்முடைய சேவை மீண்டும் எம்மைச்சேர இறையே அருளணும்
நெடுங்காலம் உமது பணி எங்கெங்கும் நிலைக்கணுமே
மாணவரின் கல்விக்கு ஒளி ஏற்ற நீரும் வந்தீர்
நேரில் வந்த அம்மாவே.

(நன்றி சொல்ல)

## யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய
## மகா வித்தியாலயத்தில்
# நடைபெற்ற பிரிவுபசார விழாவின்போது - கவிதை

எங்கள் சோலையில் ஆடிய பெண்மயில்
அங்கோர் சோலையை நாடிச்சென்றது
எண்ணிரண்டு ஆண்டுகள் இனிய நிழல் தந்தது
எண்ணிலா நற்பயன்கள் எம்மவர்க்குக்கிடைத்தது.

ககனத்தில் ஒளிர்வதே கணக்கிலா விண்மீன்கள்
ஆனாலும் விடிவெள்ளி ஒன்றுதான்
விடியலை உணர்த்தி நிற்கும்
கல்வியுலகில் நீங்கள் ஒரு விடிவெள்ளி.

பதவியது அலங்கரிக்கப் பலபேர் காத்திருந்தார்
பதவியதை அலங்கரிக்கப் புறப்பட்ட அணங்கே
பாரதி கனாக்கண்ட புதுமைப்பெண் வரிசையிலே
பாங்குடன் சேவையாற்றும் வித்தையின் நாயகியே.

கொண்ட கொள்கையிற் குறி தவறாத
குரங்குப்பிடி சிறிதும் பிசகாது
எந்த வகையில் எதைத்திரட்ட முடியுமோ
அந்த வழி நின்ற அன்னை தெரேசா நீர்

பேச்சினிலே உறுதி செயலினிலே தீரம்
சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில்
சோம்பியிருப்பவரும் சுறுசுறுப்படைந்திடுவார்
தம் பணிகளையும் செவ்வையாய் ஆற்றிடுவார்.

சந்து பொந்து என்று சற்றும் சளைக்காமல்
நேரிய வகையில் நிதிபல சேகரித்து
எங்கள் கல்வி வயல்களில் இட்டிருந்தீர் நற்பசளை
இது தன்னிகரில்லாத் தனித்துவமான சேவை

குடும்பம் என்றாகி விட்டால் தம் குடும்பந்தான்
உலகம் என்று வாழ்ந்திடுவர் நமது வனிதையர்கள்
குடும்பமும் சிறக்க வைத்துக் கடமையில் வென்று நிற்கும்
புரட்சிப் பெண்மணியே இதுவெறும் புகழ்ச்சி இல்லை.

சனியென்றும் ஞாயிறென்றும் எம்மையும் விடமாட்டீர்
சளையாது கருத்தரங்குகள் நடாத்தி நின்றீர்
கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்ட போது
சுயகற்றற் கையேடு கைகொடுத்ததன்றோ.
யுத்த அரக்கனின் கோரப்பிடியினில்
சின்னாபின்னமாகியது எங்கள் ஆலயம்
இந்த வடுக்கள் இன்னமும் ஆறவில்லை
ஆற்றிடுவீர் நீரென்று எண்ணி நாம் இருக்கையில்

ஆற்றொணாப் பிரிவு வந்து சூழ்ந்ததே அம்மா
ஆனாலும் ஆற்றிய சேவைகளை அதிபர்
எடுத்துரைத்தார். ஆறுதல் தானம்மா.

போகும் இடத்திலும் புகழ்மணம் பரப்பிநின்று
மேலும் பதவிகள் பெற்று உயர்வடைந்து
எங்கள் அறிஞர்கள் கட்டி வளர்த்த
கல்விப் பயிரைக் காத்து நாம் தமிழ்ச்சமூகம்
தழைத்து ஓங்கிட உம் பணி தொடரட்டும்
வாழ்த்துகிறோம் வாயார வணக்கங்கள் கோடி

**திருமதி தே.நாகராஜா,**
ஆசிரியை

# வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திப் பிரிவுக் கிளைத்தலைவராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும்

## திருமதி அ.வேதநாயகம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு

ஆசிரியம் என்பதோர் அரிய தவப்பணி
அதனை நோற்றோர் சிலர்; நுண்ணறிவோடு
செயலாற்றுவார் அதனினும் சிலரே.
அத்தகையோருள் அருளேஸ்வரியும் ஒருவர்.
வித்தகியாய் கணிதத்துறை விளங்கும் ஆசிரிய
முத்தாய் ஒளிர்ந்தார். மாணவர்க்கு எளிதாய்
மூளைக்குள் புகாதென்று புகன்ற கணிதத்தை
கோலப்புள்ளிக் கணக்கிடுவது போல் துலக்கமுற
கற்பித்தார். மேன்மை மாணவர்க்கும் இவருக்கும்
சித்தித்தது உண்மை: செயற்பாடு வென்றதம்மா.

அச்சுவேலி சென்தெரேசா மகளிர் வித்தியாலயத்தில்
ஆரம்பித்த ஆசிரியைப் பணி இவ்வாறாக உயர்ந்து
ஆண்டு பதினான்கில் ஆசிரிய ஆலோசகருமானார்
தூண்டு சுடராய் ஆலோசகப் பணியிலே துலக்கமுற
விஞ்ஞானத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளருமானார்
எஞ்ஞான்றும் கல்விப்பணியிலே தன்னை அர்ப்பணித்து
போர்ச் சூழலிற்கூட தம் பொறுப்புணர்ந்து செயற்பட்டார்.

ஏற்ற பணிச்சிறப்பால் யாழ் வலயம் இரண்டிற்
கல்வி அபிவிருத்தித்துறைப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் ஆனார்
புலம் பெயர்ந்து வன்னி வாழ் மாணவரின் கல்வியை
நிறைவு செய்யத் திறமை மிக்க தகுதியாளருக்குக் குறுங்காலப்
பயிற்சி வழங்கி தொண்டர் ஆசிரியராய் நியமித்து
கல்வியை முன்னெடுத்தார். நல்ல அடைவுகள் கண்டதனால்
குழப்பம் மிக்க சூழலிலும் நல்ல பரீட்சைப் பெறுபேறுகளை
வன்னி வாழ் மாணவர்கள் பெற்றதனை மனசார
எண்ணினாற் பெருமை இவர்க்கே அதுசாரும்.

வெறும் பேச்சை விட்டு நேர விரயம் என்பதின்றி
கடும் பிரயாசைப்பட்டு எய்திய கல்விப்பணி உயர

பதவியும் உயர்ந்தது. பணியும் மேலுயர்ந்தது.
பணி உயரப் பதவிநிலை உயரும் என்பதற்கு
உதாரணமாய் நிற்குமோர் உயர் நெறியைக் காட்டினார்
தரமுயர்ந்தது துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக
பிறகு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரும் ஆனார்
மேலும் உயர்ந்து கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திப்
பணிப்பாளருமாகி இவர் செய்த பல பணிகள்
நாமறிவோம். நற் கல்வியாளர் அறிவார்கள்.

தூயபணி கல்வி அமைச்சின் செயலாளரும் அறிந்ததனால்
தப்பாமல் இவர்க்கெப்போதும் ஒத்துழைத்தார்
ஆசிரியர் பணி சிறக்க கல்விப் பயிற்சிச் செயலமர்வு
ஆசிரிய மாணவ வழிகாட்டி நூல்களென
வேதநாயகம் அருளேஸ்வரியின் - பணியின்
அருமையினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்
அனைவருமே அறிவார். அழியாப் புகழ் பெறுவார்
இதனை விடவுமா வேண்டும் ஏனைய திரவியங்கள்
ஓடியோடி இவர் செய்த உயர்வான கல்விப் பணிக்காக

தேடிக்கொண்டார் இலண்டன் பொதுநலவாய அமைப்பின்
கணித விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வியியலாளர் விருது
எளிதன்று இவர் ஈட்டிய பெருமை யாழ்ப்பாணத்தின்
கல்வியாளர்கள் ஒன்றுகூடி இவர்க்களித்த
அதியுயர் கல்விச் சேவை விருதையும் ஈட்டியமை
எளிதன்று இவர் பெருமை இவைபற்றிப் பேசுவதும்
பெரிதென்று கருதி இருக்கையிலே எம்மை விட்டுப் பிரிகின்றார்
உரித்தாகுக இவர்க்கென்றும் உயர்ப்பணியும் பெருமைகளும்
விடைதந்தோம் விருதுகள் விடுத்த கல்விப் பெரும்
ஆலவிருட்சமே: வாழியவே நீடூழி வளரும் கலை போல!

**கல்வி அமைச்சு,**
**கல்வி அபிவிருத்திப் பிரிவு**
**23.11.2005**

தென்மராட்சி வலயத்திலே, சேவையின் சிகரமாய்க் கருதத்
தக்கவாறு, சீரிய பணிபுரிந்த, நேரிய வலயக் கல்விப் பணிப்பாளரான,
பெருமதிப்புக்குரிய திருமதி அ.வேதநாயகம் அவர்கள்
2008.03.03ஆந் திகதியன்று யாழ்ப்பாண வலயத்திற்கு
மாற்றம்பெற்றுச் சென்றபோது பாராட்டிக் கொடுத்த

# பாராட்டுப் பாமாலை

## இறை துதிவெண்பா

நித்தியமும் நிறைசேவை நெஞ்சதனில் நிலைத்துவிட
மெத்தமிக மிளிர் கல்வி மேல்வளர்த்தோர் - முத்தனையார்
திகழ்தென்மராட்சிதனில் திருப்பணிசெய் திருவாட்டி
புகழ்தன்னைப் புகலவிறை காப்பு.

## பாராட்டு (அறுசீர் விருத்தம்)

பற்பல பகுதி தோறும்
பாங்குறு பணியே செய்த
நற்றவ மரிய தாயாம்
நாளுமே ஓய்வ தென்று
சற்றவ ரிருந்தி டாது
சகல பல் கல்விச் சாலை
உற்றவ ருயர்ந்த சேவை
ஊருல கறியச் செய்தார்.

தேசமார் புகழ்சேர் அன்னை
திகழருளேஸ்வரிப் பெயர்
வாசமார் வண்மையாளர்
வரும் வேதநாயகம் தன்
பாசமார் பாவை இந்தப்
பகுதியாம் தென்மராட்சி
மோசமாம் அழிவு நீக்கி
முற்றுமாய்ப் பணிகள் செய்தார்.

ஓடும் வாகனத்தில்
உண்டிருந்துழைத்துழைத்து
தேடிடும் கல்விச் சேவை
தேர்ந்துடன் புரிவாரென்னே
மூடிடும் வீதி தன்னில்

முழுத்தொடர் வாகனங்கள்
கூடிட ஒதுங்கி நின்றும்
கொண்டதாம் பணிகள் செய்தார்.

கோவைகள் பரிசீலித்தும்
குறித்தவற் கொப்பமிட்டும்
தேவைகள் தேர்ந்து மாய்ந்து
திட்டமும் தீட்டிவிட்டு
சேவைகள் வீதி மீதும்
திகழ்ந்த வாகனத்தினுள்ளும்
நோவையும் மறந்து நின்று
நொடிதனில் முடிப்பாரென்னே.

ஓய்வுநாளென்றும் பாரார்
ஒழிவுநாளென்றும் ஓயார்
ஆய்வுமாய் அனைத்துப் பள்ளி
அவற்றில் முன்பள்ளி தோறும்
காய்வுமேல் வெயிலோ வேறு
கடுமழை பனியிற் கூட
தேய்வுமோர் சோர்வுமில்லார்
தினம் தினம் பணிகள் செய்வார்.

சாரதியாக யானும்
சார்வைத்தியசாலை மேல்
நேரது திணைக்களத்தும்
நீள்பணி நிறைந்த போதும்
ஓரதி காரி இந்த
உத்தமப் பணிப்பாளர் போல்
சீரதி லரிய சேவை
செய்ததும் இல்லை என்பேன்.

சிறந்த தோர் சேவையாளர்
சீறியே சினந்து கொண்டு
மறந்து மோர் வேளை தானும்
மாற்றமாய் மொழி பேசாதோர்
பிறந்ததோர் உயர்ந்த மாதா
பேறுயர் பணியினாளர்
திறந்ததோர் மனமதுள்ளோர்
தினம் தினம் இனிதே வாழ்க.

**சி.ஆறுமுகம் (சாரதி)**
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

# வன்னி நிலப்பரப்பில் சேவை.....



# பகுதி - 5

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
அவர்கள் பற்றி கூறுபவர்களும்,
பத்திரிகைகளில் வெளியானவை....
மற்றும் ஆய்வுக்கட்டுரைகள்



# வன்னி இடப்பெயர்வில் துணுக்காயில் அம்மாபற்றிய என் மனப்பதிவு

குறிப்பிட்ட மணி நேரத்தினுள் ஐந்து இலட்சத்துக்கு மேல் மக்கள் குடாநாட்டை விட்டு வெளியேறி தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்து சென்று வன்னிப்பகுதியை நோக்கி நகர்ந்து சென்றனர். அனைத்து மக்களும் வன்னிப்பகுதியில் தஞ்சமடைந்தனர் யாழ். குடா மக்களுக்கு கஸ்டம்தான் ஆயினும் வன்னிக் கல்விச்சமூகத்திற்கு மிகுந்த சந்தோஷம். ஆம் அருள்பொழியும் அருளேஸ்வரி அம்மாவின் வருகை அம்மக்களி டையே கல்வியில் புதிய ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியது. துணுக்காய் கல்வி வலயத்தின் பணிப்பாளராக கடமை ஏற்று அவர் ஆற்றிய சேவை இவ்வளவா? என வாயில் கை வைத்து ஆச்சரியமாக எழுந்து பார்க்கும் வகையில் அவர் சேவை சொல்லிலடங்காது.

காலை முதல் நடுநசிவரை இடை விடாது பணிபுரிந்தாலும் அனைவருடனும் இன்முகத்துடன் கதைத்து அவர்களது பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார். தேவை களை அறிந்து தீர்த்து வைக்கும் பெருந்தகை. நீண்ட தூரங்களுக்கு அப்பாலுள்ள பாட சாலைகளை தரிசிப்பதற்காக வாகனங்கள் இல்லாத நிலையில் துவிச்சக்கரவண்டியின் பின்னாலிருந்து கடுமையான பள்ளங்களையும் நீர் ஓடைகளையும் தாண்டிச் சென்று ஆசிரியர் கள் குறைகளை அறியவும் மாணவர்நிலை அறிந்து அவர்களின் மனக்குறைகள் , கஸ்டங்கள் பற்றிக் கேட்டறிந்து அதற்கேற்ற மாற்று முறைகளைக் கொடுத்து அருள் பொழிவார் அருளேஸ்வரி.

மாணவர் குறைகள் மட்டுமல்ல பெற்றோர் மனக்குறைகளையும் தீர்த்து வைத்து ஏழை எழிய மக்கள் மனதில் இடம் பிடித்துக்கொண்டார். போரின் பாதிப்பால் துன்புற்ற மக்கள் மனதை சந்தோஷப்படுத்து வதற்காக மாபெரும் கலைவிழாக்களை ஏற்பாடு செய்து மாலை தொடக்கம் காலை வரை குதூகலமாக நிகழ்வுகளை மேடை யேற்றி மக்கள் மனதில் சந்தோஷத்தை ஏற்படுத்தி வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமுண்டு என்றும், நாம் வாழத்தான் வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கி வாழ்க்கையில் ஒருபிடிப்பை ஏற்படுத்தினார். வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை ஏற்படுத்தினார்.

துணிவும், நேர்மையும், தன்னம் பிக்கையும், விடாமுயற்சியும் வேகமும் கொண்ட அம்மா கரிசனையுடன் அணுகும் பண்பும், இன்முகத்துடனும் பரிவுடனும் பாசத்துடனும் அணுகி தேடிவரும் அனைவரின் துன்பங்களையும் தீர்த்து வைப்பார். அம்மாவின் முகத்தைப் பார்த்தால் பாதித்து துன்பம் தீர்ந்தவிடும். துணுக்காய் மாங்குளம் மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்த அம்மாவிற்கு மணிவிழா எடுக்கும் இவ்வேளையில் அம்மாவுடன் வன்னியில் சேவையாற்ற கிடைத்த சிறு சந்தர்ப்பம் என் வாழ்நாளில் நான் மறக்கமுடியாத காலமாகும். அவ்வாறான காலம் இனி வருமா? வீரத்தாயாக நான் காணும் அம்மா வளமுடன் வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

திரு.வின்சென்ற்

*அதிபர், யா/ சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம்.*

## முன்னாள் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளரும், இந்நாள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான திருமதி அ. வேதநாயகம் அம்மா அவர்களுக்கு யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் நடாத்திய சேவை நயப்பு விழாவில் அதிபர் ஆற்றிய உரை

முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் இந்நாள் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருமான பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய அம்மா அவர்களுக்கும் அன்புக்கும், மதிப்பிற்குமுரிய திரு.வேத நாயகம் ஐயா அவர்களுக்கும், ஆசிரியர்களுக் கும், ஊழியர்களுக்கும் இனிய மதிய வந்தனங் கள்.

அம்மா அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு சில மாதங்களும் கடமையாற்றியிருந்தாலும் அவர் ஆற்றிய சேவை இருபது வருடங்கள் ஆற்றும் சேவைக்கு ஒப்பானதாகும். சிறந்த முறையில் நல்ல திட்டங்களைப்போட்டு மின்னல் வேகத்தில் செயலாற்றியிருக்கின்றார்.

தென்மராட்சிப் பிரதேசப் பாட சாலைகளின் பிரச்சினைகளை இனம் கண்டு, தேவைகளை அறிந்து வளங்களைப் பகிர்ந்து பாடசாலைகள் உயிர்த்துடிப்புடன் செயற்பட வழிகாட்டியுள்ளார். செயற்பட்டுக் கொண்டி ருந்தவர்களை மேலும் தட்டிக் கொடுத்தும் தூங்கியவர்களைத் தட்டி யெழுப்பி செயற்பட வைத்தும் செயற்பட்டவர்களுக்குத் தக்க கணிப்பு வழங்கியும் கௌரவித்துள்ளனர்.

இவர், தான் ஓர் அதிகாரி என்ற தோரணையின்றி ஒரு சகோதரியாக, அன்னை யாக இருந்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழிகாட்டியுள்ளார். பெற்றோரை, சமூகத் தைப் பாடசாலைக்குள் கொண்டு வந்து நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வழிகாட்டிய பெருமை அம்மாவைச் சாரும்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் விழா எடுத்து பரிசில் வழங்கி மாணவர்களைக் கௌரவித்தார். ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கு விழா எடுத்து Medel வழங்கி கௌரவித்தார். பாடசாலைகளைப் பிள்ளை நேயப்பாடசாலையாக ஆக்கும் நோக்கில் செயற்பட்டு புள்ளிகள் வழங்கி, பாடசாலை களுக்கும் விருதுகள் வழங்கி, பாடசாலை களுக்குப் பெருமையளித்தார்.

அதிபர்களை ஏனைய வலயப் பாடசாலைகளைத் தரிசிக்க அழைத்துச் சென்று அதிபர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒவ்வொரு பாடசாலையும் பிள்ளைநேயப் பாடசாலையாக, ஒரு கலைக் கோயிலாக, எழில் ததும்பும் இடமாக புனிதம் நிறைந்த சாலைகளாக மெருகூட்டி மாணவர் விரும்பும் இடமாக மாறியுள்ளமைக்கு அம்மாவின் வழிகாட்டல் காரணமாக இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

2006ஆம் ஆண்டில் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்க முடியாத நிலையிலிருந்த சமயத்தில் சுயகற்றல் கையேடுகளை ஆசிரியர்களின் உதவியுடன் தயாரித்து மாணவர்களின் கல்வியில் பின்னடைவு ஏற்படாமல் வீட்டிலிருந்தே கற்பதற்கு வசதியளித்த பெருமைக்குரியவர். ஆசிரியர்கள் தம் வீடுகளுக்கு அயலில் உள்ள மாணவர்களுக்குக் கற்றலில் உதவ வேண்டும் அது அவர்களது கடமை என்ற உணர்வை ஏற்படுத்தி அச்சமயத்தில் ஆசிரியர்களைச் செயற்படத் தூண்டியவர்.

உயர்மட்டக் கல்விச் செயற் பாட்டுக்கு பாடசாலைகளுக்கு நிதி வழங்கிய போது அந்த நிதியைச் சரியான முறையில் நல்ல திட்டம் போட்டுப் பயன்படுத்துவதற்கு வழிகாட்டியுள்ளார். ஆசிரியர்கள் எந்த இடத்தில் பின்னடைவாக உள்ளார்கள் அவர்களுக்கு எந்தவிடயத்தில் பயிற்சி வழங்க வேண்டும், மாணவர்கள் எந்த விடயத்தில் பின்னடைவாக உள்ளார்கள், அவர்களுக்கான கல்வித் தேவையென்ன, அவர்களுக்கு எந்த வகையான பயிற்சி வழங்க வேண்டும் என்ற வகையில் அதிபர்கள் நல்ல திட்டங்கள் போட்டு செயலாற்றுவதற்கு நல்ல ஆலோச கராக சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துள் ளார்.

ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் செயலமர்வுகள் நடைபெறுகின்ற போது அந்த இடங்களில் பிரசன்னமாகி போதிய விளக்கங்களை அளித்து செயலமர்வுகளை வினைத்திறனுடையதாக்கிய பெருமையும் இவருக்குண்டு.

நல்ல திட்டங்களைப் போட்டு அதன் மூலம் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி களைப் பெற்று பாடசாலைகளை வளம் படுத்துவதில் இவர் வல்லமை படைத்தவர். எமது கல்லூரி நூலகத்திற்கு தளபாடப் பற்றாக்குறை இருந்த சமயத்தில் Save the children இன் உதவியைப் பெற்றுக் கொடுத்து தளபாடத் தேவையை நிறைவு செய்துள்ளார். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு விளை யாட்டு முற்றம் இல்லாத குறையை Unices நிறுவனத்தின் உதவி மூலம் போக்கியுள்ளார். மேலும் யுத்த சூழ்நிலையில் பாதிப்படைந்த கட்டிடங்கள் புதுப்பொலிவு பெறுவதற்கு Unicef இடமிருந்து நிதி உதவி பெற்றுத் தந்துள்ளார். இப்படியாக அம்மாவின் சேவை களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கடமை நேரத்தின் பெரும்பகுதியை பாடசாலைகளைத் தரிசிப்பதிலும் தென்மராட்சிப் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவுமே செலவிட்ட அம்மையார். கோவைகளைச் சுமந்து சென்று இரவிரவாக கோவை சம்பந்தமான வேலைகளைச் செய்துள்ளார். தன்னுடைய ஒவ்வொரு கணப்பொழுதையும் மாணவரின் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட்டுள்ளார். மாண வரின் அடைவுமட்டத்தை உயர்வடையச் செய்வதற்கு நல்ல திட்டம் போட்டுச் செயற்பட ஆசிரியர்களைத் தூண்டி அதிபர் களைச் செயற்பட வைத்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர் அன்பு, பண்பு, மற்றும் மனிதநேயம் மிக்க ஒரு பண்பாளர். நல்ல இதயம் படைத்தவர். மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர். நல்ல கல்வியியலாளர். தீர்க்க தரிசனம் மிக்கவர். தூரநோக்குடையவர். புதிய விடயங்களை உள்வாங்கி நவீன உலகின் ஓட்டத்திற்கேற்ப செயற்படும் திறனாற்றல் மிக்கவர்.

குறும்படத் தயாரிப்பிலும் இவரது சிந்தனை சென்றுள்ளது. "வாழும் போதே" குறும்படம் சிலரது சிந்தனை ஆற்றலுக்கு ஒரு ஆதாரம். இவரது கல்விப் பணியை வார்த்தைகளுக்குள் அடக்கி விளம்பிட முடியாது என்று கூறினால் அது மிகையல்ல.

இவர் இத்தகைய நல்ல சேவைகளை ஆற்றுவதற்குப் பக்கபலமாக விளங்கியவர் திரு. வேதநாயகம் ஐயா அவர்கள். அன்போடு தோளோடு தோள் நின்று அவரது செயற்பாடு கள் திறம்பட அமைய உதவியவர். அம்மா நல்ல முறையில் செயலாற்றி இன்று பெரு மைப்படுத்தப்படுகின்றார். கௌரவிக்கப்படு கின்றார் என்றால் அவரது அத்தனை பெருமை யும் திரு. வேதநாயகம் ஐயா அவர்களையே சாரும்.

இவரது புதல்வியாரும் எமது பிரதேசத்திற்கு நல்ல கல்விப்பணியை ஆற்றியுள்ளார். நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பித்ததோடு நல்ல நாடகங் களை மேடையேற்றி வெற்றிகளும் பெற்று எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்துள் ளார்.

தரம் 5 மாணவர்களைக் கௌரவப் படுத்தியதோடு பாடரீதியாகவும் போட்டிகள் நடாத்தப்பட்டன. கணித விஞ்ஞானப் போட்டிகள், சமூகக் கல்விப் போட்டி, சமய அறிவுப் போட்டி எனப் போட்டிகள் நடாத்தப்பட்டு மாணவர்களுக்குப் பரிசில் களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

ஆரம்பக்கல்வியில் முன்பள்ளிகளின் பங்களிப்பு முக்கியமானது. முதுகெலும்பு போன்றது. இதனை உணர்ந்து முன்பள்ளி களை ஒன்றிணைத்து ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி நல்ல நெறிப்படுத்தலைச் செய்துள்ளார். இச்செயற்பாடுகள் மூலம் முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் சமூகத்திற்கும் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

எவ்வளவோ துன்பங்கள், பிரச்சினை களுக்கு மத்தியில் சேவையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும் காலத்தில் சுயவிபரக் கோவைகள் சரியாகப் பூர்த்தி செய்யப்படாததால் ஓய்வூதியத்தை உரிய காலத்தில் பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இத்தகைய சிரமத்தை நீக்கும் நோக்கோடு சுயவிபரக்கோவை களைப் பூர்த்தி செய்யும் நோக்கில் பல்வேறு படி முறைகளைக் கையாண்டு செயற் பட்டுள்ளார். அத்தனை சுயவிபரக் கோவைகளையும் புதிய கோவையாக மாற்றி பாதுகாப்பை வலுப் படுத்திய சிறப்புகுரியவர் அம்மா.

இத்தகு சிறப்புக்கள் மிக்க அம்மா அவர்கள் இடமாற்றம் பெற்று யாழ். வலயம் சென்றாலும் அம்மாவின் கல்விப் பணியை அவரது சேவையை எமது பிரதேச மக்கள் மறந்துவிடமாட்டார்கள். அவரது சேவையை எமது இதயங்கள் என்றும் நினைவு கூரும். அவரது பணி மேலும் சிறப்புறவும் தன் குடும்பத்தாருடன் வளங்கள் பல பெற்று உடல்நலம், உளநலத்துடன் பல்லாண்டு வாழ நம் இறைவனை வேண்டி சேவை இனிதே தொடர வாழ்த்தி அமர்கின்றேன்.

## தென்மராட்சியில் சேவைநாயகமாகத் திகழ்ந்த
## வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்

தென்மராட்சிக் கல்விவலயத்திலே 28.11.2005 முதல் 10.03.2008 வரை வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த திருமதி அ. வேதநாயகம் அவர்கள் ஆற்றிய சேவைகள், நன்றியாளர் உள்ளங்களில் என்றென்றும் நின்று நிலைப்பவையாக உள்ளன. காட்சிக்கு எளியராக, அநாவசியமான நிலையிற் கடுஞ்சொற்கள் பேசாதவராக விளங்கிய நிலையில், வள்ளுவன்கண்ட உயரிய தலைமைத்துவப் பண்பைத் தனக்கென உரிய தனித்தன்மையாகத் தாங்கி நின்றுள்ளார். அஃதாவது, வள்ளுவர் கூறிய "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" என்ற குறள் இலக்கணத்துக்கு இலக்கியமாக இலங்கியுள்ளார். சில கல்வி அதிகாரிகள், உதவும் மனப்பான்மை குறைவாகவுள்ள விதத்திலோ, தங்களது இயலாமை என்ற பலவீனத்தை மற்றவர்கள் அறியக்கூடாது என்ற விதத்திலோ, அதிகார வெறிகொண்ட வகையிலோ, தொல்லைகள் எல்லையற்றுப் பல்கிப் பெருகிவிடும் என்ற வகையிலோ, ஜனநாயகத் தலைமைத்துவத்தின் சாதகநிலையைத் தெரிந்தும், புரிந்தும் கொள்ளாத வகையிலோ காட்சிக்கெளியராக இல்லாமல், இன்சொல் பேசுபவராக இல்லாமல் இருப்பதைப் பொதுவாக அறியக்கூடியதாகவுள்ளது. ஆனால், பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் வல்லவராயும் நல்லவராயும் உள்ள வகையிலே காட்சிக்கு எளியராயும், காட்சிக்கு இனியராயும் இருந்து கருமம் புரிந்துள்ளார்.

பணிப்பாளர் அவர்கள் பணியாற்றிய காலம் தென்மராட்சிச் சூழலிலே ஒரு அசாதாரணகாலமாகும். இக்காலத்திலே தென்மராட்சி, கிழக்குப் பாடசாலைகள் பலஇடம்பெயர்ந்திருந்தன. இப்பாடசாலைகளை ஏனைய பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும், வீடுகளிலும் நடத்திய வகையில் கல்விச் செயற்பாடுகளை இடையீடு இன்றித் தொடர்ச்சியாக இடம்பெறச் செய்தார்.

யுத்தச் சூழலிலே அடிக்கடி ஊரடங்குச் சட்டங்கள் போடப்படும்போது வழக்கமாயிருந்தது. இந்நிலையில் பொதுப்பரீட்சைகளை எழுதவேண்டிய வகுப்புக்களும், பிறவகுப்புக்களும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படுவது கல்விச் செயற்பாடுகள் இல்லாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். பிரத்தியேகமான இடங்களில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற ஏற்ற ஒழுங்குகளைச் செய்ததுடன், அரசசார்பற்ற நிறுவனங்களினதும், ஏனைய நிறுவனங்களினதும் உதவியோடு சிறப்பான கற்றற் கையேடுகளை உருவாக்கி வழங்கி, கல்விச் செயற்பாடுகள் சீராகவும், செம்மையாகவும் நடைபெற ஆவன செய்தார். ஆக்கி அளிக்கப்பட்ட கற்றற் கையேடுகளின் சிறப்பை ஏனைய வலயத்தாரும் கல்வித் துறையினரும் போற்றிப் புகழ்ந்ததை அனைவரும் அறிவர்.

கல்வியமைப்பிலே முன்பள்ளிக் கல்வியும், ஆரம்பக் கல்வியும் அத்திவாரமாக அமைவதை அனைவரும் அறிவர். அதிலும் அடி அத்திவாரமாக அமைவது முன்பள்ளிக் கல்வியாகும். அரசாங்கமானது முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை அண்மைக்

காலங்களில் அறிந்து, அதற்கென ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரையும் நியமித்துள்ளது. கல்வி ஆராய்ச்சி முடிவுகளின் படி 18வயது நிறைவாகும்போது, ஒருவருக்கு ஏற்படுகின்ற கல்வியறிவிலே 33%மான கல்வியறிவு ஆறுவயதிற்குள் அத்திவாரமிடப்படுகிறது. இதனை நன்குணர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் தென்மராட்சியின் முன்பள்ளிகளிற்கு, சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் உதவியோடு கட்டடங்களை அமைத்துத் தந்துள்ளார். மேலும், அப்பள்ளிகளின் விளையாட்டு விநோதச் செயற்பாடுகளை ஊக்குவிக்கின்ற வகையிலே விளையாட்டு உபகரணங்களையும் பெற்றுத் தந்துள்ளார். அத்துடன் இப்பள்ளிகளிலே பல கண்காட்சிகளையும், கலைநிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய் துள்ளார். மேலும் இப்பள்ளிகளிலே இடம் பெற்ற செயற்பாடுகளிலே பெற்றோரையும் இணைத்து அவர்களுக்கு வேண்டிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

பாடசாலைச் செயற்பாடுகளை ஊக்கி உயர்த்தும் வகையிலே பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தின்கீழ் பாடசாலை களை மதிப்பீடு செய்து, தரம்பிரித்து; விருது களையும், பரிசுகளையும் வழங்கியுள்ளார். இந்நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடா னது போட்டி மனப்பான்மையுடன் உயர்ந்து சென்றது. பாடசாலைப் பூங்காக்களின் உருவாக்கம், ஏனைய வடிவமைப்புக்களின் செயற்பாடுகள் எல்லாம் பாடசாலைகளின் கவினுறு தோற்றத்திற்குக் காரணமான தெனலாம்.

இவரது காலத்திலே பாடசாலைகளிற்குக் கணினி வசதிகளையும், தளபாட வசதி களையும் ஏற்படுத்தித் தந்துள்ளார். கணினியே காணாத சில பாடசாலைகள் கணினி வசதியைப் பெற்றுக் கொண்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

பணிப்பாளர் அவர்கள் சாதனை புரிந்த ஆசிரியர்களைக் கௌரவிக்கின்ற வகையிலே அவர்களது உற்சாகம் மேலும் உயர்வுற்றது எனலாம். இந்நிலையில் எல்லா ஆசிரியரும் ஊக்கமாகச் செயற்பட்டமை நினைவு கூரத்தக்கதொன்றாகவுள்ளது.

வலயக்கல்வி அலுவலக அறையிலே அடைபட்டிருக்குமொரு வலயக்கல்விப் பணிப்பாளராக அன்றி, பாடசாலைகளை அடிக்கடி தரிசித்து, கற்றல் கற்பித்தற் செயற் பாடுகளை ஊக்கிய நிலை அவருக்கென்றே அமைந்த சிறப்பான நிலையாகும். மாணவர்களையும், கூடவே ஆசிரியர்களை யும் ஊக்குவிக்கும் வகையில், க.பொ.த. உயர்தரப் பிரிவிற்கான பொருட்காட்சி நிகழ் வொன்றைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்த ஊக்குவித்து, சகல பாடசாலைகளும் பயன்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஏனைய பாடசாலைகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற ஆவன செய்துள்ளார். மேலும், பணிப்பாளர் அவர்கள் தென்மராட்சி வலயத்திற்குப் பணிபுரியவந்தபோது 7.4%மான மாணவர் களே ஐந்தாம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சை யில் சித்தியடைந்திருந்தனர். இந்த சித்தி வீதத்தினை இவர் தனது காலத்திலே 14.55% வீதமாக உயர்த்தியமை சிறப்பாகச் சிந்தை கொள்ளத்தக்கதொன்றாகும். அத்துடன் உயர்தர வகுப்புக்களின் சித்திவீதங்கள் உயரவும் இவர் காரணமாக இருந்துள்ளார். இவரது காலத்தில் 12 மாணவர்கள் பொறியியற்றுறைக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து தெரிவாகியுள்ளனர். எனவே, பணிப்பாளரின் காலத்துக் கல்விச் செயற்பாடுகள் துரிதமாகவும், பெரிதாகவும்

வளர்ச்சி பெற்றதைக் கூறாதிருக்கமுடியாது. பாடச் செயற்பாடுகளோடு இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும், பாடசாலை களிலே இடம்பெறச் செய்துள்ளார். முத்தமிழ் விழாக்களை ஒழுங்குசெய்து மொழித் திறத்தில் முட்டறுக்கும் சூழலை வளர்க்கத் திட்ட மிட்டுச்செயலாற்றியுள்ளார்.

ஏனைய சாதாரண பாடசாலைகளுக்கு உதவியது போன்று, கைதடியில் அமைந்துள்ள நவீல்ட் எனப்படும் விழிப்புலன், செவிப்புலன் அற்றோர் பாடசாலைக்கும் ஆற்றத்தக்க அரும்பணிகளை ஆற்றி, போற்றத்தக்க சிறப்பைப் பெற்றுள்ளார்.

பணிப்பாளர் அவர்கள் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பணியினைப் பொறுப்பேற்ற போது திணைக்களத்திலே கல்வித்துறைசார் நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட வேண்டிய கணிசமான அளவு பணம் செலவிடப்படாமலே இருந்தது. இப்பணத் தொகையினை ஆண்டு முடிவடைவதற்குள் ஆசிரியரும் மாணவரும் உச்சப்பயனை எய்தும் வகையில் செலவிட்ட வகையானது, அவரது பேராற்றலைத் துலாம்பரமாகக் காட்டுமொன்றாகின்றது. அதிபர்கள், ஆசிரியர்களது வாண்மைவிருத்திக்கெனப் பல்வேறு சேவைக்காலப் பயிற்சி வகுப்புக் களையும், எந்தவொரு வலயக் கல்விப் பணிப் பாளருமே ஒழுங்குசெய்யாத முறையிலே ஒழுங்குசெய்து நடத்தி முடித்தமைக்குத் தென்மராட்சிக் கல்விவலயத்தின் அதிபர் களும், ஆசிரியர்களும் தக்கசாட்சிகளாக உள்ளார்கள். பணித்தொகுதியினர் கல்வி நிலையிலும், வாண்மை நிலையிலும் தன்னைவிட உயர்வதை மனதார விரும்பாத தன்மையுடையவர்கள் வாழ்கின்ற இன்றைய சூழலில் அனைவரையும் தட்டிக்கொடுத்து உயர்ந்து முன்னேறிச்செல்ல அவர்களுக்கு உதவும் இவரது உள்ளப் பண்பைப் பயனுற் றோர், நன்றியுடையோர் என்றென்றும் நன்றே நினைவு கூருவர். ஊரடங்குச் சட்ட காலத்தி லும் ஆசிரியர்களது சம்பளத்தைப் பெற்றுத்தர இவர் எடுத்த துணிவான முயற்சிகள் ஆசிரியர், அதிபரது கோவைகளைச் செம்மைசெய்ய இவர் அயராது உழைத்துள்ளார்.

பணிப்பாளர் அவர்களின் உதவியைப் பெறும்வரை ஒட்டியிருந்து, பின்னர் அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல செயற்பட்டபாங்கை இடமாற்றம் பெற்று வந்தபோது அவர் உணர்ந்திருப்பார் என எண்ணாமல் இருக்க என்னால் முடியவில்லை. இருப்பினும், ஒட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல ஒட்டியுறவாடுவோரையும், அறிவறிந்த அவர் இனங்காணுவார் என்பதிலும், எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. சேவைநாயக மான அவரது நல்லரிய சேவையை தென்ம ராட்சி ஒருபோதும் மறந்துவிடாது. அவரது புண்ணியப்பணி அவருக்கு என்றென்றும் நிறைவையும், நிம்மதியையும் நன்றே நல்க நிறைவான இறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.

திரு.மு.பாலசுப்பிரமணியம்,
M.Phil, S.L.P.S-I
ஓய்வுபெற்ற அதிபர்.

# அன்றைய நினைவுகளில்...

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்பதற்கமைய எமது அருளேஸ்வரி. அன்னராசா ஆசிரியை அவர்கள், கல்வி எனும் அறிவுக்கடலில் பயணம் செய்து கொண்டிருக்கின்ற ஒரு தெளிந்த முத்து. இவருடைய அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும், அர்ப்பணிப்பான சேவையுமே இன்று யாவரும் போற்றும் ஓர் கல்விப் பணிப்பாளராக விளங்குகின்றார். அவரது தயாள குணமே அவரின் வளர்ச்சியின் அத்திவாரம்.

*1977.01.16* ஆந் திகதி காலை நெற்றியிலே விபூதி பூசி, சந்தனப் பொட்டுமிட்டு அழகிய உற்சாகமான தோற்றத்தோடு, முதல்நாள் வகுப்பிற்கு புன்சிரிப்போடு நுழைந்த அந்தக் காட்சி இன்றும் என் மனக்கண்முன் தெரிகிறது. பிள்ளைகளே ! நான் உங்களுடன் நல்ல அன்பாகப் பழகுவேன். விளங்கவில்லை என்று நீங்கள் எத்தனை தடவை கேட்டாலும் விளங்கப்படுத்துவேன். ஆனால், படிக்கும் போது குழப்பம் செய்தால், நான் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது. என்ற அறிமுகத்துடன் ஆரம்பமானது கணிதவகுப்பு. மறுநாளே எங்களிற்கு நிலையறி மதிப்பீடு. உடனே திருத்தம் செய்தார். அடிப்படை விடயங்களிலேயே நாம் பலவீனமாக இருப்பதை இனங்கண்டார். ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு: பரிகார வகுப்பென்றார். தொடங்கியது காலை வகுப்பு. எனக்கு நன்றாக விளங்கியது. விளங்காதவர்களை ஒவ்வொருவராகக் கவனித்து விளக்கமளித்தார். வேண்டியபோது உபகரணப்பயன்பாடு. விளையாட்டுமூலம் கணிதம் படித்தோம் நாம். நண்பர்கள் எல்லோரும் கூடிக்கதைத்தனர். "நல்ல ரீச்சரடா. நல்லா விளங்குது. ஊரிலே வீடுகளிலும் வெள்ளை பஸ்சிலை வந்து 7 மணிக்கு உங்களுக்கு வகுப்பு எடுக்கிறா. தொடர்ந்து படிப்பிக்க வேணும். நீங்கள் நல்ல பால் ரீஆவது கொண்டு போய்க் குடிக்க கொடுக்க வேண்டாமே!" இது பெற்றோரின் சலசலப்பு. காலையிலே வகுப்பெடுத்துக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொருநாளும் ஏழேமுக்கால் எட்டு மணிக்கிடையில் நல்ல சில்வர்ச் செம்பிலே பசுப்பால் தேநீர் - சில்வர் ரம்ளராலே மூடி வகுப்பிற்கு வரும். அன்போடு ஊர்மக்கள் அனுப்பும் அந்தத் தேநீரைக் குடித்தாற் களைதீர்ந்து ஒரு புதுத் தெம்பு உண்டாகும்.

பாடநேரத்தில் வரைபு கற்பிக்க இருந்தால், அதற்கு முன்பே காலை வகுப்பிலே அதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள் அத்தனையிலும் தெளிவு ஏற்படும் வகையிற் கற்பித்துப் பயிற்சிவழங்கி; திருத்தி, வீட்டு வேலை தந்து, போட்டி நடத்தி, பரீட்சை வைத்து அப்பப்பா.. எவ்வளவு முயற்சி எடுத்தா ரீச்சர். இடைக்கிடை அடியும் விழும். என்றாலும் நாங்கள் ரீச்சரிலே நல்ல அன்புதான். நான் நல்லா படிக்கிறதால ரீச்சர் ஒருநாளும் எனக்கு அடிக்கேல்லை. வகுப்பில குறைந்த அடைவு மட்டமுள்ள மாணவர்களையும், ஏழை மாணவர்களையும் வீட்டிற்கு அழைத்து இலவசமாகக் கணிதம் சொல்லிக் கொடுக்கும் பரந்த சிறந்த மனப்பாங்குடையவர் எங்கள் ஆசிரியர்.

எமது பாடசாலைக்கு வரும்வழியில், நடராஜராமலிங்கேஸ்வரன் எனும் சிவன்

கோவில் உள்ளது. அவர் தினமும் பாடசாலைக்கு வருமுன் கோயிலைத் தரிசித்துவிட்டு, விபூதி சந்தனம் கொண்டு பாடசாலைக்கு வருவார். நாங்கள் ஒவ்வொரு வரும் தெய்வசிந்தனையோடு நல்லபிள்ளை களாக இருந்து நன்றாகப் படிக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு விபூதி சந்தனத்தை வகுப்பிற் கொண்டுவந்து பிள்ளைகள் எல்லோருக்கும் வழங்கி, எழுந்து நின்று பூசவைப்பார்.

கற்பித்தலில் மட்டுமா எங்கள் ஆசிரியர் அர்ப்பணிப்போடு செயற்பட்டார்? இல்லை. கண்காட்சி, கலைநிகழ்வுகள், போட்டிகள், சமய நிகழ்வுகள், போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் எதுவாயினும் மாலை வேளைகளிலும், விடுமுறை நாட்களிலும் பாடசாலைக்குச் சமுகமளித்துப் பயிற்று விப்பார். எல்லாப் பிள்ளைகளையும் சமனாக மதிக்கும் உயரியபண்பு அவரிடம் கண்டோம். பாரபட்சம் என்றும் அவர் பார்த்த தில்லை. அப்போது எங்கள் அதிபர் திரு. சிவானந்தம் எல்லாப் போட்டிகளையும் இல்லங்களிற்கிடையிற்றான் நடத்துவார். எங்களுடைய ரீச்சர் சோமசுந்தரம் இல்லம். அவர் பழக்குகின்ற அத்தனை நிகழ்வுகளும் முதலாம் இடம்தான் 'முயற்சி திருவினை யாக்கும்.' 'பயிற்சி உயர்ச்சி தரும்' என்ற முதுமொழிகளெல்லாவற்றிற்கும் செயல் வடிவம் கொடுத்தவர் எங்கள் ஆசிரியர். ஒவ்வொருவருடமும் பிள்ளைகளை லொத்தர் போட்டு இல்லங்களிற்கு பிரிப்பார்கள். எப்படிப் பிரித்தாலும் சோமசுந்தரம் இல்லம் முதலாம் இடம். எப்படி என்று கேட்கி றீர்களா? ரீச்சரின்ரை விடாமுயற்சிதான். குழுச் செயற்பாடுகள் அத்தனையும் முதலாமிடம், அணிநடை, அஞ்சல் ஓட்டங்கள், விநோத உடை, இல்ல அலங்காரம் எல்லாம் முதலாமிடம், பயிற்சியால் - முயற்சியாற் பெறும் எல்லாமுதலிடங்களும் சோமசுந்தரம் இல்லத்தை முதலிடமாக்கிவிடும். பேச்சுப் போட்டிகளில் எல்லாப்பிரிவிலும் முதலாம் இடம், கட்டுரைப் போட்டிகள், நாடகப் போட்டிகள் எல்லாமே முதலிடம்.

**திருமதி ஜெயந்தி தவநேசன்**
ஆவரங்கால்

# தாய்மொழிக் கல்வி அபிவிருத்திப் பாதையில்...



வாழ்வின் அடிப்படையே தாய் மொழிதான் என்று கூறலாம். மனிதன் தாய் மொழி மூலமே உலகினைத் தரிசனம் செய்கி றான். ஒரு மனிதன் தன் வாழ்வில் வளம் பெறுவதற்கு முதலில் வேண்டப்படுவது தாய் மொழிப் பயிற்சிதான். தாய்மொழியியற் றிறன்களைப் பெறாமல் எவரொருவரும் வாழ்விற் பெருவெற்றி பெறமுடியாது.

மொழியைக் கையாள்வதில் ஒருவரி டம் இருக்கக்கூடிய திறன்களை மொழித் திறன்கள் என்று கூறலாம். கேட்டல், கிரகித் தல், வாசித்தல், பேசுதல், தொடர்பாடல், வாதிடல், ஆக்கி எழுதுதல் முதலிய திறன் களை மொழித்திறன்கள் எனலாம்.

மொழித்திறன் விருத்தியின் முக்கியத்துவத்தை நம்மிற் பலர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை என்றுதான் கூறவேண்டும். தாய்மொழிக் கல்வி என்பது பாட அலகுகளில் உள்ள கருத்துக்களைக் கிரகிப்பதற்கும், வினாக்களுக்கு விடை எழுதுவதற்கும் உரிய பயிற்சி என்றுதான் கருதுகிறார்கள். ஆனால், மொழிக் கல்வி என்பது வாழ்க்கைத் தகைமைகளை விருத்தி செய்ய உதவும் வழிமுறையுமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்மொழிக் கல்வியினூடாகப் பிள்ளைகள் மேலே குறிப்பிட்ட திறன்களை மட்டுமன்றி வகுத்தல், தொகுத்தல், ஒழுங்கு படுத்தல், சிந்தித்தல், தர்க்கித்தல், ஒப்பிட்டு நோக்குதல். கற்பனை செய்தல் முதலிய திறன்களையும் பெறுகிறார்கள். இத்தகைய திறன்கள்தான் பிள்ளைகளிடம் ஏனைய பாடங்களைப் படித்துப் பயன் பெறுவதற்கான வல்லமையையும் பெற்றுக்கொடுக்கிறது. ஆகவே பிள்ளையின் ஒட்டு மொத்தமான கல்வி விருத்தியிலும், வாழ்க்கை மேம்பாட்டி லும் தாய்மொழிக் கல்வி முக்கியஇடம் வகிக்கின்றது என்பது புலனாகிறது.

இன்று எமது பிள்ளைகளிடம் மொழி சார்ந்த திறன்கள் குறைந்து வருவதையிட்டுச் சமூக அக்கறை கொண்ட பலரும் விசனப் படுவதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. இந்த வகையிற் சிந்தித்தது மட்டு மன்றி, இந்த நிலைமைக்கான காரணங்களையும் இனங்கண்டு, இதனை நீக்குவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்திக்

கல்விப் பணியாற்றிய வர் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள்.

ஓய்வுபெறும் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் எமது கல்விப் புலத்திற் படிநிலை வளர்ச்சி கண்டவர். 1971ஆம் ஆண்டு கணிதபாட ஆசிரியராகக் கல்வி உலகிற் புகுந்த அவர், செயன்முறைக் கல்வியில் ஆர்வமும், கற்பித்தல் ஆளுமையும், அர்ப்பணிப்பும் உடைய ஆசிரியராகச் செயற்பட்டவர். பின்னர் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் முதுமொழிக் கிணங்க ஆசிரிய ஆலோசகராகக் கல்வி நிர்வாகப் புலத்தில் நுழைந்தார். ஒரு பாட சாலையிற் குறிப்பிட்ட தொகையினரான மாணவருக்குப் பணியாற்றுவதைவிட, ஒரு தொகை ஆசிரியருக்குத் தம்பாடத்துறையிற் பயிற்சியையும், வழிகாட்டலையும் வழங்கு வது உகந்தது என்று கருதிய அவர் செயல மர்வுகள், செயற்றிட்டங்கள், செயல் நிலை ஆய்வுகள், பரிகாரக்கற்பித்தல் என்பவற்றை முதன்மைப்படுத்தித் தனது ஆசிரிய ஆலோசகர் பணியை முன்னெடுத்தார். அதன் பின்பு உதவிக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்விப்பணிப்பாளர் என்று தனது கல்விப்பணியை அகலித்துக் கொண்டார்.

இவரது கல்விப் பணிகளை முன் பள்ளித் துறையில் இவரது செயற்பாடுகள், ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு இவரது பங்களிப்பு, இடைநிலைக் கல்வி, உயர்தர நிலைக் கல்வி ஆகியவற்றில் இவர் வழங்கிய பங்களிப்பு என வகைப்படுத்தி நோக்கலாம்.

**முன்பள்ளி**

கல்வியின் அத்திவாரம் ஆரம்பக் கல்வி என்று பொதுவாகக் கூறுவார்கள். ஆயினும், ஆரம்பக் கல்விக்குப் பிள்ளைகளை உளரீதியாகவும், உடலியக்க ரீதியாகவும் தயார்ப்படுத்தும் இடமாக முன்பள்ளி விளங்குகிறது எனலாம். பெற்றாரது உறவுப் பிணைப்பிலிருந்து, பிள்ளை சற்று விலகி ஆசிரியருடன் அந்நியோன்யமாக உறவை ஏற்படுத்திக்கொள்ளவும் முன்பள்ளி களமாக அமைகிறது. இதனை நன்கு உணர்ந்து கொண்ட கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தமது சேவைக் காலத்தில் முன்பள்ளிகள்மீது மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தார். முன்பள்ளி ஆசிரியர்களுட னும், பிள்ளைகளின் பெற்றோருடனும் கலந் துரையாடிப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்குரிய பரிகாரச் செயற்பாடுகளுக் கான செயற்பாடுகளைத் திட்டமிட்டு, ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கி, ஆசிரியர்களை ஆர்வத்துடனும், உற்சாகத்து டனும், வினைத்திறனுடனும் செயற்படத் தூண்டியது மட்டுமன்றி, தாமும் அவர்களு டன் ஒருவராக நின்று பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பாக இவர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் "விளையாட்டல்லாத விளையாட்டு" என்னும் கைந்நூலிற் கூறப்பட்டுள்ள 'மொழி விருத்தி' தொடர்பான விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கியமை முக்கிய விடயமாகும். ஆரம்ப நிலை மொழித்திறன் விருத்திக்கு மேற்படி நூலில் வழங்கப் பட்டிருந்த செயற்பாடுகள் மட்டும் போதா என்பதனை உணர்ந்து திட்டமிட்ட முறையில் கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்களை மேம்படுத்தும் வகையில் தேர்ச்சி அடிப்படையிலான செயற்பாடுகளை ஒழுங்கு செய்து, பல்வேறு மட்டங்களிலும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு காட்சிப்படுத்தி முன்பள்ளி ஆசிரியர்களிற்குப் பயிற்சி அளித்தமையும் - வரலாற்றுச் சாதனையெனக் கற்றவர்கள் பலராலும் பாராட்டப்பட்ட யாழ்.வலயமட்ட முன்

பள்ளிக் கண்காட்சி (யா/செங்குந்தா இந்துக் கல்லூரியில்) நிகழ்விலே மொழி விருத்தி தொடர்பாக; விசேட பிரிவினை ஒழுங்கு செய்து தேர்ச்சியடிப்படையிற் செயற்பாடு களைக் காட்சிப்படுத்திப் பெருந்திரள் மக்களைப் பங்காளர்களாக்கிப் பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிக் குழந் தைகள், ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் அனை வரும் மொழிவிருத்தி சார்ந்த வழிகாட்டல் முறைகளைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்தார். இக்கண்காட்சியைப் பார்வையிடவந்த அனைவரதும் கவனத்தை ஈர்த்தது. "என்றும் இத்தகைய ஒரு முன்பள்ளிக் கண்காட்சியை நாம் கண்டதில்லையே" என பலரும் பேசிக்கொண்டார்கள்.

**ஆரம்பக் கல்வி**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது பழமொழி. தாய்மொழிக் கல்வியில் (எழுத்தறிவித்தல்) தான் அடிப்படை அம்சம். எமது தாய் மொழியாம் தமிழ்மொழி இருநூற்று நாற்பத்தேழு எழுத்து வடிவங்களைக் கொண்டது. அது மட்டு மன்றிச் சுழிப்புக்களுடன் கூடிய எழுத்துக்கள் பலவற்றைக் கொண்டது. இவை காரணமாக எமது பிள்ளைகள் எழுத்துக்களை அறிந்து கொள்வதிற் சிரமங்களை எதிர்கொள்கின்ற னர் என்பது யதார்த்தமான விடயம் ஆகும். இதன் காரணமாக எழுத்தறிவித்தல் என்பது எமது ஆசிரியர்களுக்கும் சுமையாக இருப்ப தும் உண்மையே. ஆகவே, எழுத்தறிவித்தலை ஒரு பரிகாரச் செயற்றிட்டமாக மேற்கொள்ள வேண்டிய தேவை எமது கல்விப்புலத்தில் தவிர்க்க முடியாத ஒரு தார்மீகத் தேவையா கவே இருந்துவருகிறது.

திருமதி அ. வேதநாயகம் அவர்கள் இது விடயத்தில் அதிக கரிசனை காட்டியு ள்ளார் எனலாம். துணுக்காய்க் கல்விக் கோட்டத்தில் அவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் இது தொடர்பாகப் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். இவரது வழிகாட்டல் நெறிப்படுத்தலில் துணுக்காய்க் கல்விக் கோட்டப் பிரதேசத்தில் 1996இல் ஆரம்ப வகுப்புக்களில் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் உள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்கில் பதினேழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆளணியினரின் உதவியுடன் 'மொழிவிருத்திச் செயற்றிட்டம்' ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட் டத்தில்

1. ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்
2. பாடத்திட்டம், வேலைத்திட்டம் தயாரித்தல்
3. கற்பித்தல் உபகரணத்தயாரிப்பு
4. பயிற்சி வகுப்புக்கள்
5. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
6. மதிப்பீடு செய்தல்

என்ற ஒழுங்கில் நடைமுறைப் படுத்தப் பட்டு வெற்றி காணப்பட்டது. அது மட்டு மன்றி, இச்செயற்றிட்டத்திற் சிறப்பாகச் செயற்பட்ட ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கதாகும். அதேவேளை, இச்செயற் றிட்டம் எவ்வித நிதி ஒதுக்கீடுமின்றி மேற் கொள்ளப்பட்டது என்பதும் சமகாலத்தில் துணுக்காய்க் கல்விக் கோட்டத்திற்கு விஜயம் செய்திருந்த அப்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி T. பெரியதம்பி அவர்கள் விதந்து பாராட்டியமையும் இதன் சிறப்பம் சங்களாகும்.

மேலே கூறப்பட்ட செயற்பாடுகளுடன் கூடிய எழுத்தறிவூட்டல் பரிகாரச் செயற்றிட் டங்கள் துணுக்காய்க் கல்விக் கோட்டத்தில் 1997, 1998 ஆகிய ஆண்டுகளிலும் இவரது நெறிப்படுத்தலில் நடைபெற்றுள்ளன. 1996 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்ட

த்தில் தரம் 3 - 8 வரையிலான வகுப்புக்களில் கற்றல், எழுதுதல், வாசித்தல், செயற்பாடுகளிற் பின்தங்கிய மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டு மாலை நேரம் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வெற்றி காணப்பட்டது. 1998 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற் றிட்டத்தில் துணுக்காய்க் கோட்டப் பாடசாலைகளில் உள்ள 208 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பரீட்சார்த்தமாக மூன்று மாத கால மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டன. மூன்றாம் மாத நிறைவில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் 98% மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தமை இனங் காணப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் போது மாணவரது தேர்ச்சி மட்டம் அடிக்கடி மதிப் பீடு செய்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தரம் கூடிய பிரிவுகளுக்கு மாற்றப்பட்டமையும் பின்னர் கல்வியிலே அவர்கள் சாதனை படைத் தமையும் வரலாற்றுப் பதிவாகியமையும் குறிப்பிடத்தக்கது.

1998. 10. 01இல் துணுக்காய்க் கல்விக் கோட்டம், கல்வி வலயமாகத் தரம் உயர்த்தப் பட்டபோது, திருமதி அ. வேதநாயகம் அவர்கள் வலயக்கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்றதன்பின், இவ்வலயத்தில் தரம் 3இல் கல்வி பயின்ற மாணவரின் கற்றல் தர நிலையை உயர்த்தும் நோக்கில் 'மூன்றாண்டுக் கல்விச் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டத்தில் முதன்மையாசிரியர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்ட இச் செயற்றிட்டத்தில் மொழி விருத்திக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தில் துணுக்காய்க் கல்வி வலயத்தில் உள்ள 10 பாடசாலைகளிலிருந்து 300 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கல்வி வலயத் தின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி வலய ஆளணியினர் அனைவரும் இணைந்து இச் செயற்பாட்டிற் பணியாற்றினர். செயற்றிட் டத்தின்மூலமும் சிறந்த பலா பலன்கள் பெறப் பட்டன.

திருமதி அ. வேதநாயகம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற் பணிப்பாள ராக நியமனம் பெற்றதன் பின்னர் யாழ்ப் பாணக் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப் பட்ட பாடசாலைகளில் 3151 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு எழுத்தறிவூட்டற் செயற்றிட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. தரம் 6-11 வரையிலான வகுப்புக்களில் எழுத்தறிவுத்திறன் குறைவான மாணவர்கள் இனங்காணப்பட்டு, மொழி கற்பிக்கும் ஆசிரி யர்களுக்குப் பயிற்சிகளும், பெற்றாருக்கு விழிப்புணர்வும் வழங்கப்பட்டு பெற்றார் - ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டன. பாடசாலைகளிலும், ஆசிரியர் இல்லங்களிலும் நான்கு மாதப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இச் செயற்றிட்டத்திலும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. அத்துடன் இச்செயற் றிட்டத்திற் சிறப்புச் செயற்பட்ட பாடசாலை களுக்கு விருதுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். சிறந்தசேவை செய்த ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்ததன்மூலம் ஆசிரியர்கள் வாழ்நாள் முழுவதும் ஊக்குவிக்கப்பட்டனர். எழுத வாசிக்கக் கற்றுக்கொண்ட பிள்ளைகளே "ஊமையாக இருந்தவர்க்கு பேச்சுவந்தது" போல பேரானந்தத்திற் குதித்தனர்.

**பரீட்சை நோக்கில்...**

பாடசாலையில் மாணவர் பெறும் கல்வியின் தரத்தை அளவிடும் கருவியாக விளங்குவது பாடசாலையிலும், பொது நிலையிலும் நடத்தப்படும் பரீட்சைகள் ஆகும். ஆகவே, பாடசாலையில் எத்தகைய கல்விச்செயற்பாடுகள் நிகழினும் பரீட்சை நோக்கில் மாணவரை நெறிப்படுத்த

வேண்டிய தேவையும் உள்ளது. தரம் 5இல் புலமைப்பரிசிற் பரீட்சை, தரம் 9இல் மாகாண மட்டப் பரீட்சை, மற்றும் க.பொ.த. சாதாரண தர உயர்தரப் பரீட்சைகள். மாணவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய கட்டங்களாக உள்ளன.

இதனை உணர்ந்துகொண்ட திருமதி அ. வேதநாயகம் அவர்கள் பரீட்சை நோக்கில் மாணவரை நெறிப்படுத்துவதிற் கவனம் செலுத்தினார். தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இவர் பணி புரிந்த காலத்தில் இடப்பெயர்வினால் ஏற்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் மாணவர் பாதிக்கப்படக் கூடாது என்னும் எண்ணத்துடன் இத்தகைய மொழி மேம்பாட்டுச் செயற்பாட்டுக்கு வழி காட்டினார். இச்செயற்பாட்டில் திட்டமிட்ட அடிப்படையில் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, பாடசாலைகளிற் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் வீடுகளுக்குச் சுயகற்றற் கையேடுகள், மதிப்பீடுகள் விநியோகிக்கப்பட்டும், அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் ஆசிரியரது வீடுகளுக்குச்சென்று பயிற்சி பெறவும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இது மட்டுமன்றி, தரம் 3--13ஆம் ஆண்டுவரை மாணவர்களுக்கு அலகுரீதியான கற்றற் கையேடுகள் தயாரிக்கப்பட்டு, அக்கையேடுகளின் வழியே மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள்; குடும்பப் பாடசாலைகள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு, அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அதே சமயம் க.பொ.த. உயர்தர, சாதாரண தர மாணவர்களுக்கு பொதுப் பரீட்சைகளில் உயர்தரச் சித்திபெறும் நோக்கில் வலய மட்டத்திலும் வினாத்தாள்கள் தயாரிக்கப் பட்டு தொடர் பரீட்சைகளும், மதிப்பீடுகளும், மீட்டற் பயிற்சிக்கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளின் போது தென்மராட்சிக் கல்வி வலயத்தில் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கண வழிகாட்டி தரம் 3, 4, 5 மாணவருக்கென வெளியிடப்பட்ட 'தமிழறிவு' ஆகிய கைந்நூல்களும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கென ஆக்கப்பட்ட 'தமிழ் மொழியும் இலக்கியமும்' - சுய கற்றற் கையேடு, க.பொ.த. உயர்தர மாணவருக்கெனத் தயாரிக்கப்பட்ட 'சிறுகதை இலக்கியத்தை விமர்சித்தல் தொடர்பான கையேடு, அலகு ரீதியாகச் சுயகற்றற் கையேடுகள் என்பன குறிப்பிடத்தக்கவை ஆகும்.

**நூல் வெளியீட்டு முயற்சிகள்**

பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற் பாடநூல்கள் வெறும் துணைக்கருவிகள் மட்டுமே. ஆசிரியது ஆளுமைக் கூறுகளும், ஆசிரியராற் பயன்படுத்தப்படும் கற்பித்தற் துணைச்சாதனங்களுமே இவ்விடயத்திற் பெரிதும் உதவுவன. திருமதி அ. வேதநாயகம் இது விடயத்திற் பெரிதும் அக்கறை காட்டினார். தாம் பணிபுரிந்த இடங்களில் ஆசிரியர், வள ஆளணியினரின் உதவியுடன் துணைச்சாதனங்களை ஆக்கி மாணவர்களுக்கு வழங்கியுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்திற் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியபோது 'எழுத்தாக்கத் திறன்' பயிற்சி நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலைப் பொருத்தமான முறையிற் பயன்படுத்துவதன் மூலம் அவதானிக்கும் திறன், வாசிப்புத்திறன், சிந்திக்கும் திறன், கிரகித்தல் தன்மை, சொற்களஞ்சிய விருத்தி, எழுதும் திறன், உறுப்பமைய எழுதுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டி ருந்தது என்பது அதன் சிறப்புரை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூல்களில் தரப்பட்டிருந்த சம்பவங்களைப் பயன்படுத்தி பொம்மலாட்டம், நாடகம்,

முதலியவற்றைச் செய்யத் தூண்டுவதன் மூலம் மாணவர் தம் உணர்வுகளை வெளிப்படுத்து வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதோடு, அவர்களின் பேச்சாற்றலையும் விருத்தி செய்து கொள்ள முடியும்.

இந்நூலில் மொத்தம் 30 பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் அநேக மானவை புற உருவக் கோட்டுச் சித்திரங் களைப் பார்த்து விபரித்து எழுதுதல், சிந்தித்து எழுதுதல், கதை ஆக்கி எழுதுதல், தொடர்ந்து எழுதுதல், உரையாடல் எழுதுதல், கதையை நாடகமாக்கி எழுதுதல் போன்றனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் திருமதி அ. வேதநாயகம் அவர்களின் நெறிப் படுத்தலில் 'வாசிப்போம் எழுதுவோம்' என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. கற்ற லிற் பின்தங்கிய மாணவர்களாக இனங் காணப்பட்ட பிள்ளைகளின் மொழி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட இதுபோன்ற நூல்களை, ஒவ்வொரு பாடசாலை ஆசிரியரும், மாணவர் நலன் கருதி ஆக்கி வெளியிடல் வேண்டும் என்பதையும் இந்நூல் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்களது நோக்கமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே காலப்பகுதியில் மாணவர்களின் 'வாசிப்புப் பழக்கத்தைச் சிறுபராயத் திலிருந்தே வளர்த்தெடுக்கும் நோக்கத்துட னும், ஆசிரியர்களது எழுத்தாக்கத்திறனை ஊக்குவிக்கும் நோக்குடனும், சிறுவர் கதைகளை ஆக்கி, அச்சிட்டுப் பாடசாலை களுக்கு வழங்கிய மிகச் சிறந்த பணியும் இவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டின்போது சிறுவர்கதைகளை ஆக்கி மாகாண மட்டப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர், பணியாற்றிய பாடசாலைக்கு இவர் நேரடியாகச் சென்று பாராட்டிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித் தமையும் முக்கிய அம்சமாகும். இப்போட்டி முதன்மை நிலை ஒன்று, முதன்மை நிலை இரண்டு, முதன்மை நிலை மூன்று என்ற அடிப்படையில் நடத்தப்பட்டன. இவ்வாறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட பதினைந்து நூல்கள் வெளியீடு செய்யப்பட்டுப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களில் வாசிப்புக்குரிய நூல்களாக அனுப்பி வைக்கப் பட்டன.

மேற்படி செயற்பாடு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களப் பாடசாலை களிற் கல்விபயிலும் சிங்கள மாணவர்களுக் கும் சென்றடைய வேண்டும் என்னும் நோக்குடன் திருமதி அ. வேதநாயகம் அவர்களின் வழிகாட்டலிற் சித்திரக்கதைகள், சிங்களப் பாடல்கள் போன்ற நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு, சிங்கமொழிமூல பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டது.

**செய்தி மடல்கள்**

ஒரு நிறுவனத்தின் நிர்வகிப்பில் அறிக்கைப்படுத்தல் என்பது தலையாய விடயம் ஆகும். அறிக்கைப்படுத்தல் என்பது கோவைகளைப் பேணுவதில் மட்டுமன்று. கோவைகள்மூலம் புள்ளிவிபரங்கள், தகவல்கள் என்பன பேணப்படுவதுதான் முக்கியம்பெறும். இவை தவிர நிறுவனத்தின் சிறப்பான இயங்குகைக்கென மேற்கொள்ளப் படும் விசேட திட்டங்கள், செயற்பாடுகள், நிகழ்வுகள், சாதனைகள் முதலியவற்றைப் பேணுவதும் முக்கியமானதாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உதவுவன மாதாந்த, காலாண்டுச் செய்தி மடல்கள் (News Letter), ஆண்டு மலர்கள் என்பன.

திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்திலும், யாழ்ப் பாணத்திலும் வலயக் கல்விப் பணிப்பாளரா கப் பணிபுரிந்த காலத்தில் வலய மட்டத்திற் 'செய்தி மடல்கள்' வெளியிடுவதில் அக்கறை காட்டி வந்துள்ளார். தென்மராட்சிக் கல்வி வலயத்திற் 'சிறகு' என்னும் செய்திமடல் இவரது பணிக்காலத்தில் வெளியிடப் பட்டுள்ளது. 'கல்வியில் உயர உயர ஏகுதல்' என்பதனை நோக்கமாகக் கொண்டது. இச் செய்திமலர், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 'தென்றல்' என்னும் செய்திமடலும் 'நாற்று' என்னும் செய்தி மடலும் வெளியிடப் பட்டுள்ளன. 'தென்றல்' என்பது கல்வியிற் பெறும் உயர்வு இனிமையான வாழ்வைத் தரும் என்னும் இலக்கையும், நாற்று என்பது வாழ்க்கையின் அத்திவாரமே கல்விதான் என்னும் இலக்கையும் கொண்டமைந்தவை. இச்செய்தி மடல்கள் கல்வி அபிவிருத்தி தொடர்பாக வலய மட்டத்திலும், பாடசாலை களிலும் நடைபெற்ற நிகழ்வுகளையும், செயற்பாடுகளையும் பதிவு செய்துள்ளன. இச் செய்தி மடல்கள் திணைக்களத்தில் நடை பெற்ற விசேட நிகழ்வுகள், ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், பாடசாலைகளில் நடை பெற்ற கல்விஅபிவிருத்தி சார்ந்த செயற் பாடுகள், இணைப்பாடச் செயற்பாடுகள், பாடசாலைகளின் பல்துறை சார்ந்த பெறு பேறுகள் வலய மட்ட, மாவட்ட மட்ட, மாகாணமட்டத் தேசிய மட்டச் சாதனைகள், அவற்றிற்கான கௌரவிப்புக்கள் கற்றல் - கற்பித்தல் தொடர்பான நவீன துணைச் சாதனங்களின் புத்தாக்கச் செயற்பாடுகள் (இறுவட்டு, ஒலிநாடா, குறுந்திரைப்படம்) போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி வந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கணிதபாட ஆசிரியராகக் கல்விப் புலத்தினுட் புகுந்த திருமதி அ. வேதநாயகம் அவர்கள்; ஆசிரிய ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவி நிலை உயர்வுகள் பெற்றுக் கல்விப் பணிபுரிந்த காலத்திற் கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டவர். சகல பாடங்களுக்கும் செயன்முறைக் கல்வியை உறுதிப்படுத்துவதன் மூலமே; பாடஅடைவு மேம்பாட்டை எய்தலாம் என்பதில் உறுதியாக இருந்தவர். கருத்தரங்கு, செயலமர்வு என்பவற்றில் உபகரணப் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வழிப்படுத்தியவர். பெற்றார் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தியவர். ஆசிரியருடனும், பெற்றாருடனும் தாமும் ஒருவராக நின்று செயற்பட்டவர். கல்விசார் நிகழ்வுகளை அறிக்கைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியவர். தாய்மொழிக் கல்வி தொடர் பாக அவர் ஆற்றிய பணிகள் பற்றியனவாக மேலே தரப்பட்டுள்ள தகவல்களூடாக அறிந்துகொள்ள முடியும்.

இத்தகைய செயற்பாடுகளை நிறை வேற்றும் முகமாக, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கல்விப் பணிபுரிந்த இவரது பணிகள் இனி வருங்காலங்களிலும் தொடர வேண்டும் எனவும், அவர்தம் சொந்த வாழ்வில் நலமுடனும், வளமுடனும் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துவோமாக.

-கந்தையா முருகதாசன்

# கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஒரு நேரடி அனுபவம்...



சேக்... இந்தக் கணிதம் எண்டாலே எனக்கு ஒரு அலேஜி..."

"ஓமப்பா... கணிதம்மட்டும் இல்லாத தாலைதான் அநியாயம் ஏ. எல். கூடப் படிக்க முடியவில்லை.

"நான் எத்தனை பேரிட்டை ரியூசனுக் குக் கூடப் போயிருப்பன்... காசுதான் அநியாய மாகக் கரைஞ்சு போச்சு... கணிதம் மட்டும் ஏறவில்லை..."

ஆம்...! இன்றைய மாணவர்களின் ஏக்கங்கள்!... உள்ளத்தில் இருந்தும் எழும் பெருமூச்சுக்கள்...!

கணிதம்...!
கணிதம்...!...!
கணிதம்...!...!....!

மாணவர் உலகம் மட்டுமின்றி வேலையுலகெங்கும் எதிரொலித்துக் கொண் டிருந்த வேளையில் "யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம்' அரும்பணி யாற்றுகின்றது என்பதை அறிந்து, அங்கே சென்றேன். இருபாலைச் சந்தியில் இருந்து, மேற்கே செல்லும் பாதையில், கோப்பாய் மகாவித்தியாலயத்தின் முன், கம்பீரமாகத் தோற்றம் அளித்துக் கொண்டிருந்த "யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம்' என்ற அந்தப் பெயர்ப்பலகையைக் கண்டதும், அங்கேயே நின்றுவிட்டேன்.

"என்ன பார்க்கிறியள்?... வாருங்கள் உள்ளேயே வந்து இதனைப் பார்க்கலாம்..."

வாசலில் நின்ற அந்தப் பெண்மணி சிரித்துக்கொண்டே என்னை உள்ளே அழைத்தார்.

"அம்மா... நீங்கள் யார்?...'அடக்க முடியாத ஆவலுடன் கேட்டுக்கொண்டே, அவரைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றேன்.

என்னுடைய பெயர் அருளேஸ்வரி வேதநாயகம்...! விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றேன்... இப்போ இந்தக் கணித மூலவள நிலையம் மூலம் மாணவர்களுக்கு எளியமுறையில், கணிதத்தைப் புகுத்துவதற்கான வேலைத் திட்டங்களையும், ஆய்வுகளையும் மேற்

கொண்டு வருகின்றோம்.... ஆமாம்... நீங்கள் யார் என்று சொல்லவில்லையே...?"

சுருக்கமான விவரணத்துடன், தன்னைப் பற்றிய விபரத்தை முடித்துவிட்டு, என்னைக் கேள்விக்குறியுடன் உற்று நோக்கினார்.

"அம்மா...! நான் 'சாளரம்' சஞ்சிகையில் இருந்து வருகின்றேன்... கணித மூலவள நிலையம் பற்றிக் கொஞ்சம் அறிந்து போகலாம் என்று வந்திருக்கின்றேன்.

மெதுவாக நான் வந்த நோக்கத்தை அவரிடம் சொல்லிக்கொண்டே அந்தக் கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தை நோக்கிக் காலடி வைத்துக்கொண்டிருந்தேன்.

"அம்மா!... கணிதம் ஒரு சில மாணவர் களுக்கு கஷ்டமான ஒரு பாடமாக இருப்பதற் காகக் கூறி அந்தப் பாடத்தையே வெறுக்கத்தொடங்கிவிட்டார்களே... இந்த நிலையிற் கணிதம் எங்களுக்குத் தேவையா? கணிதத்திற்காக மட்டும் ஏன் இப்படி ஒரு மூலவள நிலையத்தை ஆரம்பித்து நடத்து கின்றீர்கள்?

என்னுள்ளே பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்த ஆவலும், மாணவர்களின் ஏக்கப்பெருமூச்சுக்களும் என்னை இப்படி ஒரு கேள்வியைக் கேட்க வைத்துவிட்டது.

"என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? இன்று கணிதம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்ற அளவுக்குக் கணிதம் எங்களுடைய வாழ்வோடும், வளத்தோடும் பின்னிப் பிணைந்துவிட்டது. சுருங்கச் சொன்னால், எங்களுடைய மாணவர்கள் படிக்கின்ற ஒவ்வொரு பாடத்திலும் கணிதம் இழை யோடிக்கொண்டுதானே இருக்கின்றது... வர்த்தகத்தில்... விஞ்ஞானத்தில்... இப்படி எல்லாத்துறைகளிலும்..."

"தமிழிலும் கூடவா?" அவரை இடை மறித்துச் சிரித்துக்கொண்டே கேட்டதும், அவருக்குச் சிரிப்பு வந்திருக்க வேண்டும். உதட்டுக்குள் சிரித்துக் கொண்டே,

" ஓ... ஏன் இல்லை... முத்தமிழ், நால்வர், ஐவகை நிலம், அறுவகைச் சமயம், ஏழு சுரம், எட்டுத்தொகை, நவக்கிரகம், பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு... இப்படியே..." பதிலுக்குச் சிரித்துக்கொண்டே, அவரும் கூறிக்கொண்டிருந்தார்.

"இது மட்டுமல்ல...தொழில் தேவைக்குக் கூடக் கணிதம் தேவை... இன்று ஒரு கடையிற் கூட வேலைக்குப்போனால், முதலாளி அவனைப் பார்த்துக் கணிதம் தெரியுமா? க.பொ.த. பரீட்சையில் சித்தியா? எனக் கேட்டுத்தான் வேலைக்குச் சேர்த்துக் கொள்கின்றார்.

அவர் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே கணித மூலவள நிலையத்தின் உள்ளே சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த கணித மாதிரி உருவங்களையும் மேலோட்டமாகப் பார்க்கத் தொடங்கினேன்.

பழைய தகரங்கள், பிளாஸ்ரிக் மூடிகள், மரங்கள், கடதாசி அட்டைகள், பன்னிறக் காய்கள், இரும்புக் கம்பிகள்... இவைதான் அந்த மூலவள நிலையத்தின் மூலவளங்கள்... திருமதி அ. வேதநாயகம் மற்றும், கணித ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்கள், கணித ஆசிரியர்கள் இவர்கள்தான் அந்த மூலவள நிலையத்தின் மூளை வளங்கள்.

மூலவளமும், மூளைவளமும் ஒரு இடத்தில்... அதுதான் இந்தக் கணித மூலவள நிலையம்....!

கணிதத்தைக் கற்பிக்கின்ற முறையில் ஏற்பட்ட தவறுகளோ அல்லது விளங்கிக் கொள்வதில் ஏற்பட்ட குறைபாடுகளோ தெரியவில்லை. அன்றுதொடக்கம் இன்று வரை பெரும்பாலான மாணவர்கட்கு கணிதம் ஒரு கசப்பான பாடமாகவோ மாறிவிட்டது. உயர்கல்வித் துறைக்கோ, அல்லது வேலை வாய்ப்புக்களுக்கோ கணிதம் இன்று அத்தி யாவசியமான, கட்டாய பாடமாகிவிட்டது. அந்தக் கணிதக் கசப் புணர்வுகள் மாணவர்கள் மனங்களில் இருந்தும், ஆசிரியர் உள்ளங்களில் இருந்தும், அகற்றப்பட வேண்டும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும், கணிதம் வெறும் வகுப்பறைக் கற்பித்தலாக வெண்கட்டியும், கரும்பலகையும் மாத்திரம் கொண்டு கற்பிக்கும்முறை மாறி, விளை யாட்டுமூலமும், செய்து பார்த்தல் மூலமும் கணிதத்தை இலகுவிற் புரியக்கூடிய முறையிலும், விரும்பக்கூடிய முறையிலும் கற்பிக்கமுடியும் என்பதைக் கூறி, செயல்மூலம் காட்டிய விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப் பாளர் திருமதி அ. வேதநாயகத்தின் பணியும், பங்கும் அளப்பரியது.

" இந்த மூலவள நிலையம்போன்று ஒவ்வொரு கோட்டத்திலும் ஆரம்பித்து வருகின்றோம். இப்படியே யாழ். கோட்டத் திற் பெரியபுலம் மகாவித்தியாலயத்திலும், பாடசாலை மட்டங்களில் திருக்குடும்பக் கன்னியர்மடம், உடுவில் மகளிர்கல்லூரி, கோப்பாய் சரவணபவன் வித்தியாலயம் என்ப வற்றில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமராட்சிக் கோட்டமட்டத்திற் சரணவாய் பொன்னம்பல வித்தியாலயத் திலும் மற்றும் உடுப்பிட்டி, அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வை கணித வட்டத்தின ராலும் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது... இப்படியே இந்த முயற்சியானது யாழ். மாவட்டம் எங்கும் விஸ்தரிக்க வேண்டும். என்பதே எங்கள் எல்லோருடைய விருப்ப மும்... கணிதத்திற் சித்திபெறவில்லையே என்பதற்காக ஒரு மாணவன் தன்னுடைய உயர்கல்வித் தகைமையை இழந்துவிடக் கூடாதல்லவா...?"

ஆதங்கத்துடன் கூறிக்கொண்டே என்னை அந்தக் கணித ஆய்வுகூடத்தின் தென் கிழக்குப் பகுதியில் இருந்து பெரியதொரு வரைவுப் பலகையை நோக்கி அழைத்துச் சென்றார்.

வரைபு (Graph) என்ற அலகைக் கற்பிப் பதற்குக் கரும்பலகையில் முதலிற் சதுரக் கோடுகள் வரைந்து பின்னர் அளவிடைக் கேற்பப் பிரித்து, வளைவுகளையும், நேர்கோடு களையும் கீறுவதில் உள்ள பல சிரமங்களை இந்த வரைபுப் பலகையும் அதில் சதுர அளவிடையில் ஆணிகள் அடித்து வர்ணம் தீட்டப்பட்ட அமைப்பும் நிச்சயம் குறைத்து எளிமையாக்கிவிடும் என்பதைக் கூறி, அதனை வைத்து எவ்வாறு வரைபையே அறிந்திராத மாணவர்களுக்கு இந்த அலகைக் கற்பிக்க முடியும் என்பதை விளக்கிக் கூறினார்.

இது மட்டுமல்ல, கணிதக் கனவுருக்களின் மாதிரிகள், நீட்டலளவை, நிறுத்தலள வைக்கான கருவிகள், பைதகரசின் தேற்ற மாதிரி உரு, வட்டத்தின் பாகைகள், திசைகள் கணித்தல்... அப்பப்பா...! சிறிது நேரம் நான் அங்கேயே மலைத்துநின்றுவிட்டேன்.

"கணிதத்திற்கூட இப்படியெல்லாம் படிப்பிக்கலாமா...? என்ற ஆச்சரியம் என்னை நிலைகுலைய வைத்துவிட்டது.

"இதற்கெல்லாம் ஏராளமாகப் பணம் தேவையே? பணத்திற்கு என்ன செய்கிறியள்?

மாணவர்களிடம் ஏதாவது வசூலிக்கின்றீர் களா? அல்லது கல்வித்திணைக்களம் ஏதாவது உதவிகள் செய்கிறதா...?

அங்கே நிறைந்து கவர்ச்சியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்த அந்தக் கணித உருக்களைப் பார்த்து மலைத்துப்போய் நின்ற என்னால் அப்படி ஒருகேள்விக் கொத்தை, அவர் தலையிற் சுமத்தாமல் இருக்க முடியவில்லை.

"என்ன!... எங்களையும் ரியூட்டறி மாதிரி நினைத்துவிட்டியள்... மாணவர் களிடம் இருந்து ஒரு சதம்கூட வாங்குவ தில்லை. அதனை நாங்கள் விரும்பவுமில்லை. இப்போதைக்குக் கல்வித் திணைக்களம் உதவி செய்யாவிட்டாலும் இந்த நிலையம் சிறப்பாகச் செயற்படும்போது நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஒன்றைச் செய்யத் தொடங்காமல் நாங்கள் நிதியைக் கேட்க முடியாதல்லவா?...

நாசுக்காகத் தனது நிதிக்கஷ்டத்தை உணரவைத்தார்.

வடகிழக்கு மாகாணசபையில் இருந்து கல்விப் பணிப்பாளர்கள், செல்வி தி. பெரியதம்பி திரு. சி. கமலநாதன் ஆகியோர்கூட இதனை வந்து பார்வையிட்டுப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது நிதியை மாகாண சபையில் இருந்து ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அவர் இதனைச் சொல்லும்பொழுதே பெருமிதத்தில் தலையைச் சிறிது நிமிர்த்திச் சிரித்துக்கொண்டார்.

அண்மையில் இந்த மூலவள நிலையத் திற்கு விஜயம் செய்த யாழ். பல்கலைக்கழக சிவில் பொறியியல் பேராசிரியர் வி. நவரட்ணராஜா அவர்களால் எழுதப்பட்ட குறிப்பை எனக்குக் காட்டினார்.

‘இங்குள்ள உபகரணங்கள் கணித பாடத்தை மிக எளிமையாகக் கற்பிக்க உதவும். இதில் உள்ள மாதிரி உருக்கள் கணித எண்ணக் கருவை மேலும் இலகுவாக்க உதவும். இது மெல்லக் கற்போருக்கு மட்டுமின்றி, மிகத் திறன் உள்ள மாணவர்களுக்கும்கூடப் பயன் படும்".

விருந்தினர் பதிவேட்டில் அவருடைய இந்தக் குறிப்பையே வலியுறுத்துவதுபோல், திருமதி அ. வேதநாயகம் "கணித உபகரணங் களைப் பயன்படுத்துவதால் ஒரு மாணவனின் அடிப்படை ஆற்றல் விருத்தி செய்யப்படு கின்றது. கணிதத்தின் எல்லா அலகுகளுக்கும் இவ்வாறு செய்முறை உபகரணங்களைப் பயன்படுத்த முடியும். குறிப்பாகக் கேத்திர கணித நிறுவல் தத்துவத்தின் அடிப்படை புரியாத மாணவர்களுக்கு இந்தப் பகுதி கசப்பாகவே இருக்கும்... நாங்கள் நீண்ட ஆய்வு ஒன்றை அலகுகளுக்கு இத்தகைய மாதிரி உருக்களை அமைத்திருக்கின்றோம்.... மாணவர்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை மாற்ற நாம் மேற்கொண்டுவரும் செயலமர்வுகள் உதவும் என்று நினைக்கின் றேன். நாங்கள் ஓர் அலகுக்கு உபகரணத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கின்றோமென்றால் நேரத்தையும்கூட மிச்சப்படுத்தி மேலதிக பயிற்சிகளையும்கூட மாணவர்கட்குக் கொடுத்துச் செய்ய வைக்கலாம்.... இதன் மூலம் எந்த மாணவனும் அன்னியப்பட்டு விலகிச் செல்ல முடியாது"

அவர் இப்படிக் கூறியதும் எனக்கு வியப்பாக இருந்தது!

"என்ன அப்படிச் சொல்லுகிறியள்? கணித உபகரணத்தைப் பயன்படுத்துவ தாயின், நேரம் வீணாகச் செலவாகும் என்றல்லவா பல ஆசிரியர்கள் கூறுகின்றனர்?"

நீங்கள் நினைப்பதுதான் தவறு... கரும்பலகைமூலம் மட்டும் கற்பிப்பதற்கு 30 மணித்தியாலம் தேவைப்படும் ஒரு அலகைப் போதிய கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதாயின் 21/2 மணித்தி யாலங்களில் தெளிவாகப் புரிய வைத்து விடலாம்... எஞ்சியுள்ள நேரத்தில் மூன்றில் ஒருநேரம் பயிற்சிகள் கொடுப்பதற்குப் போதும்..."

அவர் கூறியதை என்னால் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை...என் கண்முன்னாலேயே அங்கே உள்ள கணித உருக்கள் உயிர் பெற்று நடமாடும்பொழுது எப்படித்தான் நம்பாமல் இருக்கமுடியும்?

அல்லது இதில் இருந்து அவருடைய எதிர்பார்ப்புக்கள், நிச்சயம், எதிர்காலத்திற் கணிதம் ஓர் இலகுவான பாடமாக மாணவர் மனங்களிற் பதியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

"இந்த மூலவள நிலையத்தை வளர்த் தெடுப்பதில், சிலரை உங்களால் மறக்கமுடியா தல்லவா?..." நான் இப்படிக் கேட்டதும் ஒரு தர்மசங்கடமான ஒரு கேள்வியைக் கேட்டு விட்டதுபோல் என்னை ஒருமாதிரிப் பார்த்தார்.

ஓ... நிறையப்பேர், என்னை ஊக்குவிக் கின்றனர். குறிப்பாகக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் எனக்குத் தேவையானபோது வேண்டிய உதவிகளைச் செய்துதருவதிற் பின் நிற்பதில்லை. அண்மை யில் தனியார்துறை நிறைவேற்றுப் பணியகம் சேவைக்கால ஆலோசகர்களுக்கு வழங்க வெனக் கணித உபகரணப் பெட்டிகள் செய்து தந்தனர்... இப்படி எத்தனையோ பேரை..."

இது ஒரு தர்மசங்கடமான கேள்விதான் என்பதை அவர் முகத்தில் இருந்து அறிந்து கொண்டேன்.

இறுதியாக அவர் இடம்பெயர்சேவைகள் பற்றிக் குறிப்பிட்டதும் எனது நம்பிக்கை மேலும் அதிகரித்தது!

கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு, தற்பொழுது வடமராட்சியில் உள்ள பொன்னம்பல வித்தியாலயத்தில் நடை பெறும் கணித ஊக்குவிப்பு செய்முறை வகுப் புக்கள் எனப் பல்வேறு மட்டங்களில் கணித ஊக்குவிப்புக்கள் இடம்பெறுகின்றன.

"ஹாய்... இப்ப கணிதம் என்றால் தேன்மாதிரி..." என்று மாணவர்கள் சொல்கிற நிலை விரைவில் வரும் என்று அவரிடம் கூறி, அவரது சேவையை மனதாரப் பாராட்டிக் கொண்டு, அந்த மூலவள நிலையத்தில் இருந்து வெளியேறினேன்.

**சாளரம் செப்டம்பர் - 1993**

# மெய்ப்பொருள் காண்பது அறிவு



எமது மண்ணில் எண்ணற்றோர் பிறந்தனர் வாழ்ந்தனர் - மடிந்தனர். எத்தனை பேர் பணி செய்தார்கள். ஓய்ந்தார்கள். பொய்யாமொழிப்புலவர், வள்ளுவன் வாக்கிற்கிற்கு உண்மையாய் வாழ்ந்த எமது அன்பிற்குரிய அம்மா பணிசெய்த இட மெல்லாம் சமூகத்தால் மதிக்கப்பட்டார். அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

**" உள்ளத்தில் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்தில் எல்லாம் உளன்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எமது மதிப்பிற்குரிய பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் உள்ளத்திலும் தனி இடம் பெற்றிருக்கிறார்.

வள்ளுவம் கூறும் மெய்ப்பொருள் காணும் அறிவு நிரம்பப் பெற்றவர் எங்கள் அம்மா. இன்று நயவஞ்சகர்களும், குழப்ப வாதிகளும் திட்டமிட்டுக் கூறும் வார்த்தை களைக் கேட்டுக் குழம்பிப்போவது மட்டு மன்றி, மற்றவர்களையும் செயற்படவிடாது குழப்பிவிடுகின்ற குறை அறிவு கொண்ட பலர் மத்தியிலே,

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்ற வள்ளுவன் குறளுக்கமைய அம்மா அவர்கள் யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்டு - சிந்தித்து ஆராய்ந்து தெளிந்து யதார்த்தத்தை அறிந்து பண்பாகச் செயற்படுபவராக வாழ்ந்தார். அவரை எவராலும் ஏமாற்ற முடியாது. உண்மையான அனுபவத்தால் உயர்நிலை பெற்றவர்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தம்
உள்ளத்தனைய துயர்வு"

வெள்ளம் உயர உயர தாமரை மலர் உயர்ந்துகொண்டு செல்வதுபோல; சேவை உயர உயர அம்மாவினுடைய புகழ் - கீர்த்தி உயர்ந்துகொண்டே சென்றுள்ளது. அவர் உயர்ந்த சிந்தனை, சொல், செயல் மிக்கவராக விளங்கினார். அதுவே அவருடைய உயர்வுக் குக் காரணமாக அமைந்தது. கல்வி உலகிலே ஒரு இலக்கை நோக்கிப் பயணிக்கும் இவரி டம் விடாமுயற்சி காணப்பட்டது.

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுதித்திவிடும் "

என்பதற்கு இலக்கணமாக விளங்கியுள்ளார்.

"முயன்றால் முடியாததொன்றில்லை"
"அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்"
"எறும்பூரக் கற்குழியும்"

என்பதற்கிணங்க இடையறா முயற்சி யுடன், அதாவது ஒரு சீரான ஆர்முடுகலுடன் தனது ஆக்கபூர்வமான பணியை ஆற்றி; மாண வர்களை - ஆசிரியர்களை - அதிபர்களை ஏன் கல்வி அலுவலர்களைக்கூட ஆற்றுப்படுத்தி வழிப்படுத்தியவர். இயங்காமல் இருந்த வர்களையெல்லாம் இயங்க வைத்து நடக்க

வைத்து ஓடவைத்து முயன்றால் முடியாத தொன்றில்லை என்பதை உணரும் வகையில் வெற்றிகாண வைத்தவர்.

எந்தவொரு செயற்பாடாயினும் நல்லமுறையில் திட்டமிட்டு முன்னெடுக்கும் பெறுமதியான பண்பு அம்மாவிடம் காணப் பட்டது.

"நுண்ணிய கருமமும் எண்ணித் துணி"
என்று கொன்றைவேந்தனிலும்,

"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவர் குறளுக்கு இணங்கவும் செயற்பட்ட ஒரு பெருந்தகை, எக்கருமத்தையும் எண்ணித் துணிந்ததனாற்றான் இவரது சேவைக்காலத்திற் பலவெற்றிகளைக் கண்டார். என்பது வெளிப்படையானதே.

"பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" ஔவையார் வாக்கு.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்யாதார்" என்கிறது வள்ளுவம். ஒவ்வொருவருடைய உயர்வும் தாழ்வும் அவரவர் செயற்பாட்டால் ஏற்படுவதாகும். எமது அம்மா அவர்கள் தனது செயற்கரிய செயற்பாட்டால் உயர்நிலை பெற்றுள்ளார்.

புனிதவதியார் கருவிலே திருவுடையவர். எமது அம்மாவும் அவ்வாறே அருளீஸ்வரி எனும் நாமத்திற்கேற்ப வாழ்ந்து வருகின்றார். அன்பு - கருணைமிக்கவர். பாடசாலைச் சமூகத்தற்குத் தனது அருட்கொடையை வழங்கி ஆதரித்தவர். அம்மாவின் அன்புப் பிணைப்பால் தமது பணிப் பயணத்தில், அம்மா "அ" என்று ஆரம்பித்தவுடன் "ஃ" வரை தேடி அறிந்து செயற்படுத்துபவர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள் விளங்கினார்கள். பாடசாலைகள் நடைபெறாது தடைகள் ஏற்பட்ட காலத்தில் எங்கும் எவரும் சிந்திக்காத உயர் பணியை அம்மா சிறப்பாக முன்னெடுத்தார். மாணவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்தினார். பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அதிபர், ஆசிரியர்களிற்கூடாகச் சகல வகுப்பிற்கும் சகல பாடங்களிற்கும், சுய கற்றற் கையேடுகள் தயாரித்தார். கடை கடையாகச் சென்று காகிதாதிகள் கொள்வனவு செய்தார். அச்சகங்களை ஒருங்கிணைத்து அத்தனை சுயகற்றற் கையேடுகளையும் அச்சிட்டார். புதிய புதிய திட்டங்கள் தீட்டினார். வீடுவீடாகப் பிள்ளைகளிற்குக் கிடைக்கச் செய்தார். சுயமாகப் படித்ததும் வீடுகளிலேயே மதிப்பீடுகள் செய்தார். பிள்ளைகளின் அயலில் உள்ள ஆசிரியர்களின் உதவிபெற வழிவகுத்தார். பார்போற்றும் வகையில் பாரிய பணியாற்றித் தனித்துவத்தை நிலைநாட்டினார். எமது சமூகத்தின்மீது கொண்ட அன்புப் பிணைப்பாற் பார்வியக்கப் பணி செய்த பெருந்தகையை எமது மண் ஒரு போதும் மறக்கமுடியாது. இந்த நல்லுறவே எமது வலயத்தின் முன்னேற்றத்திற்கு வழிசமைத்தது.

"நாறு ஆண்டுகள் பழகினும் மூக்கள்கேண்மை
நீர்க்குள் பாசிபோல வேர் கொள்ளாதே
ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்குமே"

என்பதற்கிணங்கப் பெரியவர்களுடன் ஒருநாள் பழகியபோதிலும் அந்தப் பழக்கமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றதாகும். இருவருடங்கள் மட்டுமே எம்முடன் பழகியபோதிலும் எங்கள் அம்மாவின் உறவு எம்மனதில் நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது.

ஆசிரிய தினத்திற்கு ஆசிரியர்களைப் பாராட்டிக் கவிதை அனுப்புவதும், ஆசிரியர்களைக் கௌரவிப்பதும், ஆசிரியர்களைக்

கவர்ந்த நிகழ்வுகள். இந்த வகையில் ஆசிரியர்களுக்குப் புத்தூக்கம் அளித்தவர். ஆசிரியரை மகிழவைத்து மாணவர்களுக்குப் பலம் சேர்த்த சிந்தனையாளர்.

"பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும்
வந்திருவும் வாழ்நாழும் வஞ்சமிலார்க்கு
என்றும் தரும் சிவந்த தாமரையாள் தன்"

வஞ்சனை இல்லாதவர்க்கு நல்ல
செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்
பெயரும் கீர்த்தியும் சிறந்த வாழ்வையும்
வளர்கின்ற செல்வத்தையும் நீண்ட
ஆயுளையும் எந்நாளும் தந்து அருளுவாள்
என்று ஔவையார் கூறுகிறார்.

"அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாள்
ஆர்வலர் புண்கணீர் பூசல் தரும்"
அன்பிற்கும் அடைத்து வைக்கும் தாள் இல்லை. புல்லிய கண்ணீரே அன்பை வெளிப்படுத்திக் காட்டும்.

பொய்யா மொழிப்புலவன் வள்ளுவன் வாக்கிற்கு உண்மையாய் வாழ்ந்த எமது அன்புக்குரிய அம்மா எமது வலயத்தை விட்டு யாழ்ப்பாணம் சென்றாலும் அவரது பணியைப் பாராட்டி; அவரும், அவரது குடும்பமும் செல்வச் சிறப்புடன் வாழவும், அவருடைய பணி மேலும் உயரவும் இறை வனைப் பிரார்த்தித்து எனது சிற்றுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

திருமதி கமலாதேவி சுரேந்திரா,
ஆசிரியர்,
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

# திருமதி அ. வேதநாயகம் அவர்களின் கல்விச் செயலாற்றல்



திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் வலய அமைப்பியல், பாடசாலை அமைப் பியல் (System) என்பவற்றிற் படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்தினார்.

கல்வி அபிவிருத்தி என்ற குறிக் கோளை அடைவதற்காகக் கல்வி முகாமைத் துவம், அலுவலக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் என்பவற்றை ஒருங்கிணைத்து வினைத்திறனுடன் செயற்பட வழிகாட்டி னார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துரையாடல் களில் அவர்களது கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக அனுபவரீதியாகச் செயன்முறை ஆய்வு அடிப்படையில் நல்வழிப்படுத்தினார்.

ஆசிரியர்களைத் தனித்தனியாகவும், குழுவாகவும் ஊக்கப்படுத்தப் பல முறைமை களைக் கையாண்டார். ஆசிரியர் சமூகத் தையே தட்டி எழுப்பும் வகையில் ஆசிரியர் தினத்தை ஒரு கருவியாகக் கையாண்டார். ஒரு குறுகியகால செயற்றிட்டத்தின்மூலம் அன்றையதினம் சகல ஆசிரியர்களையும் மதித்து, கௌரவித்து ஊக்கப்படுத்தினர். யுனிசெவ்வின்பிள்ளை நேயப்பாடசாலை (CF5) செயற்றிட்டத்தை முறையாகப் பல் பரிமாணங்களில் நடைமுறைப்படுத்தினார். அதற்கான குழுவை நியமித்தல், பயிற்சிக் கையேடு தயாரித்தல், பயிற்சிகளை நடாத்தல், வளங்களைத் தேவைக்கேற்ப வழங்கல், அவதானித்தல், மதிப்பீட்டுக் கருவி தயாரித்தல், பல நிலைமைகளில் மதிப்பீடு செய்தல் என்பவற்றின்மூலம் பாடசாலை களைப் பிள்ளைநேயமுள்ளவர்களாக மாற்றி யமைத்தனர்.

ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் திருப்திகரமானவையாகவும், தரமானவை யாகவும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

தரமான உள்ளீடுகளின் பாவனை, உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகள் என்பன உரிய பாதையிற் பலம், பலவீனங்களை இனங் கண்டு ஆற்றுப்படுத்தினார்.

2006 ஆகஸ்ட் தொடக்கம் ஏற்பட்ட அவசரகால நிலைமைகளிற் பாடவிதானம் சார் கையேடுகளைத் தயாரித்துச் சுய கற்றலுக்கு வழிகாட்டியமைச் சகலரினதும் பாராட்டை யும், மதிப்பையும் பெற வைத்தது எனலாம்.

**திரு.S.முத்துலிங்கம்**
*தென்மராட்சிக் கல்வி வலயம்*
*பிரதிக்கல்விப் பணிப்பாளர்.*

# கல்வி அபிருத்திச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல்

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட

1. கணிதபாட ஆசிரியர் வாண்மைவிருத்தி.
2. ஆண்டு 09 மீத்திறன் மாணவர்களின் கணிதபாட அடைவை மேம்படுத்தல்.
3. ஆண்டு 11இல் மாணவர்களின் கணிதபாட அமைவை மேம்படுத்தல்.

ஆகிய மூன்று செயற்றிட்டங்களிற்கும் இணைப்பாளராக திருமதி வேதநாயகம் இருந்து திட்டமிட்டபடி சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

❖ துணுக்காய்க் கோட்டத்திற் கோட்ட மட்டக் கல்வி அபிவிருத்திச் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு பிரதேச செயலர் அவர்களை போஷகராகவும் கொண்டு அதன் மூலம் பின்வரும் பயனுறுதிமிக்க செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

1. தொண்டர் ஆசிரியர்கள் 106 பேருக்கான வதிவிடக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.
2. கோட்டமட்டத்தில் துணுக்காய்க் கோட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் வழங்கும் 10 மணித்தியால மாபெரும் கலைவிழா நடாத்தப்பட்டது.
3. சிறுவர்களிடையே கலை ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் நற்பண்பு, கலை வளர்க்கும் முறையிலும் சிறுவர் நாடகவிழா 3 நிலையங்களில் நடாத்தப் பட்டது.
4. துணுக்காய்க் கோட்டத்தில் ஆண்டு 11 மாணவர்களுக்கு ஏனைய பாடங்களிற் செயற்றிட்டங்கள் திட்டமிட்டு நடத்தப் பட்டன.
5. பாடசாலைக்குச் செல்லாத மாணவர் களையும், இடைவிலகிய மாணவர் களையும், கல்வி அபிவிருத்திச் சபையின் உதவியுடன் கிராமப்புற வீடுகளிற்குச் சென்று பாடசாலைகளிற்குச் செல்ல ஊக்கம் அளிக்கப்பட்டது.
6. எழுத்தறிவு குறைந்த பாடசாலை மாண வர்கள் இனங்காணப்பட்டு, பரீட்சார்த்த மாக 208 மாணவர்களிற்கு மேலதிக நேரத்தில் 6 ஆசிரியர்களைப் பயன் படுத்தி 3 மாத எழுத்தறிவூட்டல் வகுப்பு நடாத்தி வெற்றிகாணப்பட்டது.
7. துணுக்காய்க் கோட்டத்தில் வறிய மாணவர்கள் இனங்காணப்பட்டுப் பரீட்சைக்கட்டணம், இலவசச் சீருடை தைத்தல், பயிற்சிக் கொப்பிகள் பெற்று வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்கு உதவப்பட்டது.
8. வறிய, பின்தங்கிய மாணவர்கள் மேலதிக கல்வியைப் பெற வாய்ப்புக்கள் அளிக்கப் பட்டது.

❖ 1997 இல், வருட ஆரம்பத்திலேயே திட்டமிட்டபடி துணுக்காய்க் கோட்டப் பாடசாலைகளிற் கற்றல்-கற்பித்தல் உபகரணக் கண்காட்சிகள் நடாத்தப் பட்டு கோட்ட மட்டத்தில் சிறப்பான முறையில் கண்காட்சி நடத்தப்பட்டது.

❖ துணுக்காய்க் கோட்டத்தில் நூலக வாரம் மிகவும் சிறப்பாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஊக்கமளிக்கப்பட்டு, துணுக்காய் கோட் டத்திற் சிறிய பாடசாலைகள் உட்படச்

சகல பாடசாலைகளிலும் உணர்வுபூர்வ மாக ஆசிரியர் தினம் கொண்டாடப் பட்டது.

❖ வகுப்பறைக் கற்பித்தலை வளமாக்கும் நோக்குடன் துணுக்காய்க் கோட்டத்திற் பாட ரீதியாக ஆசிரியர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள் ளன.

❖ 1996, 1997 ஆம் ஆண்டுகளில் துணுக்காய்க் கோட்ட கிராமப்புற பாடசாலைகள் யாவிலும் அடிக்கடி மேற்பார்வைகள் பிரதிக்கல்விப் பணிப்பாளரால் நடாத்தப்பட்டுப் பெற்றோருடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, பாடசாலைகள் புத்துயிரூட்டப்பட்டுள்ளன.

❖ துணுக்காய்க் கோட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், மெய்வல்லுனர்போட்டிகள், பெருவிளை யாட்டுக்கள், உடற் பயிற்சிப் போட்டி கள், ஓவியப் போட்டிகள், ஆசிரியர் தினப் போட்டிகள், முதியோர்தினப் போட்டிகள், சிறுவர் தினப் போட்டிகள், கணித, விஞ்ஞானப் போட்டிகள் ஆகிய சகல போட்டிகளும் திட்டமிட்ட வகையிற் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

❖ மேற்பார்வையில் ஆசிரியர்களிடையே இனங்காணப்பட்ட பிரச்சினைகளிற்குப் பரிகார நடவடிக்கையாக; பல பயிற்சி வகுப்புக்கள் கோட்டமட்டத்தில் நடாத்தப்பட்டது. மாவட்டத்தினால் நடாத்தப்பட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களைச் சிறப்பாக ஒழுங்குபடுத்தி யமையுடன் வள ஆளணியாகவும் செயற்பட்டுள்ளார்.

❖ கோட்டமட்டத்தில் நடாத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்ட இரண்டாம் தவணைப் பரீட்சையைத் துணுக்காய்க் கோட்டத்தில் மிகவும் சிறப்பாகத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

❖ இவற்றுடன் துணுக்காய், மாந்தை கிழக்குப்பகுதி ஒட்டுசுட்டான் பாட சாலைகளின் ஆசிரியர் சம்பளம் உட்படச் சகல கருமங்களிற்கும் பொறுப்பான அலுவலராகச் சிறந்த முறையிற் கடமையாற்றி உள்ளார்.

மேற்படி சகல பணிகளையும் மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தியமைக் காகத் தங்கள் சேவையைப் பாராட்டு கின்றேன்.

**ச. சுப்பிரமணியம்,**
மாவட்டக் கல்விப் பணிப்பாளர்,
கல்வித்திணைக்களம்,
முல்லைத்தீவு.

# செயற் திறன் வாய்ந்த பணி

மதிப்பிற்குரிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தை நடைமுறை உலகின் உலகமயமாக்கலுக்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி யாழ். வலயத்தை நிலையான அபிவிருத்தி அடையச் செய்யும் நோக்கில் மாற்றலாகிச் செல்கின்ற இவ்வேளையில் இவரது பணி மறக்கமுடியாத ஒன்றாக உள்ளது. பணிப் பாளர் அவர்களின்கீழ் பணியாற்றிய காலம் குறுகியதாக இருப்பினும் அவரது செயற் பாடுகள் மறக்க முடியாதவை. தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள் என எம்மை வேறுபடுத்தி நோக்காது அன்போடு பழகி, எம்மையும் சகல கல்விசார் செயற்பாடு களிலும் ஈடுபட அனுமதித்தார். சகல தடை களையும் நீக்கி உரிய நேரத்திலே இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் தமது வேதனத்தைப்பெற வழிசெய்தார். நாம் எமது கஷ்டங்கள் துன்பங்கள் யாவையும் மறந்து மகிழ்வோடு பணிசெய்யப் பேருதவி புரிந் துள்ளார். இவரது பணியை என்றென்றும் நாம் மறக்க முடியாது.

**யா/ கோண்டாவில் பரஞ்சோதி மகா வித்தியாலய பழைய மாணவன்**

யாழ்ப்பாண மண்ணின் வீரமிகு புதல் வியே! கல்வி வலயத்தின் தலைமைத்துவத் திற்குச் தலைசிறந்த அதிபதியே! செங்கோல் நழுவாது சுயநலமற்று பொதுநலத்துடன் தன் ஆர்வத்துடனும் செயலாற்றும் உங்கள் பணி பரவிச் செல்லட்டும். உங்கள் புகழ் இப்பரணி எங்கும் மேலோங்கட்டும்.

பல்வேறு திட்டங்கள், நுட்பங்கள், திறன் ஆய்வுகள் ஊடாகக் கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற புகையிரதத்தின்மூலம் தொடர்ந்தும் பயணித்து; பல்வேறு இடை யூறுகளுக்கும் மத்தியில் யாழ்ப்பாண மாவட் டத்தின் கல்விநிலையை உச்சநிலைக்கு ஈட்டிச் சென்று அயராது உழைத்து, பல்வேறு சாதனை களைப் படைத்துநிற்கும் உங்களிற்குப் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரி வித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன்.

**Professor V. Navaratnarajah**

Something in the way of aids such as this has already been done in the teaching of mathematics. It is not worthy that an individual is the person of Mrs. A. Vethanayagam Asst. Director of Education has developed a set of aids to teach Mathamatics and these have been set up on permanent display at the Kopay resource Centre located at the Kopay Maha Vidyalayam. The tenebit gained by students thought with these aids has been shown in the unproved performance of the students in Mathematics at subsequent examination. Already some of the schools are using these aids developed by this energetic lady.

**வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுப் பகுதித்தலைவர்களுடனான கூட்ட அறிக்கை 2001.01.02**

- ஆரம்பக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் வெளியீடு செய்த நூல்கள் கொழும்பிற் பாராட்டுப் பெற்றதாகவும், அந்நூலை ஏனைய மாகாணசபைகளும் பிரதிசெய்துகொண்டதாகவும், செயலாளர் அவர்கள் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

**திரு. மு. பாலசுப்பிரமணியம் - அதிபர்**

"கரும்பும் தந்து கைக்கூலியும் கொடுப்பது" போல மாணவர்களுக்கான பயனுறுதி மிக்க கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து, சிற்றுண்டி தேநீர் வசதிகளும் ஒழுங்குசெய்து மாணவர்கள் உச்சப்பயன்பெற ஆவன செய்தமை யாவரும் அறிந்ததே!

**சிவஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் - நீர்வேலி 10.11.2008**

சேவை செய்வதே ஆனந்தம் என்பதை மனத்திருத்திச் சேவையின் உயர்வைத் தொட்ட ஆசிரியப் பெருமக்களைக் கவர்வதற்குக் காலனும் அஞ்சுவான், கடுமையான தன் நியதிகளையும் மாற்றிக் காலத்தை நீடிப்பான் என்று புதுமையாகப் புத்தெழுச்சியுடன் தாங்கள் படைத்தளித்த ஒரு மணிநேரக் குறும்படமான ஒப்பிலாமணியைப் பார்த்து இரசித்தோம்.

தங்கள் பணி மேலும் சிறக்கவும், வளரவும், கல்விச் செயற்பாடுகளுக்குப் பயன் மிகத்தரவும் இறைவன் திருவருள் துணைநிற்க மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

**Dr. K. Chitravadivelu**
**General Secretary, JSA**
**Science Day Programme - 1995**

The executive committee of JSA takes great pleasure is thanking you Sincerely for the co-opration and assistance rendered by you in conducting the above programme successfully on 21.01.1995 at Hindu ladies College, Jaffna.

**திரு. K. கந்தசாமி**
**கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம் - 2**

யாழ். கல்வி வலயம் - 2இல் சகல பாடசாலைகளிலும் 1994இல் 9ஆம் ஆண்டிற்கு "தன்னறிவுத் தேர்ச்சி" செயற்பாடுகள் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக நடைபெற்றது யாவரும் அறிந்ததே. கல்விச் சமூகத்தவர்களின் வேண்டுகோளை ஏற்று எமது வலயக் கல்வி, கலாசார, விளையாட்டு அபிவிருத்திச்சபை இச்செயற்பாடுகளைத் தொகுத்து மெருகூட்டி நூல் வடிவில் வெளியிட முன்வந்துள்ளது. கணிதபாட முதன்மை ஆசிரியர்கள் முழுமனத்துடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிற்கெல்லாம் வழிகாட்டிப் பெருந்துணையாக நின்று உதவியவர் எமது வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள்.

**திரு.க. பரமேஸ்வரன்**
**செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்குக்கிழக்கு மாகாணம் 2001. 11. 30**

கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகளை ஒருமுகப் படுத்தவேண்டிய தேவை, மாகாணக் கல்விச்

அமைச்சிற்கு ஏற்பட்டுள்ளது. இதனடிப் படையில் எமது அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ, ஆரம்பக் கல்வி அபிவிருத்திப் பிரிவானது "முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைநூல் ஒன்றினைத் தயாரித்துள்ளது.

வடக்குக்கிழக்கு மாகாண சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத்தில் நிறுவனங்களினால் கருத்து முன்வைக்கப் பட்டுக் கலந்துரையாடப்பட்டு கைநூல் ஒன்றை எமது மாகாணத்திற்குப் பொருத்த மாகத் தயாரிப்பதென முடிவு எடுக்கப் பட்டது. யுனிசெவ், சர்வோதயம், சிறுவர்பாது காப்பு (ஐ.இ.), போரூட் ஆகிய நிறுவனங் களின் பாவனையிலுள்ள கைநூல்களை ஆராய்ந்து எமது மாகாணத்திற்கான பயிற்றுநர் கைநூலைத் தயாரித்து அடுத்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என எமது அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான திருமதி அ. வேதநாயகம் அவர்களிடம் பொறுப் பளிக்கப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வள வழிகாட்டி நூல்களை முன்பள்ளிக்கு வழங்குதல், 8 மாவட்டங்களிலும் பயிற்சிகளை வழங்குதல் எனும் பல்வேறு வேலைப்பளுவின் மத்தியிலும் குறித்த தவணையிற் கொழும்பில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத்தில் மேற்படி கைநூல் சமர்ப்பிக்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

"ஆயிரம் வெற்று வார்த்தைகளைவிட அர்த்தமுள்ள ஒரு நூல் மேலானது"

# Mrs A.Vethanayagam(S.L.E.A.S. ClassII)

functions as Deputy Director of Education in the North East Province.

**Mrs.AVethanayagam, S.L.E.A.S. Class II**

She has successful records as a Deputy Director(Education Development) in the North East Province under which governance, she had been deployed mostly in the disadvantageous or uncongenial education sectors of Sri Lanka to improve education where key-subjects like mathematics, science, languages have been particularly neglected causing disparities in the learning out-comes, for which the government is committed to improving the quality of education by making the curriculum more relevant, improving teaching assessment and educational management and extending educational opportunities to the poor and disadvantaged and there at granted permission for foreign funded programmes by UNICEF to aim at the additional delivery of primary and secondary education services.

Her key-concern of action is always towards identifying the problems, the most, and the needs in priority and reporting for which, she has proved that she has and had the full ability required to understand and cognize the various components of a learning-teaching situation prevailing and failing at these difficult times, in Sri Lanka. In solving problems in education as identified the most she use to

a) make the educational society of the region contributory.

b) establish a good rapport with her subjects.

c) accommodate in the planning phase itself the necessary human resources and assistance of UNICEF by forwarding valid documents obtained in survey of 'problems identification'.

d) make appeal for execution and implementation to the head-office.

e) do feed-back and motivation to those made involved and to those the assistance given.

f) truly do able reinforcement practices that has a soul.

Her over-all concern is to get rid of the key-impediments blocking the way for children's good attendance, and retention pedagogical support to teachers, community participation, student readiness and assessments and management of school etc.

Mrs.A.Vethanayagam is a committed educationist and with her scientific approach and creative thinking she has substantially contributed in Educational Development in the North East Province.

Provincial Director of Education
North East Province

# MRS.A.VETHANAYAGAM S.L.E.A.S. CLASS II

Mrs.A.Vethanayagam S.L.E.AS Class II functioned as the Deputy Director of Education of the Ministry in -charge of primary education and preschools development and Zonal Director of Education Thenmaradchy during my Tenure as Secretary of Education in the North East Province.

She is a competent, capable and hard working officer. She had initiated several educational programmes in order to raise the competency level of primary students in Tamil language, Mathematics and 'Science and they were successfully implemented in the North East. In order to raise the awareness of the parents on the importance of giving Education to their children she organized a series of workshops in the backward areas of the North East Provinces which contributed in better enrolment of children. On her initiative supplementary readers and compact discs were produced by the Ministry to enable the students to educate themselves without the help of teachers.

As Head of the preschool Education unit Mrs.A.Vethanayagam successfully conducted training classes for preschool teachers and produced and distributed teacher's hand books to preschools which resulted in joyful learning to children.

Mrs.A.Vethanayagam is a committed educationist and with her scientific approach and creative thinking she has substantially contributed in the Educational development in the North East.

*I Wish her all success*

**R.Thiagalinkam,**

Secretary.

# ஆசிரிய ஆலோசகராக....

ஆசிரியத்தொழிலில் 14 வருடங்கள் அருமையான பணி அனுபவங்களைப் பெற்றபின் 1.9.1985 இலிருந்து கோப்பாய் சேவைக்கால வலயத்தில் (Kopay In service zone) சேவைக்கால ஆலோசகராகப் பணி ஏற்றுக் கொண்டேன். 3 நாட்கள் எனது சொந்தப்பாடசாலையில் கற்பிக்கும் அதேவேளை மிகுதி 2 நாட்களும் வலயத்தின் பாடசாலைகளிற்குச் சென்று ஆசிரியர்களின் கற்பித்தல் பணிகளிற்கு உதவுவதும் சனிக்கிழமைகளில் செயலமர்வுகளை நடத்துவதும் எமக்கு பொறுப்பளிக்கப்பட்டது. "உங்களது பாடசாலை அதிபரினால் விதிக்கப்படுவனவும், உங்களால் ஆற்றக்கூடியனவுமான சகல கல்விசார் நடவடிக்கைகளையும் உரியபடி நிறைவேற்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவருக்கு உங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்" என பிராந்தியக்கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.சுந்தரலிங்கம் எழுத்து மூலம் எமக்கிட்ட கட்டளையாகும்.

ஒருநாள் எனது சொந்தப்பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருக்கும்போது புத்தூர் கொத்தணி அதிபர் திரு.என்.கணேசபிள்ளை அவர்களின் தலைமையில் பாடசாலைக்கு கொத்தணி மேற்பார்வைக்குழு வருகைதந்தனர். சேவைக்கால ஆலோசகரின் கற்பித்தலை மேற்பார்வை செய்யவிரும்புவதாகக் குறிப்பிட்டு எனது வகுப்பை மேற்பார்வை செய்தனர். மாதிரி வெளியைத் தெக்காட்டின் தளத்தில் குறித்தல் (நிகழ்தகவு) விடயம் கற்பித்தேன். மிகவும் திருப்தியடைந்த குழுவினர் "ஒரு ஆசிரியருக்கான model (மாதிரி)உங்களிடம் இருப்பதற்கு நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் எனப் பாராட்டினார். ஒரு சந்தர்ப்பத்தில் புத்தூர் கொத்தணி அதிபர் "I have observed her class room teaching with the visual aids, teaching our several occasions, and highly satisfied methods and evaluations" எனக் குறிப்பிட்டுள்ளார். Her Guidance and advise to the Mathematics teachers are very valuable is improving the standard of teaching in Mathematics - Department officials

To unimprov the teaching of Mathematics in the secondary schools she has formed a Mathematics club in which all the teachers of Mathematics are members of it

கணிதக் கழகத்தினூடாக எந்தவித நிதியினையும் எதிர்பாராது சேவை மனப்பாங்குடன் கழக உறுப்பினர்கள் தாமாக இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். கணிதம் கற்றலில் - கற்பித்தலில் மாணவர், ஆசிரியர் பிரச்சனைகள் பல்வேறு வழிகளில் இனங்காணப்பட்டது. இன்று பிரபல்யமடைந்துள்ள "தரவட்டம்" Quality circle அன்று எமது சேவைக்கால வலயத்தில் இயல்பாகவே கணித ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் தாமாக முன்வந்து சேவைக்கால ஆலோசகரை தமது வகுப்புக்களுக்கு அழைத்து உதவி பெற்றனர். ஆசிரியர்களால் இனங்காணப்பட்ட விடயங்களில் திட்டமிட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. திருமதி அ.வேதநாயகம் அவர்களால் வடிவமைக்கப்பட்ட செயல்முறை, விளையாட்டுமுறைக் கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். மாணவர் பிரச்சனைகள் இனங்காணப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான புதிய கற்பித்தல் முறைகள் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டன. அறிமுகஞ் செய்யப்பட்டன.

மாணவர்களிடையே கணிதபாட வினாடி வினாப் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும் சேவைக்கால வலய மட்டத்திலும் நடாத்தி பரிசில்கள் வழங்கப்பட்டன. கேத்திர கணித ஓவியப் போட்டிகள், பொதுப்பரீட்சைகள், கலைநிகழ்வுகளூடாக கணிதம் எனவும் மாணவர்களிற்கான செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.

ஆசிரியர்களிடையே கணிதபுதிர்ப் போட்டிகள், போட்டிப் பரீட்சைகள், உபகரணம் தயாரித்தல் போட்டிகள் எனப் பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. சேவக்கால வலயத்தில் கணித ஆசிரியர்களும் சேவைக்கால ஆசிரியர்களும் ஒரு குடும்பத்தவர்கள் போன்ற உணர்வுடன்

செயலாற்றினர். அதிபர்கள் பெரும் ஒத்துழைப்பு வழங்கினர். பல விசேட செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. என்னால் சமர்ப்பிக் கப்பட்ட ஒரு செயல்திட்டத்தை பரிசீலனை செய்த மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் அவர்கள்

1. Procedure is in over
2. It will be advisable to include 10 sample answer scripts in each categary
3. It is better the report also contains suggestion for unimpesentation in other custers.
4. Samples of Teaching Aids can be obtained and arrangements for producing them and supplying to schools should be analyzed.

என report எழுதி பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தினர்.

**சேவைக்கால ஆலோசகரை உச்சமாக பயன்படுத்திய அதிபர்.**

யா/கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி அதிபர் திரு.எஸ்.இராஜரட்ணம் அவர்கள் பாடசாலை வளவினுள் பாடசாலை ஆரம்பமாக முன்னே என்னைக் கண்டதும் அழைத்து 7 பாடவேளைகளினதும் எந்த வகுப்புக்களைப் பார்வையிடவேண்டுமென ஒரு பட்டியலைத்தரு வார். நான் வகுப்பறையில் பணி செய்து கொண்டிருக்கும்போது இரு தடவை தேநீர் அனுப்பிவிடுவார். ஒரு மணிபோல தனது அலுவலகத்தின் முன் அடுக்கப்பட்ட ஆசனங்களில் கணித ஆசிரியர்கள், அதிபர், நான் ஒன்றுகூட ஒழுங்கு இருக்கும். யாருடைய மனமும் நோகாது அவதானித்து நல்லவிடயங்கள், திருந்தவேண்டிய விடயங்கள், வழங்கப்படவுள்ள ஆலோசனைகள் யாவும் வெளிப்படையாகக் கலந்துரையாடப் படும். எழுததுருவிலான அறிக்கை ஒன்று அதிபருக்கு வழங்கவேண்டும். தொடர்நடவடிக் கைக்காக மீள வரும் திகதி அறிவித்து செல்லவேண் டும். அவரது உள்ளக மேற்பார்வையின் பின்னடைவு என இனங்கண்ட வகுப்புக்களைக் குறித்துவைத்து அதனடிப்படையில் செயற்படும் உச்சமான பணியை இச்செயற்பாடு வெளிப்படுத் துகின்றது.

86, 87ஆம் ஆண்டுகளின் விடுமுறை நாட்களில் நேரத்தை ஒதுக்கி முன்பள்ளி ஆசிரியர்களிற்கு "கணித எண்ணக்கரு விருத்தி" தொடர்பாக செயற்பாடுகளிற்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக வழங்கினேன். இதற்கான கூட்டத்தையும் நானே தயாரித்திருந்தேன். அனுபவித்துப் பயிற்சியில் பங்கேற்கும் அந்த ஆசிரியர்கள் கணிதச்செயற்பாடுகளில் ஈடுபட்ட அந்தக் காட்சிகள் மறக்கமுடியதவை.

**கோப்பாய்க் கல்வி வட்டாரச் செயற்பாடுகள்**

கோப்பாய் கல்வி வட்டார மட்டத்தில் நடைபெறுகின்ற கண்காட்சி விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப் போட்டி, பரீட்சைகள் அத்தனையிலும் பாரிய பங்கேற்று சிறப்பாக செய்து வட்டாரக்கல்வி அதிகாரியின் பாராட்டுக்களையும் சான்றிதழ் களையும் பெற்றுள்ளேன். 'She has been very helpful in all the circuit activities" என ஒரு சந்தர்ப்பத்தில் திரு.A.V. தங்கராஜா வட்டாரக் கல்வி அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டப் பரீட்சை சபையின் பரீட்சைக் குழுவில் பணியாற்றியுள்ளேன். தேவையான போது இழக்கப்பட்ட பாடவேளைகளை ஈடுசெய்யும் வகையில் பணிதபாடவிதானத்தை பொருத்தமான முறையில் தொகுத்து மீளொழுங்கு செய்து குறுகிய காலத்தில் கற்பிக்கக் கூடியவாறு அமைத்து வழங்க உதவியுள்ளேன்.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர் களிற்கு மாவட்ட மட்டத்தில் நடத்தும் செயலமர் வுகளில் வளவாளராக பங்காற்றியுள்ளேன்.

**கல்வி மூலவள நிலையம், புத்தூர் உடனான பணிகள்**

யாழ் . கல்வித்திணைக்கள பரிபாலனத் தின் கீழ் இயங்கும் கல்வி மூலவள நிலையத்தில்

- G.C.E (O/L), G.C.E (A/L) மாணவர்களுக்கு

கணிதபாட செயலமர்வுகள் நடத்தியுள்ளோம்.

- Peevt-time lecture for pre school teacher training programme.
- Prepared the syllalus & Activities for mathematics - preschool teacher tray course.

மாணவர்கள், பெற்றோர், சமூகம், மேலதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்.

*Mr.S.Sivananthan*
*Secretary*
*Kopay Education Circuit.*

All entries in the log book speak very high of her talent.

- Principal

**கண்காட்சி**

பாடசாலை மட்டக் கண்காட்சியில் கணித பாட காட்சிப் பொருட்கள் அத்தனையும் வட்டார போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் highly commended by officials. யா/அச்சுவேலி புனித தெரேசா பாடசாலையில் நடத்தப்பட்ட வட்டார கண்காட்சியில் 29.9.86, 30.9.86, 1.10.86 ஒரு மண்டபம் நிறைய கணித பாடத்தில் காட்சிப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு போதிய விளக்கங்களும் அளிக்கப்பட்டன. என்றும் எங்கும் இல்லாதவாறு கணிதப் பகுதி கண்காட்சி மிகவும் சிறப்பாக உள்ளதாகவும் அதனைச் சிறப்பாக அமைத்த ISA அருளேஸ்வரி அன்று மதிப்பீட்டுக்குழுவினர் மிகவும் பாராட்டுவதாகவும், ஒலிபெருக்கியில் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது. மாவட்ட பணிப்பாளர் திரு.சு.சுந்தரலிங்கம் கணிதபாடம் மிகவும் கஷ்டமானது என்று கூறுகின்ற மாணவ சமூகத்தின் எண்ணத்தை உனது செயற்பாடுகள் விரைவில் மாற்றிவிடும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

சேவைக்கால ஆலோசனைகளிற்கான பயிற்சி வகுப்புக்கள் பொழும்பிலும், திருகோணமலையிலும், அவ்வளவாளர்களால் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்ட 5 நாட்கள் கொண்ட 16 இற்கு மேற்பட்ட பயிற்சி வகுப்புக்களில் முழுமையாக பங்குபற்றியுள்ளேன், அப்பயிற்சி வகுப்பின்போது என்னால் தயாரிக்கப்பட்ட "உபகரணத்தொகுதி" மிகவும் சிறந்ததெனப் பாராட்டப்பட்டது.

பா.சி.சர்மா, வ.க.அதிகாரி(விஞ்) யாழ்.

Her exhibit was selected the best among the group of unservce advisors in a workshop session.

3 நாட்கள் பாடசாலை வேலைகளை மிகவும் நேர்த்தியாகவும், 2 நாட்கள் எனக்கொதுக்கப்பட்ட பாடசாலைகளிற்கு சென்று மனநிறைவான பணியையும் சனிக்கிழமைகளில் செயலமர்வுகளையும் லீவு நாட்களில் முன்பள்ளி பயிற்சியினையும் ஏனைய ஒய்வு நேரங்களில் கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல், மதிப்பீட்டுக்கருவிகள், பகுப்பாய்வுகள் செய்தல், ஆசிரியர் தரவட்டங்களில் பங்கேற்றல் ஆகிய பணிகளையும் செய்து முழுநேரப் பணியாளராக கடமையாற்றி மன நிறைவு பெற்றேன். சேவைக் கால செயலமர்வு நடைபெறும் வாரங்களில் ஒரு வேலை நாளைக் கடமைலீவாகப் பெற அனுமதிக் கப்பட்டிருந்த போதும் எந்தஒரு நாளையும் கடமை லீவாகப் பெறாது கடமையிலீடுபட்டு சேவை செய்துள்ளேன்.

திருமதி அ.வேதநாயகம்

துணுக்காய் வலயத்தின் கல்விப் பணிப்பாளராகக்
கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் எங்கள் அம்மணி
**திருமதி அ. வேதநாயகம்**
அவர்களுக்கு எனது எண்ணத்தில் உதித்த சிலவற்றைக்
கவிதை வரி ஆக்கியுள்ளேன்

## அருள்கூர்ந்து ஏற்றிடுவீர் அம்மணியாரே

அவையிருக்கும் தலைமைக்கும்
அழைப்பை ஏற்ற அம்மணிக்கும்
கல்லூரித் தலைமைக்கும்
அருகிருக்கும் ஆசான்களுக்கும்
மாணவ மணிகளுக்கும்
அன்பார்ந்த வந்தனங்கள்.

துணுக்காய் வலயத்தைத்
துல்லியமாய் வழிநடத்தி
கல்வி நிலை ஓம்பிடவே
கருத்துக்கள் பல சமைத்த
கல்விப்பணிப்பாளருக்குக்
கனிவான வந்தனங்கள்.

கணிதத்திற் பின்னடைவு
கண்டுமா இருப்பது நாம்
கணிதத்தை முன்னெடுத்து
98 இலே கணித வள நிலையம்
பாடசாலை முடிந்தவுடன்
வகுப்பறையிற் கற்பித்தல்
புரியாத பிள்ளைகளுக்கு
பரிகாரக் கற்பித்தல்
கணிதத்திற் குறிப்புக்கள்
அச்சடித்து அவசரமாய் வழங்கி
98 இலே 20% அடைவை
60% அடைவாக மாற்றிய
அம்மணிக்கு வாழ்த்துக்கள்.

கல்விப் பணிப்பாளர்கள்
கண்டிராத பள்ளிக்கூடங்கள்
ஒவ்வொன்றாய்த் தரிசித்து
ஒவ்வொரு பிரச்சினையையும்
ஒவ்வொன்றாய்க் கேட்டு
அத்தனை பிரச்சினைக்கும்
அன்றே தீர்வு கண்டு
வன்னியிலே கல்வி நிலை
வளம்பெறவே உழைத்த
கல்விப் பணிப்பாளருக்குக்
கனிவான வாழ்த்துக்கள்

கல்வியிலே சில மாற்றம்
கண்டவுடன் கருத்தரங்கு
செயற்பாட்டுச் செயலமர்வு
வருட ஆரம்பத்திலே
வடிவமைத்து வழங்கி
புதுச்சிலபஸ், புதுக்கருத்து
புத்துணர்வுடன் ஊட்டி
கற்றல்-கற்பித்தல்
கச்சிதமாய் அமைய
கடுமையாய் உழைத்த
கல்விப் பணிப்பாளருக்கு
கல்விச் சமூகம் சார்பில்
கனிவான வாழ்த்துக்கள்.

3.III 3.I ஆக்கவில்லை
அரியசும் கிடைக்கவில்லை
பயில் வரவில்லை
பணமும் வரவில்லை
கலியாணம் முடித்து
கனவருடம் முடிந்தும்
திருமதியாய் மாற்றவில்லை
ஆசிரியர் பிரச்சினைகள்

அடிக்கடி எழுதிக்கேட்டு
அத்தனை பிரச்சினையும்
அன்றன்றே தீர்த்துவைத்து

ஆசிரியர் வளமதனை
அன்பாகப் பேணிவரும்
அருளேஸ்வரி அம்மணிக்கு
அன்பான வாழ்த்துக்கள்.

வன்னிச் சிறார்களின்
கல்வியையே வளம்படுத்த
திட்டங்கள் பல தீட்டி
புள்ளி விபரத்துடன்
புரியும்படி வரைபு கீறி
மாகாண சபை நாடி
வடிவாக எடுத்துரைத்து
எமக்காகப் பல நலன்கள்
இங்கிதமாய்த் தந்த
இனிய கல்விப் பணிப்பாளருக்கு
இனிதான வாழ்த்துக்கள்.

அதிகாரியாய் அம்மா
ஒருபோதும் நடந்ததில்லை
அன்பாகப் பேசி
அனைத்தையும் செப்பிடுவார்
மனதிலொன்றும் வைக்கமாட்டார்
வெளிப்படையாய் எடுத்துரைப்பார்
களங்கமற்ற நெஞ்சு
கச்சிதமாய் வாழ
வாழ்த்துகிறோம்.

வேதநாயகம் ஐயா
அவர் துணைவி அருளேஸ்வரி
பெற்ற இரு கண்மணிகள்
அனைவரும் அடங்கலாகச்
சென்ற இடம் சிறப்புற்று
பதினாறு பேறு பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றேன் வாழ்த்துக்கள்.

**சி. புஸ்பராஜா (ஆசிரியர்)**
*மு/ மல்லாவி மத்திய கல்லூரி.*

# தென்மராட்சிக்
# கல்விவலயக் கல்வித்தாய்க்கு
# நன்றிகள்: காணிக்கைகளாக

இங்கு நம் பள்ளிகள் தோறும்
எழுந்தருளி எங்கள் குழந்தைகளின்
கல்விக் கண் ஒளிர என்றுமுழைத்து வரும்
அன்னையே நின்னடிகள் பணிந்திங்கு
போற்றியெங்கள் பாலகனின் புன்சிரிப்பைப்
பாதமதில் தூவி நின்று
வாழ்த்துகின்றோம் வாழி ... வாழி...
"ஒரு குழந்தையின் இதயத்தை
இழந்து விடாதவர் தான் உயர்ந்த மனிதன்
என்று சொல்வதற்கு உரிமையுடையவர்".

**திரு. திருமதி நாகராசா பாலச்சந்திரன் குடும்பம்,**
நாவற்குழி, கைதடி.

# பார்ப்போர் உள்ளத்தை நெருடவும், சிந்திக்கவும் வைத்த சிறந்த படைப்பு

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் "வெற்றிக்கு வழி" எனும் குறும்படம் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப் பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் தயாரிப்பிலும் யாழ். தேசிய கல்வி யியல் கல்லூரி விரிவுரையாளர் க.இ.கமல நாதனின் நெறியாள்கையிலும் மனிதநேய அமைப்புக்களின் ஒத்துழைப்புடனும் தயாரிக் கப்பட்டுள்ள இக் குறும்படம், யாழ். கல்வி வலயத்தின் புதியதோர் சாதனையெனலாம்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த மாணவி ஒருவர் கல்வியினால் சாதனை படைத்த கதையைச் சித்தரிக்கும் இக்குறும்படம் சமகால சூழ்நிலையில் எம் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நல்லதோர் வரப்பிரசாத மாகும்.

குறும்படத்தின் தொடக்கத்தில் அதன் தயாரிப்பாளரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான திருமதி அ. வேதநாயகம் அவர்களின் அறிமுக உரையில், பாடசாலை வாழ்க்கையில் அறிவைப் பெறுவது மட்டு மன்றி, ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரை மாணவ சமுதாயத்திற்கு முன்வைக் கப்படுகின்றது.

எவ்வளவுதான் பட்டங்கள் பதவி களைப் பெற்றாலும் பண்புடமை இல்லை யேல் அவர்களை மனிதர்களாக எவருமே மதிக்கமாட்டார்கள் என்ற உண்மைத் தத்துவக் கருத்து அற்புதமானது. குறும்படத்தின் நோக்கத்தையும் இலக்கையும் துல்லியப் படுத்தும் பண்பாளரின் அறிமுகவுரையுடன் ஆலய மணியோசை குறும்பட்த்தின் நுழை வாயிலுக்கு எம்மை இழுத்துச் செல்கின்றது.

முடிவைத் தொடக்கமாகக் காண் பிக்கும் இன்றைய நவீன படத்தயாரிப்பின் பாங்கில் வெற்றிக்குவழி குறும்படமும் நகர்த்தப்படுகின்றது. ஏழ்மை என்பது கற்றல் செயற்பாட்டின் சாதகத் தூண்டலேயன்றி அது ஒரு போதும் கற்றலுக்குப் பாதகக்காரணி யல்ல என்பதை நிதர்சனப்படுத்தும் வெற்றிக்கு வழி குறும்படத்தின் ஒவ்வொரு பாத்திரங் களும் பெறுமானத்துடன் பங்கேற்கும் நுட்பம் குறும்படத் தயாரிப்பாளர்களின் கல்விப்புல அனுபவத்தின் உயர்பெறுமானம் எனலாம்.

பிரிந்துசென்ற தந்தை, பால்விற்றும் தென்னோலை பின்னியும் சீவியம் நடத்தும் ஏழ்மை, ஆற்றுப்படுத்தும் ஆசிரியை, கூடவே அன்பை ஈந்து கொடுக்கும் அம்மா, பாட்டி, தம்பிகள், தங்கை என்ற எல்லைப்படுத்தப் பட்ட குடும்பச் சூழலில் மாணவி காவேரி தனித்து கல்வியில் மட்டுமன்றி இணைப்பாட விதான செயற்பாட்டிலும் சாதனை படைத்து வீறுநடைபோடும் காட்சி நெஞ்சை நெகிழ வைக்கிறது.

ஆலயத்தில் கண்டெடுத்த தங்க ஆபரணத்தை அதிபரிடம் கையளித்து உரியவரிடம் சேர்த்த மாணவிக்கு அதிபர் வழங்கும் பாராட்டு மாணவர்களிடையே உள்ளத் தூய்மையை உருவாக்கும் சாட்சி யாகும்.

தமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை மதிக்கும் பாங்கு-பட்டம் பெற்ற பின்னும் ஆசிரியர் மீதான பக்தியும் மரியாதையும் தொடரும் நன்றி உணர்வு என்பன இன்றைய நன்றி மறக்கும் சமுதாய எழுகையை கட்டுப்படுத்துவதற்கான காட்சிப்புலமாக அமைகின்றது.

"கோலங்கள்" நாடகத்தில் வரும் தோழர் பாலகிருஷ்ணனின் குரல் ஒலியில் - தமிழ் மொழியில் உரையாடும் அதிபர், மாணவி காவேரியின் தந்தைக்குக் கூறும் ஆலோசனை பாடசாலை என்ற எல்லை கடந்த சமூக உறவைப் பரிணமிக்கும் பாத்திரக் கோலங்கள். இவை சமூக விழுமியங்களைக் கற்றுக் கொடுக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு மேலாக துவிச்சக்கர வண்டிதிருத்தும் இடங்களில் பழுதான ரயரையும், ரியூப்பையும் புலக் காட்சியாகக் கொள்ளும் ஊனக் கண்களுக்கு அந்தக் கடை உரிமையாளரின் உள்ளப்பக்குவம் சிந்தனைக் குரியது.

இத்தகைய பாத்திரங்களுக்கு மேலாக வசதி படைத்த குடும்பமொன்றின் வருமான மிகையினால் பாதை மாறிச் செல்லும் மாணவி ஒருவரின் கதைப்படைப்பும் அற்புத மானதாகும். பகவத்கீதையின் போதனைக்குள் தன்னை முழுமையாக புதைத்துக் கொண்ட, கடமையை செய்யாத தந்தை கடமையைச் செய் என மக்களுக்கு போதனை செய்யும் பரிதாபம் ஒருபுறம், தொலைக் காட்சி, கையடக்கத் தொலைபேசி என்ற மோகத்துக்குள் அகப்பட்டிருக்கும் சிறுமி, அவளை மீட்டு கல்வி புகட்ட எத்தனிக்கும் சகோதரி மறுபுறம் இந்த இடர்பாடுகள் யாழ். குடாநாட்டின் சமகாலச் சூழலமைவைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும்.

குறுகிய நேரத்தில், ஏழ்மையும் வருமான மிகையும் கொண்ட இரு குடும்பங்களைக் கருப்பொருளாக எடுத்து மாணவர், பெற்றோர், ஆசிரியர், அதிபர், சமூகம் என்ற பல்வகைக் குழுமங்களின் வகிபாகப் பொறுப்பை மிகத்துல்லியமாக எடுத்தியம்பிய "வெற்றிக்கு வழி" குறும்படம் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டு விட்டமை படைப்பாளிகளின் சாதனையே.

ஒட்டு மொத்தத்தில் பணிவு, பண்பு, மரியாதை செலுத்தும்திறன், பெரியோரைக் கனம் பண்ணும் கனிவு என்னும் பல்வகை பண்புடைமைகளால் ஏற்படக்கூடிய வாழ்க்கையின் உயர்வை துலாம்பரப்படுத்திய வெற்றிக்கு வழி என்ற இக்குறும்படத்தின் தயாரிப்பு, நெறியாள்கை, இசை, பாடல், தம் குணநலப் பண்புகளை அச்சொட்டாக வெளிப்படுத்தும் நடிப்பு என எல்லாமே வெற்றியாக அமைந்தமை தயாரிப்பாளர்களின் உள்ளத்தூய்மையின் உன்னதத்திற்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

**என். விஜயசுந்தரம்**
*பிரதம ஆசிரியர் - வலம்புரி.*
*08.08.2008.*

# பாடசாலைகளின் செயற்பாடுகளைக் காட்சிப்படுத்தி உண்மைத் தன்மையை சகலருக்கும் உணர்த்த வேண்டும்

யாழ். வலயப் பணிப்பாளர் அதிபர்களுக்கு அறிவுறுத்து:

பாடசாலைகளின் சகல செயற்பாடுகளையும் காட்சிப்படுத்தப்படுத்தி அதனூடாகக் கல்விச் சமூகத்திற்கும் ஏனையவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இக்காட்சிப்படுத்தல் ஊடாக உண்மைத் தன்மையைச் சகல தரப்பினரும் கண்டுணரக் கூடியதாக இருக்கும். இவ்வாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.வலய அதிபர்களுக்குக் கல்விக் கோட்ட ரீதியில் அறிவுறுத்தல் செயலமர்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன. அண்மையில் நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான செயலமர்வு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் வைத்து கல்விப் பணிப்பாளர் அதிபர்களுக்கு மேலும் அறிவுறுத்தியதாவது: பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் உயர்மட்ட நிலையில் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் அவை தொடர்பான பெறுபேறுகள், தரவுகள், நிகழ்வுகள் காட்சிப் படுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளின் அடைவு மட்டம் தாழ்வுநிலையில் காணப்படும் இடத்து அதனை உரிய உயர்மட்ட நிலைக்கு உயர்த்துவதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதையும், குறுகியகால இடைவெளியில் உயர் மட்டத்துக்கு உயர்த்துவதையும் அதிபர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். பாடசாலைகளின் செயற்பாடுகள் மிகவும் உன்னிப்பாகச் சமூகத்தினால் நோக்கப்படுகின்றன. இந்த வகையில் பாடசாலைகளின் செயற்பாடுகள் உண்மையானவையாக இருக்க வேண்டும்.

உலக உணவுத்திட்டத்தின் மதிய உணவுச் செயற்பாடுகள் மிகவும் திருப்தியான முறையில் முன்டுெக்கப்படவேண்டும். அதில் ஏற்படும் தவறுகள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்காது.

குணநல-தர உள்ளீடுகள் தொடர்பானதும், ஏனைய கல்வி அபிவிருத்தி தொடர்பானதுமான நிதிக் கையாளுகை பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய உரியமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய நிதிகளை உரிய முறையில் உரிய காலப்பகுதியில் நிறைவு செய்வதோடு அவை தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

பாடசாலைகளின் சகல செயற்பாடுகளும் காட்சிப்படுத்தப்பட்டு அதனூடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். காட்சிப் படுத்தல் ஊடாக உண்மைத் தன்மையைச் சகல தரப்பினரும் கண்டுணரக்கூடிய நிலை ஏற்படுவதுடன், அவை தொடர்பான ஒரு விழிப்புணர்வும் ஏற்படும். அதனூடாகக் குறித்த செயற்பாடுகள் உரிய தர நிலையில் மேற்கொள்ளப்படுகின்றன என்று உறுதி செய்யப்படும்.

பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்ற சுற்றறிக்கைகள் சகல ஆசிரியர்களின் பார்வைக்கும் உள்ளாக்கப்படுவதுடன் பார்வையிட்டார்கள் என்பதை உறதிப்படுத்திய பின்பே கோவைப்படுத்தப்பட வேண்டும். பாடசாலையின் செயற்பாடுகள் வெளிப்படையானவை. அங்கு மறைப்பதற்கோ ஒழிப்பதற்கோ எதுவுமில்லை. எல்லாம் வெளிப்படையாக உண்மை, நேர்மையுடன் உயர்ந்த தரத்தில் மேற் கொள்ளப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் கல்வி அலுவலகத்துக்கு வரவேண்டிய தேவை இல்லை. ஆசிரியர்களின் தேவைகளை அதிபர்கள் கோட்டக் கல்வி அதிகாரி ஊடாக அலுவலகத்திற்குச் சமர்ப்பித்து உரிய வேளையில் நிறைவுசெய்து கொள்ளலாம். ஆசிரியர்களின் கல்வி வலய மட்டக் கருமங்களின் கல்வி வலய மட்டக் கருமங்களை நிறைவு செய்வதை அதிபர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். இந்த வகையில் பாடசாலையிலும் சகல ஆசிரியர்களும் சமத்துவமான முறையில் நடத்தப்படவேண்டும்.

பாடசாலைகளின் செயற்திறன் உயர் மட்டத்தில் பேணப்படுவதை அதிபர்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும். பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள் தொடர்பாக உரிய முறையில் கல்விப் பணிப்பாளர் என்ற முறையில் என்னுடன் தொடர்பு கொள்வதற்குத் தயங்க வேண்டிய அவசியமில்லை.

பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பான முறையீடுகள் வலயக்கல்வி அலுவலகத்திற்கு வராமல் இருப்பதற்கு ஏற்புடைய முறையில் அதிபர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

**உதயன் - ஏப்ரல் 08**

# எமது மாணவர்களின் கல்வி உயர்வுக்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக 2008 மார்ச் மாதம் 10 ஆம் திகதி பதவியேற்றுள்ள நான், முதலில் எனது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள், அங்குள்ள முகாமைத்துவச் செயற்பாடுகள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆளணியினருக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து வருகின்றேன்.

இதற்கு மேலாக, நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு ஒருநாள் பயிற்சிப் பட்டறை. (Work shop) நடத்தினேன். இவ்வேலைத் தளத்தில் பாடசாலைகளின் நிலைகள் புள்ளிவிபரங்கள் மூலமாக அதிபர்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டது.

இந் நடவடிக்கையானது அதிபர்கள் ஒவ்வொருவரும் நமது பாடசாலையின் நிலையை உணர்ந்து கொள்வதற்கான செயற்பாடாகும். மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் மந்த நிலையில் இருப்பதற்கான காரணங்கள் என்ன? என்பதை ஒவ்வொரு அதிபரும் உணர்ந்துகொள்கின்ற போதுதான் அதற்கான பரிகார நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

ஒட்டுமொத்தமாக முன்வைக்கப்படும் குறைபாடுகளும், குற்றச்சாட்டுகளும் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மனக் கஷ்ரத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களின் எதிர்காலப் பணிகளையும் ஆரோக்கிய மற்றதாக மாற்றிவிடும். இது நல்லதோர் முகாமையின் இயல்பாக மாட்டாது. ஒரு பாடசாலையில் இருக்கக் கூடிய பலவீனம் இன்னொரு பாடசாலைக்குப் பொருந்தாது. எனவே எந்தப் பாடசாலையில் என்ன குறைபாடுகள் உண்டென்பது முதலில் இனங்காணப்பட வேண்டும். அப்போது தான் அதிபர்கள் தமது பணியைத் திறம்பட ஆற்றி உரிய இலக்கை அடைமுடியும். இதற்காகவே அதிபர்களுக்கான பயிற்சிப் பட்டறை (work shop) உடனடியாக நடத்தப்பட்டது.

**ஆசிரியர்களின் பிரச்சினைகள்**

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக நான் பதவியேற்றதில் இருந்து 32 நாட்களுக்குள் சுமார் ஆயிரம் ஆசிரியர்களைச் சந்தித்துள்ளேன் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்ளவும், அவர்களுடன் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆசிரியர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும். அவர்களின் நலன்கள் பற்றி பாராமுகமாக இருக்கும் எந்தவொரு முகாமையாலும் அவர்களிடம் இருந்து வினைத் திறனுடன் கூடிய சேவையைப் பெற்றுவிட முடியாது. எனவே ஆசிரியர் களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற் கொண்டுள்ளேன். ஆசிரியர்கள் பலரின் சுயவிபரக் கோவைகள் முழுமையற்றவையாக உள்ளன. அவற்றைப் பூரணப்படுத்தும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நான் தென்மராட்சி வலயத்தின் பணிப்பாளராக இருந்தபோது அங்கு

ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் முழுமைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட்டன. இப்பணியை செய்து முடிக்கும் பொறுப்பை முகாமைத்துவ உதவியாளர் இருவரிடம் ஒப்படைத்தேன்.

சுயவிபரக்கோவைகள் ஒழுங்காக - முழுமையாக பேணப்படுவதன் மூலம் அதிபர்கள், ஆசிரியர்களின் பணிக்காலம் முதல், ஓய்வு பெறுவது வரையான அனைத்து விடயங்களையும் இலகுவாகச் செய்து கொள்ள முடியும்.

அதேநேரம் ஆசிரியப் பணி கடமை என்பதற்கப்பால் நமக்குக் கிடைத்த பாக்கிய மாகக் கருதவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களைத் தமது சொந்தப் பிள்ளை களாக நினைப்பார்களாயின் அவர்களால் நிச்சயமாக, உயர்பெறுமானமுடைய சேவையை வழங்க முடியும். இதனையே நான் ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க் கின்றேன்.

**பாடசாலைகளுக்கான நேரடி விஜயம்**

யாழ்ப்பாண வலயத்தின் கல்விப் பணிப்பாளராக பதவியேற்றதும் அன்றைய தினமே பாடசாலை ஒன்றுக்கு நேரடியாக விஜயம் செய்தேன். இதுவரை முப்பத்தொரு பாடசாலைகளுக்கு விஜயம் செய்துள்ளேன். பாடசாலைகளுக்குச் செல்வதும், மேற் பார்வை செய்வதுமான நடவடிக்கைகள், ஆசிரியர்களை பயமுறுத்துவதற்காகவோ அன்றி, அதிகாரங்களை பிரயோகிப்பதற் காகவோ அல்ல. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிமனை, அதிகாரிகள் ஆகியோருக் கிடையேயான நல்லுறவை ஏற்படுத்துவதும் தேவையான சந்தர்ப்பத்தில் ஆலோசனை களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற் கானதாகும்.

ஆசிரியர்கள் மதிக்கப்படவேண்டும். அந்த மதிப்பு, கல்வித் திணைக்களத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கான மதிப்பை முழுமையாக வழங்குவார்கள். கௌரவமான ஆசிரியப் பணியை கௌரவமாகப் பெறவேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

அதிபர், ஆசிரியர், கல்வி அதிகாரிகள் தனித்து இயங்குவதன் மூலம் எதிர்பார்க்கும் கல்வி இலக்கை அடைந்துவிட முடியாது. கல்விச் செயற்பாடென்பது ஓர் கூட்டு முயற்சி. கல்விசார் பணியாளர்கள் கூட்டாக- ஒற்றுமை யாக இயங்குவதன் மூலமே, கல்வியில் சாதனை புரிய முடியும்.

**கணித பாடத்தில் பின்னடைவு**

கணித பாடத்தில் பின்னடைவு என்பது எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் சவாலாகவுள்ள பிரச்சினையாகும். யாழ்ப் பாண வலயத்தைப் பொறுத்தவரை கோப் பாய்க் கோட்டத்தில் கணித பாடத்தில் பெறப் பட்ட சித்தி குறைவாகவுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டத்தில் வகை - 2 (Type -2) பாடசாலை களில் கணித பாடத்தின் சித்தி திருப்தியாக வில்லை.

கணித பாடத்தில் ஏற்படும் சித்தியின்மையானது குறித்த மாணவர் உயர்தரத்தில் கல்வி பயில்வதற்குத் தடையாக அமைவதுடன், எதிர்காலத்தில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் பாதகமாக அமையும். எனவே நிச்சயமாக கணித பாடத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

1994,1995களில் விஞ்ஞான-கணித தொழில்நுட்பவியலாளர் இலண்டன் விருது

எனக்குக் கிடைத்தது. கணித பாடத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட - பின்பற்றப் பட்ட கற்றல் செயன்முறைக்காகவே அந்த விருதைப் பெறமுடிந்தது. அந்த அனுபவத் தைப் பயன்படுத்தி, கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடைவதற்கான வழிவகை களை செய்து முடிப்பதில் நான் பற்றுறுதி கொண்டுள்ளேன்.

கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து கணிதத்தில் அடிப்படை அறிவின்மையே அவர்கள் அந்தப் பாடத்தில் தோல்வியடையக் காரணமாகின்றது.

1993களில் கோப்பாய் பகுதியில் கணித பாடத்தில் சித்தியடையாத ஐம்பது மாணவர்களை எனது பொறுப்பில் தெரிந்தெடுத்த ஆசிரியர்கள் மூலம் கற்பித் தேன். மாணவர்கள் அனைவருமே கணித பாடத்தில் சித்தியடைந்தனர். இதற்காக அவர்கள் ஓர் பாராட்டுவிழா நடத்தினர். அந்தப் பாராட்டு விழாவில் உரையாற்றிய மாணவர்கள் தாம் கணித பாடத்தில் சித்தியடைவதற்கு ஏதுவாக இருந்த விடயங் களைப் பட்டியற்படுத்தினர்.

1. ஒவ்வொரு ஆசிரியர்களும் எம்மீது அன்பு காட்டினர்.
2. கணிதம் விளங்கவில்லை என்பதற்காக அவர்கள் எம்மீது கோபமோ, ஆத்திரமோ அடையவில்லை. எங்களைப் பேசவில்லை.
3. விளங்காத பகுதிகளை உபகரணங்களைப் பயன்படுத்தி விளங்கப்படுத்தினர்.
4. எங்கள் ஒவ்வொருவரினதும் பயிற்சிக் கொப்பிகள் திருத்தப்பட்டன. அது எங்களுக்கு நிறைந்த நம்பிக்கையைத் தந்தது.

என அந்த மாணவர்கள் தெரிவித்திருந்தனர். இது எமக்கு மாணவர்களிடம் இருந்து கிடைத்த தகவல். இதனை நல்லதோர் அனுபவமாக நாம் கொள்ள முடியும்.

இவை யாவற்றுக்கும் முன்மாதிரியாக மிக விரைவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கணிதப் பாசறை நடத்தப்படவுள்ளது. இதற்கு எல்லாப் பாடசாலை கணித ஆசிரியர் களையும் அழைத்து காண்பிக்கவுள்ளோம். அதிபர்களும் இதனைப் பார்வையிடுவர்.

ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் பாடசாலைகளை நெறிப்படுத்தி பாடசாலை மட்டத்தில் இவற்றை ஒழுங்கு செய்யவுள்ளோம். நல்ல மனப்பாங்குள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களை வழிப்படுத்தி னால் நிச்சயம் நல்ல பெறுபேறு கிடைக்க மென்பது எனது முழுமையான நம்பிக்கை.

**பெற்றோருடன் கலந்துரையாடல்**

மாணவர்களின் கல்வி விடயத்தில் பெற்றோரின் பங்கு மிகவும் முக்கியமான தென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கல்விப் பெறுபேறுகள் பின்னடைவாகவுள்ள பாடசாலைகள் மீது நாம் கவனம் செலுத்தும் போது அந்தப் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம், பெற்றோர்களின் பங்களிப்பு, சமூகத் தலைமைகளின் ஒத்துழைப்புப் போன்ற பல் பரிமாண விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் பின்தங்கிய பாடசாலைகளை முழுமையான வளர்ச்சிப் பாதையில் முன்னகர்த்த முடியும். அதன் அடிப்படையில் 16 இடங்களில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்களை நாம் முன்னெடுத்துள்ளோம். பெற்றோருக் கான கலந்துரையாடலின் போது "வாழும் போதே" என்ற குறும்படம் காண்பிக்கப் படுகின்றது. இக்குறும்படம் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதால் காத்திரமான பங்கை வகிக்கின்றது.

எமது திணைக்களத்தினால் பெற்றோர்களுக்கு நடத்தப்படும் கருத்தரங்களில் அவர்கள் மிகவும் ஆர்வமாகப் பங்குபற்றுவதுடன் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். இது எமது கல்வி மேம்பாட்டிற்கு உந்துசக்தியாக அமையும்.

**ஒற்றுமையான கூட்டு முயற்சி அவசியம்**

மாணவர்களின் கல்விச் செயற்பாடு திறமையானதாகவும், ஆராக்கியமானதாகவும் அமைவதற்கு சகலரினதும் ஒற்றுமையான கூட்டு முயற்சி அவசியம். எமது கடமையை செம்மையாகவும், உச்சமாகவும் மேற்கொள்ளும் போது கல்வியின் இலக்கை இலகுவாகவும் விரைவாகவும் அடைய முடியும்.

அதேவேளை ஒற்றுமையான கூட்டு முயற்சிக்கு எனது பூரண ஒத்துழைப்பு என்றும் உண்டு. எனது அலுவலகத்தில் மாலை 5 மணிவரை கடமையில் ஈடுபட்டிருப்பேன். பாடசாலை முடிந்ததும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலவலகத்திற்கு வருகை தந்து தமது பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும். அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து வைப்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். பிரச்சினைகளும் மனக் கஷ்டங்களும் இல்லாத தெளிவான மன நிலையில் பணியாற்றுவது செயற்திறன் மிக்க வெளியீட்டைப் பெறுவதற்குத் துணை புரியும். எனவே அனைவரும் தமக்குக் கிடைத்த கல்விப் பணியை தூய்மையாகவும், விசுவாசமாகவும் இறைவனுக்கும் மனச் சாட்சிக்கும் ஏற்புடையதாகவும் செய்து எம்மால் மாணவர்களும் அவர்களால் நாமும் சிறப்புப் பெறுவோம். இதுவே நான் அனைவரிடமும் விடும் அன்பான வேண்டுகோளாகும்.

**சந்திப்பு விதுரன் – 27.05.2008,**
**வலம்புரி.**

# கல்வி அபிவிருத்திப் பயணம்...
# யாழ் கல்விச் சமூகத்தின் ஆய்வுப் பெட்டகம்

யாழ்ப்பாணக் கல்விவலயத்தினால் "கல்வி அபிவிருத்திப் பயணம்..." என்ற ஆய்வுநூல் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களின் வழிகாட்டலில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் சுயமதிப்பீட்டிற்கான திறவுகோலாக அமைந்துள்ளதெனலாம்.

பொதுவில் ஒவ்வொரு திணைக்களங்களும் தாம் சார்ந்த தரவுகளை சேகரிக்கின்ற போதிலும், அவை கோவைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் தேவைப்பாடுகள் முடிவடைந்து போகின்றன. இதனால் குறித்த திணைக்களங்கள் தரவு சேகரித்தல் - திட்டமிடல் - நடைமுறைப்படுத்தல்- மீள் மதிப்பீடு செய்தல் என்ற விடயங்களில் தோல்வி கண்டு விடுகின்றன.

திணைக்களங்களின் இந்த நீடித்த குறைபாட்டை முறியடிப்பது எங்ஙனம் என்ற வினாவுக்கு விடையளிப்பதாக யாழ்ப்பாணக் கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற ஆய்வுநூல் அமைந்துள்ளது.

மிகச் சிரமமான ஒரு பணியைக் காத்திரமாக மேற்கொண்டதன் மூலம் யாழ்ப்பாணக் கல்விவலயம் கல்விசார் அமைப்புக்களுக்கு மட்டுமன்றி, ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஒரு வழிகாட்டலை அமைத்துக் கொடுத்துள்ளதெனலாம்.

"யாழ். கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளையும், நடைமுறைகளையும், அவற்றின் விளைவுகளையும், ஆய்வு செய்வதினுடாகப் பாடசாலைகளின் எதிர்கால செயற்பாடுகளை வினைத் திறனுடையதாக்கி விளைதிறனை அதிகரிப்பதே இவ் வெளியீட்டின் நோக்கமாகும்" இவ்வாறு கல்வி அபிவிருத்திப் பயணத்திற்கு வழங்கிய ஆசிச்செய்தியில் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் குறிப்பிட்ட விடயம் இங்கு ஆழ்ந்து நோக்குதற்குரியது.

தனித்து பாடசாலை மேற்பார்வை மூலம் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தி விடுவது முடியாத காரியம். கல்வி மேம்பாட்டில் இருக்கக்கூடிய தடைகளை இனங்காணல், அவற்றை நிவர்த்திப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், நடைமுறைப்படுத்தல் என்ற ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளே இலக்கை அடைவதற்கு உதவும்.

எனினும், தரவுப் பகுப்பாய்வுகள், மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றை நிவர்த்திப்பதற்கான புலமைசார் ஆலோசனைகள் என்பவற்றை கல்விச் சமூகம் சார்ந்த அனைவரும் பார்ப்பதற்கும், படிப்பதற்குமான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப் படவில்லை என்ற நியாயமான குறைகூறலுக்கு முற்றுமுழுதாக முடிவுகட்டும் வகையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற ஆய்வுநூல் அமைந்துள்ளது.

ஆரம்பக் கல்வி
தமிழ் மொழி
கணிதம்

விஞ்ஞானம்
ஆங்கிலம்
சமூக விஞ்ஞானம்
சைவநெறி
கத்தோலிக்க திருமறை, கிறிஸ்தவம்
அழகியல்
விவசாயம்
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
மனைப்பொருளியல்
உடற்கல்வி
விசேட கல்வி
முறைசாரக் கல்வி

என்ற பாடப்பரப்புகளில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளை உள்ளடக்கிய இந்நூல், கல்வித் திணைக்களம் சார்ந்தவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என்ற பன்முகச் சமூகம் தமது பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான தகவல் ஆய்வுப் பெட்டகமாக அமைந்துள்ள தெனலாம்.

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை. ரவீந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி. இராசலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரம் ஆகியோரின் நிபுணத்துவ ஆலோசனையுடன் வெளியிடப்பட்ட கல்வி அபிவிருத்திப் பயணம் சமகாலக் கல்வி மேம்பாட்டிற்கு மட்டுமன்றி, எதிர்கால திட்டமிடல்களுக்கும், நடைமுறைப்படுத்தல்களுக்கும் பேருதவி யாற்றும் எனத்திட்டமாகக் கூறலாம்.

இதனை உறுதி செய்வதாக கல்வி அபிவிருத்திப் பயணம்... என்ற ஆய்வு நூலின் வெளியீடு நிகழ்வு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் ஆற்றிய உரையில், யாழ். கல்வி வலயம் UNICEF அனுசரணையு டன் யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, கோப்பாய் மகாவித்தியாலயம். கோண்டா வில் இந்து மகாவித்தியாலயம், அச்சுவேலி சென்தெரேசா ஆகிய நான்கு நிலையங் களிலும் தரமான கல்வித்தினம் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

அங்கு ஒவ்வொரு நிலையத்திலும் குடும்பப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடி இரு அரங்குகளாக நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றுப் பயன்பெற்றனர் - விழிப் படைந்தனர். இன்று நடைபெறும் கல்வித்தின நிகழ்வானது உயர்மட்டக் கல்வி அலு வலர்கள். ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து எமது பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்ற நிகழ்வாக அமைந்துள்ளது.

யாழ். வலயமானது தேசியப் பாடசாலைகள் 3, தனியார் பாடசாலைகள் 3, பல பிரபல பாடசாலைகள் என்பவற்றைக் கொண்டது எனப் பெருமை பேசுவதைவிட, அதற்கேற்ப கல்வியிலே உச்சநிலையில் நாம் உள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டிய காலத்தின் விளிம்பில் நாம் நிற்கின்றோம். சகல தரப்பினரும் இதில் பங்காளிகளாக மாறவேண்டிய தேவை உள்ளது.

இதன் ஒரு அங்கமாக ஒரு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு - மாற்றத் திற்கு முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்களாகிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பாட ரீதியாக ஒன்றிணைந்து அவர்களது பாடம் தொடர் பாக இன்றைய நிலை எதிர்பார்ப்பு, முன்மொழிவுகள் என்ற வகையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தேன். அதன்

அடிப்படையில் அவர்கள் இணைந்து தமது மேற்பார்வை அறிக்கைகள், கலந்துரை யாடல்கள், பகுப்பாய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அவர்களின் முயற்சிக்கு மதிப்பளித்து அதனைத் தொகுத்து நூல் வடிவமாக் கியுள்ளோம். துறைசார்ந்தவர்களின் முன்வைப்புக்களுடன் இந்நூல் அதிபர்களு க்குக் கையளிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் முழுமையாகப் பங்கேற் பதன் மூலம் உங்கள் பாட சாலைகளின் கல்வி அபிவிருத்தியில் காத்திர மான மாற்றம் காண்பீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன். அத்துடன் தலையை மாத்திரம் போசிப் பதற்குப் பதிலாகக் கூடவே இதயத்தையும் கைகளையும் போசிக்கும் கல்விமுறைமை ஒன்றின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இதனை கருப் பொருளாகக் கொண்ட தேர்ச்சிகளை அடிப் படையாகக் கொண்ட கலைத்திட்ட அணுகு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை வெற்றிகரமாக நடை முறைப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு சேவைக்கால ஆலோசகர்களிற்கும் உதவிக் கல்லவிப் பணிப்பாளர்களிற்கும் உண்டு.

இன்று இவர்களால் முன்வைக்கப் படும் முன்மொழிவுகள் காலத்தின் எதிர்பார்ப்பின் ஆரம்பமே. அதனால் தான் இவ் அறிக்கைகளின் தொகுப்பிற்கு "கல்வி அபிவிருத்திப் பயணம்" எனப் பெயரிட்டுள் ளோம். எமது பயணம் சீரான ஆர்முடு கலுடன் பயணித்து உயர் நிலையை அடைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப் பாகும். இதற்காக எமது பிரதேசத்தின் கல்விமான் களும், ஆர்வலர்களும், கல்வியின் பங்காளர் களும் இணைந்து பல்வேறு படிநிலைகளில் சேவைகளை வழங்கியும் ஆய்வுகளின் அடிப்படையில் வழிகாட்டல்களைச் செய்தும் உணர்வு பூர்வமாக செயற்பட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

இச்செயற்பாட்டினால் எமது அலுவலர்கள் மிகவும் உற்சாகம் அடைந் துள்ளார்கள். தொடர்ந்து தமது பாடரீதியான செயல்நிலை ஆய்வுகளை நடைமுறைப்படுத்த ஆர்வமுடையவர்களாக உள்ளனர். அவர் களின் இச் சேவையைப் பாராட்டு வதுடன் அவர்களை வாழ்த்துகிறேன்.

அதே நேரம் க.பொ.த (உ/த) இல் நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் 45வீதம் சித்தியுள்ளபோதும் (உ/த) இல் பொது ஆங்கிலத்தில் மிகவும் குறைந்த நிலையிலேயே மாணவர்கள் உள்ளனர்.

நாம் ஒயமுடியாது - உறங்கமுடியாது சிந்திக்கவேண்டும். பிரச்சினைகள் இனங் காணப்படவேண்டும். பொருத்தமான தீர்வுகள் கண்டறியப்படவேண்டும். அவை செயற்படுத்தப்பட வேண்டும். வெற்றி காண வேண்டும். எமது அதிபர்கள் வல்லவர்கள். நல்லவர்கள். நான் இங்கு கடமையேற்ற போது பல பிரச்சினைகளை இனங்கண்டேன்.

ஆரோக்கியமாக அவர்களிற்கு வழிகாட்டினேன். அதன் அடிப்படையில் செயற்பட்டு பாரிய மாற்றங்களைச் செய்து காட்டியுள்ளார்கள். உதாரணமாக தர உள்ளீடு, உயர் மட்டக் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துதலில் பாரிய முன்னேற்றம் காட்டி என்னை மகிழ்வடையச் செய்துள்ளனர். அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன்.

கல்விப் பணிப்பாளரின் இந்த உரை கல்விப் பயணத்தின் நோக்கத்தை, இலக்கை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகின்றது.

விதுரன் - வலம்புரி - 20.03.2009

# கல்வி அபிவிருத்திப் பயணம்... காத்திரமான ஒரு கருவறை

யாழ். கல்விவலயப்பணிமனை, கல்வி அபிவிருத்திக்கான முன்னெடுப்பாக நல்லதொரு திருப்பணியைச் செய்து முடித்துள்ளது. கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற பட்டோலை வெளியீடே அதுவாகும்.

"யாழ். கல்விவலயத்தில் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளையும் நடை முறைகளையும் ஆய்வு செய்வதனூடாகப் பாடசாலைகளில் எதிர்கால செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக்கி, வினைத்திறனை அதிகரிப்பதே இவ்வெளியீட்டின் நோக்க மாகும்."

இந்நூலுக்கான மகுடவாசகமாக எடுத்த எடுப்பிலே வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், தனது ஆசிச்செய்தியில் இவ்வெளியீட்டின் நோக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார். இந்நோக்கத்தை எய்துவதற்குத் தனது துறைசார் அலுவலர்களைத் துணையாகக் கொண்டு முழுமையான, செழுமையான ஒரு செயல்த் திட்டத்தை உருவாக்கி அபிவிருத்திப் பயணத்தில் உறுதியாகத் தடம்பதிக்க உரியவர்களை வழிப்படுத்தியுள்ளார்.

"அபிவிருத்தி நோக்கில் முன்வைக்கும் (இவ்) விதப்புரைகளைத் தொடர்புடையவர்கள் உள்வாங்கி, மன விருப்போடு நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெரு வெற்றியைக் காண வேண்டும்." என்ற அறைகூவலையும் தன் ஆசிச்செய்தியின் அந்தத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

போர்ச் சூழலால் கல்வியில் ஏற்பட்ட பின்னடைவை நீக்குவதற்கு ஒட்டுமொத்தமான ஒருமுகப்படுத்தப்பட்ட செயற்பாடு அவசியமாகும். இவ்வலயக்கல்வி அபிவிருத்திப் பயணத்தின் வெற்றிக்கு செயலர்களான ஆளணியினர் ஆற்றவேண்டிய பங்களிப்புக்கள் அக்குவேறு ஆணிவேறாக அலசப்பட்டு முன்வைக்கப்பட்டிருப்பது பாராட்டப்படவேண்டியதாகும்.

15 கற்கை நெறிகளினதும் அண்மைக் காலப்போக்குகள் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் முன்வைக்கப்பட்டு ஒவ்வொரு துறையிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் முதல் அதிகாரிகள் வரை ஆற்றவேண்டிய பணிகள் பட்டியற்படுத்தப்பட்டுத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. காலமிட்ட கட்டளையாக உருப்பெற்றுள்ள கல்வி அபிவிருத்திப் பயணம் என்னும் இக்கருவறை யாழ். கல்வி வலயத்தில் மட்டுமல்ல ஏனைய கல்வி வலயங்களிலும் புதுமைப் பிரசவங்களைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

தினக்குரல் - 19 பெப்ரவரி 2009

# யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எமக்கொரு கலங்கரை விளக்கம்

"தனது அதிபர்கள், ஆசிரியர்களை வாராந்தம் அழைத்து வந்து கல்வியிற் திக்கற்ற கலங்களாகக் கலங்கி நிற்கும் எமக்கு நல்லதொரு கலங்கரை விளக்கமாக நின்று உதவி வருகின்றார். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், அவரது உதவிகளை நாம் என்றென்றும் மறக்கமாட்டோம்".

இராமாவில் அகதிகள் முகாம் சார்ந்து அங்குள்ள மணவர்களுக்கென உருவாக்கப்பட்ட பாடசாலையைத் தரிசித்தபோது, இவ்வாறு உயர்தர வகுப்பு மாணவர்கள் உணர்வு பூர்வமாகத் தெரிவித்தனர். இப்பாடசாலையிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய மாணவர்கள் எல்லோரும் இக்கருத்தை வழி மொழிபவர்களாகக் காணப்பட்டனர். இங்கு மட்டுமன்றி, புலம் பெயர்ந்த வன்னி மாணவர்கள் கற்கும் ஏனைய பாடசாலைகளிலும் தன்சேவையால் நன்கு அறியப்பட்டவராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் காணப்படுகின்றார்.

இவர் தனது வலயக் கல்விப் பணிகளுக்கு அப்பாற் சென்று, எவர்களது ஏவுதல்கள் எடுப்புகள், பணிப்புகளின்றி ஏதிலிகளாக வந்த வன்னி மாணவர்களுக்குத் தம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றார். தானே சென்று தலையளித்து இவர் செய்துவரும் பணிகளை அறியும் ஆவல் மேற்கிளர்ந்தது.

இம்முகாம் பாடசாலைகள் அமைக்கப்பட்ட கையோடு அவற்றுக்கு விரைந்து செல்கிறார். எது எது செய்யப்படவேண்டுமென்று அனுமானிக்கிறார். அதிகார தோரணையின்றித் தனது வலய அதிபர்கள், ஆசிரியர்களை அழைத்து அரவணைத்து அனைவரையும் உதவும் கரங்களாக உயரச் செய்கின்றார். இவர்கள் மூலம் ஒரு செயற்பாட்டுக் குழுவை அமைப்பித்து ஒழுங்கு முறையான ஒரு செயற்றிட்டத்தை உருவாக்கச் செய்கின்றார்.

இக்குழுவின் தலைவராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜாவும் செயலாளராக யாழ். சன்மார்க்க வித்தியாலய அதிபர் எஸ்.மாணிக்கராஜாவும் பொருளாளராக வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலா பொன்னம்பலமும் இணைப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப் பொன்ராஜாவும் செயற்பட்டு வருகின்றனர்.

கோட்டங்களின் இணைப்பாளர்களாக கல்லூரி - கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், யாழ்ப்பாணம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம், கோப்பாய் அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

ஆரம்பப்பாடசாலைகளுக்கான இணைப் பாளராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ். ஞானகாந்தன் கடமையாற்றுகிறார். வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இச்சயெற்பாட்டு அணியினர் முதற்கட்டமாக அதிபர், ஆசிரியர்களிடமிருந்து சுமார் 10 இலட்சம் ரூபா வரை நிதி திரட்டி இம்முகாம் பாடசாலை மாணவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துள்ளனர். சீருடைகள், உள்ளாடைகள், பாடநூல்கள், கற்றல் உபகரணங்கள் முதலானவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், முகாம் ஆசிரியர்களுக்கு உடுபுடவைகளுக்கான பைல்கள் கூட வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிந்தது.

மிகப் பெரும் பிரச்சனை என்னவெனில் இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் 2010, 2011இல் பரீட்சையை சந்திக்கவுள்ள மாணவர்கள், புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்கள் ஆகியோருக்கு தர ரீதியாகக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்கள் இங்கு காணப்படாமையாகும். இந்நிலைமை இனங்காணப்பட்டு விரிவான

கற்பித்தல் செயற்பாடுகள் உடனடியாக இவ் வலயக் கல்விப் பணிப்பாளரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த யூன் 20ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகியுள்ள இக்கற்பித்தல் திட்டம் ஜூலை 29ஆம் திகதி வரை முதற்கட்டமாக நடைபெற்று வருகிறது. சென்.ஜோன்ஸ், கொக்குவில் இந்து, வேம்படி மகளிர், திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ். இந்து, சென்.பற்றிக்ஸ், சுண்டுக்குளி மகளிர் முதலான கல்லூரிகளின் அதிபர்கள் தலைமையில் இப்பாடசாலைகளினதும் ஏனைய பாடசாலை களினதும் திறமை மிக்க ஆசிரியர்கள் அணி திரட்டப்பட்டு கற்பித்தற் படையணிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வாரத்தில் புதன், சனிக்கிழமைகளில் ஓர் ஒழுங்குமுறையில் இந்த முகாம் பாடசாலைகளுக்குச்சென்று உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு முழு நேரமாக இவர்கள் கற்பித்து வருகின்றனர்.

இந்த மாணவர்களிடம் பாடக்குறிப்புகள் எதுவுமில்லாமையால் யாழ். பாடசாலை மாணவர் களின் பொருத்தமான பாடக்குறிப்புகள் போட் டோப் பிரதிகள் எடுக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதே ஒழுங்கு தரம் 5 மாணவர்களுக்கும் மேற்கொள்ளப்பட்டது.

உயர்தர வகுப்பில் விஞ்ஞானம், வணிகம், கலை என முத்துறைகளுக்குமான எல்லாப் பாடங்களுக்கும் கற்பித்தல் மேற்கொள்ளப்படு கின்றது. இவ்வருடம் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கு அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகளும் நடைபெறுகின்றன. இக்கற்பித்தற் படையணியின் பயண ஒழுங்குகளைக் கரித்தாஸ் நிறுவனம் இலவசமாக வழங்கி வருகின்றது.

தாமாகவே முன் வந்து அர்ப்பணிப்போடு இப்பெரும் பணிகளைச் செய்து வரும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக விளங்குசின்றனர். தங்கள் பிள்ளைகளைப் போல அம்முகாம் மாணவர்களையும் அரவணைத்து கற்பித்து வரும் இவர்கள் பயன் தூக்காது செய்யும் இவ்வரும்பணி நயம் தூக்கின் கடலிற் பெரிய தன்றோ.

தினக்குரல் 16 ஜூலை 2009

# பெற்றோரது பங்களிப்பு இன்றைய கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியம்

மாணவர்கள் முயற்சி எடுத்தால் கல்வியில் உயர்ச்சியடைய முடியும். எந்த மாணவராலும் இயலாததென்றில்லை. எல்லா மாணவர்களாலும் எல்லாம் செய்யமுடியும். உங்களுக்குள் உள்ள திறமைகளை வெளிக் கொணர்ந்து வளர்ப்பதற்காகவே பெற்றோர் கள் உங்களைப் பாடசாலைக்கு அனுப்பு கின்றார்கள். கல்வி கற்கும் காலத்தில் வீண் பொழுது போக்காது கல்வியைச் சிறந்த முறையில் கற்றால் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வரமுடியும். இந்த வகையில் ஒவ்வொரு மாணவனும் திடசங்கற்பம் எடுக்க வேண்டும் என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார்.

யாழ். இளையதம்பி இந்து வித்தி யாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழா நிகழ்வுகளின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியதாவது,

இன்றைய கல்விநிலை மாறியுள்ளது. அதற்கேற்ற வகையில் மாணவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டாலே. தேசிய மட்டங்களில் நடைபெறும் பரீட்சையின் போது சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடி யும். இவ்வாறு பிள்ளைகள் சிறந்த பெறுபேறு களைப் பெறுவதற்குப் பெற்றோர்களின் பங்களிப்புக் காத்திரமாக இருத்தல் வேண்டும். பிள்ளைகளைப் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பி விட்டால் மட்டும் போதாது. அவர்கள் நாளாந்தம் பாடசாலையில் படிக்கும் பாடங்களைப் பற்றிப் பெற்றோர் பிள்ளைகளிடம் கேட்கவேண்டும். அவர் களின் கொப்பிகளை வேண்டிப் பார்க்க வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது தமது பிள்ளைக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியரிடம் நேரில் சென்று தமது பிள்ளைகளின் பலவீனத்தைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றை விட முக்கியமானது பாடசாலைக்கு மாணவர்களை ஒழுங்காக அனுப்புவதாகும். ஒரு நாள் பாடசாலைக்குச் சமூகமளிக்காது விட்டு மறுநாள் பாடசாலைக்கு வரும் பொழுது முதல்நாட் படித்தபாடம் தெரியாத தால் தொடர்ந்து படிக்க முடியாது போகிறது. காலப்போக்கில் அந்தப்பாடத்தைக் கற்பதில் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே பிள்ளைகளை ஒழுங்காகப் பாட சாலைக்கு அனுப்ப வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் இணைந்து செயற்படுகின்ற பொழுதுதான் பிள்ளைகள் கல்வியில் எய்தவேண்டிய அடைவு மட்டங்களை அடைந்து வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நல்ல உறவு பேணப்பட வேண்டும் இவ்வாறான உறவைத்தான் இப்போது கல்வி நிலை எதிர்பார்த்து நிற்கின்றது என்றார்.

தினக்குரல் 04 ஒக்டோபர் 2008

# மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தகுதிவாய்ந்தவர்களை நாடி அவற்றுக்குத் தீர்வுகாணவேண்டும்.

ஸ்தாபகரை நினைவுகூரும் பாடசாலைகள் உன்னதமான பாடசாலைகள், அந்தப் பாடசாலைகளாலேயே சிறந்த நற்பிரஜைகளை சமூகத்திற்கு வழங்கமுடியும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஸ்தாபகர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் நாம் வாழும் போது பயனுள்ள வாழ்க்கையையே மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணப்பாடு களை இதுபோன்ற விழாக்கள் மாணவர்கள் மத்தியில் நன்றி மறவாமையை ஏற்படுத்தும்.

ஒரு பாடசாலை, சமூகத்தின் பார்வைக்கு வரவேண்டுமானால் அது சிறந்த கல்வி, அதனோடிணைந்த செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அதற்கு அந்தப் பாடசாலை சிறந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டிருக்கவேண்டும். மாணவர்கள் மத்தியிலோ ஆசிரியர்கள் மத்தியிலோ பிரச்சினைகள் ஏற்படுமிடத்து தகுதி வாய்ந்தவர்களை நாடி அவற்றுக்கு உடன் தீர்வு காணப்படவேண்டும்.

கல்வி கற்பது மட்டுமல்ல நல்ல பண்பாடு, சிந்தனை என்பவற்றையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக இந்த நிறுவுநர் நினைவுநாட்கள் சிறந்த ஒரு நிகழ்வாக அமையும் என்றார்.

இந்நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிக்கு தங்கப்பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு சிறப்பான பெறுபேறுகளைப் பெற வழிப்படுத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

**தினக்குரல் ஒக்டோபர் 2008**

# செயற்றிறன் வாய்ந்த பணி

**இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் சார்பாக**
**திரு.க.மகிந்தன்**

மதிப்பிற்குரிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தை நடைமுறை உலகின் உலகமயமாக்கலுக்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி யாழ் வலயத்தை நிலையான அபிவிருத்தி அடையச் செய்யும் நோக்கில் மாற்றலாகி செல்கின்ற இவ்வேளையில் இவரது பணி மறக்கமுடியாத ஒன்றாக உள்ளது. பணிப் பாளர் அவர்களின் கீழ் பணியாற்றிய காலம் குறுகியதாக இருப்பினும் அவரது செயற் பாடுகள் மறக்க முடியாதவை. தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள் என எம்மை வேறுபடுத்தி நோக்காது அன்போடு பழகி எம்மையும் சகல கல்வி சார் செயற்பாடு களிலும் ஈடுபட அனுமதித்தார். சகல தடைகளையும் நீக்கி உரிய நேரத்திலே இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் எமது வேதனத்தைப் பெற வழி செய்தார். நாம் எமது கஷ்டங்கள், துன்பங்கள் யாவையும் மறந்து மகிழ்வோடு பணி செய்ய பேருதவி புரிந்துள்ளார். இவரது பணியை என்றென்றும் நாம் மறக்க முடியாது.

**யா/ கோண்டாவில் பரஞ்சோதி மகா வித்தியாலய பழைய மாணவன்**

யாழ்ப்பாண மண்ணின் வீரமிகு புதல்வியே! கல்வி வலயத்தின் தலைமைத்து வத்திற்கு தலை சிறந்த அதிபதியே! செங்கோல் நழுவாது சுயநலமற்று பொது நலத்துடனும் தன் ஆர்வத்துடனும் செயலாற்றும் உங்கள் பணி பரவிச் செல்லட்டும். உங்கள் புகழ் இப்பரணி எங்கும் மேலோங்கட்டும்.

பல்வேறு திட்டங்கள், நுட்பங்கள், திறன் ஆய்வுகள் ஊடாக கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற புகையிரதத்தின் மூலம் தொடர்ந்தும் பயணித்து பல்வேறு இடையூறுகளுக்கும் மத்தியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நிலையை உச்சநிலைக்கு ஈட்டிச்சென்று அயராது உழைத்து பல்வேறு சாதனைகளை படைத்து நிற்கும் உங்களிற்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித் துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்**
**நீர்வேலி. 10.11.2008**

சேவை செய்வதே ஆனந்தம் என்பதை மனத்திருத்திச் சேவையின் உயர்வைத் தொட்ட ஆசிரியப் பெருமக்களைக் கவர்வதற் குக் காலனும் அஞ்சுவான், கடுமையான தன் நியதிகளையும் மாற்றிக் காலத்தை நீடிப்பான் என்று புதுமையாக புத்தெழுச்சியுடன் தாங்கள் படைத்தளித்த ஒருமணிநேரக் குறும்படமான ஒப்பிலா மணியேயைப் பார்த்து இரசித்தோம்.

தங்கள் பணி மேலும் சிறக்கவும், வளரவும், கல்விச்செயற்பாடுகளுக்கப் பயன்மிகத்தரவும் இறைவன் திருவருள் துணை நிற்க மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

**Dr.K.Chitravadivelu**
**General Secretary, JSA**
**Science Day Programme - 1995**

The Executive Committee of JSa takes great pleasure in thanking you sincerely for the co-operation and

assistance rendered by you in conducting the above programme successfully on 21.01.1995 at Hindu ladies College Jaffna.

**திரு.மு.கந்தசாமி**
**கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம் - 2**

யாழ். கல்வி வலயம் - 2 இல் சகல பாடசாலைகளிலும் 1994இல் 9ஆம் ஆண்டிற்கு 'தன்னறிவுத் தேர்ச்சி' செயற்பாடுகள் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக நடைபெற்றது யாவரும் அறிந்ததே. கல்விச் சமூகத்தவர்களின் வேண்டுகோளை ஏற்று எமது வலய கல்வி கலாச்சார விளையாட்டு அபிவிருத்திச்சபை இச்செயற்பாடுகளைத் தொகுத்து மெருகூட்டி நூல் வடிவில் வெளியிட முன்வந்துள்ளது. கணித பாட முதன்மை ஆசிரியர்கள் முழுமனத்துடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிற்கெல்லாம் வழிகாட்டி பெருந்துணையாக நின்று உதவியவர் எமது வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள்.

**திரு.க.பரமேஸ்வரன்**
**செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடக்கு கிழக்கு மாகாணம்.**
**2001.11.30**

கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகளை ஒருமுகப் படுத்த வேண்டிய தேவை மாகாணக்கல்வி அமைச்சிற்கு ஏற்பட்டுள்ளது. இதனடிப் படையில் எமது அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ, ஆரம்ப கல்வி அபிவிருத்திப் பிரிவானது 'முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைநூல் ஒன்றினைத் தயாரித்துள்ளது.

வடக்குகிழக்கு மாகாண சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டத்தில் நிறுவனங்களினால் கருத்து முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு கைநூல் ஒன்றை எமது மாகாணத்திற்கு பொருத்தமாக தயாரிப்பதென முடிவு எடுக்கப் பட்டது. யுனிசெவ் சர்வோதயம், சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ), போரூட் ஆகிய நிறுவனங்களின் பாவனையிலுள்ள கைநூல்களைத் தயாரித்து அடுத்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களூடான கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என எமது அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ ஆரம்பக்கல்வி அபிவிருத் திக்கு பொறுப்பான திருமதி அ.வேதநாயகம் அவர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வள வழிகாட்டி நூல்களை முன்பள்ளிகளுக்கு வழங்குதல், 8 மாவட்டங்களிலும் பயிற்சிகளை வழங்குதல் எனம் பல்வேறு வேலைப் பளுவின் மத்தியிலும் குறித்த தவணையில் கொழும்பில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களூடான கூட்டத்தில் மேற்படி கைநூல் சமர்ப்பிக்கப்பட்டமை பாராட்டப் பட வேண்டிய விடயமாகும்.

"ஆயிரம் வெற்றுவார்த்தைகளைவிட அர்த்த முள்ள ஒரு நூல் மேலானது"

**Professor V.Navaratnarajah**

Something in the way of aids such as has already been done in the teaching of mathematics. It is notworthy that an individual in the person of Mrs. A. Vethanagagam Asst. Director of Education has developed a set of aids to teach mathematics and these have been set up on permanent display at the Kopay resource centre located at the Kopay maha Vidayalayam. The benefit gained by students taught with these aids has been shown in the improved performance of the students in mathematics at subsequent

examinations. Already some of the schools are using these aids developed by this energetic lady.

**வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பகுத்தித்தலைவர்களுடனான கூட்ட அறிக்கை 2001.01.02**

"ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஏ.வேதநாயகம் அவர்கள் வெளியீடு செய்த நூல்கள் கொழும்பில் பாராட்டுப் பெற்றதாகவும் அந்நூலை ஏனைய மாகாண சபைகளும் பிரதி செய்து கொண்டதாகவும் செயலாளர் அவர்கள் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

**திரு.மு.பாலசுப்பிரமணியம், அதிபர்**

"கரும்பும் தந்து கைக்கூலியும் கொடுப்பது போல மாணவர்களுக்கான பயனுறுதிமிக்க கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து, சிற்றுண்டி, தேநீர் வசதிகளும் ஒழுங்குசெய்து மாணவர்கள் உச்சப் பயன்பெற ஆவன செய்தமை யாவரும் அறிந்ததே!

# சாதனையாளர்

**பகுப்பாய்வு அறிக்கை வெளியீடு 05.05.2005**

"எமது வலயமட்ட கணிதபாட சித்திவீதமானது தேசியமட்டத்திலும் 10% கூடுதலாக உள்ளது. 2003ஆம் ஆண்டை விட 8.8% அதிகரிப்பு காணப்படுகின்றது. இவ்வதிகரிப்புக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலயமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிதபாட விசேட செயற்றிட்டம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது".

வடக்குக்கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் திருமதி அ.வேதநாயகம் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பாக கடமையாற்றியபோது கணிதபாட மேம்பாட்டிற்காக திட்டமிட்ட செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்பட்டதோடு, வலய ரீதியாக விசேட செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்த வழிப்படுத்தப்பட்டனர். எல்லா வலயங்களிலும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பெறுபேறுகள் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

**சுசீலா சாரங்கமமணி**
**உரும்பிராய் தெற்கு**

"இதற்கு முன்னிருந்த அனைத்துப் பணிப்பாளர்களையும்விட நீங்கள் அணுக எளியவராகவும், மனந்திறந்து பேசக்கூடியவராகவும், அதேநேரம் தங்களால் இயன்றதைச் செய்து கல்வியில் பின்னடைவை நிவர்த்திக்க வேண்டும் என்னும் பேரூக்கத்துடனும் இருப்பதால் (புகழ்ச்சியல்ல உண்மை) நான் தங்களிடம் ஒரு விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன்.

**தென்மராட்சிக்கல்வி வலயம்,**
**தரம் 5 புலமைப்பரிசில் பரிசளிப்புவிழா - 2007**

*1.S.C.E* செல்வி உமா

"சிலருக்கு அறிவு இருந்தாலும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் இருக்காது. சிலருக்கு ஆற்றல் இருந்தாலும் அறிவு இருக்காது. ஆனால் திருமதி வேதநாயகம் அம்மா அறிவும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் உடையவர். தென்மராட்சி வலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளராகக் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும். அவரது காலத்திலேயே தென்மராட்சி வலயம் கல்வியில் வளம்பெற வேண்டும்".

**Unicef ஸ்ரீஸ்கந்தராஜா**

"இந்த நிகழ்வு ஒரு திட்டமிட்ட செயற்பாட்டை வெளிப்படுத்துகிறது. பாடசாலைகள் இயங்காத காலகட்டத்தில் அம்மா முன்னெடுத்த செயற்றிட்டத்தின் போது எனக்கு ஒரு வினா எழுந்தது. மூன்று மாத காலத்தில் முடியுமா? பாடசாலை இயங்காத நாட்கள். அச்சகங்கள் செயலிழந்து இருந்த நாட்கள்.... காகிதாதிகள் பெருந் தட்டுப்பாடு.... சிறந்த திட்டமிடல் இருந்ததால் எதையும் சாதிக்கமுடியும் என்பதை இந்நிகழ்வு வெளிப்படுத்தியுள்ளது. இந்த அர்ப்பணிப்பு தொடர வேண்டும். நாங்களும் பக்கபலமாக இருப்போம். நீங்கள் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு பெற்றோர் மிகவும் பங்களிப்பு செய்துள்ளீர்கள். பாராட்டுகின்றோம். இத்தகைய பங்களிப்பு தொடர வேண்டும்.

**Science Education**
**News Letter - 118**
Published by the British Council Games and Visual aids in mathematics teaching Mrs.Aruleswary Vethanayagam, Kopay South, Kopay.

The protect describes the use of visual aids, including games to teach secondary school mathematics. A great deal of effect went into this project. Although it takes a comparative analysis with talk and chalk methods, it provides evidence of the effectiveness of the approach.
Judges: Audrew salisbury Bryan wlson
Modevators: Kabiv shaikh
Luey steward

**இலண்டனில் நடைபெற்ற முன்வைப்பில் (Presentation) பங்கேற்ற**
**பேராசிரியர் எம்.கே(M.K) பல்கலைக்கழகம்.**
"பாராட்டுகிறேன். எங்கள் பிள்ளை களிற்கும் இது மிகவும் பயனுடையது. ஒரு பிரதி எங்களிற்கு அனுப்பிவையுங்கள்"

**பேராசிரியர் பொட்ஸ்வானா பல்கலைக்கழகம்**
"மிகவும் பயனுடைய ஓர் செயற்றிட்டம். எங்கள் பிரதேசத்திற்கும் இது பயனுடையது. எங்களுக்கு இந்த அறிக்கை (Report) இன் ஒரு பிரதி தாருங்கள். இதைச் செய்வதற்காக நீங்கள் எந்த நூலகத்தைப் பயன்படுத்தினீர்கள்"

An Appraisal of the Education System in the Vanni Area of Sri Lanka - May 1998 Ministry of Education, Cultural Affairs and sports NEP - Sri Lanka in collaboration with Save the Children (U.K)

- Arrangement for training of teachers and principals vary from district to district. In Thunukkai division training semininars have been organised and held locally using expert teachers and divisional officers because of the commitment of the divisional education officer"
- "Thunukkai Division parents contributed most to their school at the initiation of their divisional officer.
- A Survey was done in 1997 by the Divisional Education officers in the Thunukkai division on the reason why children drop out of school and what would be their chosen path of remedial action"
- திரு .கே.கந்தசாமி, மாகாணக்கல்விப்பணிப்பாளர், கொழும்பிலிருந்து அவருடன் வருகை தந்த Unicef பிரதிநிதி Mr.Steve claborne அவர்களிடம் கேட்டார். "படங்கள் நிறைந்த இந்தப் பெட்டியை கொழும்பிலிருந்து கொண்டுவரும் வழியில் எத்தனை அலுவலர்களையெல்லாம் சந்தித்தீர்கள். அவர்கள் எவருக்கும் கொடுக்காது திருமதி வேதநாயகம் அவர்களிடம் கொண்டு வந்து கொடுக்கிறீர்கள் ஏன்?

அதற்குப் பதிலளித்த Mr.Steve claborne "நான் சந்தித்தவர்களில் மிகவும் மதிநுட்பமும் முயற்சியும் உடைய ஒருவராக திருமதி வேதநாயகம் அவர்களை மதிப்பிட்டுள்ளேன். இந்தப் படங்களை எப்படி பலர் பயன்பெறும் வகையில் பயன்படுத்தலாம் எனத் திட்டமிடும் திறமையும் அதனை நடைமுறைப்படுத்தும் மனப்பாங்கும் அவரிடம் உள்ளது" எனக் குறிப்பிட்டார்.

# அம்மாபற்றிய கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் மதிப்பீடு 2001

- சிறந்த பயிற்றுவிப்பாளர்.
- நல்லஅறிவும் ஆற்றலும் உள்ளவர்.
- இவர்தான் எங்கள் தொழிலின் தெய்வம்.
- சுறுசுறுப்பானவர்.
- அன்பாகப்பழகுபவர்.
- இவர் இன் முகதத் துடன் எங் களுக் கு பயிற்சியை வழங்கினார்.
- பொறுப்புணர்ச்சிஉடையவர்
- விசுவாசமுடையவர்.
- எங்கள் உண்மை நட்புத் தெய்வம்.
- இவர் கதைப்பதில் ஓர் இனிமையாகக் காணப்படுவார்.
- இவர் எல்லாப்பிள்ளைகளிலும் பாசம் வைப்பவர்.
- இவர் கணித எண்ணக்கரு விருத்தி நன்றாக கற்பித்தார்
- சிறந்த அறிவுரையை இலகுவில் தரக்கூடியவர்.
- மிகவும் அமைதியானவர்.
- இவர் நல்ல குணம் உடையவர்.
- மிகவும் சிறந்த விரிவுரையாளர்.
- இவர் எம் உள்ளம் கொண்ட ஒருவர்.
- இவர் எமக்கு நன்றாகப்பிடித்தவர்.
- நினைப்பதைச் செய்து முடிப்பவர்.
- கடகைண்ணியம் கட்டுப்பாட்டுடன்தமது தொழிலை ஆர்வத்துடன் செய்பவர்.
- தலைமைத்துவம் உடையவர்.
- கல்வியில் மிகவும் திறமை உடையவர்.
- அன்பும் அரவணைப்பும் உள்ளவர்.
- எங்களை அன்புடன் வழி நடத்துபவர்.
- நல்லகருத்துக்களை எங்களுக்கு வழங்கினார்.
- எந்தவித களைப்புமின்றி சகல செயற் பாடுகளிலும் ஈடுபட்டு விளக்கமளித்தார்.
- உற்சாகமாகப் பாடம் எடுப்பார்.
- வீரப்பெண்மணி
- கல்வியிலும் கடமைகளிலும் பொறுப் புணர்ச்சி உள்ளவர்.
- She is very nice
- தாயன்பு உடையவர்.
- பொறுமையான பண்பு உடையவர்.
- இனிமையான குணம் உடையவர்.
- கோபமே வருவதில்லை.
- எல்லோரிலும் அன்பு உள்ளவர்.
- என்றும் சந்தோஷம் உடையவர்.
- மிகவும் புரிந்துணர்வு உள்ளவர்.
- சேவையே கண்ணாகக்கொண்டவர்.
- பேத வேறு பாடு அற்றவர்.
- சேவைக்காக தன்னையே அர்ப்பணித்து செயற்படும் இயல்பு உடையவர்.
- நிமிர்ந்த நடை, நல்லகுரல் வளம்
- விடா முயற்சி உடையவர்.
- மிகமிக சற் தோஷமுடையவரும் பொறுமையானவரும்.
- அன்பும் , ஆர்வமும் கடமையில் கண்ணும் உடையவர்.
- எல்லோரையும் ஒரு நிலைப்படுத்துபவர்.
- புன்னகையில் எல்லேரையும் கவருபவர்.
- மிகவும் மகிழ்வுடன் எல்லோரையும் நேசிப்பார்.
- எல்லா வகையான ஆற்றலும் கொண்டவர்.
- கற்பித்தல் மிகச்சிறப்பாக உள்ளது.
- தன் கடமைகளை திறம்படச் செய்பவர்.
- இவர் ஒரு சிறந்த பயிற்சியாளர்.
- அன்புடனும்கண்டிப்புடனும் வழிநடத்திச் செல்பவர்.
- பொறுமையின் பொக்கிசம்
- திறமையை ஆவமடைய வைத்தவர்.
- சேவை மனப்பாங்கு உடையவர்
- அன்னம் போன்றவர்.
- கருணை, கண்டிப்புடனான தாய்மை யுள்ளமுள்ளவர்.
- கலகலப்பு உடையவர்
- எல்லையற்ற உழைப்பாளர்
- தனது சிரமத்தைப்பாராது சிறுவர்களை முன்னேற்ற உதவி செய்பவர்.
- சந்தேஷமாக செயற்பாடுகளை செய்ய வழிப்படுத்துபவர்
- கடும் உழைப்பிற்கும், எடுத்த காரியத்தை முடிப்பதற்கும் ஏ. வேதநாயகம்.

- சுறுசுறுப்பாகச் செயற்படுவதிலும் செயற் படுத்துவதிலும் வல்லவர்.
- ஆளுமை மிக்கவர் முதுமையை வென்றவர்
- துணிவும் ஆற்றலும் உடையவர்.
- எதற்கும் அஞ்சா மனம் உடையவர்
- செயற்திறன்மிக்கவர். முகலட்ச னையும் உடையவர்.
- எல்லோர் மனதையும் கவரக்கூடியவர்
- எல்லோரையும் தட்டிக்கொடுத்து வளர்ப்ப வர்.
- நல்ல அனுபவம் உள்ளவர்.
- அவரைப் பார்த்ததும் என்தாயையே மறந்துவிட்டேன்
- இரங்கும் சுபாவம் உடையவர்.
- கணிதச் செயற்திறன் உடையவர்.
- எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார்.
- பரந்த மனசும் தாய்மைப்பண்பும் உடையவர்.
- அறிவும், அன்பும், பண்பும் மிகுந்தவர்.
- எதையும் சகித்துக் கொள்வார்.
- சிரித்து மகிழ்விக்கும் தன்மையும் , தாய்மை உள்ளமும் உடையவர்.
- பணிவுஉடையவர், பொறுமை உடையவர்.

**அம்மா பற்றிய வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் மதிப்பீடு-2001**

- முன்பள்ளி களின் ஆணிவேர்
- தோழமைப்பண்பு டையவர்.
- சிறந்ததலைமைத்துவம் உடையவர்.
- முன்பள்ளிக்கல்விக்கு கிடைத்த அறிவுப் பொக்கிஷம் அவர்.
- பதவி என்பதைப் பாராட்டாது பெற்றதாய் என்ற எண்ணத்துடன்பழகுவார்.
- அன்புக்கும் பண்புக்கும் வழிகாட்டியாகத் திகழ்பவர்.
- பொறுப்புணர்ச்சி உடையவர்
- எல்லேருக்கும் உதவி செய்து கொடுப்பவர்
- நல்லதோர் அறிவான வழிகாட்டி.
- கல்வித் தெய்வம்.
- சுறுசுறுப்பானவர்
- தாயுள்ளம் என்பதற்கு எடுத்துக்காட்டு , தியாக மனம்
- மிகவும் அன்பானவர், பண்பானவர், ஆளுமை மிக்கவர்.
- என்கல்வி நாற்றுக்கு மேலும் ஓங்கிவள இடைவிடாது நீர் ஊற்றுபவர்.
- அன்புக்குத்தாய், அறிவுக்கு நல்ல குரு.
- எல்லோரையும் சமமாக மதிக்கும் தன்மை உடையவர்.
- முன்பள்ளி ஆசிரியர்களிலும் பிள்ளைகளிலும் எழுச்சி கொள்ள வைக்கும் செயற்பாடுள்ளவர்.
- சோர்வில்லாதவர், கருமமே கண்ணானவர்.
- இனிமையான பேச்சும் , அன்பும், பரிவும், உடையவர்.
- நல்ல குணம் உடைவர்.
- முன்பள்ளி ஆசிரியர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்.
- எல்லோரும் நன்றாக வாழ வழி காட்டுபவர்.
- கண்டிப்புடன் அன்பு செலுத்தி எல்லா ஆசிரியரும் நல்ல முறையில் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்
- சமூகத்திற்காக உழைப்பவர்
- எல்லோருடைய பண்புகளையும் அறிந்து கொள்ளும் பண்பு கொண்டவர்.
- பிள்ளைகளின் வளர்ச்சிக்காய் தன்னால் முடிந்தவரைஆசிரியரை செயற் பட வைக்கும் நல்ல உள்ளம் படைத்தவர்
- பாகுபாடு இன்றி பிள்ளைகளை வளப்படுத்துபவர்.
- ஆளுமை நிறைந்தவதர்.
- அழகும், சிரிப்பும், சுறுசுறுப்புமுடையவர்.
- எடுத்த கருமத்தைமுடிக்கும் ஆற்றல் உடையவர்.
- தம்பணியினை மிகவும் ஆர்வத்துடனும்சுறுசுறுப்புடனும் செய்பவர்.
- பொறுமையுடையவர்.
- உற்சாகம் உடையவர்.
- மழலை களின் தாய்

# திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் பெற்ற விருதுகள்...



# உளவியல் நோக்கில் கிரகித்தலும் கற்றற் செயன்முறையும்

பேராசான், பேராசிரியர் சபா.ஜெயராசா,
முன்னாள் கல்வியியற்றுறை பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உள்ளத்தின் செயல்முறையை அல்லது மூளையின் செயல்முறையை ஆராய்ந்து விளங்குதலும் கோட்பாடுகளை வடிவமைத் தலும் அறிகை உளவியலின் சிறப்பார்ந்த நடவடிக்கை களாகின்றன. மனித ஆற்று கையை உற்று நோக்கி உள்ளத்தின் செயல் முறைகள் எறிவு செய்தும் அனுமானித்தும் பார்க்கப்படுகின்றன. ஒவ்வொருவரதும் அறிகை மட்டங்களுக்குரிய பிரச்சினைகளை வழங்கி அவற்றுக்குரிய தீர்வுகளை நோக்கி அவர்கள் எவ்வாறு நகர்கிறார்கள் என்பதை அவதானித்தும் உள்ளத்தின் செயல்முறைகள் விளக்கப் படுகின்றன.

புலன் உறுப்புக்கள் தகவல் களை உள்வாங்குவலோடு அறிக்கைச் செயற் பாடு ஆரம்பமாகிறது. புலன்களுடாக மூளைக்கு வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் மூளையினால் நிரற்படுத்தி ஒழுங்கமைக்கப் படுவதில்லை. தெரிவுசெய்த கவனத்தின் (Selective attention) வழியாகப் பெறப்பட்ட தகவல்களே மூளையால் நிரலாக்கம் செய்யப் படுகின்றன. நீண்ட வீச்சு நினைவகத்துள் வைக்கவும் படுகின்றன. கும் முறைமைக்கும் வேறொரு தாவரம் உணவு தயாரிக்கும முறை மைக்கும் இடையே காணப்படும் ஒப்புவமை நிகழ்சிகளின் ஒத்த பண்பை அல்லதுஒப்புவ மைக் கூறை விளக்கும்.

பகுத்தறிவு சார்ந்த அல்லது தருக்கபூர் வமான தகவல்களும் குறித்த ஒரு நிகழ்ச்சியை விரிவுபடுத்தி நிலைமாற்றம் செய்யும் நிரற்கோடலுக்கு வழியமைக்கும். நிரற்கோ காடற் செயற்பாடு, உருவவடிவிலிருந்து உருவ வடிவுக்கோ அல்லது அருவவடி விலிருந்து உருவவடிவிற்கோ நிலை மாற்றம் செய்யப் படும். பகுக்கும் ஆற்றலும், தொகுக்கும் ஆற்றலும், விரிவாக்கும் ஆற்றலும உயர் நிலையான உளத்தொழிற்பாட்டுடன் இணைந்தவை.

நினைவகத்திலே பதித்து வைக்கும் செயற்பாட்டிலும் மீட்டெடுக்கும் செயற் பாட்டிலும் எழுசுட்டிகள் (Cues) சிறப்பார்ந்த செயற்பாடுகளைப் புரிகின்றன. எழுசுட்டிகள் இன்றி நினைவாற்றலை வளம்படுத்த முடி யாது. குறிப்பிட்ட ஒரு சம்பவம், அல்லது குறியீடு அல்லது ஒரு பொருள் எதிர்ப்படும் பொழுது அதனோடு இணைந்த பழைய நினைவுகள் பளிச்சீடு கொள்வதுண்டு. அவ்வாறு நினைவுகளை ஒன்று திரட்டி மீட்டெடுப்பதற்குத் துணையாக இருக்கும் பொருளே எழுசுட்டியாகின்ற சில எழுச்சுட்டி களால் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை மட்டுமே நினைவுப் பதிவிலிருந்து மீட்டெடுக்க உதவும். சில எழுசுட்டிகள் ஒன்றுடன் ஒன்று தொடர் புடைய பல நினைவுப் பதிவுகளைவெளிக் கொண்டு வருவதற்குத் துணை செய்யும். நினைவுக் கோர்வைகளை மீட்டெடுப்பதற்கு கொழுக்கிகளாக எழுசுட்டிகள் தொழிற் படும். கால நீட்சியோடு நினைவுகள் வீழ்ச்சி யடைந்து வருவதனை விளக்கும் கோட்பாடு நலிகைக் கோட்பாடு (Decay Theory)எனப் படும். ஒரு நிகழ்ச் சிக்கு முன்பு இடம்பெற்ற முன்னைய சம்பவம் அந்த நிகழ்ச்சியை நினைவிலே வைத்திருப்பதற்கு தடையாக இருப்பின் அது "முற்குறுக்கீடு" எனப்படும். ஒருசம்பவத்திற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி அந்தச் சம்பவத்தை நினைவிலே பதித்து வைப்பதற்குத் தடையாக இருப்பின் அது பிற்குறுக்கீடு எனப்படும். எழுச்சுடடிகள் பலங்குன்றியவையாக இருப்பின் நினைவுகள் பாதிக்கப்படுதல் உண்டு.

கிரகித்தல் உள்வாங்கும் செயற் பாடுகள் நினைவிலே பதித்து வைக்கும் செயற்பாடுகள்

போன்ற அனைத்துக்கும், கிரகித்தலுக்கும் நேரடியான தொடர்புகள் உண்டு. கிரகித்த லில் மொழிப் பண்பு சிறப்பார்ந்த இடத்தை வகிக்கிறது. தொடைகளின்(SET) அடிப்படை யிலே நினைவிலே பதித்தல். வலைப்பின்னல் (Network)அடிப்படையிலே நினைவிற் பதித்தல் முதலிய கோட்பாடுகள் கிரகித் தலைத் தத்தமது தளங்களில் நின்று விளக்கு கின்றன.

கிரகித்தற்செயற்பாடுஎண்ணக்கருவாக் கத்துடன் இணைந்து. தருக்கநிலை எண்ணக் கருக்கள் என்பவை ஒழுங்கமைத்த முறையி லும் உருவாக்கப்படுகின்றன இந்த எண்ணக் கருவை கிரகித்துக்கொள்வதில் தருக்கமும் ஒழுங்கமைப்பும் சிறப்பிடம் பெறுகின்றன. உதாரணமாக நிறங்களைக் குறிப்பிடலாம்.

எண்ணக்கருவாக்கத்துடன் இணைந்த ஒரு சிறப்பார்ந்த விடயமாக "வகைப்பாடு" (Category) அமைகின்றது. எண்ணக் கருவாக் கத்துக்கும், கிரகித்தலுக்கும் பொருட்களை வகைப்படுத்தலுக்கும் தொடர்பு உண்டு கட் புலனை அடிப்படையாகக் கொண்டவகைப் பாடுதொடுகைசார்ந்த வகைப்பாடுமனம் சார்தவகைப்பாடு என்றவாறு வகைப்பாடுகள் ஏற்படுத்தப் படுகின்றன.

கிரகித்தலுக்குத் துணைசெய்யும் பிறிதோர் விடயம் அறிகைத்திரட்டு (Schema) என்பதாகும். பெருமளவிளான பெருந் தொகையான எண்ணக் கருக்கள் மற்றும் அறிவு, அனுபவங்கள், ஆட்சிகள் ஆகியவற் றின் திரவடிவமே "அறிகைத் திரட்டு 'ஆகின்றது. உதாரணமாக "விடுமுறை"என்ற அறிகை திரட்டில் விடுமுறையில் நிகழ்ந்த விளையாட்டுக்கள், பொழுதுபோக்குச் செயற்பாடுகள், படித்த புத்தகங்கள், சென்ற விடயங்கள், போன்ற விடயங்கள் உள்ளடக் கப்பட்டிக்கும். புதிய தகவல் களை நிரற் கோடல் செய்வதற்கும் கிரகித்தலை மேம் படுததுவதற்கும் அறிகைத் திரட்டு உறு துணையாக இருக்கும்.

நிகழ்ச்சி அறிகைத்திரட்டு (Event Schema), காட்சி அறிகைத் திரட்டு (SCENE SCHEMA),என்றவாறு அறிகைதிரட்டு இருவித மாகப் பாகுபடுத்தப்படும். ஒருசம்பவத்தில் இடம் பெற்றவற்றை வரன்முறைப் படுத்தித் தொடர் ஒழுங்கில் அமைத்து மூளையில் அறிகைத்திரளாக வைத்திருத்தல் நிகழ்ச்சி அறிகைத் திரட்டாகும். பௌதிக நிலையில் அல்லது வெளி சார்ந்த அமைப்பில் பொருட் களிடையே காணப்படும் தொடர்புகளைத் தொகுத்து மூளையிலே காட்சி அறிகைத் திரட்டு எனப்படும். உதாரணமாக குறிப் பிட்ட ஒரு பாடசாலையைச் சுட்டும் பெயர் அதன் அமைவிடம், வகுப்பறைகள், ஆய்வு கூடம், நூலகம், அதன்பின் ஆசிரியர், மாணவர் முதலியவற்றின் திரட்டான அனு பவங்கள் "காட்சி" அறிகைத்திரட்டில் இடம்பெறும்.

அறிகைத்திரட்டுக் கோட்பாட்டில் (Alba and Hasher,1983 ) நான்கு தொடர் முறையான செயற்பாடுகள் குறித்துரைக்கப்படுகின்றன. அவை:

- தெரிந்தெடுத்தல்
- அருவப்படுத்தல்
- வியாக்கியானம் செய்தல்
- ஒருங்கிணைத்தல்

இருப்பிலுள்ள அறிகைத்திரட்டுக்கு ஏற்புடையதாக தகவல்களை நிரற் கோடல் செய்தல் தெரிந்தெ டுத்தலில் இடம் பெறும். தேவையற்றவற்றையும், பொரு த்தாமான வற்றையும் நீக்கி சாரம் சாரத்தை தெளிந்து தெரிந்து நினைவில் அமைத்தல் அருவப்படு தலாகின்றது. தகவல்களை நிரற்கோடல் செய்யும் போதும், நினைவில் இருப்பவற்றை மதிப்பீடு செய்யும் போதும், வியாக்கிய ானப்படுத்தல் செய ற்படுகின்றது.

முன்னைய அறிகைத் திரட்டுடன் பின் னைய அறிவையும் அனுபவங்களையும் இசையுறப் பொருத்துதல் ஒருங்கிணைத்தல்

எனப்படும். நினைவில் நிறுத்தும் உளப் பணியைப்பகுப்பாய்வு செய்தோர் (Brewer and Mc Namara, 1984) நினைவுச் செயல் முறையின் ஐந்து தொடர் கூறுகளை விளக்கி யுள்ளனர்.

அவையாவன:

- தெரிந்து கவனம் கொள்ளல்
- ஒன்றிணைத்தல்
- சட்டக விளைவுகள் உருவாக்கல்
- நினைவிலே பதிப்பதை நெறிப்படுத்தல்
- வெளியீட்டுச் செம்மைப் படுத்தல்
- மேற் குறிப் பிட்ட ஐந்து செயற் பாடுகளோடும்அறிகைத்திர ட்டுமற்றும் கிரகித்தல் ஆகியவற் றுடன் ஒன்றிணைந் திருக்கும்.

**கிரகித்தற்செயன்முறை**

மூளைக்குவரும் தகவல்களை ஒழுங் கமைத்து வேண்டிய வேளைகளில் வழுவின்றி வெளியிடும் செயற்பாடே கிரகித்தலாகின் றது. கிரகிக்கும்ஆற்றல் கற்றலிலும் பிரச்சினை விடுவித்தலிலும் பங்களிப்புச் செய்கின்றது. பிரச்சினை யைத்தூண்டல் நிலைக்கு உள்ளாக் கித் திட்டங்களைக் காணும் பொருட்டு குறியீடுகளையும், கருத்துக்களையும் நிலை மாற்றம் செய்வதற்கும் கிரகித்தல் துணை நிற்கும்.

தீர்வுகளை எட்டுவதற்கு மூலக் கூறு களை மீள் ஒழுங்கு செய் வதற்கும் கிரகித்தல் உறு துணையாகவுள்ளது. கிரகித்தல் என்ற உளச்செயற்பாடு மொழியாற்றலுடன். இணைந்த தொழிற்படாகவுமுள்ளது. அறிவை உள்வாங்கலிலும், வெளியீடு செய்வதிலும், மொழிக்கட்டமைப்பு சிறப்பார்ந்த இடத்தை வகிக்கின்றது. நோக்கங்கள், உந்தல்கள், உணர் வுகள், நம்பிக்கைகள், விபரங்கள், விளக்கங்கள் முதலியன அனைத்தும் கையளிக்கப்படுதலில் மொழிக்கு சிறப்பார்ந்த இடமுண்டு. மொழியின் பிறிதொரு சிறப்பு, அதற்குரிய நிலைப்பெயர்ச்சி பண்பு (Displacement) ஆகும். கண்முன்னால் இல்லாத பொருட்கள் பற்றியோ, சம்பவங்கள் பற்றியோ மொழியாற் பேசலாம். எதிர்காலத் திட்டமிடலை மொழி வாயிலாக மேற்கொள்ளலாம். மொழியின் பிற சிறப்புக்களாக அதன் குறியீட்டுப் பண்பும், எண்ணக் கருக்களைத் தாங்கி நிற்கும் பண்பும் குறிப்பிடப்படுகின்றன.

செவிவழியாகச் செல்லும் ஒலிக் கோலங்கள் பகுக்கவும், தொகுக்கவும் முன்னெடுக்கப்படுகின்றது. வியாக்கி யபானம் செய்தல், கருத்தமைத்தல், சூழமைவைத் (Context) தொடர்பு படுத்தல் முதலியவை கிரகித்தற்செயன்முறையில் இடம் பெறு கின்றன. ஒலி உள்ளீட்டைக் கருத்துள்ள அலகு களாக நிலைமற்றுதலும் கிரகித்தலின் பாற்படும்.

கிரகித்தல் மனவெழுச்சிகளின் செல்வாக்கினுக்கு உட்பட்ட செயலாகும். உள நெருக்கீடு, பதகளிப்பு, மனவழுத்தங்கள் முதலியவை கிரகித்தலை எதிர்நிலையில் பாதிக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக ஆய்வு செய்த உளவியலாளர்கள் சில முக்கிய மான விளைவுகள் பற்றிக் குறிப்பிட் டுள் ளார்கள். அவற்றுள் முதலாவதாக உளமூட்ட இயைபு விளைவு (Mood Congruent effect) குறிப்பிடத்தக்கது. உதாரணமாகத் துன்பமான உளமூட்டத்தில் வாழ்ந்து கொண் டிருக்கும் ஒருவர் துன்பமான விடயங்களைக் கிரகித்தலிலே கூடிய ஆர்வம் காட்டுவார்.

உளமூட்டத்தின்மீது தாங்கி யிருக்கும் விளைவுகள் (Mood state dependent effects) பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. உதாரணமாக மகிழ்ச்சியான உளமூட்டத்தில் இருக்கும் ஒருவரால் துன்ப மான உளமூட்டத்தால் இருக்கும் ஒருவரிலும் பார்க்க வினைத்திறன் மிக்க கிரகித்தலை மேற்கொள்ள முடியும்.

இவை தொடர்பான வலைப் பின்னற் கோட்பாடு (Net work theory) உளவியலில் அண்மைக்காலமாக முக்கியத்துவம் பெறத்

தொடங்கியுள்ளது. ஒவ்வொரு மனவெழுச்சியும் அதற்கென உரிய வேறு பல மனவெழுச்சிகளுடன் தொடர்பு கொண்ட பின்னல் அமைப் பைக்கொண்டுள்ளது. அதனைச் சூழ்ந்து அதனோடிணைந்த பண்புகளைக் கொண்ட வேறு பல அலகுகள் பின்னலாக உள்ளன. இந்தப் பின்னற் புள்ளியில் ஒவ்வொன்றும் தன்னியக்கமாவும், தமது செயற்பணிகளை நிறைவேற்றக்கூடியவாறும், குறிப்பிட்ட மனவெழுச்சிகளுக்குரிய நடத்தைகளை வெளிப்படுத்தக்கூடியவாறும் அமைந்துள்ளன. இவ்வாறான சிக்கலான வலைப்பின்னல் அமைப்பின் அடிப்படையில் இயக்கப்படும் மனவெழுச்சிகள் கிரகித்தற் செயற்பாட்டில் சிறப்பார்ந்த பங்கினை வகிக்கின்றன.

மனிதரின் நுண்மதிச் செயற் பாட்டின் முக்கிய தொழிற்பாடாகக் கிரகித்தல் கருதப்படுகிறது. இயக்கநிலை த்தொழிற்பாட்டை (Dynamic function) கிரகித்தல் கொண்டுள்ளது. கிரகித்தலின்றி அறிகைத் தொழிற்பாடுகள் முன்னொடுக்கப்படமாட்டா. கிரகித்தலின் அடிப்படையிலேதான் அறிவைத் தொடர்ந்து கட்டி யெழுப்பக்கூடியதாகவும், விளைவுபடுத்தக் கூடியதா கவும் இருக்கும்.

கிரகித்தல் தொடர்பாக முன் வைக்கப்படும் ஒரு பிரதான கோட்பாடு-செறிவுக் கோட்பாடு (Intensity theory)ஆகும். (Jayarasah 2004) இக்கோட்பாடு யாழ்ப்பாணப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட கற்றல் -கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது. செறிவுக்கோட்டின் சாராம்சம் பின்வருமாறு அமையும்.

1) சிக்கலான விடயங்களைக் கற்பிக்கும் பொழுது கிரகித்தற் செயற்பாடு சுறுசுறுப்பாக இயகத்தொடங்கு கின்றது.
2) செறிவுடைய கற்பித்தலை மேற் கொள்ளும் போது வினையாற்றல் மிக்க கிரகித்தல் உருவாக்கப்படுகிறது.
3) கற்பித்தலின் போது பிரதான விடயங்களுக்கும் அழுத்தங்கொடுத்தல் நிரற்கோடலின் போது தவிர்க்க வேண்டிய விடயங்களை எளிதாக்கு கின்றது.
4) செறிவு என்பது மொழிச் செறிவு கருத்துக்களின் செறிவு, விளக்கச் செறிவு என்ற பரிமாணங்களைக் கொண்டது
5) கற்பித்த விடயங்களை வினைத் திறனுடன் கிரகித்த மாணவர்களின் துலங்கல், அலகுப் பொருக்கத்தை கொண்டதாகக் காணப்படுகிறது. அலகுப்பெருக்கம் என்று கூறும் பொழுது ஒரு சொல்லில் விடை சொல்வது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் விடை சொல்லல் அல்லது ஒரு விடை சொல்லாது வசனங்களில் விடை சொல்லல் ஆகும்.
6) செறிவுக்கோட்பாட்டில் தடுப்புப் புள்ளி (Break - point) முக்கியமாகக் கருதப்படுகின்றது. இந்தப் புள்ளி பற்றி ஆசிரியரும் மாணவரும் அறிந்திருக்கவேண்டியுள்ளது. அதாவது கற்பித்துக் கொண்டிருக்கும்பொழுது எந்தப்புள்ளி லியிருந்து கிரகித்தலை, மாணவர் தொடரமுடியாதிருக்கின்றதோ அதுவே தடுப்புப் புள்ளியாகும். தடுப்புப்புள்ளி எதிர் கொள்ளப்படும் பொழுது ஆசிரியர் தான் மேற் கொள்ளும் கற்பித்தற் செயற்பாட்டை மீளாய்வு செய்தல் வேண்டும். தடுப்புப்புள்ளி ஏற்படும் பொழுது தாம் கிரகித்தலை மேலே தொடர முடியாதிருத்தலை மாணவர்கள் ஆசிரியருக்கும் புலப்படுத்தல் வேண்டும்
7) கிரகித்தலில் தடுப்புப் புள்ளி மாணவர் இயல்பு, ஆசிரியர் இயல்பு, பாடத்தின் இயல்பு என்பவற்றுக்கேற்றவாறு வேறுபடும்.
8) கிரகித்தல் தொடர்பான செறிவுக் கோட்பாட்டின்படி சிக்கலான விடயத்தைக் கற்பிக்கும் பொழுது மாணவர்களது உள்ளம் உயர்நிலை யான அறிகைத் தொழிற் பாட்டை நோக்கி நகர்வதால், கற்பிக்கப்படும் பொருளும் கற்பிக்கப்படும் முறையும் மாணவர்களுக்கு அறைகூவல் விடுப்பதாக அமைதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

**References:**


- Alba and Fasher (1983) Is Memory Schematic? Psycho- logical Bulletin, 93
- Anderson, J .R (1983) The Architecture of Cognition , Cambridge, Mars, Haward University Press.
- B addeley A.D (1986) Working Memory, Oxford, Oxford University press.
- Ellis, HC and Hunt, R.R (2007) Fundamentals of cognitive Psychology, Boston Mc Graw Hill.
- Mandler, G( 1975) Mind and Emotion, New York Wiley.
- Solso, R.L (1991) Cognitive psychology Boston, Allyn and Bacon.




# Professional Development through Reflective Practice

**Dr.T.Kalamany,** *Senior Lecturer,*
*Dept.of. Education, University of Jaffna.*

**Introduction**

Reflective practice - or inquiry - oriented teaching, as it is called sometimes engages the teacher in a cycle of though and action based on professional experience. It portrays the teacher as creative artist/designer than as engineer/ technician. If teachers are to develop increasing awareness of the nature of their work so that they can attend to their teaching in ever more productive ways, they need to be constantly seeking to understand better their own teaching. Moreover, as part of coming to understand what it is they do to assist students to learn, it is believed that they must have awareness and understanding of their own learning.

Teaching is described as creating and sustaining the predisposition and the condition for learning to occur. According to this definition, teaching is much more than the simple technical application of skills; rather, it is a very complex activity requiring teachers to act in highly sophisticated and sensitive ways. However, we are facing a huge dilemma. On the one hand, schools are expected to engage in continuous renewal, and change expectations are constantly swirling around them. On the other hand, the way teachers are trained, the way schools are organised, the way the educational hierarchy operates, and the way political decision makers treat educators result in a system that is more likely to retain the status quo.

Failure of the majority of school reform efforts stems from the fact that they are top-down models that remove teachers, parents, and building level administrators from the process. The development of reflective professional judgment is the cornerstone of any school reform.

The following statements emphasize the role of teachers in implementary any school reform effort.

- It is teachers who, in the end, will change the world of school by understanding it"

  - (Stenhouse, 1985; cited in Holly & Mcloughlin, 1989, p.25)

- It is important that learners learn to evaluate their own performance, and that teachers actively teach and model self - analytic and questioning approaches to learning.

  - (Ministry of Education, 1989; cited in Wilson & Jan, 1993, p.2)

- "Many of the new goals of education for students having a sense of purpose, habits of and skills of inquiry, ability to work with others, and to deal with change - are precisely the skills of change agentry. Teachers must succeed if students are to succeed, and students must succeed if society is to succeed" (Fullan, 1993, p.46)

**Types of Reflection and Elements of Professional Reflection**

What is reflection?- Reflection is the practice or act of analysing our actions,

decisions, or products by focusing on our process of achieving them. The information about reflective practice is not to be confused with the experience of reflective practice. The map is not the territory.

According to Dewey,

"Reflection is a behavior which involves active, persistent, and careful consideration of any belief or practice in light of the grounds that support it and the further consequences to which it leads" (cited in Canning, 1991, p.18).

..... Reflection is a powerful change agent because it enables teachers to recognise how their actions can affect the classroom environment. By reflection on the teaching and learning process, they gain insight into how better to meet the instructional needs of their pupils... (|Scheibelhut, 1994, p.242).

**Figure : 1. The process of reflection**




**(Adapted from Wilson & Jan, 1993, p.5)**

We usually talk about three types of reflection

1. Reflection - on - action
2. Reflection - in - action
3. Reflection - for - action

Reflection - on - action is the reflection on practice and one's actions and thoughts, undertaken after the practice is completed. Reflection - in - action is reflection on phenomena and on one's spontaneous ways of thinking and acting in the midst of action. Reflection - for - action is the desired outcome of both previous types of reflection. We undertake reflection, not so much to revis it the past or to become aware of the metacognitive process one is experiencing, but to guide future action (the more practical purpose). Reflection then is a process that encompasses all time designations, past, present and future simultaneously. The process of reflection is illustrated in figure - 1.

**Elements of Professional Reflection:**

While examining our past actions and over present actions, we generate knowledge that will inform our future actions, as shown in Figure 2.

**Figure : 2. Elements of Professional Reflection**




(Adapted from Wildman & associates, 1987; cited in Killion & Todnem, 1991, p.16).

According to this model, first teachers plan to act. Then through reflection - in - action, the teachers observe the action as it transpires, almost as if placing themselves side the action itself. From this perspective, the teachers create meaning, in understanding the dynamics of the cause / effect relationship the occurs between their actions and the students' responses to their behaviors. Engaging in reflection - on - action and reflection - for - action, the teachers analyse events and draws conclusions that give them insight into future decision points.

**Overview of the Change process**

What is needed is a different way of accomplishing professional development so that the teacher is not a passive recipient of information about change, but rather an integral part of the process. A necessary component to creating long - term, effective school change is to establish a common vision among the teachers and administrators. This vision should be one that the teachers and administrators have arrived at by agreement rather than the one decreed from the top. Teachers are more committed to changes they have had a hand in designing. Hence, teachers must become willing agents of change.

Researchers and theorists assert that the failure of many innovations is due to the basic nature of the change process. Watzlawick, Weakland and Fisch (1974: cited in Marzano et al., 1996) distinguish two types of change - first order change and second order change. First-order change is more psychological in nature while second-order change is more ontological.

"The challenge in future will be to deal with more second order changes - changes that affect the culture and structure of schools, restructuring roles and reorganising responsibilities, including those of students and parents" (Fullan, 1991, p.29). "The new standard for the future is that every teacher must strive to become effective at managing change" (Full an, 1993, p.16). Reflection is central to learning for both teachers and students as both are learners and the process of reflection and metacognition leads to change" (Wilson & Jan, 1993, p.3).

Teachers and students need to make a regular time commitment to practice reflection on their own performance. Providing appropriate reflective experiences at one stage helps teachers to move to a more advanced stage. Teacher reflection could be promoted through action research.

## Activities / Strategies for Developing Reflective Thinking / Practice

| Individual Activities | Pair Activities | Small Group Activities |
|---|---|---|
| Personal Histories | Cognitive Coaching: | |
| Video/Audio Self-assessment | Problem Framing Action Research | Case Discussions and writing of Cases |
| Journal Writing | Interactive Journaling | and Problem Framing and Action Research Role-Playing |

***Personal Histories*** - Staff developers can help teachers become more aware of the influence of their personal histories in a variety of ways. A direct method is to ask individuals to select critical incidents from their own experiences both in and out of school. Participants are then asked to analyse their present thinking and practices. An alternative method is to engage in a group in sharing such events and probing for the meanings that have been created.

*Video / Audio Self-Assessment* -An important source of material for reflection is descriptive information about one's own teaching. Videotapes and audiotapes provide an objective record of teaching that can be analysed alone or in a group.

*Journal Writing* -Another effective way to encourage reflection is to regularly record in a journal personal experiences, feelings, and thoughts. The journal may be private, or it may be shared with others. This "dialogue with oneself' is very useful for creating new mental representations, reframing problems, and engaging in metacognition. Teachers and others who write in journals make it a habit to regularly reread, reflect upon, and respond to their thoughts so they can see how their thinking changes over time.

*Interactive journaling* is one in which each person is partnered with another from a different school and once a month or once a fortnight they exchange journals in a written collegial dialogue. The same goal can be achieved electronically through computer conferencing.

*Cognitive Coaching* - This is a system of interactions used by pairs or small groups to develop ret1ective thinking. One of the important contributions of Cognitive Coaching is the skill of rapport building - listening to one another with empathy and without judgment. Another major contribution is the skill of probing to help a person discover the thinking behind a decision or action.

*Cases: Discussion and Writing* - Cases are rich descriptions (written or visual) of the events and characters in a particular situation or dilemma. Cases offer teachers / educators an opportunity to practice reflective analysis and the construction of meaning in a safe environment. It is very common that teachers and administrators immerse themselves very quickly in the details of the case and "make it their own" - to the extent that in workshops, it is very difficult to stop discussing the case and focus on their own reflective thinking.

*Problem Framing and Action Research* - One of the most important responsibilities of an educator is to address the daily challenges of classrooms and schools in a systematic, thoughtful way. While it is tempting to quickly jump to a conclusion about the causes of, and solutions to, a problem, such quick fixes often cause the problem to get worse, not better.

*Role Playing* - A great way to develop the mental flexibility and caring required by reflective educators is through role playing. All that is needed is a set of character descriptions, a situation, and time for participants to prepare their roles.

## Conditions for Reflection

To grow through ret1ection teachers must have

- a commitment to improve practice
- a willingness to question practice and to entertain alternatives
- a willingness to responsibility for their actions and intentions
- a faith in themselves as a source of improvement
- a certain willingness to risk exposure of themselves as teachers.

## Developing a Learning Culture

According to Fullan (1993a, p.12),

"Teacher education programs must help teaching candidates to link the moral purpose that influences them with the tools that will prepare them to engage in productive change." There are four core capacities for building greater change capacity: personal vision building; in quiry; mastery; collaboration.

Each of these has its institutional counterpart: shared vision building; organisational structures, norms, and practices of inquiry; the development of increased repertoires of skills and know-how among organisational members; collaborative work cultures .

It has become essential that the Faculties of education must rethink for new designs of their programs to focus directly on developing the beginners' knowledge base for effective teaching and the knowledge base for changing the conditions that affect teaching. This also sets out a new standard for the future in which every teacher to strive to become effective at managing change (Full an, 1993a p.16)

While emphasising why teachers must become change agents, Fullan (1993a, p.17) concludes his argument with a view to have a new relationship between universities and schools. He calls for action that links initial teacher preparation and continuous teacher development based on moral purpose and change agentry with the corresponding restructuring of universities and schools, and their relationships. This type of reculturing is what he means by restructuring.

Turbill (1996, p.4) claims that an 'interactive and integrative' model of staff development could create optimal learning cultures at the school level in which teachers can become perpetual learners. Citing evidence from a study called 'frameworks' (1991,1993; cited in Turbill 1996, p.4), she argues that with a skillful mix of activities and processes including collaboration, reflection, and sharing learning, a learning culture could be created in which learners become highly supportive of each others efforts and understandings.

A learning organisation is one that is geared to change and determined to develop and refine its capacities to move into the future with confidence, curiosity and commitment (Whitaker, 1993, p.71). As learning from experience could be incidental or deliberate and planned, deliberate learning from experiences involves submitting of particular experiences to systematic review in order to learn from them and improve in the future. As such, learning from experience becomes a conscious process of reflection and improvement (Whitaker, 1993, p.56). Consequently, successful change organisation is one in which experience is regarded as a key resource for learning and development.

In conclusion, beyond improving our teaching, reflection can alter our common perspective of education and elevate our work to the status of a profession.

## References

Canning, C. (1991). What teachers say about reflection. *Educational Leadership, 48(6),* 18-21.

Fullan, M. (1993). *Change forces: Probing the depths of educational reform.* New York: The Falmer Press.

Fullan, M. (1993a). Why teachers must become change agents. *Educational Leadership,* **50** (6), 12-17 .

Fullan, M. (1991). *The new meaning of educational change.* London: Cassell.

Holly, M. L & Mcloughlin, C. S. (Eds.). (1989). *Perspectives on teacher professional development.* UK, USA: The Falmer Press.

Killion, 1. & Todnem, G. (1991). A process for personal theory building. *Educational Leadership,* 48(6), 14-16.

Langer, G. & Colton, A. (1994). Reflective decision-making: The cornerstone of school reform. *Journal of Staff Development,* **15** (1), 2-7.

Marzano, R. et al. (1996). A new paradigm for educational change. *Education, 116(2),* 162-173.

Peacock, D. & Yaxley, B. (1990) *Teacher as reflective practitioner: an evolving research agenda.* A paper prepared for the Annual Conference of the Australian Association for Research in Education, University of Sydney, 27-30 November 1990.

Scheabelhut, C. (1994). I do and I understand, I reflect and I improve. *Teaching Children Mathematics,* 2(4),242-246.

Schon, D. (1987). *Educating the reflective practitioner.* San Francisco: Jossey-Bass.

Schon, D. (1973). *The reflective practitioner.* New York: Basic Books

Turbill,1. (1996). Changing the learning culture at the school level. *Nebraska Association for Supervision and Curriculum Development (NASCD),* Nebraska City, NE NASCD, **Fall,** 3-8.

Whitaker, P. (1993). *Managing Change in Schools.* Philadelphia: Open University Press

Wilson,1. & lan, L. (1993). *Thinkingfor themselves: developing strategies for reflective learning.Australia:* Eleanor Curtain Publishing.

Wlodkowski, R. & Ginsberg, M. (1995). A framework for culturally responsive teaching. *Educational Leadership,* 52(12),17-21



# அதிபரின் வகிபாகமும் தலைமைத்துவமும்

எஸ்.கே.யோகநாதன்,
பீடாதிபதி, யாழ்ப்பாணம்,
தேசியக் கல்வியியற் கல்லூரி.

பாடசாலைகள் தொடர்பான முழுத்தர முகாமைத்துவ (Total quality Management) அபிருத்தி மற்றும் விமர்சனங்கள், புதிய எதிர்பார்க்கைகள், பாடாலைகளின் எதிர்காலம் பற்றிய தீர்க்க தரிசனங்கள் தொடர்பான ஆய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. இன்று உலகின் மனிதவள அபிவிருத்தியின் மையங்களாகப் பாட சாலைகளே உள்ளமை இவ்வாய்வுகளின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித் துள்ளது. இலங்கையில் இந்த ஆண்டு பாடசாலைகளின் சேவை மேலும் விருத்தியாக்கப் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுகிறது. இதில் பாடசாலை ஆதமார முகாமைத்துவத்தின் ஊடாக பாடசாலைகளே தன்னிச்சையாக அபிவி ருத்தி நோக்கி முன்னேற அதிபர்களின் வாண்மையை விருத்தியாக்குதல் தொடர்பான செயன்முறைகள் இணைக் கப்பட்டுள்ளன.

தற்போதைய இலங்கைப் பாடசாலைகள் பற்றிப் பின்வருமாறு விமர்சனங்கள் தெரிவிக்கப்ப டுகின்றன.

- ✯ அநேக பாடசாலைகள் மனித -பௌதிக வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல், அவற்றின் ஊற்றுக் களை சரியாக இனம் காணாமல் உள்ளமை.
- ✯ அதிகார பரவலாக்கல் செயன் முறைகள் பல அறிமுகமாகியும் பல பொருத்த மற்ற சட்டதிட்டங்களை குருட்டுத்தன மாக்கிப் பின்பற்றுதல்.
- ✯ அதிபர் தலைமையிலான பாடசாலைத் தள நிலை உபாயத் திட்டமிடல் செயன்முறை இயங்காத நிலை
- ✯ பாடசாலைத்தளநிலை கலைத் திட்ட முகாமைத்துவம், உள்ளக மேற் பார்வை பொருத்தமாக இன்மை.
- ✯ பாடசாலைகளுக்கான கல்விசார் சுதந்திரங்களை அனுபவிக்காமை.
- ✯ நிதி, வள, தர முகாமைத்துவக் குறைபாடுகள்மலிந்து காணப்படு கின்றமை.
- ✯ தர உறுதி (Quality Assurance) பேணப்பட்டமை.

எனப் பல விமர்சனங்கள் எடுத்துரைக்கப்பட்டு இவற்றிற்கான அடிப்படைக்காரணம் பாடசாலை அதிபர்களுக்குப் பொருத்தமான தலைமைத்துவப் பயிற்சி இன்மை, வாண்மைத்துவ ஆற்றல்களைப் பெருக்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் போதாமை, வேலைச்சுமை எனப் பல காரணங்களும் கூறப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் பாடசாலையின் தர மேம்பாடு வகிபாகமும் தலைமைத்துவமுமேமிகப் பொரும் தாக்கத்தை ஏற்படுத்து கின்றமையை உணரமுடிகின்றது

**அதிபரின் வகிபங்கு:**

பாடசாலையின் அபிவிருத்திக்கும், வெற்றிக்கும் அதிபரின் பன்முக வகிபங்குகள் முக்கியமானவையாகவுள்ளன. பாடசாலையை வினைத் திறனாக செயலாற்றி விளைதிறன் பொருந்திய வெளியீடுகளுக்கு மூலகர்த்தா, முதன்நிலை முகாமையாளர் அதிபரே ஆவார். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார்கள், திணைக்களத்தினர் என அனைவருடனும் உயிர்த்துடிப்பான தொடர்புகளுடைய முதற்கர முகவராகச் செயலாற்றும் வகிபாகம் அதிபருடையதே ஆகும். இவ்வகையில் அதிபரானவர் நேரடி நடவடிக்கைகளுக்கான

முகாமையாளராவார். தற்போது சமூக, பொருளாதார, தகவல் துறைசாாந்த விரைவான மாற்றங்களாலும், உலகமய மாதலின் தாக்கங்களாலும் எமது சமுதா யங்கள் பல நேரடியான தாக்கங்களுக்கு உட் பட்டுள்ளன. இது பாடசாலையின் ஒழுங் கமைப்பை, ஆசிரியர் மாணவர்களின் நடத்தைகளை, ஒழுக்கத்தை, சமூகத் தொடர் புகளைவெகுவாகப்பாதித்து வருகின்றது. இப்பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் மிகப்பெரிய பொறுப்பும், மாற்றங்க ளுக்கான முகவராக இருந்து வகிபங்காற்றும் செயன் முறையும் பாடசாலை அதிபர்களின் முக்கிய செயலாற்றுகையாகவுள்ளன. மாற்றங்களை யும் சவால்களையும் எதிர்கொண்டு, மாணவர் களுக்கான தேர்ச்சிகளை வழங்கி, ஆசிரியர் களின் கற்பித்தல்-வழிகாட்டும் திறனை விருத்தி செய்து, அமைச்சு மற்றும் மேல் நிர்வாக வழிகாட்டல்களைப் பின்பற்றி செயற்படுதல் அதிபரின் பெறுப்பாகின்றது. இவ் வகையில் அதிபரின் நவீன வகிபங் குகளாக:

- ✯ அனைவரும் பங்கேற்கும் தொலை நோக்கு மற்றும் அவை தொடர்பான நிலைமைகளை விருத்தி செய்து கொள்ளும் வகிபாகம்.
- ✯ பிரச்சினைகளைத் தீர்த்து கீர்மானம் மேற்கொள்ளும் வகிபாகம்.
- ✯ கற்றலுக்குப் பொருத்தமான பாட சாலைக்கலாச்சாரத்தை விருத்தி யாக்கும் வகிபாகம்.
- ✯ மாணவர் - ஆசியர் சேவைகளுடன் சமுதாய சுகாதார -மற்றும் சமூக சேவைகளுடன் இயைபாகும் வகிபாகம்.
- ✯ ஆலோசனை வழிகாட்டும் வகிபாகம்.

**தலைமைத்துவ வகிபங்கு**

என மிக உயர்ந்த வாண்மைத்து வகிபாகங்களைக் கடைப்பிடிப்பவராகவும், சேவையாளராகவும் தந்திரேபாய முகாமைத் துவ பிரயோகங்களை மேற்கொள் பவராகவு மிருக்க தமது தலைமைத்துவத்திறன்களை விருத்தியாக்க வேண்டியது மிக அவசியம ாகும். இன்றைய இலங்கைப்பாடசாலை அதிபர்கள் தொடர்பான விமர்ச னங்களில் அவர்களது தலைமைத்துவ ஆற்றல் பிரயோ கங்கள், திறன்கள் தொடர்பான பலவீனங்களே முதன்மைக் காரணிகளாக உள்ளன.

பாடசாலை அதிபரின் தலை மைத்துவ பங்கு : ஏனையவர்களுக்கு முன் மாதிரியாக நடந்து கொள்பவர்கள் யாராக இருந்தாலும் அவர் தலைமைத்துவ வகிபங்கு உடையவராக இருப்பார் என சமூக உளவியல் அறிஞர் ஸ்பாரட் (Sprott) தெரிவிக்கிறார் . (Socialpychology -Robert, Bron) ஒரு குழுவில் ஒருவர் பிற உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதை இந்த வரையறை வலியுறுத்துகின்றது. மேலும் தலைமைத் துவம் என்பது ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவின் செயற் பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் இறுதி இலக்கை நோக்கித் தயார்படுத்துவதமாகவும், நிறுவனத தின் குறிக்கோள்களை வெற் றிகரமாக நிறைவேற்றும் முதற்படியாகவு முள்ளது. இதனுடன் விழுமியங்கள், ஊக்குவிப்புகள், வழி காட்டல்கள் இணைப்புப் பெறுகின்றன. எனவே மற்றவர்களின் நடத்தைகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் செயன்முறைகளு டன் தொடர்பானதாகவுள்ளது.

எனவே இங்கு தலைவர் என்பவர் முகாமையாளரையும்விட மேலானவராவர். தலைவர் எதிர்கால நிறுவன இலக்குகளைக் கருத்திற் கொண்டு செயற்படுபவராகவும் சேவையை பெறுநர்களின் நம்பிக்கைகள் விழுமியங்கள், உளப்பாங்குகளைச் சீர்செய்ப வராகவும், எதிர்காலவியல் தொடர்பான சிந்தனைகளை உடையவராகவும் காணப் படுவார். இவ்வனைத்து அம்சங்களுக்கும்

பாடசாலைத் தலைவரான அதிபருக்கு இருக்க வேண்டும். இவ் இருப்பிற்கு பின்வரும் ஐந்து பரிமாணங்கள் முக்கிய மாகின்றன.

I) மனித தலைமைத்துவம்-பங்கேற்பை ஊக்குவித்து ஆதரவு வழங்குபவர். உடன் பாடான ஆளிடைத் தொடர்புகளை ஊக்குவிப்பவர்.

II) கலாச்சாரத்தலைமைத்துவம் - உற்சா கத்தை வழங்கும் வசீகர பண்பைக் கொண்ட குழுக்களின் பணிக்கான விழுமியங்கள் , நியமங்கள் கலாசார பண்பாட்டுக்கு உட்படுத்துபவர்.

III) கட்டமைப்புத் தலைமைத்துவம் - தெளிவாகத் தர்க்க ரீதியாக சிந்தித்துச் செயலாற்றுபவர். பாடசாலைக் கொள்கை களை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், இயை பாக்கல்,நடை முறைப்படுத்தல் என்பவற்றிக்குப் பொருத்தமான தொழில் நுட்ப ஆரதவை வழங்குபவர்.

iv) கல்விசார் தலைமைத்துவம்-பாடசாலைத் தலைவர் உயர் தொழில்தகைமை விருத்தியையும் கற்பித்தல் மேம்பாட்டை யும் ஊக்குவிப்பவர், கல்விப்பிரச்சினை களை ஆராய்ந்தறிபவர், பாட ாலையின் கற்பித்தல் தொடர்பான விடயங்களில் தொழில் ரீதியான கருத்துக்கள் வழிக ாட்டலை வழங்குபவர்.

v) அரசியல்பாங்கான தலைமைத துவம்- பாடசாலைத் தலைவரானவர் குழுக்களுக் கிடையே கூட்டுக்களை ஏற்படுத்துவதில் வல்லவராக, சவால்களுக்கு முகம் கொடுத்து பாட சாலைச் சமூகத்தில் எழும் பிரச்ச னைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் விரைவான-சரியான தீர்வுகளை வழங்கு பவர்.

இவ்வாறான தலைமைத்துவப் பண்புகளுடன் சகல விதமான ஆவணங் களையும் பேணி, தகவல் தொழில் நுட்ப அறிவுடன் செயற்திட்ட அறிக்கை தயாரிக்கும் ஆற்றலை அதிபர் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் நிகழ்ச்சிகளையும், கற்பித்தல் செயன்முறை களையும் கண்காணிக்கும்திறன் வள முகாமை யினூடாக பங்கேற்புத் தீர்மான செயலாற்று கைகளையும் முன்னெடுக்க வேண்டும். பாடசாலை செயலாற்றுகைகள் தொடர்பான அர்ப்பணிப் க்களையும், வகை கூறல்களையு ம் அதிபர் கொண்டிருக்க வேண்டும். தன்னுடன் பணியாற்றும் அனைவருக்கும் வாண்மைத் துவப் பயிற்சியளித்து, வேலைகளை இலகு வாக்கியும் வினைத் திறனனாக்கியும் வழங்கும் ஆற்றல்களினூடாக அதிபர்கள் தம் தலைமைத்துவ ஆளுமைகளை விருத்தியாக்க முடியும்.

**தலைமைத்துவ தொடர்பாடல் முகாமை:-**

இன்றைய நவீன அதிபர்களின் தலைமைத்துவப் பாத்திரத்தை வினைத் திறனாக்கும் முக்கிய காரணிதொடர்பாடல் தேர்ச்சியாக உள்ளது பாடசாலையின் ஆளணி யினரிடையே கருத்துக்களையும், செய்தி களையும், நிறுவன செயலாற்றுகைகளையும், உணர்வு களையும் பரிமாற்றப்படுதல் தொடர் பாடல் (Cmmunication) எனப்படும். அதிபரா னவர் இலகுவான முறையில் தனது கருத்துக் களையும், அறிவுறுத்தல்களையும் பாட சாலைக்கும் சமூகத்திற்கும் பரிமாற்றம் செய்வதற்கோற்ற வகையில் சிறந்த தொடர் பாடல் முறையைத் தனதுபாடசாலையில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறித்த பாடசாலையின் முகாமைத்துவம் சிறப்பாக விளங்குவதற்கும், அப்பாடசாலையை பயன் தரு பாடசாலையாகத் திகழவும் தொடர் பாடல் மிகமுக்கியமானதாகவுள்ளது. பாடசாலையில் தனது தலைமைத்துவ ஆற்றலை விருத்தியாக்கவும் நோக்கங்களை நிறைவேற்றவும் தொடர்பாடல் மூலமான முகாமைத்துநுட்பங்கள் மிகுந்த பலனை அளிக்கின்றன.




இவற்றைக் கொண்டு பாடசாலையின் இலக்குகளை சரியாக அமைத்து வழி நடாத்த தொடர்பாடல் தொடர்பான முகாமைத்துவ தேர்ச்சியே முதன்மை வகிக்கின்றது. இவ்வகையில் பாடசாலை யின் தலைவரான அதிபரின் செய்தி அல்லது தகவலானது

1) இலகுவானதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாவும், சுருக்கமான தாகவும், பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.
2) செய்திகளின் அளவு, பயன் படுத்தப படும் சொற்கள் போன்றவை சரியாகவும், பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.
3) செய்திகள் முரண்பாடுகளையும் ஐயங்களையும் ஏற்படுத்தாத வையாக இருத்தல் வேண்டும்.
4) தகவல் செங்குத்தாகவும் , கிடையா கவும்பரிமாற்றம் செய்யும் வகையில் அமைதல் வேண்டும்.
5) செய்தி செல்பவரிடம் சரியாகவும் திரிபு இன்றியும் சென்றடைதல் வேண்டும்.

பாடசாலையில் மேற்குறிப் பிட்ட வகையில் தொடர்பாடலைச் சரியாக மேற் கொள்ளும் தலைமைத்துத்தேர்ச்சிகளையும், நிச்சயமற்ற தன்மைகளையும் போக்க முடியும். ஆளணியினரான ஆசிரியர்களை ஊக்குவித்து அவர்களது செயலாற்றுகையை மேலும் விருத்தியாக்கலாம். மேலும் அபிப்பிரா யங்கள், கருத்துக்கள் போன்றவற்றினூடும். பின்னூட்டல் மூலமும் தகவல்களைச் சரியாக்ப் பெறலாம். அத்துடன் ஆளணிணி னரை உசார் நிலையில் வைத்திருந்து சாதனைகள் செய்யலாம். ஒருவருடன் ஒருவர் சரியாகப் புரிந்துணர்வு தம்மிடையே நல்ல மனப்பாங்கினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபரானவர் வாய்மொழி ரீதியாக, வாய்ச்சொல், தொலைபோசி, ஒலிபெருக்கி, குழுக்கலந்துரையாடல்கள், கூட்டங்கள், காட்சிகள், குறியீடுகள், வரைபடங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், ஓவியங் கள், கருத்துப் படங்கள், என்பவற்றுடன் எழுத்துமூலமான ஊடகங்களாலான சுற்றறிக கைகள், செய்தித்தாள்கள், விளம்பரங்கள், பாட சாலை வெளியீடுகள் மாணவர் தேர்ச்சி அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள் என்ப வற்றினுடாக முறையான தொடர்பாடலைப் பாட சாலையில் அதிபர் பிரயோகிக்கின்ற போது அவரது முகாமைத்துவ வேலை இலகு வாக்கின்றது, வினனைத் திறனாகிறது. இவ்விடயங்களில் எமது பாடசாலை அதிபர் கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியி ருக்கின்றது.

இவ்வகையில் பாடசாலையின் தலைவரான அதிபர் ஒரு நிலை முகாமை யாளராகும். அவருடைய ஆற்றலின் வெளிப்பாடே பாடசாலையின் எதிர்கால வளர்சசியாகவுள்ளது. உயர்ந்த வழிகாட்டி யாக, தலைவராக, பண்பாளராக , பொருளா தார நிபுணராக ஆலேசனை வழிகாட்டியாக,

தந்தையாக, உயர் வாண்மையாளராக, முகாமையாளராக நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக, வசதி செய்து கொடுப்பவராக, பிரச்சனை தீர்ப்பவராக, நம்பிக்கைப் பொறுப்பானவராகப் பாடசாலை அதிபரின் வகிபாகங்கள் தலைமைத்துவ ஆற்றலினூடாகவே வெளிக்களம்புகின்றது. என்றவகை இன்றைய பாடசாலை அதிபர்கள் தம் தலைமைத்துவ தேர்ச்சிகளை மேலும் வளர்க்கவேண்டியுள்ளது.

**உசாவிய துணைநூல்கள்:**


1) Leader ship and motivation-Mc Gregor Dougles(2007)
2) Management : Theroy Processam practices Richardm. Hodgets (1992)
3) Managing for performation -John M. Lvancevich-(1990)
4) Developing Edcuational/ Leaders for 21St century -Dianne year (2004)
5) A Guide to Excellence in Leadership and Management National Library of Srilanka (2000)




# பாடசாலையும் சமூகப் பங்களிப்பும்

எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை
இணைப்பாளர் நிதி நிர்வாகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி.

பொதுக்கல்விஅமைப்பில் பாட சாலைகள் முதன்மை இடத்தை வகிக்கின்றன. சரியான நோக்கங்களை கைக்கொள்வதாலும் அந்நோக்கங்களைச் செழுமையாக அடைந்து கொள்வதாலும் நாட்டிற்குச் சுமையாகாத பிரஜைகளை உருவாக்குதல் ஒவ்வொரு பாடசாலையினதும் பொறுப்பாகும். மத்திய மட்டத்தில் திட்டமிடப்பட்ட கலைத்திட்டத் தினை நடைமுறைப்படுத்துதல் ஒரு பாட சாலையின் அடிப்படை நடிபங்காக இருப்பி னும் அம்முயற்சியில் வெற்றிகாணவும், விளைவினை ஈட்டிக் கொள்ளவும் பாடசாலை கவனத்தில் கொள்ளவேண்டிய வேறு சில நடிபங்குகளும் உண்டு. அனைத்து நடிபங்கு களும் நன்கு அமுலாகிப் பாடசாலையால் ஏற்கனவே கைக்கொள்ளப்பட்ட நோக்கங்கள் யாவும் உயர்ந்த மட்டத்தில் நிறைவேறுமா யின் அது ஒரு வெற்றிகரமான பாடசாலை யாகும். ஒரு பாடசாலையை வெற்றியை நோக்கி இட்டுச் செல்லும் பணியை அதிபரால் தனித்து ஆற்ற முடியாது. இதன் நிமித்தம் பங்களிப்பு வழங்கும் கூட்டத்தாருள் சமூகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாணவர்களின் கற்றல் அடைவு, நடத்தைப் பிரச்சனைகள், பௌதிக வளப் பற்றாக்குறை, பேரனர்த்த முகாமைத்துவம், அடிப்படை வசதிகள் போன்ற நிலைமைகளில் பாடசாலைகளை மேம்படுத்துவதற்கு சமூகம் அதிக பங்களிப்பை வழங்க முடியும்.

**கற்றல் அடைவு**

மாணவர் வரவில் காணப்படும் ஒழுங்கீனங்கள் கற்றல் அடைவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பல பாடசாலைகளில் மாணவர்கள் பலர் தாம் தற்போது கற்கும் வகுப்பை விட பல தரங்கள் குறைந்த அளவிலேயே அடைவு மட்டத்தைக் கொண்டிருக்கின்றனர். இந்நிலைமைக்கான காரணங்களில் ஒன்றாக ஒழுங்கீனமான வரவு அமைகின்றது. இதற்கான காரணங்களாக பெற்றோரின் அக்கறையீனம், குடும்ப வறுமை காரணமாக மாணவர்கள் வேலைக்குச் செல்லல், போரினால் ஏற்படும் பாதிப்புக்கள், இடப்பெயர்வுகள் என்பன காணப்படுகின் றன. அர்ப்பணிப்புள்ள பல அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் வீடுவரை சென்று அவர்களைப் பாடசாலைக்கு வர வழைக்க முயற்சித்தபோதும் பெற்றோரின் ஒத்துழைப்புக் கிடைக்காத நிலைமை காணப் படுகின்றது. இதனால் கற்றற் பின்னடை விலிருந்து அவர்களை மீட்பது கடினமாக வுள்ளது. மேலும் மாணவர்கள் தமது கல்வியை பூரணப்படுத்துவது பாடசாலையி லிருந்து இடைவிலகிச் (Drop outs) செல்கின்ற நிலைமையும் பிள்ளைகளின் கல்வி அடைவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் எழுத வாசிக்கத் தெரியாத பலர் சமூகத்தில் உருவா கின்றனர். இத்தகையவர்கள் எதிர்கால வாழ்க்கைச் சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையை அடை கின்றனர்.

இத்தகையவர்களைப் பாடசாலைக்கு வரவழைத்து சிறந்த கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சும், அரசசார் பற்ற நிறுவனங்களும் பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கின்றன. மகிழ்ச்சியான கற்றல் சூழல், இலகுவான, எளிமையான கற்றல் சந்தர்ப்பங்கள், திறந்த பாடசாலை முறைமை கள் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்

படுகின்றன. எனினும் பாடசாலைக்கு மாணவர்களின் தொடர்ச்சியான வரவைப் பேணுவதற்கும் பாடசாலையிலிருந்து இடை விலகியவர்களை மீண்டும் பாடசாலைக்குச் சேர்ப்பதிலும் சமூகத்தின் பங்களிப்பு முக்கிய மானதாகும். இந்த வகையில் குறித்த பிரதேச கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத் தர்கள், பொதுச் சுகதாரப் பரிசோதகர், மருத்துவ மாதுக்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள், மதகுருமார்கள், நலன்விரும் பிகள் ஆகியோரின் பங்களிப்புக்கள் தேவையா கவுள்ளன. இவர்களால் பின்வரும் அடிப் படையில் உதவமுடியும்.

1. வரவில் ஒழுங்கீனம் மற்றும் இடைவிலகிய மாணவர்களின் விபரங்களைப் பாட சாலை அதிபர், ஆசிரியர்களினூடாக அறிந்து கொள்ள முடியும்.
2. இத்தகையவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை நாடிவரும் போது பாடசாலைக் கல்வியின் முக்கியத்து வத்தைக் கூறி ஆலோசனை வழங்கி மாண வர்களை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்ப வலியுறுத்தலாம்.
3. இத்தகைய மாணவர்களின் நிலைமை களுக்கு பின்னணிக் காரணிகள் ஏதாவது இருப்பின் அதனைப் போக்க உதவி வழங்க முடியும்.
4. கட்டாயக்கல்வி (5 வயது தொடக்கம் 16 வயது வரை) தொடர்பான சட்ட திட்டங்களை வலியுறுத்திக் கூறுதல்.
5. சிறுவர்கள் வேலைக்குப் பயன்படுத் தப்படுவதைத் தடுப்பதற்கு உதவுதல்.

**மாணவர் நடத்தைகள்**

மாணவர்கள் மத்தியில் காணப்படும் நடத்தைசார் பிரச்சனைகள் பாடசாலை முறைமைக்குப் பெரும் சவாலாக விளங்கு கின்றன. இதன் காரணமாக மாணவர் மத்தியில் கற்றல் நாட்டம் குறைவடை வதுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக் கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நடத்தை சார் பிரச்சினைகளாக சண்டை பிடித்தல், தகாத வார்த்தைப் பிரயோகங்கள், கீழ்ப்படி யாமை, சுத்தமின்மை, ஆளுமைக் குறைவு, நேரம் பிந்திவருதல் என்பன காணப்படு கின்றன.

வீட்டில் குடும்ப அங்கத்தவர்கள் சண்டை பிடிக்கும்போது அல்லது தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கும்போது அதனை அவதானிக்கும் பிள்ளை அதனைப் பாடசாலையிலும் மேற்கொள்ள முற்படு கின்றது.

தினசரி பல்துலக்கல், தினசரி குளித்தல், நகச் சுத்தம், ஒழுங்கான சீருடை, தலைமயிர் சுத்தம், என்பவற்றைப் பேண வைப்பதும் ஆசிரியர்களின் பிரதான கடமை யாகவுள்ளது. எனினும் சமூகத்தின் முழுமை யான பங்களிப்பு மூலமே இத்தகைய நடத் தைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

1) வீட்டிலும் அயற்சூழலிலும் சிறுவர் களுக்கு முன்னால் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் செய்வதைப் பெரியோர் தவிர்த்தல்.
2) பொருத்தமற்ற செயற்பாடுகள் கொண்ட சகபாடிகளுடன் தங்கள் பிள்ளைகள் சேர்வதைக் கட்டுப்படுத்தல்.
3) தங்கள் பிள்ளைகள் சுகாதாரப் பழக்க வழக்கங்களை முறையாகப் பின்பற்று கின்றனரா? எனக் கண்காணித்தல்.
4) கல்வி நிறுவனங்களுக்கு அருகில் மதுபானக் கடைகள் உருவாவதைத் தடுத்தல். இதற்கு உள்ளூராட்சி சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களின் பங் களிப்பு அவசியமாகின்றது.
5) பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் உரிய துறைசார்ந்தோர் ஊடாகப் பாடசாலைகளில் சுகாதார விழிப்புணர் வுக் கருத்தரங்குகளை நடத்துதல்
6) பாடசாலை அயற்பிரதேசங்களில் விளையாட்டு வசதிகள், பொழுது போக்கு வசதிகளை சனசமூக நிலையங் கள் ஊடாக ஏற்படுத்துதல்.

7) பிரதேச நூலகங்களில் வாசிப்பு வசதி களை மேம்படுத்தக்கூடிய வகையில் வசதிகளை அதிகரித்தல்.

8) ஆலயங்களில் நற்சிந்தனைக் கருத்துக்கள் கிரமமான ஒழுங்கில் மேற்கொள்ளப் படுதல்.

9) பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலைமை கள் தொடர்பாக பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் சந்தித்து கலந்துரை யாடல்.

மேற்படி செயற்பாடுகள் மாணவர் களின் நடத்தைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் குப் பெரிதும் உதவியாக அமையக்கூடியன. இதற்கு சமூகத்திறன்கள் உதவுகின்றன. தற்போதைய காலத்தில் பேரனர்த்த முகாமைத்துவம் முக்கியம் பெறுகின்றன.

**பேரனர்த்த முகாமைத்துவம்**

பேரனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்படும் பிரிவினராக பாடசாலை மாணவர்கள் காணப்படுகின்றனர். பல பாடசாலைக் கட்டிடடிங்கள் அழிவுற்றுள் ளன. பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள், மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். பேரனர்த்த முன்னாயத்தச் செயற்பாடுகள் (Pre-Prepredness) பேரனர்த்தங்களின் போது துரிதமாகச் செயற்பட்டு (response) அனர்த்தப் பாதிப்புக் களைக் குறைக்க வேண்டிய வழிமுறைகளைப் பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டி யுள்ளது. இச்செயற்பாடுகளை மேற்கொள் வதற்கு பாடசாலைஅபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர், உள்ளூ ராட்சி அமைப்புக்கள், கிராமசேவையாளர், செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரத்துறையினர், மாவட்ட பேரனர்த்த இணைப்பு நிலையம் என்பவற்றின் பங்களிப்பும் அவசியமா கின்றன.

பாடசாலைகளில் பல்வேறு வளப் பற்றாக்குறைகள், அடிப்படை வசதிகள் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. எனினும் இப்பற்றாக்குறைகளின் ஒரு பகுதி யை மட்டுமே அரசினால் ஈடுசெய்யப் படுகின்றது. எனவே பாடசாலையின் செயற்பாடுகளை சீராக மேற்கொள்வதற்கும் மாணவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்களை முழுமையாக வழங்குவதற்கும் சமூகத்தின் உதவிகள் பெரிதும் எதிர்பார்க் கப்படுகின்றன.

இந்த வகையில் சமுதாயப் பாட சாலை எண்ணக் கரு முக்கியம் பெறுகின்றது. பாடசாலை சமுதாயத்திற்குள்ளும் சமுதாயம் பாடசாலைக்கும் செல்ல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையின் தேவைகளை சமூகமும் சமூகத்தின் தேவை களைப் பாடசாலையும் பரஸ்பரம் இனம் கண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையினதும் சமூகத்தினதும் ஆரோக்கி யமான வளர்ச்சிக்கு இது உதவியாக அமையும்.



# ஆசிரிய வாண்மை விருத்தியூடாக முன்பள்ளிக் கல்வி மேம்பாடு

பா.தனபாலன்
இணைப்பாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

மனித வாழ்க்கைக் காலத்தில் விருத்திப் பருவங்களில் முதன்மையானதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பருவம் முன்பள்ளிப் பிள்ளைப் பருவமாகும். இப்பருவத்தின் முக்கியத்துவம் எமது நாட்டிலும், எமது பிரதேசத்திலும் முழுமையாக உணரப்படவில்லை. குறிப்பாக முன்பள்ளிச் சிறார்களுக்கத் தம்மையே அர்ப்பணித்துச் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர் வாண்மை விருத்தி, பயிற்சி, ஊதியம், நலனோம்பல், தொழில் உத்தரவாதம் தொடர்பாகச் சாதகமான சூழ்நிலைகளும் காணப்படவில்லை.

இவ்வாறான நிலைகளை நீக்கவும் இத்துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை அதாவது தற்போது விருத்தியாக்கும் செயல்முறைகள் சார்பாகப் பல நடவடிக்கைகளை, விழிப்புணர்வூட்டும் செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வகையில் தனியார்களைத் தவிர! எந்த உயர்கல்வி நிறுவனங்களும் சிந்திக்காத - செயற்படுத்தாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 'முன்பள்ளி டிப்ளோமா பாடநெறி' 'ஆறுதல்' அரசசார்பற்ற நிறுவனத்தினூடாக மகளிர் விவகார அமைச்சு, வடமாகாணக் கல்வியமைச்சின் வழிகாட்டலில் இன்று ஆரம்பமாவது வரவேற்கக்கூடியதாகும்.

முன்பள்ளிச் சிறார்கள் தமது உணர்ச்சிகளையும் விருப்பங்களையும், அபிலாசைகளையும் யார் நிறைவேற்றுகின்றார்களோ அவர்களுடன் ஏற்படும் உறவைத்தமதாக்கிக் கொண்டு கற்கின்றார்கள். இதற்கமைய தாய்க்கு அடுத்தபடியாக அன்பு, ஆதரவு, அரவணைப்பு, பாதுகாப்பு, கல்வியை வழங்கும் உயர் வாண்மையாளராக முன்பள்ளி ஆசிரியர்கள் இருக்கவேண்டும்.

தமது கனிவான குரலால் சிறார்களை அழைத்து, அடம்பிடிக்கும் போது பரிவு காட்டி, பொறுமையுடன், சகிப்புத்தன்மையுடன் ஆதரித்து, விளையாடி, மகிழ்ச்சிகரமான புதிய புதிய கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு, தனக்கும் பிள்ளைக்குமான அதி உயர் உறவைக் கட்டியெழுப்பும் மனப்பான்மையை முன்பள்ளி ஆசிரியர் பெற முதலில் முறையான வாண்மைத்துவப் பயிற்சியைப் பெற வேண்டும்.

**சமூகமயமாதல்**

பாலர்களுக்கான கல்வியின் அடிப்படைகள் அனைத்தும் இன்று சமூகமயமாதல் செயன்முறைகளின் விருத்தியினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஆசிரியர்கள் முதலில் சமூகமயமாக வேண்டும். இதற்குச் சரியான வாண்மைத்துவ பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். இப்பயில்வுகளில் மனப்பாங்கு மாற்றமே முதன்மையாக நோக்கப்படுகின்றது. முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகமயமாகி சமூகத்துடனும், பெற்றோர்களுடனும், நிர்வாகத்துடனும் மேலும் ஊர்ப் பெரியவர்கள், அரசியல்வாதிகள், வெளிநாட்டவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் சுமுகமான தொடர்புகளைப் பேணுகின்றபோது பல்வேறு உதவிகளைப் பெறமுடியும். தமது பயிற்சி நெறிகளுக்கான செலவுகளை இவ்வாறானவர்கள், கோயில் நிர்வாகத்தினர், சமூக நலன் விரும்பிகளிடமிருந்து பெறுவதற்கான தேர்ச்சிகளை விருத்தியாக்கிக் கொள்ளவேண்டும். எமது சமூகத்தவர்களும், பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் முன்பள்ளி ஆசிரியர் அபிவிருத்தி, முன்பள்ளி கல்வி விருத்தி தொடர்பாக மிகக்கூடுதல் கவனம் எடுக்கவேண்டும். அதற்கான வளங்களை வழங்கவேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள் இத்துறைசார்ந்த அபிவிருத்திக்க நிறைவான பங்களிப்பைச் செய்யும் சந்தர்ப்பங்கள் இருந்தும் உதவுபவர்கள் மிகக்குறை

வாகவே காணப்படுகின்றனர். தகுதியுடைய வறுமையான முன்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சிக்கால செலவுகளுக்கான ஆதரவுகளை இவர்கள் தாமாக முன்வந்து உதவுகின்ற போது முன்பள்ளி ஆசிரியர்கள் வாண்மையாளராக உயர்ந்து எம் எதிர்கால சந்ததிகளான இன்றைய சிறார்களுக்கு சிறந்த முன்பள்ளிக் கல்வியை வழங்க முடியும்.

**பாலர் ஆசிரியர் ஒரு வாண்மையாளர்**

பாலர், முன்பள்ளி ஆசிரியர்களின் பணி வேறுயாராலும் மேற்கொள்ள முடியாத வாண்மையாகும். இங்கு வாண்மை என்பது உயர் தொழிலையும் - அந்தஸ்தையும் குறிக்கும். வாண்மைத் தொழிலாளர் துறைசார் நிபுணத்துவப் பயிற்சியைப் பெற்றிருப்பதுடன், ஓர் ஒழுக்கக்கோவைக்கு உட்பட்டுத் தேவையானபோது அர்ப்பண சேவையாற்ற வேண்டும். தமது தொழில்சார் இடங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், தம் தொழில்சார் அமைப்புக்களைக் கட்டியெழுப்பும் திறன் கொண்டவர்களே தொழில் வாண்மையினர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பாலர் ஆசிரியர்கள் வாண்மையாளராக உள்ளனர். இவர்கள் உயர் ஊதியம் பெறவும், தொழில்சார் அறிவைத் தொடர்ச்சியாகப் பெருக்கவும், தொழில் தகைமைகளை உயர்த்தவும் உரிமையுண்டு. அத்தோடு தமது கடமைகளைப் பொறுப்பேற்று வகை கூறுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

இங்கு வகை கூறல் என்பது பொறுப்பேற்றலாகும். முன்பள்ளி ஆசிரியர் தன் பொறுப்புக்களை ஏற்று அதற்கான விளைவுகளை உணரும் தன்மை. விலகிக்கொள்ள முடியாத மன உணர்வு பெற்ற சமூக மாற்றம், நீதி, நியாய, சமூக எதிர்பார்ப்புக்கள் என்பவற்றிற்கமையத் தன்னைத்தயார் படுத்தல், கலாசாரப் பெறுமானங்கள், செயற்திறன்கள் ஆகியவற்றைப் பெறல் ஆகிய பண்புகளையுடையவரே வாண்மையுள்ள முன்பள்ளி ஆசிரியராகக் கொள்ளப்படுவார். இதற்கு முறைமைப்படுத்தப்பட்ட பயிற்சி அவசியம். அத்துடன் பாலர் ஆசிரியர் நடிபங்குகள் பின்வருமாறு அமையவேண்டும்.

- அன்பானவர், வளர்ப்புத்தாய், அரவணைப்பாளர், ஆலோசனை கூறுபவர்.
- அழகியலுணர்வுள்ள கலைஞர், மகிழ்ச்சியூட்டுபவர், கல்வியூட்டுபவர்.
- புதுமை படைப்பவர், ஆளுமையாளர், பாதுகாப்பாளர், சமூகமுன்னோடி.
- நன்மனிதர், தோழர், சமூகத்தலைவர், துணிவாளர், கணிப்பீட்டாளர்.
- அபிவிருத்தி முகாமையாளர், விருப்பு நோக்கிய நடுவர், இணைப்பாளர்.
- சமூகமாற்ற முதல்வர், தொழிற்சங்கவாதி, விழிப்புணர்வாளர், முகாமையாளர்.

இவ்வகையில் தற்போது பாரம்பரிய பாலர் கல்வி முறைகளுடன், நவீன ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட பல விடயங்கள் வெளியாகி வருகின்றன. பேராசிரியர் பினைனா, பேராசிரியர் யுஸ்ரின் ஆகியோர் பல வருட ஆய்வுகளை 'சர்வதேச கற்றல் வசீகரித்தல்" நிலையத்தில் மேற்கொண்டனர். இதன் விளைவாக நவீன முன்பள்ளி ஆசிரியர் வாண்மைத்துவ வகிபங்கில் விருப்பு நோக்குடனான நடுவர் என்ற பரிமாணத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்நிலையை எமது முன்பள்ளி ஆசிரிர்கள் பெற நவீன பயில்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**விருப்பு நோக்குடனான நடுவர்**

பாலர் பாடசாலைப் பாலர்களைப் பயிற்றுவிக்க நிறைவான அணுகுமுறை ஒன்றாக இம்முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இது பாலர்களின் மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகளை உருவாக்கும் போது பிள்ளையுடன் விருப்பு நோக்குள்ள நடுவராக இருந்து தலையிடுதல் அதாவது சிறார்களின் கற்றல் வாய்ப்புக்களை பல்வேறு சிறுவர் கவர்ச்சி முறைமைகளினூடாக ஏற்படுத்தி அவர்களுடன் இணைந்து கற்றல் அனுபவங்களை உருவாக்குதல் என்பதாகும்.

ஒவ்வொரு பிள்ளையும் ஒரு தேவையையும் ஓர் உரிமையையும் கொண்டுள்ளது. பிள்ளைகளான பாலர்களின் குடும்பம், கலா

சாரம், சூழல், அதனைச் சூழ்ந்துள்ள உண்மை நிலைகளைப் பல்வேறு ஊடகங்களினூடாக அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். இற்றினூடாக அவர்களது தேவைகளையும், உரிமைகளையும் பெறுவதற்கு வழிகாட்டி கற்றலை மேற்கொள்ள முன்பள்ளி ஆசிரியர் கள் விருப்பு நோக்குடனான நடுவர் என்ற வகிபாகத்தினூடாகச் செயலாற்ற வேண்டும்.

**விருப்பமான கல்வி**

இது முன்பள்ளி ஆசிரியர் பிள்ளை களோடு தொடர்புகொண்டு பிள்ளையின் விருப்பத்திற்கு ஏற்றவாறு விளையாட்டு அழகியல் கல்வி மூலமான கற்றல் நோக்கை திசை திருப்ப பிள்ளையினதும் ஆசிரியரினதும் இடைவினைகள் சங்கமாகிப் பரிமாறல் நிகழ்கின்றது. அப்போது முன்பள்ளி ஆசிரியர் பிள்ளைக்குச் சாதகமான விருப்பு நோக்கு டைய நடுவராக இருந்து தன் பிரதி விம்பங் களை வெளிப்படுத்துவார். அப்போது பிள்ளைகள் சாதகமான மனவெழுச்சிகளை வெளியிடுவர்.

இம்முறைமையில் எவ்வளவு வளங் கள் இருப்பினும் முன்பள்ளி ஆசிரியரே முதன்மைவளம் என்பதுடன் சிறார்களையும் ஆசிரியர்களையும் இதய பூர்வமாக ஒருங் கிணைத்து கற்றலின் விளைபயனை உயர் வடையச் செய்கின்றது. இதுவே நவீன முன்பள்ளிக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை யாகவுள்ளது. விளைவாக மாறும் சமூகத்தை எதிர்நோக்கும் பாலர்களின் பார்வையில் இது மேலதிக ஊக்கத்தை ஏற்படுத்துகின்றது. கட்டுருவாக்க அறிதல் பிரதிபலிப்புக்கு அடிப் படைத் தளமிடுகின்றது. இவ்வாறான நவீன கற்றல் - கற்பித்தல் முறையியல்கள் ஆசிரியர் வாண்மை பயிற்சிக் கலைத்திட்டத்தில் உள்ள டக்கப்பட்டு பல்வேறு களப்பயில்வுக்கான வழிகாட்டல்கள் இயம்பப்பட வேண்டும்.

முன்பள்ளிச் சிறார்களின் எதிர்காலம் ஆசிரிய வாண்மைப் பயிற்சியை ஒழுங்கமைப் பதிலேயே தங்கியுள்ளது என்ற வகையில் இப்பயிற்சியை வழங்குகின்ற அமைப்புக்கள் திட்டமிடலாளர்கள், வளவாளர்கள் மிகுந்த அக்கறையுடன் எந்த வித எதிர்பார்ப்புக்களும் இல்லாது எம் எதிர்கால சந்ததிகளின் அபிவி ருத்தி நோக்கித் தம்மை அர்ப்பணிக்க வேண் டும். பயிற்சி பெற்றவர்களுக்குத் தொழில் உத்தரவாதம் வழங்கும் நடைமுறைகள் ஒருங்கிணைக்கப்படுவதுடன் முறையான ஊதியம் வழங்க செயற்றிட்டங்களும் முன்னெ டுக்கப்படவேண்டும். இல்லையேல் தற் போதுஉள்ளது போல் பயிற்சி பெறாதவர்கள் பலர் இருக்கும் நிலை ஏற்படும். அதாவது பயிற்சி பெற்றவர்கள் தொழில் திருப்தி பெறாமல் பதவியை விட்டு விலக புதியவர்கள் தொடர்ச்சியாக வரும் நிலை தொடரும். இது இத்துறையைப் பெரிதும் பாதிக்கும் காரணி யாகவுள்ளது. இதை உணர்ந்து முறையாகப் பரவலாக முன்பள்ளி ஆசிரியர்களைத் தெரிவு செய்து தூரநோக்கடன், தீர்க்க தரிசனத்துடன் முன்பள்ளி டிப்ளோமா பாடநெறி தொடங்கப் படுவதுடன எதிர்காலம் நோக்கிய உறுதியான தடத்தின் ஆரம்பமாக இன்றைய நாள் விளங்கட்டும். சின்னஞ்சிறு பாலர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான விடிவு நாளாக இன்றைய நாள் விழிப்பூட்டு வதாக!



# உள ஆற்றல் திறனான நுண்மதி

திருமதி ஞா.கணேசநாதன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

நல்ல உளநலனும், ஆற்றலும் உள்ள ஒருவர் அதிக நுண்ணறிவு திறன் பெற்றவராகக் காணப்படுகின்றார். இவர் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கிறார். இந் நுண்ணறிவு (Intelligence) அறிவின் சக்தியாக உள்ளது. உளச்சார்பு, விவேகம், உள ஆற்றல், இத்துறையின் செயன்முறைகள், சமூகத்துடன் இயைந்து சென்று சவால்களுக்கு முகம் கொடுத்து, நிலமைகளை விளங்கி வினைத் திறன்களை உச்ச அளவாக்கல் என்பதாக வுள்ளது. மனிதர்களின் குவி சிந்தனையின் கூறாகவும் இது உள்ளது.

**சில வரைவிலக்கணங்கள்**

1. அல்பிரட் பீனே (Alfred Binet 1857 - 1911): (1878) புரிந்துகொள்ளுதல், நியாயம் காணல், புதுமைபுனைதல், தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்தல், நடத்தைக் குறைபாடுகளைத் தானே உணர்தல், தீர்மானம் மேற் கொள்ளல் என்பவற்றின் ஒட்டுமொத்தப் பெறுமானமே நுண்மதியாகும்.
2. ஜீன்பியாஜே (Jean Piaget 1896 -1980 : 1940) உயிரிலையும், சூழலையும் இணைக்கும் அறிவமைப்பாக நுண்மதி யுள்ளது. அது சூழலுடன் கொள்ளும் இடைத்தாக்கத்தின் விளைவாகவு முள்ளது.
3. வெஷ்லர் (D. Wechsler 1896 - 1981) : (1976) தனியாள் ஒருவர் தன்னைச் சூழவுள்ள உலகினை விளங்கிக் கொள் ளவும் சவால்களை எதிர்நோக்கவும் கொண்டுள்ள ஆர்வமே நுண்மதியாகும்.
4. சு. ஸ்டார்பர்க் (R. Sternberg 1949 - 1982) : (1978) கடினமான (difficult), சிக்கலான (Complex), புதுமையான (Novel), சமூகப்பயனுள்ள (Social Valuable) உயர்நிலைப்பட்ட செயல் களில் (Abstract) தொடங்கி மனவெ ழுச்சிக் குறுக்கீடுகளுக்கிடையிலும் அவைகளைத் தொடர்ந்து நிகழ்த்த (Persistence) ஒருவனுக்கு உதவும் ஆற்றல்.

நுண்ணறிவானது சூழலுக்குத் தகுந்ததாக நடத்தைகளைப் பொருத்தப்பாடுடைய தாக்கல், கற்கும்திறன், கருத்தியல் சிந்தனைத் திறன் என்ற வகையில் நோக்கப்படுகின்றது. தேஸ்டன் என்ற அறிஞர் பின்வரும் 7 காரணிக ளினூடாக நுண்மதியாற்றலை இனம் கண்டார். இடம் சார்ந்த புலக்காட்சி, புலக் காட்சித்திறன், சொற்றிறன், எண்ணாற்றல், நினைவாற்றல், சொல்வேகம், காரணங் காணல் என்பவாகும்.

**கில்பேட்டின் நுண்ணறிவுக் கட்டமைப்பு**
**(Guilford's Structure of Intellect)**

அமெரிக்கா கலிபோர்னிய பல்கலைக் கழக உளவியல் ஆய்வுகூடத்தில் மனித உளச் செயல்களைப் பகுப்பாய்வு செய்து 1966 ஆம் ஆண்டு கீழ்வரும் நுண்ணறிவுக் கட்ட மைப்பை கில்பேட் (J.P. Guklford 1897 - 1987) உருவாக்கினார். இவ்வமைப்பு மனித மனம் முப்பரிமாணங்களில் செயற்படுகின்றது என்றும், அவ்வாறு செயல்படும் நிலைகளுக்கு ஏற்ப வெவ்வேறான உளத்திறன்கள் வெளிப்

படுகின்றன என்றும் தெரிவிக்கின்றார். ஒவ்வொரு உளத்திறனிலும் ஒரு குறிப்பிட்ட உளச்செயல் (Process), ஒரு பொருள் (Content), செயற்பாட்டு விளைவு (Product) ஏற்படுத்துவதை நிரூபித்துக் காட்டுகின்றார்.

1. பொருள் - இதனுள் உருவம் (Figural), குறியீடு (Symbolic), சொல்பொருள் (Semantic), நடத்தை (behavioural) என்பன அடங்கும்.
2. செயல் - இதில் அறிதல் (Cognition) நினைவு கூர்தல் (Memory), குவிசிந்தனை (Convergent Thinking), விரிசிந்தனை (Divergent Thinking), மதிப்பீடு (Evaluatkion) என்பன அடங்கும்.
3. விளைவுகள் - இதில் அலகுகள் (Units), வகைகள் (Classes), தொடர்புகள் (Relations), ஒருங்கிணைப்புக்கள் (Systems), மாற்றியமைப்புக்கள் (Transformation), அனுமானங்கள் (Implications) என்பன அடங்குகின்றன.

இவ்வகையில் மொத்தம் 4 X 5 X 6 = 120 நுண்ணறிவுக் கூறுகளை கில்போட் சுட்டிக் காட்டி நுண்ணறிவை முழுமையாக மதிப்பிட வழிகாட்டுகின்றார். இவரது ஆய்வுகள் ஆசிரியர்கள், மாணவர் களின் திறன்களையறிந்து கணிப்பிடவும், உயர்கல்வி, தொழில் வழிகாட்டல்களுக்கும் பெரிதும் உதவுகின்றன.



**நுண்ணறிவுக் கூறுகளின் விளக்கம்**

**1. செயல்கள்**

I. அறிதல்: கொடுத்த விவரங்களிலிருந்து கேட்கப்பட்டதை உடனடியாகக் கண்டுபிடித்தல், பொருள் உணர்தல் ஆகியவை.

II. நினைவு கூர்தல்: கற்ற செயல்களை நினைவில் இருத்தித் தேவைப்படும் போது வெளிக்கொணர்தல்.

III. குவிசிந்தனை : கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து பொதுவாக எதிர் பார்க்கப்படும் சிறந்த விளைவு அல்லது பயனைக் கண்டறிதல்.

IV. விரிசிந்தனை : கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் புதுமையான கோணத்தில் உற்றுநோக்கி அல்லது மாற்று முறைகளில் சிந்தித்திப் புதிய பயன் பாடுகளை, புதிய அணுகுமுறைகளைத் தோற்றுவித்தல்.

V. மதிப்பிடுதல் கொடுக்கப்பட்டுள்ள விபரம் எந்த அளவு பொருத்தமானது, சரியானது, போதுமானது, விரும்பத் தக்கது என்ற முடிவுக்கு வருதல்.

**2. பொருள்**

I. உருவம் சார்ந்த: கையாளப்படும் விபரம் அல்லது செய்தி உருவங்கள், படங்கள் போன்றவற்றின் அளவு, வண்ணம் ஆகியவைகளை தெரிவிப்பதாக அமைந் திருத்தல். எது பின்னணியாக அமையும், எது உருவமாக அமையும் என்ற கோட் பாடும் இதில் உள்ளங்கும். இங்கு பல்வேறு புலன் உணர்வுகள் இடம் பெறக்கூடும்.

II. குறியீடு சார்ந்த : இதில் எழுத்துக்கள், எண்கள், மரபுவழியில் உபயோகிக்கப்படும் குறியீடுகள், இசைக்குறியீடுகள், சொற்கள் போன்றவை அடங்கும்.

III. சொல்பொருள் சார்ந்த: பொதுவாக உபயோகிக்கப்படும் சொற்களுக்கான பொருள், படங்கள் உணத்தும்செய்திகள் போன்றவை இதில் அடங்கும்.

IV. நடத்தை சார்ந்த : மனித இடைவினை களை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அமைந்த நம்முடைய அல்லது பிறரது மனப்பான்மைகள், விருப்பங்கள், சிந்தனை, புலக்காட்சி, மனவுணர்வு நிலைபோன்ற கூறுகளை உள்ளடக்கிய சொல்சாரா (Non - Verbal) விவரங்களே இங்கு கையாளப்படும்.

**3. விளைவுகள்**

I. அலகுகள் : தனித்த விவரங்களை ஒன்றி ணைத்து பொருள் காணுதல் (அதாவது முழுமைக்காட்சிக் கோட்பாட்டு வழியில் செயல்படுதல்).

II. வகைகள் : பொருட்களை அவைகளினி டையே காணப்படும் பொதுப்பண்பு களின் அடிப்படையில் வகைப்படுத்தல்.

III. தொடர்புகள்: கொடுக்கப்பட்ட மாறிகளுக்கிடையேயான தொடர்பை யூகித்தறிதல்.

IV. ஒருங்கமைப்புகள்: கொடுத்த விபரங் களை அல்லது செய்திகளை ஒருங்கி ணைத்து, ஒரு அமைப்பு அல்லது வடிவத்தை ஏற்படுத்துதல்.

V. மாற்றியமைப்புக்கள் : கொடுத்த விவரங் களை அல்லது செய்திகளை வேறு வகையில் வரையறுத்தல், மாற்றிய மைத்தல்.

VI. அனுமானங்கள் : கொடுத்த விவரங்களி லிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடியவை, தோன்றக்கூடிய விளைவுகள், பெறக் கூடிய கணிப்புக்கள் ஆகியவைகள் இதில் அடங்கும்.

**நுண்ணறிவை அளவிடுதல்**

**(Measurement of Intelligence)**

இன்றைய விஞ்ஞான உலகில் கணினி யின் உதவியுடன் நுண்மதியை அளவிட பல

முறையியல்கள் உள்ளன. இவை அனைத்துக்கும் நுண்மதிச் சோதனைக்ளின் தந்தை என அழைக்கப்படும் அல்பிரட் பீனே அவர்களால் 1904ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்ட நுண்ணறிவை அளத்தல் தொடர்பான பீனே நுண்ணறிவு அளவுச் சட்டமே (30 வினா கொண்ட பரீட்சை) அடிப்படையாகவுள்ளது. தொடர்ந்து பீனேயுடன், ஸ்ரான்போட் (Binet, Stanford) என்ற அறிஞரும் இணைந்து இதனை மேலும் சீர்திருத்தினர். உளத்திறன்கள் வயது அடிப்படையின் விருத்தியாதல் தொடர்பாக மேற்கொள்ளல் ஆய்வுகள் மேலும் இத்துறையை அபிவிருத்தி செய்தன.

இங்கு உளவயது என்பது தனியாள் ஒருவருடைய ஆற்றல் மட்டமாகும். இது ஒரு சராசரி மனிதனால் தெரிவிக்கப்பட்ட ஆற்றலை அடையும் வயதைக் குறிக்கும். இதற்குப் பல்வேறு வகையான பரீட்சை முறைகள் உண்டு. இப்பரீட்சைகள் மூலம் ஒருவருடைய உள வயதைக் கணிக்கலாம்.

### நுண்ணறிவை ஈவு (Intelligence Quotient)

வில்லியம் ஸ்ரேன் என்ற ஜேர்மனிய உளவியலாளர் இவ் எண்ணக்கரு விருத்தி தொடர்பாக முக்கிய பங்கு வகித்தார்.

இங்கு 100 ஆல் பெருக்குவதற்குக் காரணம் ஈவு பின்னமாக இராமல் முழு எண்ணாக, இருப்பதற்கே ஆகும்.

### உலகளாவிய ரீதியில் நுண்ணறிவு ஈவு புரம்பல்

1. 140 மேற்பட்டோர்
   உயர்தொழில் தகமையுடையோர், சிவில் சேவையாளர்கள், விஞ்ஞானிகள்.
2. 130 மேற்பட்டோர்
   பொறியியலாளர், மருத்துவர், பேராசிரியர், சட்டத்தரணிகள், கணக்காளர்கள்.
3. 120 மேற்பட்டோர்
   பாடசாலை ஆசிரியர், முகாமையாளர்கள், சுருக்கெழுத்தாளர், மருத்துவ தாதிகள்.
4. 110 மேற்பட்டோர்
   தொலைபேசி இயக்குநர், எழுதுவினைஞர், விற்பனையாளர், மின்னிணைப்பாளர்.
5. 100 மேற்பட்டோர்
   இயந்திர இயக்குநர், வியாபாரிகள், உலோக வேலை. ஒட்டுவேலைகள், வர்ணம் புசுவர்.
6. 100 மேற்பட்டோர்
   தச்சு வேலை செய்பவர்கள், சாரதிகள், சமையல்காரார்கள்.

நுண்ணறிவு பரவல்




7. 90 மேற்பட்டோர்
   தோட்டப் பராமரிப்பாளர், சுரங்கத் தொழிலாளர், தொழிலாளர்கள்.

இது பொது நியதிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவாகவுள்ளதே தவிர இதில் வேறுபாடுகள் உண்டு. தற்போது நுண்ணறிவுச் சோதனைகள் சொல்சார், சொல்சாரா, வினையாற்றல் என்ற வகையில் உள்ளன. எமது நாட்டில் கடந்த 5 தசாப்தங்களாக பல்வேறுமட்ட நுண்ணறிவுச்

சோதனைகள் பல தொழில் துறைகளுக்கும் நடாத்தப்பட்டு வருகின்றன. இலங்கைத் தேசிய கல்விச்சங்கம் (NESC) நுண்மதிச் சோதனைகளை முதலில் அறிமுகம் செய்தது. *1956*இல் L.L.W வேதநாயகம் சொல்சாரா நுண்ணறிவுச் சோதனையை முதன்முதல் உருவாக்கினார். *1964*இல் S. K மெத்தானந்த மொழி, கணித நுண்ணறிவுச் சோதனையை உருவாக்கினார். தற்போது பலவகை நுண்ண றிவுச் சோதனைகள் இலங்கையில் பின்பற்றப் படுகின்றன.

**NESC நுண்ணறிவுச் சோதனைகள் உருப்படிகள் சில**

உப அளவுச்சட்டம் - *1:* இதில் *35* உருப்படிகள் உள்ளன. ஞாபகம், நியாயம் காணல், தீர்மானம் எடுத்தல், விளக்கம் என்பவற்றைச் சோதிக்கின்றது.

உ-ம் : *(5)* வசந்தி, சிம்ரனிலும் நிறமானவள், ஆனால் ஜோதிகாவிலும் கருமை யானவள். இவர்களுள் மிகவும் நிறமானவள் யார்?

உ - ம் : *(9)* ஒரு நகரத்தில் பாடசா லைக்குக் கிழக்கே கோவில் உள்ளது. கோவிலுக்கு எத்திசையில் பாடசாலை உள்ளது ?

**பீனே அளவுச் சட்டம் வயது - 02**

1. மூன்று துளைவடிவப் பலகை - ஒரு ஐந்து அங்குல வடிவப்பலகையில் துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. ஒரு பிள்ளைக்கு இந்த *3* வெட்டுத் துண்டு களும் ஒரு சதுரம், ஒரு வட்டம், ஒரு முக்கோணம் என்பன காட்டப்படு கின்றன. அந்தப்பிள்ளையை வடிவப் பலகையில் அவற்றைப் பொருத்தும் படி கேட்டல்.
2. கடதாசிப் பொம்மை ஒன்றில் உடலின் பல்வேறு பாகங்களை அடையாளம் காணும்படி கேட்டல்.

இவ்வாறாக நுண்மதி பன்முக நுண்மதி எனத் தற்போது விரிவடைகின்றது.



# பாடசாலை ஆதார முகாமைத்துவ விருத்தியும் மேற்பார்வையும்

திருமதி அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.

பாடசாலை ஆதார முகாமைத்துவத்தில் முழுத்தர மேம்பாடு (Total Quality Development) ஏற்பட வேண்டுமாயின் தரவிருத்தியிலும் (Quality Development) மதிப்பீட்டிலும் (Evaluation) முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். இந்தச் செயல்முறை (Process) சிறப்பாக நடைபெற பாடசாலைகளில் பண்புசார் முகாமைத்துவத்தை முன்னெடுக்கவல்ல தகைமைத்திறன் கொண்ட அதிபர்கள் பணியாற்றுதல் வேண்டும்.

பாடசாலையின் மனிதவள உள்ளீடுகளாக அமையும் அதிபர், ஆசிரியர், கல்விசார் கல்விசாரா ஆளணியினர் பெற்றிருக்க வேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆகவே முழுத்தர முகாமைத்துவம் செய்யப்படும் பாடசாலை ஒன்றில் இடம்பெறும் வகுப்பறைக் கற்றல் செயலொழுங்கானது மாணவ மையமான தேர்ச்சி கற்றலுக்குரிய கவினிலையுடையதாகவும் இற்றைப்படுத்தி தேர்ச்சிகளைக் கொண்ட ஆளணியினரால் ஆளகை செய்யப்படுவதாக அமைதல் வேண்டும்.

**கல்விப் பண்புத்தரம்**

மாணவர்கள் சம்பந்தமான தேர்ச்சி விருத்தியாக அமைவதால் விருத்தியாக்கப்பட வேண்டிய தேர்ச்சிகளை இனம்கண்டு அவை விருத்தியடையும் விதமாகப் பாடவிதானச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஏனெனில் வெற்றியானது உள்ளீட்டுச் செயன்முறையின் வெற்றியிலேயே தங்கியுள்ளது. எனவே மானிட, பௌதீக உள்ளீடுகள் யாவும் குறித்த தரங்களைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

தற்போது கல்விப் பண்புசார் உள்ளீடுகளை வழங்குவது சம்பந்தமான தீர்மானம் எடுத்தலும், நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தேவைப்படும் உள்ளீடு (inputs) வாங்குதல், மாணவர்களின் கல்வி பண்புசார் விருத்தியை நோக்கமாகக் கொண்டு உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகள் (Higher order process) இற்கான செயற்றிட்டம் மற்றும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தப் பாடசாலைகளிற்கு நேரடியாக ESDFP திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கல்வி விருத்திக்கான பிரவேசக் கட்டமைப்பு மற்றும் வேலைத் திட்டங்கள் (ESDFP) Education Section Development Frame Work and Programme இன் கீழ் சகல பாடசாலைகளிலும் ஐந்தாண்டுகால வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் அமுல்பபடுத்தும் திட்டம் (Annual Implementation Plan) தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலைக்கேற்ற வகையில் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தை (AIP) தயாரித்து மனவிருப்பத்துடன் திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தும்போது பாடசாலை தானாக அபிவிருத்தியடையும்.

கல்விப்பண்புசார் உள்ளீடு மற்றும் உயர் மட்ட கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ESDFP திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதும் கற்றற் செயற்பாடுகளின்போது மாணவர்களினாலும் கற்பித்தற் செயற்பாடுகளின்போது ஆசிரியர்களாலும் கல்விப்பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் உள்ளீடுகளை பொருத்தமாகக் கொள்வனவுசெய்து பயன்படுத்தாமையும் பயனுறுதிமிக்க SE முறைக் கற்பித்தலை முழுமையாக முன்னெடுக்க பாடசாலைகள் முயலாததன்மையும் பின்னடைவுகளாகக் காணப்படுகின்றன.

அத்துடன் கற்றற் செயற்பாடுகளின் போது மாணவர்களிடம் உயர் மட்டத்திலான திறமைகள் மற்றும் பலத்தை விருத்திசெய்ய தேவைப்படும் திட்டங்கள் செயற்றிட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்த தேவைப்படும் சேவைகள், செயற்பாடுகளிற்காக மாணவரை அடிப்படையாகக் கொண்ட உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகள் (Student based Higher - Order Process) என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி பாடரீதியான மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் பாடவிதான இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், மாணவர் நலன்புரித்திட்டங்கள், மாணவர் தலைமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்கள், தொழில் வழிகாட்டல் மற்றும் மாணவர் ஆலோசனை வேலைத்திட்டம் மாணவர் படைப்பாற்றல் செயற்றிட்டம், விசேட பாடங்கள் தொடர்பான வெளிவாரி நிபுணத்துவ சேவை, விசேட கல்வித் தேவை கொண்ட மாணவர்களுக்கான விசேட வேலைத்திட்டங்கள் என்பவற்றையும் பொருத்தமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் சகல மாணவர்களதும் தகைமைத் திறன்களை விருத்தி செய்யவேண்டும். மாணவர்களின் உயர்மட்டத்திலான திறமைகள் மற்றும் பலத்தை விருத்தி செய்ய ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக அவர்களுக்குத் தேவைப்படும் செயற்றிட்டங்களை அமுல்படுத்த வேண்டிய சேவைகள் மற்றும் செயற்பாடுகளிற்கும் ஆசிரியர் மற்றும் முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்மட்டச் செயற்பாடுகள் (Teacher and Managerial Based Higher order Process) என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர் தகைமைத்திறன்**

ஒவ்வொரு ஆசிரியர்களிடத்தும் உள்ள பிரச்சினைகள் தனித்தனியாக இனங்காணப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களிடமுள்ள ஆற்றல்களும் மேலும் வளப்படுத்த நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொண்டு அவர்களின் தகைமைத் திறன்களை விருத்தி செய்தல் வேண்டும்.

தனது பாடசாலை அபிவிருத்தியில் மிகவும் அக்கறை கொண்ட அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள் தாமாகவே விரும்பி தரவட்டங்களை அடிக்கடி நடத்தி பாடசாலையின் பாதுகாப்பு, பாடசாலையின் உட்புற வெளிப்புற கவின்நிலை, மாணவர் ஒழுக்கம், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள், மாணவர், கல்வி அடைவு, மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றார் உறவு என்பன பற்றி தேவைக்கேற்ற விடயங்களில் ஆராய்ந்து மேம்படுத்த முனைவர்.

பாடசாலைமட்ட பண்புசார் முகாமைத்துவத்தில் தரவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றால் மட்டும் போதாது. கல்வியின் பண்புசார் விருத்தியை உறுதி செய்யும் வகையில் உள்ளக

மதிப்பீட்டிலும், வெளிவாரி மதிப்பீட்டிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். இன்று கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினூடாக கல்வியின் பண்புசார் விருத்தியை உறுதி செய்யும் வெளிவாரி மதிப்பீட்டிற்கான வழிகாட்டி என இரு வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. கல்வித்துறையில் தற்போது மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது பாடசாலையின் சுயமதிப்பீடாகும். கல்வி முறைமையில் பண்புசார் தன்மையை உறதிப்படுத்திக் கொள்ளத் தமது பலம் மற்றும் பலவீனங்களை அறிந்துகொள்ள வேண்டும். பலத்தை மேலும் விருத்திசெய்து கொள்ளவும் பலவீனங்களை நீக்கவும் முறையான சுயமதிப்பீடுகள் உதவுகின்றன. (எனவே முறையாக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட உள்ளக மதிப்பீடு செய்வதன் மூலம் பாடசாலை, பாடசாலையினூடாகவே அபிவிருத்தியடைய வாய்ப்புண்டாகும்). இவ் உள்ளக மதிப்பீட்டு வழிகாட்டியில் அதிபரின் தகைமைத் திறன் மதிப்பீடு, அதிபரின் சுயமதிப்பீடு ஆசிரியர் தகைமைத்திறன் மதிப்பீடு, ஆசிரியர் சுயமதிப்பீடு, அபிவிருத்திக் கலந்துரையாடல் மூலமான மதிப்பீடு, பாடசாலை தொடர்பான பொது மதிப்பீடு, மதிப்பீட்டுக் கருவிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தரக்கணிப்பீடு**

எல்லாவற்றுக்கம் மேலாக செயலாற்றுகைத் தரக்கணிப்பீட்டினைப் பெறுமதியான ஒரு கருவியாக யாவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள் தத்தமது பொறுப்புக்களையும், பணிகளையும் சரியாக விளங்கி செயலாற்றுகைத் தரக்கணிப்பீட்டில் நிறைவாக ஒப்பந்தம் கைச்சாத்திட்டு பணிகளை நிறைவேற்றி விளைவுகளைக் காண்பித்து படிவத்தைப் பூரணப் படுத்தவேண்டும். ஒவ்வொரு பணியாளர்களும் செயலாற்றுகைத் தரக்கணிப்பிற்கு மதிப்பளித்து பணி செய்தால் அபிவிருத்தி என்பது எம்மை அதிசயிக்க வைக்கும் ஒன்றாக விளங்கும்.

கல்விச்சமூகம் காலத்தோடு வேகமாக மாறிப் புதியனவற்றை உடனே நடைமுறைப்படுத்தி பூரண வெற்றிகண்டு ஆனந்தமடைபவர்களாக மாறவேண்டும்.

ஒவ்வொரு விடயப்பரப்பும் வாழ்நாள் பூராகவும் கற்றாலும்கூட கற்றுமுடிக்க முடியாத அளவிற்கு வியாபித்துள்ளது. உண்மையில் கல்வியை ஒருவர் மற்றவர்களிற்கு வழங்கமுடியாது. ஒவ்வொருவரும் தானாகத் தேடிப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்தப்படல் வேண்டும். நூலகப் பயன்பாடு க.பொ.த (உ.த) வகுப்பிற்கு மிகவும் அவசியமானது என்று காலஞ்சென்ற பேராசிரியர் திரு.அருட்பிரகாசம் குறிப்பிட்டுள்ளார். இன்றைய கற்றல் முறைமையில் தேடல் என்பது எல்லாத் தரங்களிற்கும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று பாடசாலைகளில் கணனிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தகவல் தொழில்நுட்பக் கருவிகள் பல உள்ளன. இவற்றை உச்சமாக பயன்படுத்துவதை உள்ளக மதிப்பீட்டுக் குழுவினர் உறுதி செய்தல் வேண்டும். வலய முன்னேற்ற ஆளுகைச் சபையினரும், வெளிவாரி மதிப்பீட்டுக் குழுவினரும் பாடசாலைகளில் இந்நிலைமைகளை ஆராய்ந்து உச்சமாகச் செயற்பட வழிகாட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**கல்வி முகாமைத்துவமும் மேற்பார்வையும்**

தர விருத்தியை நிர்ணயிக்க உரிய முகாமைத்துவச் செயன்முறையொன்று அவசியமாகின்றது. இதற்காகப் பயன்படுத்தப்படும் பாடசாலைக் கலைத்திட்டம் மற்றும் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகள் ஊடாக மாணவர்களிடையே விருத்தி

செய்யப்பட வேண்டிய திறன்களை சரியான முறையில் இனங்கண்டு கொள்ளல் வேண்டும். கலைத்திட்டத்தின் உள்ளடக்கமும், முறைமைகளும் அந்தந்தத் தகைமைத்திறன் அல்லது தேர்ச்சிகள் ஏற்படும் வகையில் கல்வித் தொகுதியில் முகாமைத்துவம் தொடர்பாகத் தேவையான தகைமைத்திறன்களை அல்லது தேர்ச்சிகளை கல்வி ஆளணியினர் (ஆசிரியர், அதிபர், ஆசிரிய ஆலோசகர், ஆசிரிய கல்வியியலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள்) கொண்டிருத்தல் வேண்டும். இவற்றை சரியாக உரிய முறையில் இனங்கண்டு கொள்ளுதல் அவசியமாகும். கல்வித் தொகுதியில் பல்வேறு பொறுப்புக்கள் கல்வி சாரா ஆளணியினர் இடையேயும் அவர்களும் பணிகளை உரிய முறையில் அமுலாக்குவதற்குத் தேவையான தகமைத்திறன் அல்லது தேர்ச்சிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களைக் கொண்டு பயன்படுத்தப்படும் பௌதீக வளங்களில் இருக்க வேண்டிய தரங்களைப் பேணுவதற்காக அந்தந்த தரங்களைச் சரியான முறையில் இனங்காணுதல் வேண்டும். சகல மானிட பௌதீக உள்ளீடுகளின் செயன்முறையும் உரிய தரத்திலேயே இருத்தல் வேண்டும். இனங்கண்டு கொண்ட தகைமைத்திறன்கள் மதிப்பிட்டு உபகரணங்களாகப் பயன்படுத்தல் வேண்டும்.

தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும் மதிப்பீடுகளின் ஊடாக வெளிப்படும் கல்வியின் தகைமைத்திறன்களை அல்லது தேர்ச்சிகளை அல்லது தரங்கள் தொடர்பாக குறைபாடுகளைத் தொடர்ச்சியாக சரி செய்து கொண்டு எதிர்பார்த்த நோக்கங்களை இலக்குகளை அடைவதை கல்வித்தொகுதி அண்மிக்கிறதா என்பதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் இது தொடர்பாக முழுத்தரத்தை, அதாவது உள்ளீட முடிவுப் பொருள் என்ற இரு கூறுகளும் தொடர்பான தொகுதியின் வினைத்திறன் பயனுறுதி மற்றும் சிக்கனம் அபிவிருத்தியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது பிரதான காரணிகளாகக் கொண்டு நிர்ணயிக்கும்.

**பாடசாலைத்தொகுதியில் தற்போதைய நிலை வெளிவாரி மேற்பார்வை**

குடியேற்ற ஆட்சிக்காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்த பரீட்சித்தல் மேற்பார்வை செய்தல் என்ற பதங்களினால் குறிப்பிடப்படும் ஒரு முறை இத்தொகுதியில் செயற்படுகின்றது. இது வெளிவாரியான தொகுத்தறிவு முறையாகும். இது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கையோ வழிமுறையோ இதுவரை தயாரிக்கப்படவில்லை. தற்போது தர உறுதிப்பாட்டு அலகால் கைநூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்பார்வையாளருக்கும், மேற்பார்வை செய்யப்படுவோருக்கும் இடையில் கலந்துரையாடிய கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் மேற்பார்வைகள் நடைபெறுவதில்லை. இருசாராரும் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்குவர். ஆட்சேபனைகளை தெரிவிக்க இருசாரருக்குமிடையில் அநேகமான சந்தர்ப்பங்களில் பொறுப்புக்கள் தொடர்பான எண்ணக்கருக்கள் பரிந்துரைக்கப்பட்டு விருத்தியடையவில்லை. போதியளவு தகவல்கள் சேகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதே அன்றி தரமதிப்பீடுகள் நிகழவில்லை. மேற்பார்வை பணிகள் தொடர்பாக பயிற்சிகள் உரியவாறு வழங்கப்படவும் இல்லை. போதிய பயிற்சி அவர்கள் பெற்றி ருக்கவும் இல்லை. தர விருத்திக்காக குறிப்பிட் டளவு உந்தல்கள் கிடைக்கப்பெறவில்லை. பாடசாலைகளின் சகல பிரிவுகளும் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை. பல வருடங்களாக ஒரு அதிகாரியேனும் பாடசாலைகள் கிராமப் பிரதேசங்களைப் போலவே நகரப்புறங்களிலும் வருகை தராது உள்ளனர்.


181218

தகவல் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், விளக்கம் கொடுத்தல் மற்றும் அறிக்கைப் படுத்தல் தொடர்பான குறைபாடுகள் நிறைய உள்ளன. பின்னூட்டல் மீள வலியுறுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக எவ்வித கவன மும் செலுத்தப்படவில்லை.

**உள்வாரி மேற்பார்வை**

பாடசாலைகளிலும் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் உள்வாரி மேற் பார்வை வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தில் உட்பட்டிருந்தாலும் பெரும்பாலும் உரிய முறையிலே இவை நடைபெறவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிவாரி மேற்பார்வையின்போது நடைபெறும் விட யங்களே உள்வாரி மதிப்பீட்டில் பெறுகின் றது. இது உள்வாரி உத்தியோகத்தர்களி டையே ஒரு சம்பிரதாயப் பொறுப்பாகும் என்று கருதப்படுகின்றது.

பணித்துறை நிர்வாகம் காரணமாக பாடசாலை ஆசிரியர்களும் இதனைப் புறக்கணிக்கின்றார்கள். மதிப்பீடு அற்ற ஒரு நிறுவனத்தில் சரியான முகாமைத்துவம் நடைபெறவில்லை என்பது அறியப்பட் டுள்ளது. இது போன்ற நிறுவனங்களில் இருப் பது நிர்வாகமோ அன்றி முகாமைத்துவமோ என்பதை விளங்கிக் கொள்வது கடினமாக உள்ள தேவைகளின் முன்னுரிமை சம்பந்த மாகத் தெளிவில்லை. கல்விச் செயன்முறை யில் தர விருத்திக்கு உந்தல்கள் கிடைக்கப்பெற வில்லை.

**பாடசாலை ரீதியான சுயமதிப்பீடு**

பாடசாலை மூலமாக பாடசாலை யில் உள்ளோர்களைப் பயன்படுத்தி மேற்கோள்ளப்படும் நிறுவன ரீதியான சுய மதிப்பீடு முக்கியத்துவம் பெறுகின்றது. முகாமைத்துவக் கோட்பாட்டின் படி மதிப்பிடுதல் முகாமைத்துவ வட்டத்தில் மிகவும் முக்கியமான பகுதியாகும். இத் தொகுதியின் நோக்கங்கள் அடையப்பெறு கின்றனவா? என்பதைத் தொடர்ச்சியாகத் தேடியறிந்து முறைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு முன்னேற்றுவதற்காக வகை செய்வது நிறுவன ரீதியான மதிப்பீடுகளின் ஊடகமே ஆகும்.

**பாடசாலையின் மதிப்பீடு முழுமையான கூட்டுச் செயற்பாடாதல்**

பாடசாலையின் சகல மானிட பௌதீக வளங்கள் அடங்கிய தொகுதிகள் முகாமைத்துவம் என்பன மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் அவசியம். சதா மதிப்பீட்டிற்கு உட்படவேண்டிய அலகுகள் எப்போதும் ஏனைய அலகுகள் அவ்வப்போது மதிப் பீட்டிற்கு உட்படுத்தல்வேண்டும். இந்த மதிப்பீடு பொது நோக்கத்தை அறிந்து கொள் வதற்காகப் பாடசாலைகளிலுள்ள பெற்றோர் கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினதும் பங்களிப்பைப் பெற்றுத்தரும் தொடர்ச்சியான வேலைத்திட்டமாதல் வேண்டும். மதிப்பீடு என்பது நிலைக்குத்தாகவும், இறங்கு வரிசை யாகவும் ஏறு வரிசையாகவும், கிடையாகவும் மாத்திரமே உண்மை நிலையை விளங்கிக் கொள்ளமுடியும் இதற்காக பொதுக்குறிக் கோள்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுக் கலாசாரமொன்று உருவாகுதல் வேண்டும். தொகுதியின் பொறுப்பை அனைவரும் கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும்.



# கல்விக்கு விளக்கேற்றிய
# பெருமாட்டி திருமதி அ.வேதநாயகம்

மணிவிழாக் காணும்

மாண்புமிகு பெண்மணி

எம் மண்ணில்

தொடர்ந்து

கல்விச் சேவையாற்ற

வாழ்த்துகின்றோம்.....

"கல்விக்காருண்யன்"

**இ.ச.பே. நாகரத்தினம்**

முகாமையாளர்

கஜமுகன் காட்வெயர்

ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கல்வித் துறையில் தன்னையே அர்ப்பணித்துச்

சாதனை படைத்த

# திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்

அவர்களை வாழ்த்துகின்றோம்...

எம் மண்ணின் சொத்து கல்வியே ஆகும்.
அதனூடாகவே எம்மினத்தையும்
எதிர்காலச் சந்ததிகளான
எம் மாணவர்களையும்
உயர்த்த முடியும் என்ற கொள்கையோடு
எம்மைத் தொடர்ந்து கல்வித்துறையில்
சேவையாற்ற உங்கள் வழிகாட்டலை
வேண்டி நிற்கின்றோம்....

லயன்ஸ் கழகம்
யாழ்ப்பாணம்.

# திருமதி அ.வேதநாயகம்

கல்விப் பணிப்பாளர்

அவசரகால நிலமைகளுக்கு ஏற்ப தற்காலிக முகாம்களில் தற்காலிக பாடசாலைக் கொட்டில்களை அமைத்து ஆசிரியர்களையும் வரவழைத்துக் கல்வியை இடையறாது வழங்கியவர்.

அவர் ஓர் இனிய பண்பாளர், நேர்மையுள்ள சேவையாளர், அன்பும், இரக்கமும் அவரிடம் நிரம்பி இருந்தது. இன, மத, பிரதேச வேறுபாடின்றி சேவையாற்றிய அன்னார் வடக்கிலும், கிழக்கிலும் சேவைக்காகச் சென்ற இடமெல்லாம் போற்றப்பட்டார்.

முகமிழந்து போயிருந்த எமது யாழ். ஒஸ்மானியா இன்று மீண்டும் எழுந்து வர அம்மையார் ஆற்றிய பங்கு மறக்க முடியாதவை.

அன்னார் ஓய்வு பெற்று இருக்கப்போகும் காலம் ஈடேற்றம் உடையதாக, சாந்தி பெற்றதாக அமையும் என்பது திண்ணம். அதுவே எமது வாழ்த்து. அதுவே எமது பிரார்த்தனையும் கூட.

**யா/ஒஸ்மானியாக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

---


# திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்

## தகவல் தொழில்நுட்பத்தை தாயகத்தில் வளர்த்த தாய்...

சுவிட்சலாந்திலிருந்து உலகம் முழுவதும் வாழும் தமிழர்களைக் கணினிக்களம் சஞ்சிகை மூலம் ஒன்றிணைத்து தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பரப்பும்

# கணினிக்களம்

நவீன தொழில்நுட்ப ஆய்வுத் தொடர் சஞ்சிகை

Microwin Electronics (pvt) Ltd.
107/26, Balagala Road,
Hendela, Wattala, Sri Lanka.
Tel : +94 778688517
Fax : +94 112980382

Microwin Electronics
Truttiker Sterasse 8,
8475 Ossingen, Switzerland
Tel : 0041315268256

Skype : pckalam E-mail : filetolee@yahoo.com

# தன்னிகரில்லா கல்விப்பணிப்பாளர்

"செய்யும் தொழிலே தெய்வம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய,
கடமையுணர்வு, விடாமுயற்சி, எடுத்த விடயங்களை செவ்வனே ஆற்ற வேண்டும் என்ற மன நிறைவு, இனிமையான பேச்சு அனைவரையும் அரவணைக்கும் பண்பு, அர்பணிப்புடனான தலைமைத்துவத் திறன், தன்னிகரல்லா ஆளுமை என்பனவற்றை ஒருங்கே கொண்டவராக திகழ்பவராக இருப்பவர் தான் மணிவிழா நாயகி எமதருமை திருமதி வேதநாயகம் அம்மா அவர்கள்.

"தெளிவுறவே யறிந்திடல், தெளிதர மொழிந்திடல் - சிந்திப்பார்க்கே,
களிவரை வுள்ளத்தி லானந்தக் கனவு பல காட்டல்"

என்ற அமரகவி பாரதியின் கவிதைக்கேற்ப தனது நிர்வாகக் கட்டமைப்பினை கல்வித்துறையில் கட்டியெழுப்பிய பெருமைக்குரியவர்.

கல்வியினை மட்டுமின்றி தமிழரின் கலை, கலாச்சாரத்தினையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நல்நோக்கத்தில் செயற்பட்டுவருபவரும், அதற்கு எடுத்துக் காட்டாக இலங்கையில் மட்டுமின்றி ஐரோப்பாவிலும் கலை வளர வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகளை நடாத்த முன்னோடியாக செயற்பட்டு தனது பதவிக்குப் பெருமை சேர்த்த கலைத் தாயாக திகழ்பவர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் பெறப்படும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க - திருமதி வேதநாயகம் அம்மா அவர்கள் - இதை நிலை நிறுத்தும் செயல்கள் எச்சமாக இன்று மட்டுமல்ல என்றென்றும் கல்வி உலகில் தன்னிகரற்ற தன்மையில் வாழும், வாழ்ந்து கொண்டே இருக்கும்....

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் அவர்தம் உள்ளத்தனைய துயர்வு" இந்த எடுகோளுக்கு அமைய, இமயம் போல் செயற்பட்டு கல்விச் சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து நற்பணிகள் ஆற்றும் திருமதி வேதநாயகம் அம்மா பெருந்தகை என்றும் நிறைவாக வாழ இறைவனை இறைஞ்சிக் கேட்டு, அம்மா பல்லாண்டு காலம் நிறைவாக வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

"நாட்டிய கலா சூரி"
"நடன கலைச் செம்மல்" "சகலகலாவித்தகி"
**திருமதி மதிவதனி சுதாகரன் M.F.A**
ஐரோப்பிய இணைப்பாளர்,
வட இலங்கை சங்கீத சபை, சுவிஸ்லாந்து.



எமது மண்ணில் சிறந்த அர்ப்பணிப்பான
கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும்

# திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்

அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்



**மெடி எயிட்ஸ் கிளினிக்**

689, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.



மணிவிழா சிறக்க
எம் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

## ஓட்டல் ஓங்கார பவன்

உயர்தர சைவ உணவகம்



காலை – மதிய – இரவு உணவு வகைகள்
மற்றும் சிற்றுண்டி வகைகள்
சுத்தமாகவும், சுகாதாரமாகவும்
அதிசிறந்த சுவையுடன்
உங்கள் இல்லம்தேடி வர வாகன வசதியுடன்
ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

இல.37, கண்டிவீதி, சாவகச்சேரி.

உரிமையாளர்:
T.S. சர்மா : 0777231680
ஓட்டோ : 0773437240



கல்விச் சேவைத்தாய் தொடர்ந்து
எம் மண்ணுக்குத் தன் பணி தொடர வாழ்த்தும்

## சீதா ஜுவல்லறி



தங்கப்பவுண் நகை வியாபாரம்

Seethaa
Jewellery

Manufacturers of Gold Jewel

01, நவீன சந்தை, சாவகச்சேரி



வாழ்த்துக்களுடன்...
நவீன வடிவமைப்புக்களில்
அழகிய தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள

## இந்திரன் ஜுவல்லர்ஸ்



இல.10, நவீன சந்தை,
சாவகச்சேரி.

## நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்

இல.213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



மணிவிழா நாயகியின்
மாண்புமிகு கல்விச் சேவையை
வாழ்த்துகின்றோம்....



## குகன் ஸ்ருடியோ

109, கண்டி வீதி, சாவகச்சேரி

## பரமேஸ் மோட்டோஸ்

113, கண்டி வீதி, சாவகச்சேரி

# ஆவரங்கால் ஒன்றியம்
# Avarangal Ontrium - UK

75 Tudor Drive, Kingston Upon Thames, Surrey KT2 5NP, United Kingdom. Tel : 07801556620 Email : avarangal@hotmail.com

Date : 20 Feb 2011

**Year 2011**

President / தலைவர்
V.Sivasundaram
வே.சிவசுந்தரம்

Secretary / காரியதரிசி
Srivasanthaswaran
சி.சிறீவசந்தேஸ்வரன்
sisrivas@yahoo.com

Treasurer / தனாதிகாரி
S.Kirupananthan
ச.கிருபானந்தன்

Vice-President / உபதலைவர்
T.Selvamoorthy
தி. செல்வமூர்த்தி

Assis-secretary / உபகாரியதரிசி
S.Sarvanandan
S.சர்வானந்தன்

Chairman / போசகர்
K.Sinnathurai
க.சின்னத்துரை

Committee/ நிர்வாகசபை
Uma Jeyakumar
உமா ஜெயகுமார்
G.Sarmini
கி.சர்மினி
M.Pathmanathan
மு.பத்மநாதன்
K.Parameswaran
கு.பரமேஷ்வரன்
A.Vavananthan
ஆ.வவானந்தன்
S.Kulam
S.குலம்
S.Kugarupan
S.குகரூபன்
S.T. Yogasivam
S.T. யோகசிவம்
K.Ampalavanar
மு.அம்பலவாணர்
Kirupananthan
கிருபானந்தன்
Rajanayagam
இராஜநாயகம்

Press-Officer / பத்திரிகையாளர்
Jeyakumar
ஜெயகுமார்

ஆவரங்கால் ஒன்றியத்தினதும் நடராஜ இராமலிங்க பழைய மாணவர் சங்கத்தினதும்

## வாழ்த்துரை

**ஸ்ரீமதி அருளேஸ்வரி வேதநாயகம்,**

கல்வித்துறைக்கு அரும்பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஸ்ரீமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் சேவை நயந்து வெளியிடப்படும் இம் மணிமலரில் எம் வாழ்த்துரைகளை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவர் எமது பாடசாலைக்கு ஆற்றிய பெரும் பணியை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கழித்து மீட்டுப் பார்க்கும்போது எமது மனதில் ஓர் பெருமித உணர்வு மேலோங்கி நிற்கின்றது. மாணவர்களின் உயர்ச்சிக்கு அவர் காட்டிய ஒப்பிலாக் கரிசனை, ஒவ்வொரு மாணவரினதும் தனிப்பட்ட தேவைகளை அடையாளம் கண்டு கற்பித்தல், குறிப்பாக இடர்படும் மாணவர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவர்களிற்கும் கணிதத்தை இலகுவில் கற்பித்தல், மேலதிக வீட்டில் கற்றலை பெற்றோர்களிடம் இருந்து பெறமுடியாதோரின் தேவைகளை அறிந்து அவர்களின் இடர்களைப் போக்கல் போன்று பல்வேறு கோணங்களில் அமைந்திருந்தது அவரின் ஒப்பற்ற சேவைகள். கற்பித்தலைப் பற்றிய மாணவர்களின் எண்ண அலைகள் நீண்டு கொண்டே செல்லுமளவிற்கு மாணவர்களின் மனதில் ஆழமான இடத்தைப் பிடித்த ஓர் ஆசிரியருமாவார்.

அவரின் சுறுசுறுப்பான கற்பித்தல் முறைகள் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவை. இதன் தொடர்புகளாக கணித மூலவள நிலையத்தை அமைத்து சிறந்த ஓர் ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக் கல்விப்பணிப்பாளராகவும், வலயக் கல்விப் பணிப்பாளராகவும் உயர்பதவிகள் கொடுக்கப்பெற்ற ஓர் அறிஞராக திகழ்ந்தவர் எம் ஆசிரியர்.

பதவி உயர்வு பெற்றுச் சென்றகாலங்களிலும் எம் பாடசாலையை மறவாது பற்பல. உதவிகளை வழங்கியிருந்தமை, ஆசிரியராக இருந்தபோது மாணவர்களை விளையாட்டுத்துறையிலும் ஈடுபடுத்தி மிளிரச் செய்தமை போன்ற சேவை செய்வதே ஆனந்தம் என்ற உயரிய அவரின் பண்புகளைப் பழைய மாணவர்களும், பாடசாலைச் சமூகமும், ஆவரங்கால் மற்றும் சுற்றாடல் கிராமங்களின் மக்களும் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூருவார்கள்.

சிரித்த முகம், கனிந்த மொழி, சேவைதனில் கண்டிப்பு இத்தனையும் நிறைந்த திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் ஓய்வு பெறும் இவ்வேளையில், அவரது ஓய்வுக்காலம் வளம்பெறவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மனநிறைவோடு வாழவும் எம் எல்லோரதும் அன்புகொண்ட வாழ்த்துக்கள்.

வாழ்க நும்பணி, சிறக்க நும் வாழ்வு.
"தக்கார் தகவிலரென்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்."
வாழ்க நீடு!

இலண்டன் ஆவரங்கால் ஒன்றியமும் நடராஜ இராமலிங்க வித்தியாலய பழைய மாணவர்களும்.

## அவுஸ்திரேலியாவிலிருந்து வாழ்த்தும் ஆசிரியர்கள்....





**எம் மாணவி திருமதி அ.வேதநாயகம் அவர்கள்**
**மிகவும் திறமையான மாணவி.**
**கல்வியில் மிகவும் அக்கறை கொண்டவர்.**
**தமிழ்ப் பேச்சுப் போட்டியில் சிறுவயதில் 1ஆம் இடம் பெற்று**
**தங்கப்பதக்கத்தை வெற்றி கொண்டவர்.**
**இவருக்கு கல்வி கற்பித்தமையைப் பெரும் பேறாக நினைக்கின்றோம்.**

எம் மண்ணின் கல்விச் சேவகி
விளக்கேற்றிய பெருமாட்டி

**திருமதி. அ. வேதநாயகம் அவர்களுக்கு**

மணிவிழா வாழ்த்துக்கள்....

கூட்டுறவே நாட்டுயர்வு

**வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி**

கொமர்ஷல் வங்கியின்

# பொற்கடன் அடகுச் சேவை

சாவகச்சேரி

கொமர்ஷல் வங்கிக்கிளையில்



## உங்கள் தங்க நகைகளுக்கு குறைந்த வட்டியில் அதிகூடிய பணம்

வங்கி மேலதிகப் பற்று மற்றும் அடகு வைக்கும் வசதி

இரகசியம் பாதுகாக்கப்படும்,

உங்கள் தங்க நகைகளுக்கு அதிக பாதுகாப்பு,

பகுதி பகுதியாகப் பணம் செலுத்தும் வசதி.

## மாதாந்த வட்டி 1.16 % மட்டுமே

விபரங்களுக்கு

கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளை:

தொ.இல:- 021 227 0075, 021 227 0076.

கொமர்ஷல் வங்கி

பொற் கடன் அடகுச் சேவை

SUCCESS THROUGH KNOWLEDGE

உயர்கல்விக்கு தனித்துவம்
மிக்க **IIS City Campus**
பலநூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப்பாதையில்
உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்



**Leading to B.Sc. Degree From UK, US, Canada, Australian Universities**

அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

பட்டதாரி ஆகவேண்டும்
என்ற உங்கள் கனவை
நனவாக்குகின்றோம்!

மேலதிக
விபரங்களுக்கு:
**021 4900 900**

**Department of Computing**

**HND**
HIGHER NATIONAL DIPLOMA IN COMPUTING

bcs
THE CHARTERED INSTITUTE FOR IT

**Department of Civil Engineering**

**HND**
CIVIL ENGINEERING

**HND**
QUANTITY SURVEYING

**Department of Business & Management**

**HND**
BUSINESS MANAGEMENT

உங்கள் அனுமதிக்கு
முந்திக்கொள்ளுங்கள்

bcs Quality Specialist Group
edexcel advancing learning, changing lives
SLIM Sri Lanka Institute of Marketing
CMA Certified Management Accountants

பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்ட மாணவர்களே!!
**IIS City Campus** உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக்கொள்ள அன்புடன் அழைக்கிறது.

**IIS CITY CAMPUS**
No. 200, Sivan Pannai Road, Jaffna. Tel: 021 222 8060 Fax: 021 222 6333
Email : info@iis.edu.lk Web : www.iis.edu.lk

மணிவிழாக் காணும்
திருமதி அ.வேதநாயகம்
அவர்கள் தென்மராட்சிக் கல்வி வளர்ச்சிக்கும்
யாழ்ப்பாணக் கல்வி எழுச்சிக்கும்
உழைத்தமைக்கு எம் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

VMK Mill's
Chavakachcheri.
Tell : 021 7211010
021 7900555
077 3144756

திருமதி அ.வேதநாயகம்
அவர்களின்
அர்ப்பண சேவையைப்
பாராட்டி
வாழ்த்துகின்றோம்...

திருக்கணித பதிப்பகம்
டச்சு வீதி, சாவகச்சேரி
தொ.பேசி: 021 227 0251

மணிவிழாக் காணும்
இரும்புப் பெண்மணி
திருமதி அ.வேதநாயகம்
அவர்களை
இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

PHOTHIGAI BOOK CENTER
No.114, Kandy Road, Chavakachcheri

ஐஸ்வர்யம் பதிப்பகம்
டச்சு வீதி, சாவகச்சேரி
Tel:
077 4113694
077 0417893

மணிவிழாக் காணும்

திருமதி அ.வேதநாயகம்

University of Jaffna
181218
Library

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

ARCHIVES


மணிவிழாச்
சிறப்புமலர்


அருளமுதம்